
மாதாந்த சஞ்சிகை

மே - ஜூன் 2007

100/-

# சரிநிகர்

SARINIHAR




# தலையீடும் தலையிடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வரலாற்றின் முரண்கள் - 14


வாழ்க பொலிஸ் மா அதிபர் - 9

பேரினவாதப் பேரவையின் வேள்வி!

- 11


. யசோதரா கவிதைகள்
நிவேதா கவிதைகள்

- 52

திரைப்படம் குறித்து சில குறிப்புகள்
மல்கம் X


- 61


கமோஸ்பானி
மாற்று சினிமாவுக்கான வெளியை நோக்கி...
- 73

கலாநிதி அன்டன் பாலசிங்கம்
04.03.1938 – 14.12.2006
அர்த்தமும் அபத்தமும்

- 91

வாசகர் ஹெ(ர)ல்ஸ... - 02

**ஆசிரியர் தலையங்கம்** - 07

**மெல்லத்தமிழினி**
ஸ்ரீல.சு.கவின் தீர்வு - 08
வாழ்க பொலிஸ் மா அதிபர் - 09
இலாபம் குரங்குகளுக்கே - 10

**அரசியல்**
பேரினவாதப் பேரவையின் வேள்வி! - 11
வரலாற்றின் முரண்கள் - 14
சர்வதேச சமூகம் தர்க்கத்தின் தொடர்ச்சியா? கட்டற்ற கற்பனையா? - 20
யார் இந்த ஹொவிக்? - 23
மலையக மக்களின் இருப்பு நிலையும் வாழ்வாதாரப் பிரதேச ஆக்கிரமிப்பும் - 25
இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சர்வதேச முரண்பாட்டுத் தீர்வு அமைப்பின் அறிக்கை - 28
வி.புவுக்குப் பாலூட்டும் சு.க - 30

**தரிசனம்**
தரிசனம் சரிநிகர் - 33
தரிசனம் ராவய - 39

**சிறுகதை**
சாக்கோ – கௌதமராகுலன் - 43

**கவிதை**
கற்பகம் யசோதரா - 49
நிவேதா - 52

**கருத்தாடல்**
நீரளவே தானா நீராம்பல்? - 55

**மதிப்பீடு**
என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை! - 61
நலமுடன் ... - 64
கறுப்பின் மனோநிலை - 66

**சினிமா**
மல்கம் X – மணிதர்ஷா - 68
கமோஸ்பானி – ஜி.ரி.கே - 73
இவ்வழியால் வாருங்கள் - 80

**நினைவுகள்**
சிவராம் – ரோஹித பாஷா - 83
சுதாகர் – கருணாகரன் - 86
அன்ரன்பாலசிங்கம் – சேரன் - 91
வரதர் – தெளிவத்தை ஜோசப் - 94




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்வருகை மகிழ்ச்சி தருகிறது!

சரிநிகர் சரியான பாதையின் சரியான தகவல்களைத் தருவதினிமித்தம் ஆரம்ப இதழ்களை இன்றுவரை நான் சேமித்து வைத்துள்ளேன். பத்திரிகை தடைப்பட்டமை வேதனை தந்தது. ஆனால் அதன் மீள் வருகை என்னை மகிழ்ச்சியடையச் செய்தது.

**ரஞ்சித் விக்டர் - பதுளை**

## வாசகருடைய பொறுப்பு

அஞ்ஞாதவாச அடக்கத்திற்குப் பின் சரிநிகரின் உதயம் மகிழ்வைத் தருகிறது. மறைந்ததும் மறைக்கப்பட்டதுமான பல நிகழ்வுகள் எமது நாட்டில் நிகழ்ந்து முடிவுற்றன. அதில் அதிகமானவை செம்மணிப் புதைகுழிதான்.

கடந்தவை கடந்தவையாக இருக்கட்டும். இனி சரிநிகரினால் சமனாகத் துகிலுரியப்படும் என்ற ஒரு நம்பிக்கை எம் போன்றவர்களுக்கு உண்டு. அதற்கான கட்டியத்தை மார்ச் 2007 சரிநிகரின் புனர்வரவு கூறி நிற்கிறது.

குறித்துரைப்பின் சீன உதவி கட்டுரையில் இலங்கை ஜனாதிபதி படிக்கத் தவறிய பாடங்கள். நாசமறுப்பானின் வெட்கங் கெட்டு..
கட்டுரையில் கோதபாய ராஜபக்ஷவின் வாய்ச் சவடால். மேலும் வெறுமனே பாராளுமன்றத்தில் எதிர்க்குரல் எழுப்பும் அட்டைக்கத்திச் சண்டை. (இவ்விடயத்தில் எம்மவரையும் ஆழமாகத் தொட்டிருக்கலாம். விடுதலைப் புலிகளை மகிழ்விப்பதற்கான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகக் கையாள்வது. கூடவே சொந்த நாட்டு அகதிகளை நேரில் சந்திக்க துணிவில்லாத எம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதை மறைப்பதற்காக தமிழ் நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் சென்று வெட்டிப் புடுங்குவதாகக் காட்டும் மாயை. இந்த ஜாலங்களை உரியவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என நினைக்கும் அவர்களின் அப்பாவித்தனமான நினைப்புகள்.)

விக்டர் ஐவனின் லலித், காமினி, பிரேமதாச பகைமை கட்டுரை சுள் என்று பலருக்கு உறைக்கும் என நினைக்கிறேன்.

பாதுகாக்கும் படையால் எமக்கு மட்டும் பாதிப்பில்லை. அவர்களுக்கும்தான் என்ற உண்மையை சுயம்வரம் சிறுகதையினூடாக மிக யதார்த்தமாக சுமீகா பெரேரா சித்திரித்துள்ளார். பெரும்பாலான எல்லைப்புற சிங்கள யுவதிகளுக்கு இவை வழமையான நிகழ்வுகள்தான். இருப்பினும் மானுட நேயத்துடன் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இதனை நோக்க வேண்டும். சோகம் பொங்கும் சிறுகதை. எந்த எதிரிக்கும் நடக்கக் கூடாதது.

இறுதியாக மரணத்தை வென்ற சு.வியின் தடங்கள் மகுடமாகிறது. நான் பழகியவரை வெள்ளை உள்ளம் கொண்ட இனிய புத்தகப் பெட்டகம். அமைதியாக அவன் நினைவுகளை மீட்டிப் பார்ப்பேன். எனது மரணம்வரை என்னுள் அவனுக்கு மரணமில்லை. தமிழகத்தில் அவனுக்குக் கிடைத்த கௌரவம் எமக்குப் பெருமையாக இருப்பதோடு ரணமான வடுவாகவும் தெரிகிறது. நாம் எப்போதும் இப்படித்தான்.

இவற்றோடு மேலும் பல சிறப்பான அம்சங்களைத் தாங்கி வந்த சரிநிகரை பாராட்டி வாழ்த்துகிறேன். மேலும் சரிநிகரை அஞ்ஞாதவாசத்தினுள் தள்ளாமல் காக்க வேண்டிய பாரிய பொறுப்பு வாசகர்களாகிய எம் தலையில் பொறிக்கப்பட்டுள்ள தென்ற யதார்த்தத்தையும் நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும். இல்லையெனில் விரால் இல்லாத குளத்தில் குறட்டை தலைவனாகலாம். எனவே தேசியத்தைப் பாதுகாப்போம்.

**தசக்கிரீவன், திருகோணமலை.**

## ஒரு வரி புரிய வைக்கும் உண்மை!

'கிழக்கை விடுவிப்பதில் எந்த இறைமையைத் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் இன்று யுத்தத்தில் இறங்கியிருக்கிறதோ அந்த இறைமையை அமெரிக்காவிடம் ஒரு கைச்சாத்தின் மூலம் வழங்கி விட்டிருக்கிறது.' இந்த ஒரு வரியே இன்றைய இலங்கையின் அரசியலை விளங்கிக் கொள்ளப் போதுமானது. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் நியாயமாக நடப்பதாக சில இணையங்கள் எழுதி வந்தன. இந்த நாட்டின் நலனில் அக்கறை கொண்ட ஒரு தலைவராக மக்கள் விடுதலை முன்னணியுடன் சேர்ந்து அவரது விம்பத்தைக் கட்டியெழுப்ப முயன்றன. அத்தகையவர்கள் இப்போது முழு இலங்கையின் இறைமையையே அடகு வைத்ததைப் பற்றி ஏன் வாய் திறப்பதில்லை? விடுதலைப் புலிகளை வாய்க்கு வாய் மேற்கின் ஏஜென்டுகள் எனத் திட்டித் தீர்த்தவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முழுமையாக ஒரு தேசத்தையே அடகு வைத்ததைப்பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்? இங்கு யாரின் பிள்ளைகளோ சாக பிரபாகரன் தன் பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி படிக்க வைக்கிறார் எனக் கூப்பாடு போட்ட ஊடகங்கள் ஜனாதிபதி மகிந்த படையில் சேர்க்குமாப் போல தன் மகனைச் சேர்த்துவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டதைப் பற்றி ஒருவரும் பேசாமல் இருப்பது ஏன்?

**ரதன், கொழும்பு**

## மூன்று நாட்கள்

நான் ஆரம்பகாலம் தொட்டு சரிநிகரின் வாசகன். ஆறு வருடங்களின் பின் சரிநிகர் வந்தது. அது எனக்கு ஆறாத ஒரு வடுவையும் தந்தது... அதனைச் சுமந்து வந்து தந்தவர் இன்று இப்பூமியில் இல்லை... 13.04.2007 அன்று எனது நண்பர் பத்திரிகைத்துறையை ஆழமாக நேசித்தவர், மற்றவர்கள் பலரை யோசிக்க வைத்த இளம் வயது துடிப்பான இளைஞர் அவர்தான் சரிநிகரை என்னிடம் தந்து இன்றைய தேவை இது என ஆரம்பத்தில் சுருக்கமாக விமர்சித்து சந்திரபோஸ் சுதாகர் எனும் கையொப்பத்தையும் இட்டு என்னிடம் தந்தவர். மூன்றே நாட்களில் இல்லாமல் ஆக்கப்பட்டார்.

அவர் தந்த செந்நிறச் சரிநிகர் என்னையும் சற்றே சிந்திக்கத்தான் வைத்தது. புரட்சியைச் சுட்டுகிறதோ... அல்லது ஆபத்திருக்கிறது எம் சமூகத்திற்கு என்பதைக் கூறுகிறதோ... அல்லது நாட்டுப் போர்ச் சூழலில் சிந்தும் இரத்தத்தைத் தான் ஞாபகப் படுத்துகிறதோ? என்றால் என்மட்டில் எல்லாந்தான்.

சரிநிகர் உனக்கும் உண்டோ நிகர் என்பதை எடுத்துக் காட்டியது. சரி எனப்பட்டதைச் சளைக்காமல் சற்றும் பிழைக்காமல் எழுதிய உனக்குக் கூட பயம் என்பது உள்ளதுதான்... முதற் பக்கத்திலேயே அடுத்த காலடி என்றும், அடுத்த பக்கத்தில் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்றும் அழகாய், அம்சமாய் அடுக்கடுக்காய் எழுதிவிட்டு, எழுதியது யார் ஆசிரியரா? அல்லது கம்பியூட்டரா? அல்லது சரிநிகர் சமானமாய் வாழ முடியாத இந்த நாட்டிலே என்று கருதியதால் எழுதியவர் முகவரி இல்லாமல் ஆகிவிட்டாரோ? என்ற கேள்வியையும் என்னுள் தோற்றுவித்தது. அடுத்து வந்ததும் அப்படியே பாசிஸ ஆட்சியை நோக்கிய (பர) படத்தை அருமையிலும் அருமை. அதுவும் முகமில்லாதவர் தான் எழுதியுள்ளார். அதற்கும் நாசமறுப்பான் போல் முகமில்லாதவன் என்று புனைபெயராவது இட்டிருக்கலாமே. நாசமறுப்பானை நான் மறக்கவில்லை. வெட்கம் கெட்டுப்போய் வீழ்ந்து படுவோமா எழுத்துகளால் சொல்ல முடியவில்லை. எனினும் கொஞ்சம் பயமாக இருந்தது நாசமறுப்பானை நினைக்க. சாவு கவிதை, கருவாடும் உயிரிலிருந்து கவிதைகள் தற்போதைய வவுனியாவின் ஏன் நாட்டின் சூழலைக் கண்முன் படம் போட்டது. எழுதிக் கொண்டே போனால் 100 பக்கம் நானும் எழுத வேண்டும் போலுள்ளது - சுருங்க 100 பக்கம் ஆயிரம் சிறப்பு.

**மெய்யழகன் இரா.தேசப்பிரியன் - வவுனியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்கால யதார்த்தத்தை மீறி

சரிநிகர் மீண்டும் வெளிவருவது இந்தச் சூழலில் எமக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது. வடிவமும் வண்ணமும் நேர்த்தியாக இருக்கின்றன. இன்னும் மெருகூட்ட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இலங்கைத் தமிழுக்கு இது புது முயற்சி. முதல் முயற்சி. அந்த வகையில் பாராட்டுக்கள்.

நினைவுகள் என்னும் பகுதி வெறும் நினைவுக் குறிப்புகளாயில்லாமல் அவை ஒவ்வொன்றும் அந்த ஆளுமைகள் குறித்த பதிவுகளாக வெளிவந்திருப்பது ஒரு நல்ல அம்சம். சேரன் இரத்தினசபாபதி குறித்து எழுதியதும், யோகராஜா வில்வரட்ணம் குறித்து எழுதியதும், கே.எஸ்.சிவகுமாரன் அஜித் சமரநாயக்கா குறித்து எழுதியதும் நல்ல பதிவுகள். குறிப்பாக அஜித் சமரநாயக்கா குறித்த பதிவு தமிழுக்கு மிக முக்கியமானது. கே.எஸ்.சிவகுமாரன் இப்படி நல்ல பதிவுகளைத் தர வேண்டும்.

உலகம் முழுவதும் வெளியாகிற இலக்கியங்களைப் படிக்கிற வாய்ப்பு இணையம் வாயிலாக அதிகரித்துள்ள சூழலில் எமக்கு பக்கத்திலிருக்கும் சிங்கள மொழி மூலமான படைப்பாளிகளின் படைப்புக்களைப் பார்க்க வாய்ப்பில்லாதிருப்பது தான் எங்களுடைய நிகழ்கால யதார்த்தம். அந்த வகையில் சுமீகா பெரேராவின் சுயம்வரம் சிறுகதையைப் பிரசுரித்ததனூடாக அந்த வாய்ப்பை தந்ததற்கு நன்றி. எல்லைப்புறத்தில் உள்ள கிராம மக்களுடைய அவலத்தை அது நேரிய முறையில் பதிவு செய்திருக்கிறது.

அதேபோல் சங்கார. அம்மா வருனே என்ற சிங்கள மொழித் திரைப்படங்கள் குறித்த கட்டுரைகளும் சிங்கள சினிமாவின் போக்கை விளங்கிக் கொள்ளும் வகையில் அழகாக எழுதப்பட்டுள்ளன. வீரகேசரியில் இருந்த கேதாரநாதனா இவர். வீரகேசரியில் இவ்வாறான கட்டுரைகள் எதனையும் பார்த்ததாக ஞாபகம் இல்லை. சிறுகதை, கவிதை, சினிமா என்று இன்னும் பல சிங்கள மொழிமூலமான படைப்புக்களையும் சரிநிகருடாக எதிர்பார்க்கிறோம். மணிதர்ஷாவின் 'ஒஸாமா' பல கேள்விகைள எமக்குள் எழுப்புகிறது.

**சாந்தகுமார், யாழ்ப்பாணம்**

## காலத்தின் தேவை

தங்கள் பத்திரிகை மீண்டும் சஞ்சிகையாக வெளிவருவது மகிழ்ச்சி. கனதியான சஞ்சிகைகள் தற்பொழுது மலருவது குறைவு. இன்றைய காலகட்டத்தில் இதன் தேவை உணரப்பட்டுள்ளது.

**சொ.சிவபாலன், யாழ்ப்பாணம்.**

## புதிய பார்வைக்கு வழி திறக்கிறது

சஞ்சிகை பார்த்தேன். மாறுபட்ட கருத்துக்களுக்கான களமே இல்லாதிருந்த சூழலில் சரிநிகரின் வருகை மகிழ்வளிக்கிறது. முன்னரைப் போல சரிநிகர் நிதானமாகவும் ஆழமாகவும் பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடலுக்கான வழியைத் திறந்து விடும் என்று நம்புகிறேன்.

அமு ஜோசப்பின் கண்களுடாக யாழ்ப்பாணத்தையும், சுனிலா அபேசேகரவின் கண்களுடாக வாகரையையும் பார்க்கும் போது ஏற்படும் அறிதலும் புரிதலும் ஏன் எங்களுடைய தமிழ் பத்திரிகைகளுடாகப் பார்க்கும் போது ஏற்படுவதில்லை என்று புரிவதாயில்லை. இலக்கிய நயமும் உண்மைத் தகவல்களும், நேரடி அவதானிப்புக்களும் ஒரு புதிய அனுபவத்துள் எம்மை இட்டுச் செல்கின்றன. பறவைகளின் சரணாலயமாய் இருந்த வாகரையின் இன்றைய நிலைமை பற்றி சுனிலா அபேசேகரா விபரிக்கையிலும், 'நிச்சயமாக மால்குடி போன்ற ஒரு புனைவும் அல்ல' என்று அமு ஜோசப் எழுதுகையிலும் அவை நம்முள் பல்வேறு சிந்தனை அடுக்குகளைக் கிளறி விடுகின்றன. ஒரு நேரடி அறிக்கையிடலுக்கான அனைத்து அம்சங்களும் அக்கட்டுரைகளுள் பொதிந்து கிடக்கின்றன.

**ரமணன், கொழும்பு**

## எது ஜனநாயகம்?

சரிநிகரில் வந்த விக்ரர் ஐவனுடைய கட்டுரை பல விடயங்கள் குறித்த கேள்வியை எழுப்புகிறது. ஐவன் பிரேமதாசவுக்கு எதிராக எழுந்த எதிர்ப்பு அலையையும் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக வந்த எதிர்ப்பு அலையையும் ஒப்பிட்டு மகிந்தவுக்கு எதிரான எதிர்ப்பு அலையில் எதுவித அரசியலுமில்லை. அதனால் எதுவித பிரயோசனமுமில்லை என்று முடிக்கிறார். முன்னையதை ஒரு ஜனநாயகப் போராட்டமாகவும், பின்னையதை ஒருவருக்குப் பதிலாக இன்னொருவரை மாற்றும் வெறும் ஆள் மாற்றும் போராட்டம் என்றும் எழுதிச் செல்கிறார். இது ஐவனுடைய ஜனநாயகம் பற்றிய புரிதலைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இன்னும் சற்று நோக்கினால் பிரேமதாசவுக்கு எதிராக எழுந்த அலை என்பது ஜனநாயகத்திற்கான அலை என்பதை விட சாதிரீதியாக கட்டமைக்கப்பட்ட உயர்குடிகளின் போராட்டம் என்பதே பொருந்தும். மக்கள் நலன், ஜனநாயகம் என்று பார்த்தால் ஜே.ஆர், லலித், காமினி போன்ற உயர்குடிப் பிறப்புக்கள் செய்ததை விட மக்களுக்கான குறைந்த பட்ச நல்வாழ்வுத் திட்டங்கள் பிரேமதாசவிடமிருந்தன. மற்றையபடி லலித் ஆக இருக்கட்டும், காமினியாக இருக்கட்டும், பிரேமதாசவாக இருக்கட்டும் மூவரும் முதலாளித்துவ பாராளுமன்ற வாதி செய்வதையே செய்தார்கள். இதில் எங்கு லலித் உயர்ந்து நிற்கிறார் என்று தெரியவில்லை. மறுபுறத்தில் தமிழ் மக்களுடைய பார்வையில் லலித்தின் காலத்தில் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட போதோ அல்லது 81, 83 படுகொலைகளின் போதோ எந்த எதிர்புக் குரலும் ஏன் முனகலும் கூட அவரிடமிருந்து எழும்பவில்லை. மறுபுறத்தில் 87 வடமராட்சி தாக்குதலின் போது சனசமூக நிலையத்துள் இளைஞர்கள் பூட்டி வைக்கப்பட்டு குண்டு வைக்கப்பட்டு கொல்லப்பட்டது லலித் பாதுகாப்பமைச்சுப் பொறுப்பில் இருக்கும் போது தான். இது தான் அவருடைய ஜனநாயகமா? இதைத்தான் ஐவன் ஜனநாயகத்திற்கான போராட்டம் என்கிறாரா? உண்மையில் இது ஒரு கோளாறான பார்வை. இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சர்வாதிகாரப் போக்கை நியாயப்படுத்தவே உதவும். வேறொன்றுக்குமல்ல.

**இளங்கோ, மட்டக்களப்பு**

## தீவிர வாசிப்பாளனாக என்னை மாற்றியது சரிநிகர்

நீண்ட நாட்களுக்குப் பின் பத்திரிகைக் குறிப்பின் மூலம் சரிநிகர் மீண்டும் வருவதையிட்டு அறிந்து மகிழ்ந்தேன். உண்மையைச் சொல்லப்போனால் ஒரு தீவிர வாசிப்பாளனாக என்னை மாற்றியது சரிநிகர் தான். எத்துணை வலிகளோடு இதனை வெளியிட்டு இருப்பீர்கள் என்பதை அறிய முடியும். பேனாக்கள் மௌனமாக்கப்படும் இந்தச் சூழ்நிலையில் வெளியிடுவது ஒரு துணிச்சல்தான்.

**எம்.எஸ்.எம்.நியாஸ் – கிண்ணியா.**

## படித்துப் பாதுகாக்க வேண்டிய இதழ்

மாற்றுக் கருத்துக்களைத் துணிவாகச் சொல்லக் கூடிய சரிநிகர் மிகச் சிறப்பாக அச்சும், ஆக்கமும் அமைந்துள்ளது. விக்டர் ஐவனின் கட்டுரை பல தகவல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. யாழ்– திறந்த வெளிச்சிறைச்சாலை, பல உண்மைகளை உணர்த்துகிறது. அஜித் சமரநாயக்காவைப் பற்றி கே.எஸ்.சிவகுமாரன் சிறப்பான தகவல்களைத் தந்துள்ளார். மலையகம் – தேவை புதிய தலைமை என்ற கட்டுரையைப் படித்த இளைய தலைமுறை படித்து – வழி நடத்த முன்வர வேண்டும். தொழிற்சங்கத் தலைமைகளே அரசியலுக்கு வந்து தொழிலாளர்களை ஏமாளிகளாக்கியுள்ளது. சரிநிகர் கட்டுரைகளை ஆறுதலாகத்தான் படிக்க வேண்டும். படித்துப் பாதுகாக்க வேண்டிய இதழ் சரிநிகர். உங்கள் பணி தொடரட்டும்.

**அந்தனிஜீவா, கண்டி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடிஃதன்றோ நாடு!**

கூடப்பிறந்தவரும் கூடிப் பிறந்தவரும் கோலோச்சும்
பீடம் பதவிக்காய்க் குழிபறிக்கும் - நாடிதன்றோ?
பாவமவர் கோத்த பாயாசொற் கேட்டுத்தன்
கோவணமும் தானிழந்தார், கூய்!

*ஈழமோகம்*




நன்றி: ராவய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுத்துங்கள் போரை!

போரினால் புலிகளை வெல்ல முடியாது. இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளின்படி சகல மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்துச் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

போரையும் வன்முறையையுமே முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழிமுறையாகக் கைக்கொள்ளும் அரசியல் சூழல் உக்கிரம் பெற்றுவரும் நிலையில் இந்த வார்த்தைகள் கவனத்தில் கொள்ளப்படுமென்று நாம் அதிகம் எதிர்பார்க்க முடியாது.

இனப்பிரச்சினை ஆயுதப் போராக உக்கிரம் பெற ஆரம்பித்த காலத்திலிருந்து இலங்கையின் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த தலைவர்கள் எவரும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போரைத் தவிர்த்து மாற்று வழி ஒன்றைப்பற்றி கிஞ்சித்தேனும் கவனத்தில் எடுத்ததாக வரலாறு இல்லை.

தவிர்க்க இயலாமல் எடுக்கப்பட்ட ஒரேயொரு முயற்சி கூட இந்தியாவின் நெருக்கடியினால் அவர்களின் நலன்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதே அன்றி இந்தப் பிரச்சினைக்கு இதய சுத்தியுடனான தீர்வைக் காணும் நோக்கில் எடுக்கப்படவில்லை.

1983ற்குப் பின்னர் வந்த ஜனாதிபதிகளில் சமாதானம் பற்றி அதிகமாகப் பேசியும், தென்னிலங்கையின் முற்போக்காளர்களுக்கும், இடதுசாரிகளுக்கும் ஒரு விடிவெள்ளியாக தோற்றம் காட்டியும் ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்கா கூட இறுதியில் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடி ஏற்றிப் பார்த்து புளகாங்கிக்கும் அளவுக்கு போரை மோகித்தாரே தவிர இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கிடைத்த வாய்ப்புக்களெதையும் கண்டு கொள்ளவில்லை.

ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுக்கு விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டுவதில் இருந்த அக்கறை விடுதலைப் புலிகளும் மற்றும் ஆயுதக் குழுக்களும் உருவாகக் காரணமாயிருந்த இனஒடுக்குமுறைக்கான வேர்களைக் கண்டறிந்து அகற்றுவதில் இருக்கவில்லை.

இந்தப் போர் முனைப்பு சிங்கள மக்களுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எதையும் பெற்றுத் தந்து விடவில்லை. மாறாக இந்த இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் ஆயுதவியாபாரிகளும் ஆயுத தரகர்களும் இலங்கையின் அரசியலில் பல்லும் சில்லுமாகப் பிணைந்து கொண்டார்கள். கூடவே உள்முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் சக்திகளும் இதனுடன் சேர்ந்து பிணைந்து கொண்டன.

ஏறத்தாழ இந்த இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் என்று சர்வதேசத்தின் தலையீடு அதிகரித்ததே தவிர இலங்கை மக்களுடைய நிலைமையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அது தமிழராக இருந்தாலென்ன, சிங்களவராக இருந்தாலென்ன, முஸ்லிம்களாக இருந்தாலென்ன, மலையக மக்களாக இருந்தாலென்ன எல்லோருடைய வீடுகளிலும் இழப்பு, எல்லா சமூகத்தவருடைய பொருளாதார வாழ்விலும் இழப்பு, இழப்பதைத்தவிர இழப்பதற்கு ஏதுமில்லாததாக நலிவடைகிறது வாழ்வு.

மறுபுறத்தில் போர் உருவாக்கும் ஸ்திரமின்மையோடு சேர்ந்து வரும் ஊழல், துஷ்பிரயோகம், லஞ்சம் என்பனவும் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்து வருகிறது. ஒரு வகையில் போர் சிவில் சமூகத்துக்கு மெல்லமெல்லமாக நஞ்சூட்டி வருகிறது. ஜேர்மன் நாடகாசிரியரான பெட்டோல் பிரெச்ற் இன் 'வீரத்தாய்' இல் வருகிற மாந்தர் போல போரினாலேயே வாழ்ந்து போரினாலேயே மடிந்து போகிற சமூகமாக இலங்கைச் சமூகம் ஆகி வருகிறது.

இந்த விசச் சூழலுள்ளும் ஒரு சிறு நம்பிக்கை தருகிற கீற்றாக கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வடக்கு கிழக்கிற்கு அனுப்பப்பட்டதைக் கண்டித்து உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் எழுந்த எதிர்ப்புக் குரல்களும், வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சார்பில் பாக்கியசோததி சரவணமுத்து தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்டு நீதின்றம் இடைக்கால தடையுத்தரவு வழங்கியதும், இதுவரை காலமும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மீதான நடவடிக்கைகளாகக் கண்டு அங்கீகரித்தும் வழிமொழிந்தும் வந்த மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புக்குரல் எழுப்பியதும் அமைகின்றன.

இது ஒரு நல்ல அறிகுறி. நல்லவை செய்யப்படுவதற்கு இன்னமும் இடமிருக்கிறது என்ற நம்பிக்கையைத் தருகிற அறிகுறி. இந்த அறிகுறியின் வெளிப்பாடாக எடுக்கப்பட்ட முதல்படி இந்த நடவடிக்கை. இதுவே போர் முனைப்புக்கு மாற்றான பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறையாகப் பரிணமிக்க முடியுமானால்?

இது தான் இப்போது இந்தப் பிரச்சினையின்பால் காத்திரமான அக்கறை கொண்ட ஒவ்வொருவர் முன்னாலும் உள்ள சவால்.!

**வெளியீடு**
சரிநிகர்,
237/22, விஜயகுமாரதுங்க வீதி,
கொழும்பு - 05.
☎: 5674225
✉: sarinihar@gmail.com

**அச்சுப் பதிப்பு**
நவமக அச்சகம்,
66/4, ஶ்ரீதர்மராம வீதி,
இரத்மலானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீல.சு.கவின் தீர்வு

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவெனக் கூட்டப்பட்ட அரசியற் கட்சிகளின் ஆலோசனைக் குழுவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கையளிக்கப்பட்ட தீர்வு யோசனைகள் தொடர்பாக பலரும் தமது அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் வெளியிட்டுள்ளனர்.

தமிழ் வார இதழ்களும், தமிழ் அரசியற் கட்சிகளும் தமது அதிருப்தி, அதிர்ச்சி மற்றும் ஆத்திரம் கலந்த அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளன.

உண்மையில் இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தெரிந்தவர்களுக்கு இந்தத் தீர்வு ஆச்சரியத்தைக்கூடக் கொடுத்திருக்க முடியாது.

இலங்கை அரசாங்கமும் சரி, அதில் அங்கம் வகிக்கின்ற அரசியற் கட்சிகளும் சரி, இலங்கையில் இருக்கும் இன்றைய பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைக்க முடியும் அல்லது அப்படி முன் வைக்கும் அக்கறை இருக்க முடியுமென்று யாராவது நம்பியிருந்தால் அவர்களுக்காக பரிதாபப்படுவதைத் தவிர வேறெதைத்தான் செய்ய முடியும்?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இனப்பிரச்சினையைத் தீர்க்க பொருத்தமான தீர்வை முன் வைக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்தன. சந்திரிகா அரசு ஆட்சியில் இருந்த காலத்தில் அதற்கு - நடைமுறைப்படுத்துவது என்பது ஒரு புறமிருக்க - ஒரு சரியான தீர்வை முன் வைக்கக் கூடிய எல்லாவிதமான வாய்ப்புகளும் இருந்தன.

ஆனால், இதுவரை காலமும் இருந்து வந்த எல்லா ஆட்சியாளர்களையும் போலவே அதுவும் நடந்து கொண்டது. சந்திரிகா 'ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக ஒற்றை ஆட்சிக்குப் பதிலாக ஒன்றிணைந்த ஆட்சி இணைக் குழுமங்களின் கூட்டு ஆட்சி' என்றெல்லாம் அழகானதும், சாமர்த்தியமானதுமான வார்த்தைகளால் தனது கருத்தை வெளிப்படுத்தி வந்தார்.

ஆனால் அவர் முதன் முதலாகப் பதவியேற்ற ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தின் போது, தன்னை ஒரு சிங்களத் தலைவராகத் தெளிவாக இனங்காட்டிக் கொண்டார். இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி பீடத்தில் உட்கார்ந்ததும் அவரது திறந்த சிந்தனைகள் எல்லாம் மூடுண்டன. கபடத்தனம் இயல்பாகவே அவரிடம் தொற்றிக் கொண்டது. தமிழ் மக்களையும் அவர்களது போராட்டத்தையும் எப்படிச் சரிக்கட்டலாம் என்று செயற்படத் தொடங்கினார். இதன் பலன்தான் அவரால் முன்வைக்கப்பட்ட "சமாதானப் பொதி" என்ற கபட நாடகம்.

சந்திரிகா கட்சியிலிருந்தும், ஆட்சியிலிருந்தும் அவரது சகாக்களாலேயே தூக்கி வீசப்பட்ட பின், அந்தக் கட்சிக்குள் இருந்த ஓரளவுக்கேனும் நம்பிக்கை தரவல்ல சக்தி என்று ஓரளவுக்காவது இனங்காட்டிய தலைவரும் அக்கட்சியில் இல்லையென்றாகிவிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சந்திரிகா கழிக்கப்பட்ட பின் இருக்கின்ற கட்சியென்பது சுத்தமாக முழு அளவிலும் சிங்கள பேரினவாதத்தை உயர்த்திப் பிடிக்கின்ற ஒரு கட்சி என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையில் அப்படிப்பட்ட ஒரு கட்சியால் வைக்கப்படும் ஒரு தீர்வு தொடர்பாக ஏதாவது எதிர்பார்ப்பை யாராவது கொண்டிருந்தால், அது அவர்களின் தவறேயன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவறாக இருக்க முடியாது.
ஆக, அது இப்போது முன் வைத்திருக்கின்ற தீர்வு யோசனைகள் என்பவை இன்றுள்ள அந்தக் கட்சியால் வழங்கப்படக் கூடிய ஒரு தீர்வு மட்டுமே. இதை முன் வைத்ததன் மூலம் அவர்கள் தாங்கள் எந்தளவிற்குச் செய்ய முடியும் என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவுதான்!

அவர்கள் முன் வைத்த இந்தத் தீர்வு தொடர்பாக ஆத்திரம் கொள்ள வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

இராணுவத் தீர்வை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக வேறு விதத்தில் தெரியப்படுத்தியிருக்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்று ஆத்திரப்படுகின்றன தமிழ்க் கட்சிகள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 50 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றுள்ளதாக கோபம் கொள்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஐம்பது ஆண்டுகள் பின்னோக்கிச் சிந்தித்தாலும் சரி, ஐம்பது ஆண்டுகள் முன்னோக்கிச் சிந்தித்தாலும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் இந்த மட்டத்திற்கு மேல் சிந்திக்க முடியாது.

அடிப்படைச் சிந்தனையிலேயே கோளாறு இருக்கும் போது அது முன்னேறினால் என்ன, பின்னேறினாலென்ன அதன் தகுதிக்குத் தக்கதைத்தானே அதனால் செய்ய முடியும்.

'யுத்த மனோபாவம் கொண்ட ரத்னசிறி விக்கிரமநாயக்காவை பிரதமராகவும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாகவும் கொண்ட ஒரு கட்சி' நாட்டின் தலைமையில் இருந்தால், நாடு சப்பாணி நிலையில் இருந்து விடுபடுவதற்கான உள்ளொளியை எங்கிருந்து பெறுவது? ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் வழங்கும் ஆலோசனைப்படி அரக்க முயன்று அழிந்து போவதைத் தவிர வேறெதைத்தான் அதனால் செய்ய முடியும்?

யுத்தம், யுத்தம் மட்டுமே ஒரே வழி என்று மனசார நம்புகிற அந்த அரசுக்கு, தனது ஆட்சிக்காலத்தைக் கடத்தும்வரை எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டிய தேவை இருக்கிறது. தனது தகுதிக்கும் அறிவுக்கும் ஏற்றவிதத்தில் இது அதைச் செய்து கொண்டிருக்கிறது.

அதைப் பெரிதுபடுத்தி அலட்டிக் கொள்ளாதவரை, தமிழ்க் கட்சிகளும், ஊடகங்களும் தமது கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்த அரசாங்கத்திற்கு ஒரு ஆலோசனையைக் கூறி வைக்க முயன்று பார்க்கலாம்!

"உங்கள் காலத்தையும் உழைப்பையும் விரயம் செய்து இப்படித் திட்டங்களைத் தயாரிப்பதை விட்டு விடுங்கள். நீங்கள் உங்களுக்கு விருப்பமான விதத்தில் உங்கள் ஆட்சியை நடத்துங்கள். அதுபோதும். தமிழ் மக்கள் தலைவிதிக்கு அவர்கள் மருந்தைத் தேடிக் கொள்வார்கள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க பொலிஸ் மா அதிபர்

வடக்கு கிழக்கிலிருந்து வந்து கொழும்பில் தங்கியிருக்கும் தமிழர்களே உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று அறிவித்தார் பொலிஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா. தகுந்த காரணம் இன்றி அவர்கள் இங்கு நீண்ட காலமாக தங்கி இருப்பது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதே அவர் இதற்குக் கூறும் காரணம்!

ஆயினும் அப்படி எதுவும் நடக்காது என்று அரசு, மக்களுக்கு அறிவித்தது. ஜனாதிபதியும் கூட இப்படி தெரிவித்தார். ஆனால், பொலிஸ் மா அதிபர் சொன்னபடி, ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழர்களை பலவந்தமாக பஸ்களில் ஏற்றி வடக்குக் கிழக்குக்கு அனுப்பி வைத்துள்ளனர்! அதிகாலை 4 மணியளவில் விடுதிகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி பஸ்களில் ஏற்றி அனுப்பிவை வைத்திருக்கிறது இலங்கை பொலிஸ்.

இவ்வாறு தங்கியிருப்பவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்பது உண்மையானால் அவர்களை வடக்கு கிழக்கிற்கு திருப்பி அனுப்பி விடுவதன் மூலம் இந்த அச்சுறுத்தல் எப்படிக் குறைவடைந்து விடப் போகிறது?

பொலிஸ் மா அதிபரின் இந்தப் போக்கிற்கு இரண்டு அர்த்தங்கள் தான் இருக்க முடியும்.

ஒன்றில் வடக்கு கிழக்கு இலங்கையின் ஒரு பகுதி அல்ல என்று அவர் கருத வேண்டும். தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானவர்கள் வடக்கு கிழக்கு போய் எதைச் செய்தாலும் அப்பகுதி இலங்கையின் பகுதி இல்லை என்பதனால் அது தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

அல்லது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸின் கடமை அல்ல பாதுகாப்புக்கு பிரச்சினையாளர்கள் என்று சந்தேகிப்பவர்கள் எல்லோரையும் நாடு கடத்துவது தான் அதன் கடமை என்று அவர் கருதி இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழர்கள் காரணம் எதுவுமின்றி கொழும்பில் வந்து இருப்பதற்கு பொலிஸ் மா அதிபருக்கு தெரிந்த ஒரே காரணம் தேசிய பாதுகாப்பை குலைப்பது தான். இந்த முடிவை எந்த புலன் விசாரணையின் அடிப்படையில் அவர் கண்டு பிடித்தார் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்!

கேட்டால் அதை வெளியிடுவதும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகமானது என்று அவர் கூறக்கூடும்.

சரி தேசிய பாதுகாப்பு என்றால் என்ன?

வெள்ளை வான்களில் ஆட்களைக் கடத்துதல், தலைநகரத்தில் வைத்து நபர்களை படுகொலை செய்தல், கப்பம் வாங்குதல் போன்றவைகள் எல்லாம் தேசிய பாதுகாப்புக்குள் அடங்குமோ அடங்காதா என்று அவர் தான் தெரிவிக்க வேண்டும்.

அடங்கும் என்றால் இவற்றைச் செய்பவர்கள் வடக்கு கிழக்கிலிருந்து வந்து விடுதிகளில் தங்கியிருப்பவர்கள் தான் என்று சொல்கிறாரா பொலிஸ்மா அதிபர். பொலிஸ்காரர் பார்த்திருக்க ஆட்கள் கடத்திச் செல்லப்பட்ட வெள்ளைவான்களில் வந்தவர்களில் எத்தனை பேரை இதுவரை பொலிஸ் கைது செய்து அவர்கள் விடுதியில் இருந்தார்கள் என்று அடையாளம் கண்டிருக்கிறது? மட்டக்களப்பில் இருந்து வந்த செஞ்சிலுவைச் சங்க பணியாளர்களை கைது செய்து கொண்டு போய் கொன்று போட்டவர்களை ஏன் இது வரை விடுதியில் இருப்பவர்களை சோதனை செய்து கண்டுபிடிக்கவில்லை?

அடங்காது என்றால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்பது உண்மையில் எதனை? கிளைமோர் குண்டு வெடிப்புகளை மட்டும் தானா? கிளைமோர் குண்டுகளை வைப்பவர்களில் எத்தனை பேர் விடுதிகளிலிருந்து அடையாளம் காணப்பட்டு இருக்கிறார்கள்?

"சும்மா தேவையில்லாத கேள்வியெல்லாம் எதுக்கு? பொலிஸ்மா அதிபருக்கு தேவை தமிழர்களை வடக்கு கிழக்குக்கு அனுப்பிவிடுவது தான். அதற்கு இப்படி ஒரு காரணம் சொல்லியிருக்கிறார். இது வெறும் தொடக்கம் தான்"

"அப்படி என்றால் அவர் எல்லாத் தமிழர்களையும் அனுப்பப் போகிறார் என்கிறீர்களா?"

"நிச்சயமாக அது தான் நடக்கப்போகிறது இனச் சுத்திகரிப்பில்"

"அதாவது அவர் வடக்கு கிழக்கை வேறு நாடு என்று முடிவு கட்டி விட்டார்?"

"நிச்சயமாக. உண்மையில் அவர் வடக்கு கிழக்கை தமிழர்களின் தாயகம் என்றும் அது அவர்களின் நாடு என்றும் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்."

"அப்ப அவர் தனிநாடு கொடுத்திருக்கிறார் தமிழருக்கு என்கிறீர்"

இது நான் கேட்ட இருவரது உரையாடல்.

முஸ்லிம்களின் வெளியேற்றம், அவர்களை தனி இனமாக வரலாற்றில் உருவமைத்தது. தமிழர்களின் வெளியேற்றம் அவர்களுக்கு தனிநாட்டை சட்டபூர்வமாக்கிவிடப் போகிறது. வாழ்க இனவழி அரசியற் சிந்தனை. வாழ்க பொலிஸ்மா அதிபர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலாபம் குரங்குகளுக்கே

சமாதான பேச்சுவார்த்தை என்ற விடயம் இப்போதெல்லாம் எல்லோருக்கும் மறந்து போன ஒரு விடயமாகப் போய் விட்டது.

பேசிப் பேசியே காலத்தைக் கடத்துவதில் அவர்களுக்கே அலுப்பு ஏற்பட்டு விட்டது. கொஞ்சக் காலத்திற்கு இந்தப் பேச்சு வார்த்தைகளை மூட்டை கட்டி வைத்து விட்டு சண்டையில் ஈடுபட்டால், பேசுவதற்கு ஏதாவது புதிய விடயம் கிடைக்கலாம். அல்லாவிட்டால் வெறுமனே பேசியதைப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று நினைக்கிறது அரசாங்கம்.

புலிகளைப் பொறுத்தவரை, இந்த அரசாங்கத்துடன் பேசுவது என்பது, ஒரு தவிர்க்க முடியாத சர்வதேச நெருக்கடியின் காரணமாக உருவான ஒன்றே அன்றி, அது எந்தப் பயனையும் தருமென்று அவர்கள் நம்பி பேச்சில் இறங்கியது கிடையாது. அரசாங்கத்திற்கும் ஒருவகையில் இதுதான் அபிப்பிராயம் என்றாலும், பேசுவதுதான் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிறந்த வழி என்று எல்லோரும் சொன்னதால், பேசிப் பார்ப்போம் என்று இறங்கியது. ஆனால் அதனால் பேச்சு வார்த்தையை ஒரு சுற்றுக் கூட ஒழுங்காக நடத்த முடியவில்லை. ஆக, பேச்சுவார்த்தை மூட்டை கட்டி ஒரு மூலையில் வைக்கப்பட்டு விட்டது. யுத்தமும் அதனால் கிடைக்கும் வெற்றிகளும் ஒரு விதத்தில் போரும். படைச் சமநிலையும் 'பேச்சுவார்த்தை'யை நடாத்த உகந்ததாக யாராவது ஒருவரின் பக்கமாகச் சரிகிற வரையும் இனி யாரும் இதைப் பற்றிக் கதைக்கப் போவதில்லை. படைச் சமநிலையில் வீழ்ந்து கிடப்பவர் தனது நிலைமை காரணமாகப் பேச்சு வார்த்தையைக் கோருவாரானால், அப்போது வெற்றி பெற்றவர் தமக்குச் சாதகமான முடிவுகளுக்கு வீழ்ந்தவரை ஒப்புக் கொள்ள வைத்து விடலாம். என்பது தான் இலங்கை அரசியல் பேச்சுவார்த்தைப் போக்கின் கோட்பாடாக இருந்து வந்துள்ளது.




இருக்கும் பிரச்சினை என்ன அதை எவ்வாறு தீர்க்கலாம் என்பதை விடவும் யார் பிரச்சினையாக இருக்கிறார்கள் அவர்களைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்ற எண்ணமே பேச்சுவார்த்தையை வழி நடத்தி வந்திருக்கிறது.

இந்த அடிப்படை ஒருபோதும் சமாதானப் பேச்சுக்கு உதவப் போவதில்லை என்பது வெளிப்படையான ஒரு விடயம்.

தாங்கள் தாங்கள் இருக்கும் நிலைப்பாட்டை இறுகப் பிடித்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் அந்த நிலைகளை மாற்றாமல் ஒருவரோடு ஒருவர் பேசுவது என்பது, பேச்சுவார்த்தையில் ஒருபோதும் வெற்றியைத் தரப் போவதில்லையென்று உலக ஆய்வாளர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளார்கள். நிலைப்பாட்டை அடிப்படையாகப் பாவித்துப் பேசுவதற்குப் (Position based) பதிலாக நலன்களை அடிப்படையாக (Interest based) வைத்துப் பேச முடியும் என்றால் மட்டுமே பேச்சுவார்த்தையில் இரு புறமும் வெற்றியைப் பெற முடியும்.

சமூகவியல் ஆய்வாளர்கள் பலர் பேச்சுவார்த்தையில் (Negotiation) நான்கு விதமான முடிவுகள் எட்டப்படலாம் என்று கூறுகின்றனர். 1. தோல்வி - தோல்வி. 2. தோல்வி - வெற்றி. 3. வெற்றி - தோல்வி. 4. வெற்றி - வெற்றி என்பனவே அவை. வெற்றி - வெற்றி என்ற முடிவைத் தவிர மற்றைய எல்லாமே ஒன்றில் இரு தரப்புக்குமோ அல்லது ஏதாவது ஒரு தரப்புக்கோ தோல்வியையே தருகிறது. தோல்வி - வெற்றி அல்லது வெற்றி - தோல்வி என்ற நிலைப்பாடு, சமரச வகைப்பட்டதாகும். இந்தச் சமரசம் ஒருபோதும் நிலையாக இருக்கப் போவதில்லை. ஆயினும், கொடுத்தும் - பெற்றும் சமாதானமாகின்ற இந்த நிலையானது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்காவது நல்லிணக்கத்தை உருவாக்கச் செய்கிறது. ஓரளவுக்குத் திருப்தியான நிலைமையை ஏற்படுத்தக் கூடியது. இடையிடையே நடந்த முன்னைய அரசுகளின் ஓரளவு சுமுகமான முடிவுகள் இவ்வாறுதான் எடுக்கப்பட்டன. ஆனால், இன்றைய இலங்கை அரசாங்கத்தின் முடிவு தோல்வி - தோல்வி என்ற விளைவை மீறி ஒருபோதும் செல்லப் போவதில்லையென்பதையே காட்டுகிறது.

அதிகாரப் பகிர்வை மையமாகக் கொண்ட சிக்கலில், பகிர்வுக்கே இடமில்லையென்ற நிலைப்பாட்டுடன் ஒருபோதும் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது.

இந்த நிலைப்பாட்டில் இருப்பதால் அரசுக்குப் பேசுவதற்கும் ஒன்றுமில்லாமல் போய் விட்டது. இந்நிலையில் பேசக் கூடிய மொழி ஒன்றே ஒன்றுதான். யுத்தம்.

ஆயுதங்களின் பலமும், ஆயுத பாணிகளின் பலமும், யுத்தத்தை நடத்துகிற ஆற்றலின் பலமும் மட்டுமே பேசிக் கொள்ளக் கூடிய ஒரு சூழல் இது.

இது ஏதாவது ஒரு அணியில் முழுமையான தோல்வி ஏற்படும்வரை ஓயப் போவதில்லை. ஆனால், வரலாற்று ரீதியான உண்மை என்னவென்றால், பிரச்சினைக்கு அடிப்படையான ஒரு முரண்பாடு இருக்கும்வரை, முழுமையான தோல்வியென்ற ஒன்று ஒரு போதும் நியாயமான ஒன்றாக ஆகிவிட முடியாது என்பதுதான்.

இதனால் யார் லாபம் அடையப் போகிறார்கள்.

தமக்குள் அப்பத்தைப் பங்கிட்டுக் கொள்ளத் தயாரில்லாத பூனைகளின் அப்பத்தை முழுமையாகத் தின்ற குரங்கின் கதை ஞாபகம் இருக்கிறதல்லவா?

ஆம், லாபம் அடையப் போகின்றவர்கள், சிங்களவர்களோ புலிகளோ அல்ல, குரங்குகள்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதப் பேரவையின் வேள்வி!



நாசமறுப்பான்

"புலிகளைக் கிழக்கிலே முற்றாக அழித்து ஒழித்து விட்டு, வடக்கிலே அவர்களைப் பலவீனமாக்குவதுதான் எமது திட்டம்" என்று அறிவித்திருக்கிறார் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. தனது திட்டத்தை ஒரு இராணுவத் தளபதி வெளிப்படையாகச் சொல்லலாமா? சொல்ல முடியுமா? என்று யாராவது சந்தேகப்படக் கூடும். இப்போதெல்லாம் இலங்கைப் படையினர் அரசியல்வாதிகளென்ற இரு பிரிவினர்க்கும் தாம் எதைச் செய்கிறோம். தமது கடமை எது என்ற தெளிவு இல்லாமல் போய்விட்டது. அல்லது அவ்விரு பிரிவினரும் நாட்டைப் பாதுகாக்கும் தமது கடமை உணர்வின் தீவிரம் காரணமாக 'எல்லோரும் எல்லாமே' செய்ய வேண்டுமென்ற ஒருமித்த நிலைக்கு வந்துவிட்டார்கள். பாராளுமன்றத்துக்கு துப்பாக்கியுடன் வரப்போவதாக ஒரு அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

ஆனால் சரத் பொன்சேகா அறிவித்திருப்பது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. இது உலகம் பூராவும் தெரிந்த ஒரு வெளிப்படையான விடயம்தான்.

ஆனால், யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று நடைமுறையில் இருப்பதாகக் கூறிக் கொண்டே தற்காப்பு நோக்கத்திற்காகவே நாம் தாக்குதல் தொடுத்து வருகிறோம் என்று சொல்லியபடி இதுவரை யுத்தத்தை நடத்தி வந்தனர் படையினர். இலங்கைப் படையினரின் நடவடிக்கைகள் தீவிரமாக யுத்தத்தை நடாத்தும் நோக்குடன் நடப்பதாக சர்வதேசம் உள்ளிட்ட பலரும் கேள்வியெழுப்பிய போதெல்லாம் 'நாம் தவிர்க்க முடியாமை என்ற நிலமை வந்தாலொழிய தாக்குதலை மேற் கொள்ளப் போவதில்லை' யென்றே பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்து வந்தார். ஆனால், இப்பொழுது முதன் முதலாக இராணுவத் தளபதி, இந்தத் தாக்குதல்களுக்கு யுத்த நோக்கம் இருப்பதை வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்.

புலிகளின் விமானத் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட நெருக்கடிகள் தொடர்பாக உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவும், இந்தியாவிடம் ஆயுதக் கருவிகளை வாங்குவதற்காகவும் என தீவிரமாக இறங்கிய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷஅவர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக முடிவு எடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தூக்கி வீசுகின்ற முடிவு என்பதில் சந்தேகமில்லை.

சமாதான முயற்சி, சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்று எதைச் செய்வதாக இருந்தாலும், அது புலிகளைப் பலவீனமாக்காமல் அதனால் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை என்று சரத் பொன்சேகாவும் ஜாதிக ஹெல உருமய, ஜே.வி.பி போன்ற கட்சிகளுடன் சேர்ந்து ஒலித்திருக்கிறார். ஜாதிக சங்கமயவை சேர்ந்த எஸ்.எல்.குணசேகரா அவர்கள் ஆங்கில வார இதழ் ஒன்றிற்கு எழுதிய கட்டுரைக் குறிப்பொன்றில், பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது என்பது வெறும் காலவிரயம் என்று வலியுறுத்திச் சொல்கிறார். புலிகளை முற்றாக ஒழித்துக்கட்டாமல் வேறெந்த முயற்சியில் ஈடுபட்டாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லையென்று தெரிவிக்கிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட அனைத்து நாடுகளதும் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்பதை கடந்த வாரம் அபுதாபியில் நடைபெற்ற G11 மாநாட்டிலும் வலியுறுத்திக் கூறி விட்டு வந்திருக்கிறார். நாட்டின் வளர்ச்சிக்குப் பிரதான தடையாக உள்ள பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த G8 நாடுகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் ஒரு கோரிக்கையையும் அங்கு முன் வைத்திருக்கிறார்.

புலிகளின் விமானத் தாக்குதல், அண்மையில் நெடுந்தீவில் நடைபெற்ற கடற்படை முகாம் மீதான தாக்குதல் என்பன. இந்த ஒழித்துக்கட்டல் மிகவும் அவசரமும் அவசியமானதும் என்று அவர்களை உணர வைத்திருப்பதாக அண்மைய பேச்சுக்கள் தெரிவிக்கின்றன. அதாவது பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டாமல், ஒரு அடி கூட இனி முன்னேற முடியாது என்பது ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தினது அனைத்து மட்டத்தினரதும் முடிந்த முடிவாக உள்ளது. ஆனால், இதில் ஆச்சரியம் என்னவென்றால் இவர்கள் பயங்கரவாதம் என்று எதனைக் குறிப்பிடுகிறார்கள் என்பதுதான். புலிகளால் நடாத்தப்படும் தாக்குதல் நடவடிக்கைகள்தான் பயங்கரவாதம் என்றும், புலிகள்தான் இந்த நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமான பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் சொன்னாலும் அந்தப் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டுமென்று உலகம் பூராவும் சென்று முறையிட்டாலும், நேரடியாகப் 'புலிப் பயங்கரவாதத்தை' ஒழிக்கும் ஒரு திட்டம் அவர்களிடம் இல்லை. 'புலிகளைக் கிழக்கில் ஒழித்துக் கட்டிவிட்டு, வடக்கில் பலவீனப்படுத்த வேண்டும்' என்று கூறும் சரத் பொன்சேகா கூட, பயங்கரவாதிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்று கூறவில்லை, அல்லது அழிக்க முடியுமென்று கூறவில்லை. மாறாக, அப்பொழுதுதான், பேச்சு வார்த்தையின் போது, ஒரு ஏற்கப்படக் கூடிய திட்டத்தை முன் வைக்கலாம் என்று தெரிவிக்கிறார். அல்லது தாம் வைக்கும் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு அவர்கள் வருவார்கள் என்று அவர் கருதுகிறார்.

ஆக, புலிகளை அடக்குவதன் மூலமாக, தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெட்டிக் குறைத்து ஏற்கச் செய்துவிட முடியும் என்பது தான் அவரது நியாயத்தின் வெளிப்படையான அர்த்தம். இது ஒன்றும் புதிய கருத்து அல்ல. ஆனால் எழுகின்ற புதிய கேள்வி என்னவென்றால், கிழக்கில் முற்றாக அழித்து, வடக்கில் பலவீனப்படுத்தி விட்டால் புலிகள் பயங்கரவாதிகள் இல்லையென்று ஆகிவிடுவார்களா என்பதுதான். புலிகள் பயங்கரவாதிகள் தான் என்று அடித்துக் கூறி, அவர்களை அழிக்க வேண்டுமென்று சர்வதேச மட்டத்திலும் தொடர்ச்சியாக பிரச்சாரப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்திற்கும், இராணுவத்திற்கும் ஏன் பிறகு பேச்சுவார்த்தை பற்றிய ஞாபகம், புலிகளை அழிப்பது சம்பந்தமாகப் பேசும்போதெல்லாம் வரவேண்டும்?

இதனால்தான் அவர்கள் பயங்கரவாதம் என்று தாம் சொல்வது எது என்பது பற்றி அவர்களுக்குத் தெளிவில்லையென்று குறிப்பிட்டேன்.

உண்மையில் அவர்கள் 'பயங்கரவாதம்' என்ற சொல்லால் அடையாளப்படுத்தும் மனிதப்படுகொலை, ஜனநாயக மறுப்பு, கொள்ளை, கப்பம் மற்றும் எண்ணிலடங்காத சட்டவிரோதச் செயல்கள் எவற்றுக்கும் எதிரானவர்கள் அல்ல. சரியாகச் சொல்வதானால், இவையெல்லாம் நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத அம்சங்கள் என்பதுதான் அவர்களது கருத்து. பேட்டை ரவுடிகளின் பாஷையில் 'நல்ல விதமாக முடியாவிட்டால், கூடாத விதத்திலும் நான் இதனைச் செய்வேன்' என்று பொலிஸ் மா அதிபரே கூறுகிறார். 'சட்டம் என்ன சொல்கிறது என்று பார்த்துச் செயற்படுவது மேர்வின் டி சில்வாவின் பழக்கம் இல்லை. செய்து விட்டு சட்டத்தை (அல்லது நீதியை) அதற்குக் கூறுவதுதான் எனது பழக்கம்' என்று தொலைக்காட்சியில் தெரிவிக்கின்றார் அமைச்சர். ஜனாதிபதி முதல் அமைச்சர்கள், பொலிஸ் என்று எல்லோருமே

> **பயங்கரவாதம் என்று கூறுவது எதை?**
>
> **ஆம், அது உண்மையில் பயங்கரவாதம் என்று கூறுவது தமிழ் மக்களது, சிறுபான்மை இனங்களது உரிமைக்கான குரலையும், அதற்கான போராட்டத்தையும்தான். அதனால்தான் அது புலிகளை ஒடுக்கிய பின், இந்த உரிமை விடயம் சம்பந்தமாகப் பேசலாம் என்று கூறுகிறது. அது உண்மையில் ஒடுக்க விரும்புவது புலிகளை அல்ல. தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை. அதை ஒடுக்குவதற்குத் தற்போதைக்கு புலிகளை ஒடுக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது அரசுக்கு.**

அண்மைக்கால தமிழ்ப் பட வில்லன்களைப் போல பேச ஆரம்பித்து விட்டார்கள். ஆட்கடத்தல், பணப்பறிப்பு, படுகொலை, ஊழல் என்று குற்றச் செயல்களுக்கும், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுக்கும் தொடர்புகள் இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இவை பற்றிய விசாரணைகள் எதுவும் நடப்பதில்லை. நடந்தாலும் அவை ஒருபோதும் முடிவுகள் எதையும் காண்பதில்லை. ஊடகத்துறை முழுமையாக எழுதப்படாத உத்தரவுக்குக் கீழ்ப்பட்டு மௌனமாக்கப்பட்டுள்ளது. அல்லது இழுத்து மூடப்பட்டு வருகிறது. சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் எல்லாமே நாட்டின் நிலமை பற்றி வெளிப்படையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இவையெல்லாம் பயங்கரவாதத்தில் அம்சங்கள் என்றால், அந்தப் பயங்கரவாதம் பற்றி அரசாங்கத்திற்கு எந்த எதிர்ப்புணர்வும் இருக்க நியாயம் இல்லை.

அப்படியானால், அது பயங்கரவாதம் என்று கூறுவது எதை?

ஆம், அது உண்மையில் பயங்கரவாதம் என்று கூறுவது தமிழ் மக்களது, சிறுபான்மை இனங்களது உரிமைக்கான குரலையும், அதற்கான போராட்டத்தையும்தான். அதனால்தான் அது புலிகளை ஒடுக்கிய பின், இந்த உரிமை விடயம் சம்பந்தமாகப் பேசலாம் என்று கூறுகிறது. அது உண்மையில் ஒடுக்க விரும்புவது புலிகளை அல்ல. தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை. அதை ஒடுக்குவதற்குத் தற்போதைக்கு புலிகளை ஒடுக்குவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது அரசுக்கு.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் பற்றி அரசாங்கம் விரைவில் தனது அறிவிப்பை வெளியிடும் என்று தெரிவித்திருக்கிறார் ஹெகலிய ரம்புக்வெல. 'அறிவிப்பு' என்று அவர் சொல்வது உண்மையில், அதைக் கிழித்தெறிய வேண்டுமென்ற எல்லா இனவாதக் கட்சிகளதும் கோரிக்கையை நடைமுறைப்படுத்தப் போவதைத்தான்.

எதிர்க்கட்சியான ஐ.தே.க. அரசாங்கத்தால் அதனைச் செய்ய முடியாதென்று சவால் விடுகிறது. ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டால் இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய நிதி உதவிகளை வழங்குவது மறுபரிசீலனை செய்யப்படும் என்று ஜப்பான் தவிர்ந்த ஏனைய நாடுகள் அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கின்றன. ஆனால், அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் உண்மையில் இப்பொழுது பெயரளவில்தான் இருக்கிறது என்பது ஒன்றும் இரகசியமல்ல. கிழக்கு முழுவதையும் அகதிகளின் கூடாரமாக மாற்றும் பொழுது விமானக் குண்டுகள் வடக்கிலும் கிழக்கிலும் பொழியப்படும்போது முப்படைகளும் தொடர்ந்து படைநடப்புச் செய்யும் போது எல்லாம் இந்த ஒப்பந்தத்தால் எதுவுமே செய்ய முடியவில்லை. இந்த நடவடிக்கைகள் எதையும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தம் கட்டுப்படுத்தவில்லை. அல்லது கட்டுப்படுத்தினாலும், அதையிட்டு யாரும் அக்கறைப்படவில்லை.

புலிகளின் விமானங்கள் குண்டு போட்டதும், புலிகளின் கடற்படை நெடுந்தீவு கடற்படை முகாமை அழித்ததும் தான் இப்போது அதைக் கிழித்தெறிய வேண்டிய தேவை இருப்பதாக அரசுக்கு புதிதாக உணர்த்தி விட்டிருக்கிறதா?

இல்லை. புலிகளுக்கு எதிராக முழுமையான யுத்தத்தில் ஈடுபடவும், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் படை நகர்த்தவும் தடையில்லாத ஒப்பந்தத்தால், அரசுக்கு யுத்தம் தொடர்பாக எந்த இடைஞ்சலும் இல்லை. ஆனால் அரசுக்கு வேறு இரண்டு விதமான இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஒன்று, இழந்து வரும் தனது கீர்த்தியை உயர்த்திப் பிடிக்கவும், பலமான ஆதரவு பெற்ற அரசாங்கமாகத் தன்னை வைத்திருக்கவும். அதற்கு இனவாத சக்திகளுடன் முழுமையான சமரச உடன்பாட்டுக்கு போக வேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது. உள்நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடியால் ஏற்படக் கூடிய பாதிப்புகள், படைப்பிரிவினரிடையே ஏற்படுகின்ற அரசு மீதான நம்பிக்கையீனம் என்பவைகளை இல்லாமற் செய்வதற்கு அரசுக்கு இந்த அரசியல் முடிவு அவசியமாகப் படுகின்றது.

இரண்டாவது, இந்த ஒப்பந்தம், தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினையில் இருந்து கட்டப்பட்டது. அது தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து படைகளை விலக்குதல், பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்களை அவர்களது இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்று குடியேற வழி செய்தல், மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து இராணுவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மீட்டல் என்ற விடயங்களும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இதனால் இந்த ஒப்பந்தம் இருக்கும்வரை அரசாங்கம் ஒப்புக்கொண்ட இக்கடப்பாடுகளுக்குக் கட்டுப்பட்ட ஒரு நிலமை இருக்கவே செய்கிறது. அதைக் கிழித்தெறியப் பொருத்தமான ஒரு காரணம் அரசுக்குத் தேவையாக இருக்கிறது. புலிகளின் விமானக் குண்டுவீச்சு, நெடுந்தீவு தாக்குதல், என்பவை தற்பாதுகாப்பு என்ற எல்லைகளைக் கடந்தவை என்று புலிகள் மீது குற்றஞ்சுமத்திவிட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகி விடலாம் என்று அரசு கருதியது. இவ்வாறு விலகுவதனால், சர்வதேச கண்காணிப்பு நிறுவனங்கள் அனைத்தையும், பெட்டி படுக்கைகளோடு வெளியேற்றி விடலாம். அதன் பிறகு 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைகளையும் இட்டு எந்தப் பயமும் இருக்க வேண்டியதில்லை. மனித உரிமைகள் பற்றி அதன் பிறகு யாரும் வாய் திறக்கப் போவதில்லை.'


யுத்தத்தை முழுமையான தீவிரத்துடன் நடத்த முடியும்.

தீவிரமான யுத்தம் என்பது எந்தப் பரிமாணத்தையும் எடுக்க முடியும். யுத்தத்தின் நியாயத்தன்மைகளுக்கு முன்னால் எல்லா எல்லை மீறிய நடவடிக்கைகளும், நியாயப்படுத்தப்பட முடியும்.

கொழும்பிலுள்ள அனைத்துத் தமிழர்களையும் உடனடியாக வெளியேறுமாறு பொலிஸ் உத்தரவு போட்டால் அதை யாரும் தட்டிக் கேட்கப் போவதில்லை. வேண்டுமென்றால் விடுதிகளிலிருந்து ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் கூடக் கண்டு பிடிக்கலாம். இனச் சுத்திகரிப்பைக் கூட மிகவும் நியாயப்படுத்தக் கூடிய விதத்தில் செய்ய முடியும். (ஏற்கனவே எம்மிடம் உதாரணம் இருக்கிறது.)

இலங்கை அரசாங்கத்தின் ஒற்றையாட்சி, பௌத்த மதத்தின் சிறப்புரிமை போன்ற கோட்பாடுகள் வழங்கக் கூடிய சமூக செல்வாக்கிற்கும், சிங்கள பெருந்தேசிய அலையின் பேரெழுச்சிக்கும் மத்தியில், இந்த அரசாங்கம் தானும் தனிப்பட்ட முறையில் அதன் உறுப்பினர்களும் செழிப்புற்று விட முடியும் என்று நம்புகிறது. அதை நோக்கிய நகர்வுகள்தான் இன்று நகர்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நகர்வும்.

இலங்கையின் அரசாங்கங்கள் எவையும், தமது நாட்டின் தன்மையையோ அது வளர்ச்சிபெற வேண்டிய பாதையையோ தெளிவாகப் புரிந்து கொண்டு இயங்கியவை அல்ல. ஒவ்வொரு அரசாங்கமும் அவற்றின் பண்பிலும் தரத்திலும் சிதைவுற்ற ஒரு நிலையை நோக்கியே வளர்ந்து வந்திருக்கின்றன என்றாலும், மக்களின் தளம் என்ற ஒரு தளம் அவை ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு அளவுகளில் இருந்தது. வெவ்வேறு அளவுகளில் அவை மக்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின. அவை பல்வேறு விதமான மக்கள் திரள்களின் வளர்ச்சிக்கு அல்லது நலனுக்காகச் செயற்படும் நோக்கங்களை - சரி தவறுகளுக்கு அப்பால் - கொண்டிருந்தன. சந்திரிகா அரசாங்கம் சரிவுறத் தொடங்கிய



காலத்திலிருந்து எழுந்து வந்து கொண்டிருக்கும் அலையானது எந்த மக்கள் திரள்களினதும் நலன்களுக்காக அல்லாமல், எல்லா மக்கள் திரளையும் திரட்டும் - பெருந் தேசியவாத அணிக்குள் திரட்டும் - ஒரு பேரினவாதப் பேரலையாகும். இந்தப் பேரினவாதப் பேரலை இனத்தின் பேரால் எல்லா அநியாயங்களையும் நியாயப்படுத்தக் கூடியது. எல்லா இனப் படுகொலையையும் ஒரு வேள்வியாக - தியாக வேள்வியாக, நியாயப்படுத்தக் கூடியது.

இந்த வேள்வி, தேசத்தின் நலன்களுக்காக, தெய்வங்களுக்காக நடத்தப்படும் வேள்வி அல்ல.

பிசாசுகளின் நலன்களுக்காக, தேசம் தெய்வங்களைப் பலி கொடுக்கிற வேள்வி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் முரண்கள்

ஜே.எஸ்.திசநாயகம்

இக்கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் இலங்கைப் பாராளுமன்றத்தில் சூடான விவாதமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும். எதிர்பாராத விதமாக பிரிட்டன், தமிழர்கள் படும் துயர் குறித்து, தனது கரிசனையையும் கவலையினையும் வெளிப்படுத்தியிருந்ததன் எதிரொலியே இந்த விவாதத்திற்கான காரணமாகும். கடும் சிங்கள தேசியவாதிகளும், இனவாதிகளுமான ஜே.வி.பி.யினர் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரும் இன்னும் இவர்களைப் போன்ற வேறு சில கட்சிகளில் அங்கம் வகிக்கும் ஏனைய இனவாதிகளும் பிரிட்டனுக்கு எதிராக இப்போது போர்க்கொடி ஏந்தி வசைமாரி பொழிந்த வண்ணம் வெறித்தனமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருப்பர்.

விவாதத்திற்கு முன்னதாக இனப்பிரச்சினைத் தரப்பினரை உள்ளடக்கியதாக ஒரு உச்சி மாநாடொன்றினை நடாத்தும் வகையில் பிரிட்டன் எடுத்திருக்கும் முன் முயற்சியையிட்டு ஜே.வி.பி கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. "இலங்கை பிரிட்டனின் ஒரு காலனித்துவ நாடாக இருந்த காலம் மலையேறிப் போய்விட்டது. அதே போக்கில் பிரிட்டன் இப்போதும் செயற்பட முடியாது. இந்த வகையில் வெளிநாடுகளின் அநாவசியத் தலையீடு எதனையும் இலங்கையர்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். இதனை பிரிட்டன் ஒரு போதும் மறந்து விடக்கூடாது."




இனப்பிரச்சினை அரசியலில் பிரிட்டன் வெளிப்படுத்திருக்கும் அக்கறை ஒன்றும் திடீரானதல்ல. இதில் ஏற்பட்டிருக்கும் ஆச்சரியகரமானதொரு திருப்பம் என்னவெனில், குருட்டுத்தனமாக ஒரேயடியாக இலங்கை அரசுக்கும் அன்றைய கால கட்டத்தில் பதவியிலிருக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவளிப்பதுடன் தன்னை மட்டுப்படுத்தி நின்று விடாது, தமிழ் சமூகத்தினுடைய அபிப்பிராயத்தைக் கேட்கும் வகையிலும் பிரிட்டன் இப்போது கரிசனை கொண்டிருப்பதேயாகும்.

2001 காலப்பகுதியில் அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்த எதுவித தயக்கமும் இன்றி மனம் ஒப்பிய பிரிட்டனுக்கு தற்போது அத்தடையினை நீக்கக் கூடியதான சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தோன்றுகின்றன. இத்தகையதொரு பின்னணியில் இத்தடை நீக்கம் பிரிட்டனில் புலிகள் இயக்கத்திற்குச் சட்டபூர்வமானதொரு அந்தஸ்தை வழங்குவது மாத்திரமின்றி அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து கொண்டு புலிகள் இயக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்திய மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகிய தடை, படிப்படியாக வலுவிழந்து போக நேரிடும் சாத்தியமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பகுதிக்கு பிரித்தானிய பாராளுமன்றக் குழு சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதியொருவர் தமது தரப்பின் சார்பில் முன் வைக்கும் அபிப்பிராயங்களைச் செவிமடுப்பது என்ற தொடர்பில் வெளியிடப்பட்டிருக்கும் ஆலோசனை குறித்தும் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதிகள் மேலும் கலக்கமடைந்துள்ளனர்.

02.05.2007 புதன்கிழமை பிரித்தானிய பாராளுமன்றத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போது உத்தேச தடை நீக்கம் குறித்து ஆராயப்பட்டது. மக்கள் மீதான தடை அவர்களைத் தலைமறைவாக்கிவிடும் எனச் சுட்டிக் காட்டியதுடன் சமாதானம் நோக்கிய முன் முயற்சியாக விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு அனுகூலமான நிலைமைகள் உருவாகுமானால் நிச்சயமாக பிரிட்டனுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் அதனால் நன்மையும் அனுகூலமும் ஏற்படும் எனவும் தாராள ஜனநாயகவாதக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான சிமன் ஹியூஸ் குறிப்பிட்டார். (தமிழ்நெற் 03.05.07)

விவாதத்திற்கு முன்னதாக, தொழிற்கட்சி, தாராள ஜனநாயகவாத மற்றும் ரோறிக் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய விதத்தில் சகல கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன் நோக்கம் இலங்கையில் தமிழர்கள் நீதி, கௌரவத்துடன் சமத்துவமாக வாழக் கூடிய விதத்தில் சமாதானத்திற்குப் பங்களிப்பதாகும்.

தடையானது பிரிட்டனில் வாழும் தமிழர்களுக்குப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் மீதான அச்சம் காரணமாக கருத்துக் கூற முடியாதவாறு வாய்ப்பூட்டினை போட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளுடனான எத்தகைய தொடர்பினையும் கூட அவர்கள் மேற்கொள்ள முடியாதவாறும் தடுத்துள்ளதாக தொழிற்கட்சி மற்றும் தாராள ஜனநாயகவாத அணிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தடைநீக்க யோசனைக்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளனர். இதேவேளை, தடை நீடிக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்புகளினால் பலாபலன்கள் கிடைக்கும் என்பதனை மறுப்பதற்கில்லையென்றும் பழமைவாத அணியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தடைநீக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாக விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிட வேண்டுமென வலியுறுத்திய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான கனிஷ்ட அமைச்சரான கவாநிதி கிம் ஹொவல்ஸ் முக்கியமான விடயமொன்றைப் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார். "இத்தடை நீக்கம் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். எப்பிரச்சினைக்கும் இதுதான் தீர்வென திட்டவட்டமாக எதனையும் முன் வைத்து விட முடியாது. ஆனால், விடுதலைப் புலிகளுக்கான அங்கீகாரம் முன்னேற்றகரமான முறையில் விடயங்களை முன்னெடுக்க உதவுமென நாம் நம்பும் பட்சத்தில், அதனை மிகுந்த சிரத்தையுடன் எத்தகைய தயக்கத்திற்கும் இடமளியாத வகையில் அணுகுவதற்குத் தயாராயிருத்தல் வேண்டும் - அதற்கு நான் பொறுப்பேற்கிறேன்". - (தமிழ்நெற் 03.05.07)

சகல கட்சிகள் பாராளுமன்றக் குழு மூன்று கட்டங்களிலான நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கிய நடவடிக்கைகளை பிரிட்டனின் ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது. சகல கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய தூதுக்குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று அங்கு அவர்களுடன் அர்த்தமுள்ளதானதொரு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வனை பிரித்தானியப் பாராளுமன்றத்தில் உரையாற்ற அழைப்பு விடுப்பது. இனப்பிரச்சினையின் பிரதான தரப்பினர்களை உள்ளடக்கிய விதத்தில் பிரிட்டனில் ஒரு உச்சிமாநாடொன்றைக் கூட்டி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது ஆகியனவே அவையாகும்.

முற்றுகைக்குள்ளாகி அல்லற்படும் தமிழ் மக்களுக்கு இத்தகைய அணுகுமுறை இணக்கமானதாகப்படும் பட்சத்தில் பிரிட்டன் இலங்கை அரசாங்கத்திற்கெதிராக ஒரு கடும் போக்கினைக் கடைப்பிடிக்க முற்படும்.

2007க்கான வாக்குறுதி அளிக்கப்பட்டதுடன் நிவாரணத் தொகையில் அரைவாசியினையே பிரிட்டன் வழங்குமென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகை அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கடன் நிவாரணம், சுனாமிக்குப் பின்னான தேவைகள் மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படும். எவ்வாறெனினும் இந்த நிவாரணமும் மனித உரிமைகள் மேம்பாடுகள் பாதுகாப்புச் செலவினங்கள் போன்றவை தொடர்பிலான சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதில்



**உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்குள் முடக்கி அதன் இராணுவ பலத்தைத் தளர்வடையச் செய்ததன் மூலம், ஒஸ்லோ சிங்கள பெரும்பான்மைக்குச் சாதகமான, அனுகூலமானதொரு நிலைமையினையே தோற்றுவித்திருந்தது.**

**இதன் தாற்பரியத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாத சிங்கள இனவாதிகள் கடந்த நான்கு வருடங்களாக நோர்வேயை 'வெள்ளைப் புலிகள்' எனத் திட்டித் தீர்த்துப் பரிகசித்து வந்துள்ளனரென்பது மிக வேடிக்கைக்குரியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கிருக்கும் பற்றுறுதியான நடவடிக்கைகள் மற்றும் கடப்பாடுகளில் தங்கியுள்ளது.

"ஒப்புக் கொண்டதில் அரைவாசித் தொகையினையே நாம் வழங்குகிறோம். ஏனெனில் இரு அரசாங்கங்களுக்குமிடையே இணக்கம் காணப்பட்ட சில நிபந்தனைகள் தொடர்பிலான முன்னேற்றகரமான செயற்பாடுகள் பற்றித் தொடர்ந்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதே இதற்கான காரணம்" என கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது இலங்கைக்கான 2007ஆம் ஆண்டுக்கான நிவாரணக் கடன்தொகை 1.5 மில்லியன் இடைநிறுத்தப்பட்டதானது, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பிரிட்டனின் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையின் பாற்பட்ட ஒரு நடவடிக்கையின் எதிரொலியாகும் என ஹொவல்ஸ் தெரிவித்தார்.

"இலங்கைக்கான சமாதான நடவடிக்கையின் ஓரங்கமாக, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டமைச்சு ஆகியவற்றுடன் இணைந்ததான சர்வதேச அபிவிருத்தி மூலமான ஆலோசனைகளை உள்ளடக்கிய மிக உயர்மட்டத் தரத்திலான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்". (தமிழ்நெற் - 03.05.07)

இலங்கை அரசாங்கத்தின் கடும் நடவடிக்கையான தாக்குதல்களினால் மனக் காயமும் விரக்தியும் அடைந்திருக்கும் தமிழ் மக்களுக்கு இவையாவும் மிக உவப்புக்கு உரியனவாக அமைந்திருக்கும் அதேவேளை இந்த விவாதத்துடன் தொடர்புடைய ஏனைய அம்சங்கள் அவ்வாறாக உவப்புக்குரியனவாக இருக்கப் போவதில்லை. இந்த வருடம் 7 மில்லியன் டொலர் பெறுமதியில் கொழும்புக்கு இராணுவத் தளபாடங்கள் விற்பனை தொடர்பாக, ஆளும் தொழிற்கட்சி எம்.பிக்கள் கேள்விகள் எழுப்பினர். இலங்கைப் பிரச்சினையில் குறிப்பாக தமிழர்களுக்கு எதிராக இந்த இராணுவ சாதனங்கள் பயன்படுத்தப்படுமென அவர்களது ஆதங்கத்தை வெளிப்படுத்துவனவாக இக் கேள்விகள் எழுப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

"7 மில்லியன் டொலர் பெறுமதியான (UK) ஆயுதங்கள் இலங்கைக்கு உத்தரவாதத்துடன் அனுப்பப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட தகவல் இருக்கிறது" என, ஆளும் தொழிற்கட்சி எம்.பி ஜோவான் றொட்டொக் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சை "தமிழ் நெற்" மேற்கோள் காட்டியிருந்தது.

"விசேட கனரக வாகனங்கள், பாரிய இயந்திரத் துப்பாக்கிகளுக்கான இணைப்புப் பாகங்கள், இராணுவ ரக ஆபத்து சமிக்ஞை சாதனங்கள் மற்றும் ஏனைய பலரக சாதனங்கள், இராணுவ ரக விமான தரைக்கான சாதனங்கள், தொடர்பு சாதனங்கள், சிறுரக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள்..."

"இத்தகையதான ஆயுத உதவிகள் தொடருவது குறிப்பிட்ட நாட்டில் பிரச்சினைகள் உக்கிரமடைந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில் பொருத்தமானதுதானா என்பது குறித்து அமைச்சர் மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்றார் றொட்டொக். (தமிழ்நெற் - 03.05.07)

அரசாங்கம் அவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கவில்லை.

கொழும்பு அரசாங்கத்துக்கான இராணுவ உதவி, வெஸ்ற்மின்ஸ்ரரில் மாத்திரமின்றித் தமிழ்நாடு லோக்சபாவிலும் மற்றும் தமிழ்நாடு சட்டசபையிலும் கூட கேள்விக்குள்ளாக்கப்பட்டு சர்ச்சைகள் ஏற்படும் விவகாரமாக இருந்து வருகிறது. இந்த வகையிலேயே தமிழ் மக்களுக்கு எதிராக இவ்வாறாக இராணுவ உதவி என்ற ரீதியில் வழங்கப்படும் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாக தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் புதுடில்லிக்கு எதிராகத் தமது கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

இத்தகையதானதொரு பின்னணியில் பிரிட்டனின் இப்போதைய நிலைப்பாடு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன், முரணானதொரு அணுகுமுறை இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் கைக்கொள்ளப்படுவதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. நாடுகளின் அரசாங்கத்திற்கு அரசாங்கம் என்றதொரு தொடர்பு ரீதியில், இத்தகையதான ஆயுத விற்பனைகளில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் போலித்தனமாக தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகவும் அவ்வப்போது தமது அக்கறைகளை வெளிப்படுத்தி வருவதனையும் நாம் கண்டு வருகிறோம். எனினும் இது ஏனைய பல நாடுகளைப் பொறுத்தவரையில் தவிர்க்க முடியாததொன்றாக ஏற்கப்பட்டாலும் கூட இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதான முன்னெடுப்புகளில் பற்றுறுதியுடன் ஈடுபட்டிருப்பதாகக் கூறும் பிரிட்டனைப் பொறுத்தவரையில், இதனை ஏற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினம் வாய்ந்ததொன்றென்பது வெளிப்படையானது.

மில்லேனியத் தொடக்கத்தில் ஒஸ்லோ எடுத்த சமாதான முயற்சிகளைப் போன்ற நடவடிக்கைகளையே லண்டனும் இப்போது முன்னெடுக்கிறது. பொருளாதார மற்றும் பாதுகாப்புத்துறைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் இந்த இரு ஐரோப்பிய நாடுகளுமே ஒத்த தன்மை வாய்ந்த சிந்தனையோட்டம் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

நோர்வே மறைமுகமாக பின்னணியிலிருந்து கொண்டு நல்லிணக்க மற்றும் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு உதவி வழங்கி வந்த போதிலும் வெளிப்படையாக அது அத்தகைய நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டது 2000 ஆம் ஆண்டில் ஆனையிறவு வீழ்ச்சியின் பின்னர் விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முன்மொழிந்த போதாகும். இது கொழும்பினாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினாலும் நிராகரிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், இதனால் சமாதான முயற்சி செயற்பாடுகள் முற்றாக நிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் ஒஸ்லோ செயற்பட்டு வந்தது. ஒஸ்லோ ஒரு அனுசரணையாளராக இருந்து வந்த போதிலும் 2001ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மீண்டும் ஆனையிறவை மீட்க இலங்கை இராணுவம் உக்கிரத்துடன் அக்னி கீல இராணுவ நடவடிக்கையினை முன்னெடுக்க அந்த நடவடிக்கையின் பொருட்டு ஆயுதங்களைப் பெற்று வந்த போதிலும் நோர்வே பாராமுகமாகவே இருந்து வந்தது.

நாட்டில் மூன்றாவது தரப்பாக ஒரு நாடு சமாதான முயற்சிகளின் பொருட்டு முழுமூச்சுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கையில், 2001இல் தமது குடிமக்களில் ஒரு பகுதியினருக்கு எதிராக, அரசாங்கம் இராணுவ ரீதியான முனைப்புடன் முழுஅளவிலான தாக்குதலுக்கு தயாராவது குறித்து சர்வதேச சமூகம் அதனை கிஞ்சித்தும் கூட ஒரு நியாயயீனமானதொரு நடவடிக்கையாகப் பொருட்படுத்தியதில்லை.

2002 காலப் பகுதியில் பேச்சு வார்த்தையின் பக்கம் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தை விரைந்து நாட்டம் கொள்ளச் செய்தது ஒஸ்லோ அல்ல, மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் அக்னி கீலவை சிதறடிக்கும் வகையில் யூலை 2001இல் இலங்கை விமானப்படைத் தளத்தின் மீது வெற்றிகரமானதொரு தாக்குதலை நடத்தி முடித்தமையே என்பதை உலகறியும். இத்தாக்குதலினால் தோல்வியைத் தழுவிக் கொண்ட இலங்கை அரசாங்கம் மிகப் பாரிய அளவிலான பதற்றங்களிலிருந்து மீள முடியாது தவித்தது. இதனால் டிசம்பர் 2001இல் ஆட்சி மாற்றம் ஏற்படும் நிர்ப்பந்தம் உருவானது. புதிதாக வந்த அரசாங்கம் உடனடியாகவே யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தமானது இரு தரப்பினுடைய இராணுவச் சமநிலையினைப் பேணும் நோக்கை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். ஆனையிறவு வீழ்ச்சியை அடுத்து சமநிலை தீவிரவாதிகளுக்குச் சாதகமாக இருந்து வந்தது. அவ்வாறெனினும், அவர்களுக்குப் பலத்த இழப்பும் ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்தைப் பொறுத்தளவில் பெரியளவிலான இராணுவ ரீதியிலான பின்னடைவினை அது சந்தித்திருந்தது. அக்னி கீல, இராணுவச் சமநிலையினை அரசாங்கத்திற்குச் சாதகமாக மீட்கும் ஒரு முயற்சியாகும். இந்த முயற்சியில் அரசாங்கம் தோல்வியடைந்ததையடுத்து விடுதலைப் புலித் தீவிரவாதிகள் கட்டுநாயக்கா தாக்குதலின் மூலம் மேலும் அனுகூலமானதொரு நிலைக்கு உயர்ந்து இராணுவச் சமநிலையினை உறுதியுடன் தம்வசப்படுத்திக் கொண்டதுடன் கொழும்பின் ஸ்தம்பிதநிலை காரணமாக இராணுவ ரீதியாகச் செயற்பட இயலாதவர்களாகவும் அவர்களை முடக்கியது. அவர்களுக்கு பேச்சுவார்த்தைக்கு திரும்புவதைத் தவிர வேறுவழி இருந்திருக்கவில்லை.

வடக்குக் கிழக்கில் ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்ந்து கொண்டிருக்கும் இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவதற்கு ஒரே வழி இராணுவ வழங்கல்களின் மீதான கண்டிப்பானதொரு தடையினை ஏற்படுத்துவதாகும். இதனைச் செய்யக் கூடியவர்கள் சர்வதேச சமூகத்தினர் மாத்திரமே. இந்த நிலையில் தான் லண்டன் சமாதான முன் முன்முயற்சிகளில், அவற்றின் முன்னெடுப்புகளில் தீவிர ஆர்வத்துடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், இதேவேளை கொழும்புக்கான அதன் விசேட இராணுவ உதவிகள் அங்கு தடையின்றித் தொடர்கின்றன. பிரிட்டனின் இந்த நிலைப்பாட்டினால், ஒரேயொரு முடிவுக்கே நாம் வர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

நெருக்கடியான இச் சூழலில் தான் வழங்கும் ஆயுதங்கள் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டாலும் அதற்கு அது கவலையளிக்கப் போவதில்லையென்பதே அதுவாகும். அதற்கு இதன் பாரதூரமான தன்மை பற்றிய பிரக்ஞை எதுவுமில்லையென்றே நாம் கருத வேண்டியுள்ளது. 2001 காலத்தில் ஒஸ்லோ சமாதானத்தின் பேரில் வெளிப்படுத்திய பாராமுகமான பொறுப்பற்ற தன்மைக்கும் பிரிட்டனின் இந்த நிலைக்கும் அதிகளவில் வேறுபாடு எதுவும் கிடையாது.

கொழும்பை ஆகாய மார்க்கமாகத் தம்மால் வெற்றிகரமாக இலக்கு வைத்துத் தாக்கக் கூடிய ஆற்றலைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படையினர் மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியதையடுத்து, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் புதியதொரு நெருக்கடிக்குள் பிரவேசித்துள்ளது. 2001 காலப்பகுதியில் தென்னிலங்கையினை நிலைகுலைய வைத்ததைப் போன்றளவில், வான் தாக்குதலால் அதனை செயலிழக்கச் செய்ய முடியவில்லையென்ற போதிலும், கொழும்பு நிர்வாகத்தின் மீதான முழு அளவிலான மொத்தத் தாக்கமும் ஒரு விதத்தில் முன்னைய நிலைக்கு ஒத்ததாகவே கருதக் கூடியவாறாக நிலைமை மோசமடைந்துள்ளது. ஏனெனில் பொருளாதார நிலை தாறுமாறாகச் சிதறியுள்ளது, மனித உரிமை மீறல்கள் வகைதொகையின்றிக் கட்டுக்கடங்காது பெருகியுள்ளன, சர்வதேச சமூகம் அவற்றைக் கட்டுப்படுத்துமாறு இறுக்கங்களை அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளது. கிழக்கில் நிலப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாகக் கூறும் இராணுவத்தின் கூற்று மறுதலிக்கப்பட்டுள்ளது, தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அப்பகுதியில் தொடர்கின்றன. வன்னிப் பகுதிகளுக்குள் ஊடுருவும் இராணுவ நடவடிக்கைகள் அடிக்கடி, கிரமமாக முறியடிக்கப்பட்டு வருகின்றன, அவற்றுக்கு மத்தியில் மேலும் வான்மார்க்க சவாலும் பெரும் அச்சுறுத்தலாகப் பரிணமித்துள்ளது.

இத்தகைய பாதகமானதொரு பின்னணியில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நம்பத் தகுந்ததான ஒரு சமாதானத் தீர்வினை முன்வைக்க முடியாது திணறுகின்றது. உண்மையில் சர்வதேச பங்காளரொருவருக்குத் தலையெடுக்கக் கூடியவாறாக நிலைமை இப்போது சாதகமாகக் கனிந்துள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பினரை உள்ளடக்கும் உச்சிமாநாட்டை முன்னெடுக்க எவ்வித தடையும் பெரிதாக ஏற்பட்டுவிடப் போவதில்லை.

தமிழர் தரப்பு அபிலாஷைகளைச் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த தமிழ்ச்செல்வன் பிரிட்டன் செல்வதன் மூலமோ தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களது குழுவை அனுமதிப்பதன் மூலமோ அல்லது இனப்பிரச்சினை தரப்பினரை உள்ளடக்கிய உச்சிமாநாடு ஒன்றினைக் கூட்டுவதன் மூலமோ வன்முறைகளைத் தொடர்ந்து வரும் கொழும்புக்கு சர்வதேச சமூகம் தங்குதடையின்றி தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்கி வருகின்றதொரு பாதகமான பின்னணியில் தமிழர்களுக்கு எத்தகைய நன்மைகளும் உருப்படியாக ஏற்பட்டு விடப் போவதில்லை.

இதன் அர்த்தம் ஒருபோதும் அரசாங்கத்தை வன்முறைகளை நிறுத்துமாறு கூறி, தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தொடரச் செய்வது என்பது அல்ல. மாறாக சர்வதேச சமூகம், ராஜபக்ஷ சார்பிலான யுத்தமொன்றினை தமிழர் நலன்களுக்கு எதிராக முன்னெடுத்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையின் பாற்பட்டதே ஆகும்.


உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்குள் முடக்கி அதன் இராணுவ பலத்தைத் தளர்வடையச் செய்ததன் மூலம், ஒஸ்லோ சிங்கள பெரும்பான்மைக்குச் சாதகமான, அனுகூலமானதொரு நிலைமையினையே தோற்றுவித்திருந்தது. இதன் தாற்பரியத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாத சிங்கள இனவாதிகள் கடந்த நான்கு வருடங்களாக நோர்வேயை "வெள்ளைப் புலிகள்" எனத் திட்டித் தீர்த்துப் பரிகசித்து வந்துள்ளனரென்பது மிக வேடிக்கைக்குரியது. இப்போது மீண்டும் தமக்கு நன்மை செய்ய வந்திருக்கும் தாராள பரோபகாரியை அதே கூட்டத்தினர் பாராளுமன்றத்தில் திட்டித் தீர்க்க முற்பட்டுள்ளனர். முன்பு நோர்வே ஆனால், இப்போது பிரிட்டன் - வரலாறு தான் எத்துணை முரண் நிறைந்தது! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சமூகம்:

# மோதுகையின் ஒரு பகுதியா? தீர்வுமுயற்சியின் ஒரு பகுதியா?



ஓவியம் சனாதனன்

ச.பா.நிர்மானுசன்

சிறீலங்காவினுடைய சமூக. பொருளாதார. அரசியல் நகர்வுகள் எதிர்வு கூறமுடியாத சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. இராணுவச் சமநிலையால் உண்டான போர் நிறுத்தம். மீண்டும் அதனை நிருபிப்பதற்காக நான்காம் ஈழப்போரின் அதிதீவிர நிலையை நோக்கிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது இந்த நிர்ப்பந்தம் பலத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பினும் முக்கிய சில விடயங்களை கவனத்திற் கொள்ளவில்லை. நாட்டினுடைய அபிவிருத்தி. நல்லாட்சி. மக்களினுடைய இயல்பு வாழ்வு போன்றவற்றிற்கு கொடுக்காத முக்கியத்துவம் அழிவுக்கு வித்திட்டுக் கொண்டிருக்கும் ஆயுதத்துக்கும் அதன் பயன்பாட்டுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

பிராணிகளை கொல்லக்கூடாது என்று முதலாளித்துவ நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகையில் இலங்கைத் தீவிலோ மனிதர்கள் இரத்தக்காட்டேரிகளால் வேட்டையாடப்படுகிறார்கள். மனித உரிமைகளுக்கு. ஜனநாயகத்திற்கு மதிப்பளியுங்கள், சமாதானப் பேச்சுக்களுக்குத் திரும்புங்கள் என ஒருசாராரிடம் மென்போக்கையும் இன்னொரு சாராரிடம் வன்போக்கையும் கைக்கொள்ளும் சர்வதேச சமுதாயம் சிறீலங்கா அரசாங்கத்திற்கு இராணுவ உதவிகளைத் மிகத் தாராளமாக வழங்குகிறது. ஆனால் அபிவிருத்திக்கான உதவி நிதிகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. இது ஒரு முரண்பாடான நிலை. அபிவிருத்தி நிதியை சிறீலங்கா அரசாங்கம் இராணுவச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதை இதற்கான காரணமாகச் சொல்ல முடியாது. ஏனெனில் சுமுகமான நிலைமையை ஏற்படுத்துதல் எனக் கூறிக்கொண்டு அபிவிருத்தி நிதிக்கு கட்டுப்பாடு விதிக்கின்ற அதேநேரம் தாராள ஆயுத விநியோகம் இடம்பெறுகிறது. சில நிதி வழங்கும் நாடுகள் இதற்கு விதிவிலக்கானாலும் சக்தி மிக்க நாடுகளாக இருப்பவை இதன் அடித்தளமாக இருக்கின்றன. இதனூடாக சர்வதேச சமுதாயத்தின் எந்தத் தரப்பினர் இலங்கைத் தீவினுடைய தீர்வில் அக்கறையுடன் இருக்கிறார்கள், எந்தப் பிரிவினர் தமது சொந்த நலனை வலுப்படுத்துவதற்காக இலங்கைத் தீவினுடைய இனக் குழும மோதுகையைப் பயன்படுத்துகிறார்கள் என்பது மீண்டும் ஒரு தடவை வெளிச்சத்துக்கு வருகிறது. இதனை சரிவர ஆராய்ந்தால். தமிழர்கள் தமக்கான தலைவிதியை தாமே நிர்ணயிப்பதற்கான அடிப்படையை விளங்கிக் கொள்ளலாம்.

பலமுள்ளவர் தான் ஆள முடியும் என்பது இன்றைய உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளினூடாக தெளிவாகவும் ஆழமாகவும் புலப்படுகின்ற விடயம். இது நாடுகளைப் பொறுத்து, அவற்றின் வல்லமையைப் பொறுத்து, பிரயோகிக்கின்ற முறையைப் பொறுத்து வேறுபட்டாலும் ஒரு அடைவிலக்கு நோக்கியே நகர்த்தப்படுகிறது. அந்த அடைவிலக்குக்கான பாதையின் அடித்தளமாகத் திகழ்வது பலமே.

இத்தகைய பலத்திற்கான பரீட்சைக்களமே இலங்கைத் தீவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பலப்பரீட்சை தனித்து சிறீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் மட்டுமானதல்ல. மாறாக வல்லரசுகளுக்கும் வல்லரசாக வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளுக்கும் கூட பலப்பரீட்சைக் களமாக விளங்குகிறது. மேலோட்டமாகப் பார்க்கும் போது இலங்கைத் தீவினுடைய இனக்குழும மோதுகையில் கரிசனையுடன் உலகநாடுகள் தலையிடுவது போல் தென்பட்டாலும் உண்மை அதுவல்ல. ஒவ்வொரு நாடுகளினதும் சொந்த நலனை மையமாக வைத்தே குறித்த நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. அதனையே இன்றைய யதார்த்த நிலை நாணயத்தின் ஒரு பக்கம் சுட்டிக் காட்டுகிறது. உதாரணமாகப் பார்ப்போமானால், சிறீலங்கா ஈரான் பக்கமோ அல்லது கியூபா சார் கூட்டு அணியிலோ இணைந்துவிடக் கூடாது என்பதில் அமெரிக்காவும், பாகிஸ்தான் பக்கம் சாய்ந்து விடக் கூடாது என்பதில் இந்தியாவும், சீனா பக்கம் சாய்ந்து விடக் கூடாது என்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்தும் நிற்கின்றன. இவற்றைத் தாண்டி சிறீலங்காவை தனித்து தனது அணியில் வைத்திருப்பதற்காக சீனாவும் கடும் பிரயத்தனத்தைச் செய்கின்றது. எதிரியின் எதிரி நண்பன் என்பது போல பாகிஸ்தானும் சீனாவைப் பகைக்காமல் சிறீலங்காவிற்கான இராணுவ உதவிகளைத் தாராளமாகவே வாரி வழங்குகிறது.

இந்த தருணத்தில் நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், தமது பொருளாதார நலனுக்காக தோல்வியுற்ற ஒரு நாட்டினில் வசிக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை எந்தளவிற்கு சக்திமிக்க நாடுகள் அலட்சியம் செய்கின்றன என்பதையே ஆகும். சாதாரண மனிதாபிமான உதவிகளை நிறைவேற்ற முடியாத வலிமைமிகு நாடுகளால் எவ்வாறு புரையோடிப் போயுள்ள இலங்கைத் தீவினுடைய இனக்குழும மோதுகைக்கு நியாயமான தீர்வினை அடைவதற்கு உதவ முடியும். இதுவரை காலத்தில் சக்திமிக்க நாடுகளால் கௌரவமான தீர்வுக்காக இதயசுத்தியுடனான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இனிவரும் நாட்களில் தமது தவறுகளுக்கான பரிகாரத்தை சரிவர ஆற்றுகிறார்களா என பொறுத்திருந்து பார்ப்போம்.

நீண்டகால மோதுகைக்கு உடனடியாக தீர்வு காண்பது இயலாத விடயம் என்பது புரிந்து கொள்ளப்படக் கூடியது தான். ஆனால் நீண்டகால மோதுகைக்கு தீர்வு காண்பதனை நோக்காகக் கொண்டு ஒரு நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட வேண்டும். இலங்கைத் தீவினுடைய இனக்குழும மோதுகை தீர்வுக்கு ஆதரவு வழங்கும் நாடுகளால் அத்தகைய நிகழ்ச்சி நிரல் பொறுப்புணர்வுடன் தயாரிக்கப்பட்டதா என்ற வினா இன்றைய காலச்சூழலில் தொடர்ச்சியாக மேற்கிளம்புவது தவிர்க்க முடியாதது.

உலகநாடுகளால் இலங்கைத் தீவினுடைய இனக்குழும மோதுகைக்கான தீர்வைத் தர முடியாது. ஆனால் தீர்வை நோக்கிய முயற்சியினை ஆக்கபூர்வமானதாக்குவதற்காக இனக்குழும மோதுகையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகள் மீண்டும் போரினை நாடிச் செல்லாதிருப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கியிருக்கலாம். சரியான ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் ஆரம்பத்தில் வெளித்தோற்ற மோதுகையாக (Surface conflict) இருந்த மோதுகை இன்று திறந்த மோதுகையாக (Open conflict) மாறியிருக்காது. அத்துடன் சமச்சீரற்ற ஒரு மோதுகையில் (Asymmetric conflict) கையாளல் தன்மையில் ஒரு கண்ணியம் இருக்க வேண்டும். அதுகூட இருக்கவில்லை. எந்தத் தரப்பாலும் விரும்பப்படாத மிரட்டல் தன்மைக்கு குறைச்சல் இருக்கவில்லை. சிறீலங்காவின் அபிவிருத்திக்கு வழங்கும் நிதிகளை முடக்குவது அரசாங்கத்திற்கு மீளமுடியாத பெரும் அழுத்தமாக அமையப் போவதில்லை. அது நெருக்கடிகளை உண்டு பண்ணலாம். ஆனால் அரசாங்கத்தின் மனநிலையில் எந்தளவு மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது மற்றுமொரு வினாவாகும். சிறீலங்கா அரசாங்கத்தை பேச்சுமேசைக்குக் கொண்டு வரவேண்டுமென உலகநாடுகள் எண்ணுமானால் முடக்கப்பட வேண்டியது அபிவிருத்திக்கான நிதியையல்ல. மாறாக ஆயுத விநியோகம் தற்காலிகமாகவேனும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். அடுத்து சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்வதனால் அவர்களை பேச்சுமேசைக்கு மீண்டும் அழைக்கலாம் என்பதுவும் தோற்றுப் போன விடயமாகவே தெரிகிறது. ஒரு இயக்கத்தை சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தி அந்த இயக்கத்திற்கு நெருக்கடியை கொடுக்கலாமே தவிர, பேச்சுமேசைக்கு அழைப்பதென்பது சாத்தியப்பாடு குறைவான ஒரு திட்டம். இந்த திட்டம் சில சந்தர்ப்பங்களில் குறித்த இயக்கத்தை திடமான ஒரு இயக்கமாக வளர்ப்பதற்கு அடிப்படையாகவும் அமையக்கூடும். அதுவும் விடுதலைப் புலிகளை இவ்வாறான தடைகள் எந்தளவிற்கு பணிய வைக்கும் அல்லது பேச்சுமேடைக்கு திரும்ப அழைத்து வரும் என்பது தவிர்க்க முடியாத வினாவாகும்.

இந்த முக்கியமான கட்டத்தில் தான் சர்வதேச சமுதாயம் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். மோதுகையின் ஒரு பகுதியாக இருக்கப் போகிறார்களா அல்லது தீர்வு முயற்சியின் ஒரு பகுதியாக இருக்கப் போகிறார்களா என்பதே அந்த முடிவாகும். எந்தக் கட்டத்திலும் சர்வதேச சமுதாயம் அர்த்தநாரீஸ்வரராக அவதரிப்பதை அனுமதிக்க முடியாது. ஏனெனில் அது மனித குலத்திற்கு எதிரான குற்றம். கூடவே மானுட விழுமியத்தை மதியாததன் வெளிப்பாடு. ஆகவே சர்வதேச சமுதாயம் விரைந்து அவசியமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதனூடாவே வன்முறையால் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள மோதுகையின் தீவிரத்தை ஓரளவாவது குறைக்கலாம். அதனூடாக மனித அவலத்தின் தாக்கத்தை படிப்படியாக இல்லாமல் செய்யலாம். எல்லையில்லாத மனித அவலம் என்பது மென்மேலும் வன்முறைக்கு வழிகோலும். காலிமுகத்திடலில் நடைபெற்ற அறவழிப் போராட்டத்திற்கான பதிற்குறியை சிறீலங்கா அரசாங்கம் வன்முறையூடாக வழங்கியமை இலங்கைத் தீவினுடைய இன்றைய நிலைமைக்கான பிரதான காரணங்களிலொன்று. மீண்டும் ஒரு தடவை சிறீலங்கா அரசாங்கம் அந்த தவறை செய்யக் கூடாது. அதற்கு சர்வதேச சமுதாயமும் துணையாக விளங்கக்கூடாது.

இதுவே அமைதியை விரும்பும் மக்களின் ஓங்கி ஒலிக்கும் குரல்! ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம்: க.குலேந்தி

# தர்க்கத்தின் தொடர்ச்சியா? கட்டற்ற கற்பனையா?

- சுனிலா அபேசேகர -

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகருக்குத் தெற்காக களுவாஞ்சிக்குடியில் யூக்கலிப்டஸ் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்த ஒரு புறத்தில் நூற்றுக்கணக்கில் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் ஆகியோர் ஒழுங்கு வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் இராணுவத்தினரின் உடமைகள் மற்றும் தனித்தனியான ஆட்சோதனையின் பொருட்டு காத்து நின்று கொண்டிருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் மிகவும் களைப்புற்ற நிலையில் பரபரப்பும் பதட்டமும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். பின்னணியில் தமிழ் சினிமாப் பாடல்கள் கேட்டவாறு இருந்தன. நண்பகலுக்கு முந்திய பின்காலைப்பொழுது. அதிரடிப்படையினருக்குரிய சீருடையில் காணப்பட்ட இராணுவத்தினர் சமைத்த உணவு வகைப் பொதிகளை அவர்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்தனர். வரிசையில் காத்து நிற்கும் ஒவ்வொருவரையும் அவர்களுடைய சகாக்கள் ஒவ்வொருவராக புகைப்படம் எடுப்பதிலும் அவர்கள் ஒவ்வொருவருடைய விரல் அடையாளங்களை பதிவு செய்வதிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பெரும்பாலும் கிரமமான ஒழுங்கின் பிரகாரம் அவை நடைபெற்றவாறு இருந்தன. இது திடீரென 1940களில் ஜேர்மனியின் யுத்தகாலப் படிமங்களை என்நினைவுக்குக் கொண்டு வந்தது. அன்றைய ஜேர்மனியில் மக்கள் எஸ்.எஸ். உத்தியோகத்தர்களின் முன்னால் வரிசைக்கிரமமாக நிற்கையில் எந்த எந்த சித்திரவதை முகாம்களுக்கு யார் யார் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை அந்த உத்தியோகத்தர்களே தீர்மானிப்பவர்களாக இருப்பர். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளானோரை மீள்குடியேற்றம் செய்யும் இரண்டாம் கட்ட நடவடிக்கையின் நான்காம் நாள் நிகழ்வு. 2007 மே 18ஆம் திகதி. அரசாங்கத்தின் தகவல்களின்படி எல்லாமாக 45ஆயிரம் மக்களுக்கு மேவானோர் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையினர் எல்லோரும் 24ஆம் திகதி அளவில் முற்றாக குடியேற்றப்பட்டு விடுவர். என்பதாகும்.

மார்ச் 2007 இலிருந்து இடம் பெயர்ந்தது முதல் பல நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து விட்டு அங்கிருந்து புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த இடம் பெயர்ந்தோரின் ஒரு பகுதியினருடன் நேற்று முந்தைய தினம் உரையாடினோம். கொக்கட்டிச்சோலை, தொப்பிக்கல பகுதிகளிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை வெளியேற்றும் பொருட்டு அரசாங்கப் படையினர் மிகக்கடுமையான ஷெல் தாக்குதல்களை அப்பகுதிகளில் மேற்கொண்டிருந்தனர். தீவிரமான தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்பும் பொருட்டு தத்தமது வீடுகளை விட்டு அவசர அவசரமாக வெளியேறிய இம்மக்களில் சிலருக்கு இடப்பெயர்வு என்ற ரீதியில் அதுவே முதல் தடவையான அனுபவம் எனலாம். ஏனெனில் முன்னைய காலங்களில் மோதல்களின் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களில் தங்களுடைய வீடுகளைச் சுற்றியுள்ள பற்றைக் காடுகளில் நித்திரை செய்துவிட்டு பகல்வேளைகளில் தமது வீடுகளுக்குத் திரும்புவது வழமையாக இருந்து வந்தது.

அநேகம் பேர் தத்தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்வதற்கே ஆவல் கொண்டிருந்தனர். நலன்புரி நிலையங்கள் எல்லோரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்குவதற்கு இடவசதிகள் அற்றனவாக பல வசதியீனங்களுடன் கூடியதாக இருந்தன. நாளாந்த வாழ்க்கை கடினமானதாக இருந்தது. மலசல கூடங்கள் முழுத்தொகையினருக்கும் போதுமானதாக இருக்கவில்லை. உணவு விநியோகம் சீரற்றதாகவே இருந்து வந்தது. அங்கிருப்போருக்கு வேலை வாய்ப்புகள் எதுவும் இருக்கவில்லை. அவர்களுடைய கிராமங்களான போரதீவு, பெரிய போரதீவு, கோவில்போர தீவு, முனைத் தீவு போன்ற கிராமங்களில் அவர்கள் பெரும்பாலும் விவசாயிகளாக, விவசாயக் கூலிகளாக இல்லையேல் நெசவாளர்களாகத் தொழில் புரிந்து வந்தனர். போரதீவு மற்றும் முனைத்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலும் பொற்கொல்லர் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். போரதீவு பகுதிகளைச் சேர்ந்த குடும்பஸ்தர்கள் அனேகம் பேர் கொழும்பு நீர்கொழும்பு மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த பகுதிகளில் நகைக்கடைகளில் வேலை செய்பவர்களாக இருந்தனர். அவர்களிடம் காணிகளும் ஆடு மாடுகளும் இருந்தன. அறுவடை முடிந்து நெல்மூடைகளை வீட்டுக்குக் கொண்டு வந்ததொரு காலப்பகுதியிலே உடனடியாகவே அவர்களுக்குத் தத்தம் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அறுவடைகாலப் பண்டிகையாக இலங்கையின் சகல இடங்களிலும் கொண்டாடப்படும் புதுவருடத்தை அவர்கள் நலன்புரி நிலையங்களுக்குள்ளேயே கொண்டாட வேண்டியிருந்தது.

வீதிகள் ஊடாக உட்பிரவேசிக்கக் கூடிய ஒரேயொரு பிரதான நுழைவாயிலாகவும் களவாஞ்சிக்குடி ஏரிக்கு அப்பால் உள்ள பகுதிகளுடன் தொடர்பு பட்டதுமான பட்டிருப்புப் பாலம் சுனாமிக்குப் பின்னர் அண்மைக் காலங்களில் திருத்தப்பட்டவைகளில் ஒன்றாகும். மே 14ஆம் திகதியிலிருந்து உள்ளக இடப்பெயர்வுக்குள்ளான சமூகத்தை மீள்குடியேற்றம் செய்வதற்கான பணிகளை ஆரம்பித்ததில் இருந்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பாலம் பிரதான கடவையாக கண்டிப்பான காவல்களுடன் ரோந்து நடவடிக்கைக்குரிய இடமாகவும் இருந்து வருகிறது. அவ்வாறு இருந்து வந்த போதிலும் சனநடமாட்டம் குறையவில்லை. எங்களுடைய வருகைக்கு ஒரு சிலநாட்களுக்கு முன்னதாக இராணுவத்தினரால் கொண்டு வரப்பட்ட மக்கள் பாலத்தை இருபுறங்களிலுமாக பெரும்பாலும் கால்நடையாகவோ சைக்கிள்களிலோ மற்றும் பெட்டிகளுடன் கூடிய சிறியரக ட்ரக்டர்களிலோ கடப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் சிலருடன் எங்களால் உரையாட முடிந்தது. தத்தமது கிராமங்களிலே வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்து வந்த போதிலும் கூட தாம் அக்கிராமங்களுக்கே மீண்டும் சென்று வாழ விரும்புவதாக அவர்கள் தெரிவித்தனர். அவர்கள் நாளாந்தம் களவாஞ்சிக்குடி நகரத்திற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் உணவுப் பொருட்களின் நிமித்தம் வந்து போக வேண்டியவர்களாகவும் இருந்தனர். ஏனெனில், மறுபுறத்தில் கடைகள் எவையும் இன்னமும் திறக்கப்படவில்லை. போரதீவுக்கும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பட்டிருப்புப் பாலத்திற்கும்



போக்குவரத்துத் தடைகள் மிகவும் கடுமையாக அமுலாக்கப்படுகின்றன. உள்ளகமாக இடம்பெயர்ந்தவர்களும் மற்றும் இராணுவத்தினரும் தவிர ஏனையோருக்கு இவை தடைப்பட்ட பகுதிகளாகவே இருந்து வருகின்றன. நீர் மற்றும் மின்சார விநியோகங்களை சீராக்கும் பணிகளுக்குச் சென்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் பாலத்தை 14ஆம் திகதியிலிருந்து கடப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். மார்ச் மாத வெளியேற்றத்திற்குப் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முதல் தடவையாக இப்பகுதிகளுக்குச் செல்வதற்குப் 17ஆம்திகதி முதல் அனுமதிக்கப்பட்டிருந்தது.

உள்ளக இடம் பெயர்ந்தோர் மத்தியில் காணப்பட்ட பதட்டங்களுக்கும் தவிப்புகளுக்கும் அவர்கள் தத்தமது கிராமங்களுக்கு திரும்பும் வேளை அங்கு காண்பதற்கு என்னென்ன பொருட்கள் எஞ்சியிருக்கப் போகின்றன என்பது குறித்த ஏக்கமும் நிச்சயமின்மையுமே காரணம் எனலாம். இதேவேளை அவர்களது கைவிடப்பட்ட வீடுகள் சூறையாடலுக்கு இலக்கானதாக வதந்திகளும் பரவியிருந்தன. களவாஞ்சிக்குடியையும் அதன் சுற்றுப் புறங்களையும் சேர்ந்தோர் எமக்கு தத்தமது இடங்களுக்குச் சென்று வந்தோர் கூறிய கதைகளை விவரித்தனர். அங்கு அவர்களது அறுவடை, உட்பட கால்நடைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் எல்லாம் களவாடப்பட்டோ அல்லது சேதப்படுத்தப்பட்டோ காணப்படுவதாக அதிர்ச்சியுடன் தெரிவித்தனர். இடம் பெயர்ந்தோருக்குத் தத்தமது வீடுகள் போன்றவற்றிற்கு என்ன நேர்ந்தன என்பது குறித்து ஏற்படக் கூடிய அதிர்ச்சி மற்றும் தவிப்புகளை அரசாங்கமும் மற்றும் மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் ஓரங்கமாக இடம்பெயர்ந்தோரை நேரடியாகப் பாதுகாப்புடன் அங்கு சென்று பார்த்து வருவதற்கு ஏற்பாடுகளை முன்னரே செய்வதன் மூலம் பெருமளவில் தவிர்த்திருக்கலாம். இதன் மூலம் அவர்கள் தமது ஜீவனோபாயத்தை மீண்டும் தொடங்குவதற்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பது குறித்து நேரடியாக அறிய வருவதுடன் எத்தகைய நடவடிக்கைகளின் மூலம் சமூகத்திற்கு ஆதரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுசரணையும் அவசியம் என்பன குறித்து ஆராய்ந்து தயார் செய்தும் கொள்ளலாம். இத்தகைய சீரான நடவடிக்கைகள் ஒரு ஒழுங்கு முறையின் பாற்பட்டதாக திட்டமிடப்படாததால் உள்ளக இடம் பெயர்ந்தோருக்கு அநாவசியமான பதட்டங்களும் கவலைகளும் ஏற்படுவதற்கு இடமளிப்பதாக அமைந்திருந்தது.

உள்ளக இடம் பெயர்ந்தோர் தொடர்பில் எமக்கிருக்கக் கூடிய அக்கறையின் பிரதான அம்சம் என்னவெனில் அவர்களுக்கு மீள் குடியேற்றம் தொடர்பாக ஏற்படக் கூடிய இணக்கப்பாடும் திருப்தியுமே ஆகும். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு ஏற்புடையதாக நாடுகளினாலும் மற்றும் சர்வதேச மனிதாபிமான முகவர் நிலையங்களினாலும் மீள்குடியேற்றம் தொடர்பாக விதந்துரைக்கப்படுகின்ற சகல கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் போன்றவற்றில் மிகவும் அவதானமாக இது உட்பொதிந்துள்ளது. வாகரை, கிளிவெட்டி போன்றவற்றின் முன்னைய மீள்குடியேற்றம் தொடர்பில் எம்மால் அவதானிக்கக் கூடியது என்னவெனில் மக்கள் ஒரு தற்காலிக தங்குமிடத்தில் இருந்து தத்தமது வீடுகளுக்குத் திரும்புவதற்குப் பதிலாக இன்னுமொரு தங்குமிடத்திற்கு அவர்கள் அனுப்பப்படுவது ஆகும். இந்த வகையில் உள்ளக இடப் பெயர்வுக்குரிய மக்களது தலைவிதியை நிர்ணயிப்பதற்கோ அல்லது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கோ அவர்களுக்கு இருக்கக் கூடிய உரிமை முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்தமை ஆகும். இந்தப் பாரதூரமான அம்சம் போரதீவு மக்களின் விவகாரத்தில் மேலோங்கி இருக்கிறது. அவர்கள் அந்த இடத்தை விட்டுச் செல்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தவகையில் அவர்களுக்குத் தத்தமது இடங்களுக்குச் சென்று பார்ப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் போவதற்கோ அல்லது தங்குவதற்கோ ஆன தெரிவு வழங்கப்படவில்லை. இதில் மறைமுகமாக அழுத்தப்பட்டிருக்கும் அம்சம் என்னவெனில் அவர்கள் அவ்வாறு செல்வதற்கு மறுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பங்கீடுகளோ சலுகைகளோ எதிர்காலத்தில் கிடைக்காது என்பதுடன் நிலையங்கள் மூடப்பட்டு விடும் என்பதுமாகும். இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மீள் குடியேற்றம் தொடர்பாக தன்னியல்பாக முடிவெடுக்கும் தன்மை எவருக்கும் பிரச்சினையாகி விடும் என்பதுமாகும்.

மீள்குடியேற்றம் தொடர்பாக இரண்டாவது ஆட்சேபனைக்குரிய முக்கிய அம்சம் என்னவெனில் மீள்குடியேற்ற நடவடிக்கை தீவிரமாக முற்றாக இராணுவ மயப்படுத்தப்பட்டிருந்தமை ஆகும். மேலும் முக்கியமான முகாமைத்துவ நடவடிக்கைகள் யாவும் முற்றாக பாதுகாப்புப் படை உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தமையும் ஆகும். வாகரையில் ஏப்ரல் மாத முற்பகுதியில் மீள்குடியேற்ற அனைத்து நடவடிக்கைகளும் இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டது. சர்வதேச மற்றும் தேசிய மனிதாபிமான தொண்டு முகவர் நிலையங்களது பங்களிப்பு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியாகும் வரை கண்டிப்புடன் முற்றாக விலக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி அரசாங்க உத்தியோகத்தர்களது பங்களிப்பு மற்றும் சிவில் நிர்வாகமும் மிகக் குறைந்த அளவிலேயே நடைமுறையில் இருந்தது.

நாங்கள் வாகரைக்கு ஏப்ரல் 9ஆம் திகதி சென்ற போது அங்கு இராணுவ உத்தியோகத்தர்களே பெருமளவில் காணப்பட்டனர். அவர்கள் வீதி, பாலம் புனர்நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்ததுடன் நிவாரண விநியோகப் பணிகளையும் புதுவருடப் பிறப்பையொட்டி ஒரு பின்னேரக் களிப்பூட்டும் நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். மேமாதத்தில் களவாஞ்சிக்குடியில் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த விசேட அதிரடிப்படை பொறுப்பாக இருந்தது. 1990களின், அதன் தொடக்க காலத்திலிருந்தே அதிரடிப்படை கிழக்கில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்து வந்துள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அதற்கிருக்கும் அபகீர்த்தி மிகப்பிரசித்தமானது. ஆனால் அதேவேளை சுனாமிக்குப் பின்னான நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக மீட்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பில் அதன் பங்களிப்பும் சேவைகளும் முன்மாதிரியான தன்மைகளைக் கொண்டிருந்ததை மறுக்க முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏப்ரல் 2007இல் இருந்து பொறுப்பேற்கப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இராணுவத்தினரைப் பற்றியோ அல்லது அதிரடிப்படையினரைப் பற்றியோ முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களோ அல்லது எதிர்மறையான விமர்சனங்களோ ஒப்பீட்டளவில் மிகச் சொற்பமானவை என்றே கூறப்படுகின்றது. எவ்வாறெனினும் இது தொடர்பில் எழுப்பப்பட்டிருக்கும் கேள்வியானது விமர்சனப் பாங்கானதொரு பரிமாணத்தை எய்தியிருக்கின்றது. மீள்குடியேற்ற நடவடிக்கைகள், தற்போது முழு அளவில் இராணுவ மயப்பாட்டினை அடைந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் இலங்கையில் ஜனநாயகம் மற்றும் ஆளுகை முறைமை அதன் பொதுத் தன்மைகள், வரையறைகள் போன்றன குறித்து பாரதூரமாக எதிர்மறையான தாக்கங்களை உண்டு பண்ணும் விதத்தில் பல அம்சங்களைக் கொண்டிருக்கின்றது. ஒரு கோணத்தில் பார்க்கையில் இதுமாவட்டச் செயலாளர்களிலிருந்து மற்றும் உத்தியோகத்தர்கள் வரை விசேடமாக மாவட்ட மட்டத்தில் நிருவாக சேவை உறுப்பினர்களது தொடர்பில் அரசாங்க சேவை குறித்து, அதன் அந்தஸ்தையும் பாரம்பரியமாக அதற்கிருந்து வந்த நம்பிக்கைகளையும் பாரதூரமாகச் சிதறடித்துள்ளது. இத்தகையதானதொரு பின்புலத்தில் தமது வாழ்க்கை நடவடிக்கைகள் தொடர்பில் பின்னிப் பிணைந்திருக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தீர்வளிக்கக் கூடிய "அதிகாரத்துவத்தை" இராணுவமே கொண்டிருக்கின்றது என்ற மனப்பாங்கினையும் நம்பிக்கைகளையும் வளர்த்தெடுத்திருப்பதானது மாவட்டச் செயலாளர் (முன்பு அரசாங்க அதிபர்), பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் ஆகியோரை அதிகாரமற்ற செல்லுபடியற்றவர்களாக்கி விடும் நிலைக்கே உட்படுத்தியிருக்கின்றது.

மறுமுனையில் இத்தகையதொரு நிலைமையினால் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை மிகுந்த திறமையுடன் ஊழல் எதுவுமின்றி நிறைவேற்றி வைக்கக் கூடியவர்கள் "பாதுகாப்புப் படையினர்" தான் என்ற மனப்பாங்கும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில் பரவி உறுதியடைவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தி விடுகிறது. இத்தகையதொரு நிலைமை தொடரும் பட்சத்தில் இதன் தர்க்க ரீதியான அடுத்த கட்ட வளர்ச்சி என்னவெனில் அரசாங்க சேவையிலிருக்கும் திறமையீனங்களையும் ஊழல் நடவடிக்கைகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு இராணுவ அரசாங்கமே எமக்குச் சிறந்த பரிகாரம் என்பதாகும். இல்லையேல் எனது கட்டற்ற கற்பனை விடயங்களை ஊதிப்பெருக்குகின்றனவா?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்தக் ஹொவிக்?

கலாநிதி குமார் ரூபசிங்க

நோர்வேயை இலக்கு வைத்த பத்திரிகைக் கட்டுரைகள் இலங்கையர்களுக்கு ஒன்றும் புதிய விடயம் அல்ல. எவ்வாறெனினும் புலிப் பயங்கரவாதத்துடனான நோர்வேயின் ஈடுபாடு என்ற தலைப்பில் கொழும்பிலுள்ள மகாவலி கேட்போர் கூடத்தில் இலங்கையின் சமாதானத்திற்கான உலக முன்னணியினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு தொடர்பில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் மற்றும் டெய்லி நியூஸ், திவயின, டெய்லி மிரர். ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கம் என்பவற்றை மிகுந்த ஆர்வத்துடன் நான் படித்தேன். இந்த நிகழ்வானது பல பேச்சாளர்களின் பங்குபற்றுதலுடன் நடத்தப்படவிருந்தது. இவர்களில் முக்கியமான நட்சத்திர பேச்சாளராக நோர்வேயின் போல் ஹொவிக் என்பவர் காணப்பட்டார்.

இந்த நிகழ்வு தொடர்பான ஒரு பெரும் பிரச்சாரத்திற்குப் பின்னர் ஜே.வி.பி தலைவர் சோமவங்ச அமரசிங்க மற்றும் அதன் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் உட்பட மிகச் சொற்பளவானோரே இதில் கலந்து கொண்டனர். உலகிலேயே விடுதலைப் புலிகள்தான் மிக மோசமானதும் அபாயகரமானதுமான பயங்கரவாத அமைப்பு என்றும் ஆனால் நோர்வே அரசாங்கம் அவர்களுக்கெதிராக ஒரு வார்த்தையைத் தன்னும் தெரிவிக்கின்ற நிலையில் இல்லை என்றும் ஹொவிக் தெரிவித்தார். நோர்வேயில் வாழ்கின்ற தமிழர்கள் அச்சுறுத்தலினூடாகவே விடுதலைப் புலிகளை ஆதரிக்கச் செய்யப்படுகின்றனர் என்றும் இது தொடர்பில் நோர்வே அரசாங்கம் தனது குரலை வெளிப்படுத்துவதில்லையென்றும் ஹொவிக் குற்றம் சாட்டியிருந்தார்.

மாறாக, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் அல்லவென்றும் அதன் தலைவர்கள் நியாயபூர்வமான அரசியல்வாதிகள் எனவும் பிரச்சாரம் செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை பணத்தை நோர்வே அரசாங்கம் செலவிடுகிறது, ஒவ்வொரு மாதமும் நோர்வேயிலிருந்து 10 மில்லியன் டொலர்களை புலிகள் சேகரிப்பதற்கும் அது அனுமதிக்கிறது என்று குற்றஞ்சாட்டிய ஹொவிக் விடுதலைப் புலிகளுக்கு' நோர்வேயின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர்கள் எரிக் சொல் ஹெய்மும், ஜோன் வெஸ்போர்க்கும் என்று குறிப்பிட்டார். உலகின் பயங்கரவாத அமைப்பொன்றுக்கு உதவியைப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் எரிக் சொல்ஹெய்மும், ஜோன் வெஸ்போர்க்கும் வேண்டுமென்றே நோர்வேயின் வெளிநாட்டுக் கொள்கையை மீறி விட்டதாகவும் குற்றச்சாட்டை முன் வைத்தார். நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகள் அல்லாத தமிழர்களை சொல்ஹெய்ம் பாகுபாடு காட்டுவதாகக் குறிப்பிட்டிருந்த ஹொவிக் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிங்சன் மீதும் குற்றம் சுமத்தினார். இரகசியமான தகவல்களை அவர் விடுதலைப் புலிகளுக்கு வழங்கியதாக ஹொவிக் குறிப்பிட்டார். பயங்கரவாதத்திற்கு எதிரான நோர்வே மக்கள் என்ற தனது அமைப்பை நிறுவ வேண்டும் என்று ஹொவிக் உணர்ந்ததன் வெளிப்பாடே இதுவாகும். விடுதலைப் புலிகளின் வன்முறைகள் குறித்து நாடு தழுவிய பிரச்சார நடவடிக்கைகளில் இந்த அமைப்பு ஈடுபட்டிருக்கிறது.

யார் இந்தக் ஹொவிக் என்ற ஒரு கேள்வியை இந்த நபர் வெளிப்படுத்தியிருக்கும் உணர்ச்சி மேலீட்டான தகவல்கள் கொண்டு வருகின்றன. இவரைப் பற்றிய பின்னணியை நோர்வே மக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், மிகவும் ஆவல் கொண்ட சில பத்திரிகை ஆசிரியர்களினாலும் தம்மைத் தேசப்பற்றாளர்கள் என்று கூறிக் கொள்பவர்களாலும், இந்த நபர் பற்றி இலங்கை மக்கள் தவறாக வழி நடத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஹொவிக்கை ஒரு அச்சமற்ற மனிதன் என்றும் ஜனநாயக பெறுமதிகளைக் காப்பதற்காகப் பாடுபடுபவர்களில் ஒருவர் என்றும் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களுக்குச் சவால் விட்டு சமாதான தின்னிகளிடமிருந்து நாட்டை எப்படிப் பாதுகாப்பதென்பது குறித்து உள்ளூர் மக்களுக்கு விளக்கமளிப்பதற்காக இலங்கைக்கு வந்திருக்கிறார் என்றும் காட்டினார்கள்.

ஹொவிக்கைப் பற்றி இலகுவாகக் கூறுவதானால், சபாஹெடின் பயசிலியோக்லு என்ற 51 வயதுடைய துருக்கிய குடியேற்றவாசியை அவரது சொந்த உணவகமான பப்பா சிகோலோவுக்குள் வைத்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி பலரது கண்முன்பாகச் சுட்டுக் கொன்றவர். இவரைச் சுட்டுக் கொன்ற பின்னர் ஒரு மதுபானசாலைக்குச் சென்று விட்டு எந்தவித சலனமுமின்றி ஒரு பயங்கரத்தைச் செய்து விட்டதாகத் தன்னைத்தானே பொலிஸாரிடம் ஒப்படைத்தார். விசாரணைகளின் பின்னர் எந்தவித முன் திட்டமும் இன்றி திடீர் என்ற ஒரு உந்துகை காரணமாக இந்தக் கொலையைச் செய்ததாகக் கூறியிருந்தார். பின்னர் இது தொடர்பில் முரண்பாடான கருத்தொன்றைக் கூறிய அவர், அளவுக்கதிகமாக மருந்தை உட்கொண்டு இறந்து போன தனது மருமகனுக்காகப் பழி தீர்க்கும் நடவடிக்கையாகவே அவரைக் கொலை செய்ததாகவும், இவ்வாறு தனது மருமகன் இறப்பதற்கு அந்தத் துருக்கியரே காரணம் என்றும் கூறினார். ஆனாலும் அவரது இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்ற ஒன்று என்று பின்னர் தெரியவந்தது.

மேலும் தொடரப்பட்ட விசாரணைகளில், 1996இல் ஹொவிக் கடும் நிதி நெருக்கடியை எதிர் கொண்டிருந்தாரென்றும், எந்தவிதமான புறத்தூண்டல்களும் இன்றி, ஒளிப்பட மற்றும் ஒலி உணர்வுகளை எதிர்கொள்ளுகின்ற ஒரு அழுத்தத்திற்குள்ளாகியிருந்தார் என்றும் தெரிகிறது. இத்தனைக்கும் இது ஒரு நோய் என்பதை அறியாதவராக அவர் இருந்தார் என்றும் கூறப்படுகிறது. இயல்பாகவே ஒலி அலைகளைக் கேட்கின்ற போது, தனது வீட்டின் முன்பாக யாரோ ஒலிவாங்கிகளைப் பொருத்துவதாக அவர் எண்ணினார். 1998 பெப்ரவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ஆம் திகதி அன்றைய ஆட்டன் போஸ்டன் என்ற பத்திரிகையின் பிரகாரம். இந்தக் கொலை விவகாரம் குறித்து விசாரணை செய்யுமாறு பொலிஸாரைக் கேட்டிருந்ததாகவும். ஆனால் மனவருத்தம் இந்தக் கொலைச் சம்பவத்திற்குக் காரணம் அல்ல என்றும் மறுத்திருந்ததாக அறிய முடிகிறது. ஆனால் நீதிமன்ற விசாரணைகளில், இந்தக் கொலையை அவர் செய்த போது ஆரோக்கியமற்ற மனநிலையிலேயே ஹெவிக் இருந்ததாகவும் தொடர்ந்தும் அந்த நிலையிலேயே இருப்பதாகவும் ஒஸ்லோ மாவட்ட நீதிமன்றம் கூறியது. சட்டத்தரணிகளின் வாதங்களுக்கு ஏற்ப 10 வருடங்களுக்கு தடுப்புக் காவலில் அவரை வைத்திருப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த விசாரணை தொடர்பில் நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டு ஆட்டன் போஸ்டன் பத்திரிகையில் வெளியான செய்திக் குறிப்பை கீழே தருகிறேன்.

"1997ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி பயங்கரமான இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டபோது. இந்த நபர் மன உள ரீதியாக பாதிக்கப்பட்டிருந்ததை, உளவியல் நிபுணர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள இந்த நபர் மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் உளவியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். இவர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் இந்தக் கொலைக்காக இவரைத் தண்டிக்க முடியாது. இதன் காரணமாக இவருக்கெதிராக குற்றவியல் நடவடிக்கைகளைக் காட்டிலும் தடுப்புக் காவல் நடவடிக்கை கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்று தெரிவிக்கப்பட்டிருந்தது."

ஹெவிக் பற்றிய பின்னணியை அறிந்திருக்கின்ற நிலையில். மகாவலி நிலைய கருத்தரங்கில் நோர்வே அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகளை இணைத்து அவ்வாறு அடிப்படையற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு என்ன காரணமாக இருந்திருக்க கூடுமென்று புரிந்து கொள்வது இலகுவாகிறது. அவரது பேச்சில் எதுவும் இருக்கவில்லை. எல்லாமே வெறும் கற்பனைப் பேச்சு. இவரைப் பீடித்திருக்கும் மனநோய்க்குப் பெயர் பரனொய்யா. மருத்துவ வரைவிலக்கணத்தின் படி தவறான முறையிலான துன்புறுத்தல்கள் தொடர்பிலான நம்பிக்கைகளினால் இயல்புபடுத்தப்படுகின்ற நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகள் என்பவற்றின் வெளிப்பாடே இதுவாகும். சந்தேகம், அச்சம், பகைமை உணர்வு, அதீத உணர்வு மேலீடு, குற்றங்காணும் தன்மை, மிகையான சுய குறிப்பீட்டு உணர்வு என்பவை இந்த வியாதியுடன் தொடர்புபட்ட உளவியல் அம்சங்களாக இருக்கின்றன. ஆதலால், கொழும்பு மகாவலி நிலையத்தில் ஹெவிக் தெரிவித்த அத்தனை கருத்துக்களையும் பரனொய்யா வியாதியுடனேயே நான் தொடர்புபடுத்துகிறேன். இல்லாவிட்டால் ஹெவிக் குறிப்பிட்டதுபோல, வேறு எந்த மனிதனாவது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட, வெளிப்படைத்தன்மை கோட்பாட்டை அடியொற்றிச் செல்கின்ற ஒரு அரசாங்கத்திற்கெதிராக ஒரு கருத்தை தனது சிந்தனையில் எழுப்ப முடியுமா?

**1997ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி பயங்கரமான இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டபோது, இந்த நபர் மன உள ரீதியாக பாதிக்கப்பட்டிருந்ததை, உளவியல் நிபுணர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள இந்த நபர் மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் உளவியல் நிபுணர்கள் கருதுகிறார்கள்.**

வேறுபட்ட வெற்றித்தன்மைகளுடன், உலகில் ஆறுக்கும் அதிகமான நாடுகளுடன் நோர்வேயானது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஹெவிக் குற்றஞ் சாட்டியது போல அத்தகையதொரு அரசாங்கம் . விடுதலைப்புலிகளுடன் இவ்வாறு நடந்து கொள்வதென்பது அறவே சாத்தியமற்றது.

இந்தக் கூட்டத்திலே. மேலும் இரண்டு பேச்சாளர்களும் நோர்வேக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்துப் பேசினார்கள். இவர்களில் ஒருவர் அண்மைக்காலமாக அரசசார்பற்ற நிறுவனங்களுக்கெதிராக கடும் விமர்சனம் தெரிவித்து வரும் சுசந்த குணதிலக. பல்வேறு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்த ஈழ வரைபடம் குறித்து மீண்டும் அவர் பேசினார். இன்ரர்நேஷனல் அலேட்டில் நான் செயலாளர் நாயகமாக இருந்தபோது இந்த வரைபடம் வரையப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தும் நிலப்பரப்பைக் காட்டிலும் கூடுதலானளவு நிலப்பரப்பு இந்த வரைபடத்தில் ஈழத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், நான்தான் இந்த வரைபடம் இவ்வாறு வரைபடுவதற்குக் காரணம் என்றும் குற்றம் சாட்டினார். எவ்வாறு இந்த வரைபடம் வந்தது என்பது பற்றி கடந்த பல வருடங்களாக மீண்டும் மீண்டும் நான் விளக்கம் தெரிவித்து வருகிறேன். இந்த வரைபடத்திற்கு நான் பொறுப்பு அல்ல.

இந்த நாட்டில் பிரிவினையை நான் ஒரு போதும் கோரியதில்லை. உண்மை இப்படி இருக்க. தொடர்ச்சியாக இந்த வரைபடம் குறித்துச் சுசந்த குணதிலக பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரஸ்தாபித்து வருகிறார். சியாரா‌ளயோனிலும் நான் போராளிக் குழுவிற்குச் சார்பாக செயற்பட்டதாக ஒரு கதையைக் கூறி அதனையும் திரும்பத் திரும்ப கூறி வருகிறார். இது எதனைக் குறிக்கிறது என்றால், புதிதாக எதனைப் பற்றியும் கதைப்பதற்கு கலாநிதி சுசந்த குணதிலகவிடம் எதுவும் இல்லை என்பதையும். அதனால் 25 வருடம் பழமையான விவகாரங்களைத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார் என்பதையும் தான்.

சுசந்த குணதிலகவின் கடந்த 25 வருட கால பணி என்னவென்றால் அரசசார்பற்ற நிறுவனங்களையும் நோர்வேயையும் தூற்றுவதுதான். இதை ஒரு தொழிலாகவே அவர் செய்து வருகிறார் போல தெரிகிறது. ஊடகங்களில் பல சந்தர்ப்பங்களில் இவரது செயற்பாடுகள் பற்றிய உண்மைத் தன்மைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறேன். இவர் மீது ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவனும் கடும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார். இவற்றுக்கு இவரால் எந்தப் பதிலும் அளிக்க முடியாமல் இருக்கிறது. சுசந்த குணதிலக சகலர் மீதும் குரோதப் பேச்சைப் பேசுகின்ற ஒரு நபராகவே அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

கூட்டத்தில் உரையாற்றிய மற்றையவர் எஸ்.எல்.குணசேகர தனிப்பட்ட ரீதியான தாக்குதலைத் தவிர்த்திருந்தார். அவரை நான் மிகவும் மதிப்பதுடன் அவர் எழுதுவதையும் படிக்கிறேன். அவர் தான் சேர்ந்து திரிபவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பரனொய்யா வியாதியின் குணாம்சங்களை வெளிப்படுத்தியிருக்கும் ஹெவிக்கும், சுசந்த குணதிலகவும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரப் பிரதேச ஆக்கிரமிப்பும் மலையக மக்களின் இருப்பு நிலையும்

- இடையன் -




அ மலையகத் தமிழர்கள் இந்த நாட்டின் பூர்விகக் குடிகளல்லாவிடினும், தொடர்ச்சியானதும், நிலையானதுமான 180 வருடகால வரலாற்றை இந்த நாட்டுடன் கொண்டுள்ள ஒரு தேசிய இனம். இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாரியளவில் செழுமை சேர்க்கும் ஒரு பிரிவினராக இன்றுமுள்ள இச்சமூகத்தில் பெருமளவிலானோர் இன்றும் தோட்டத் தொழிற்துறையுடன் அல்லது அதில் தங்கி வாழ்வோராகவே உள்ளனர். அவர்களின் வாழ்விடங்களைப் பொறுத்தவரையில் அவர்களே அப் பிரதேசங்களில் முதற் குடிகளாவர்[1]

மலையகத் தமிழர் மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் பெருமளவில் வாழ்ந்த போதிலும் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களே தீர்மானகரமான இரு பிரதான வாழ்வியல் பிரதேசங்களாக உள்ளன. !இதற்காக ஏனைய வாழ்விடங்களைக் குறைத்து மதிப்பிடவில்லை) எண்ணிக்கை அடிப்படையில் இலங்கையில் யாழ் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தமிழர்கள் அதிகளவில் வாழும் இரண்டாவது மாவட்டமாக நுவரெலியா மாவட்டமேயுள்ளது.

புவியியலாளர்களின் கருத்துப்படி நுவரெலியா, பதுளை மாவட்டங்களிலேயே இலங்கையின் பெருமளவான மலைத் தொடர்களும் குன்றுகளும் காணப்படுகின்றன. இப்பிரதேசங்களில் மேற் கொள்ளப்படுகின்ற முறையற்ற நிலப் பராமரிப்பு முறைமைகள் காரணமாக மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயமும் அதிகளவில் காணப்படுகின்றன. இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் பெய்த கடுமையான மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் பெரும்பான்மை இனத்தவர்கள் பெருமளவில் வசிக்கும் வலப்பனை மற்றும் ஹங்குரன்கெத பிரதேச செயலாளர் பிரிவுகளில் (இவ்விரு பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெருமளவிலான பகுதி நுவரெலியா மாவட்டத்தின் தமிழர் சனத்தொகையை குறைப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் ஏனைய மாவட்டங்களிலிருந்து பிரித்து நுவரெலியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட பிரதேசங்களாகும்) பல பகுதிகளில் மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதுடன் அப்பகுதிகளில் வசித்த மக்கள் தற்காலிகமாக இடம் பெயர்ந்ததுடன், அப் பகுதிகள் மக்கள் மீள் குடியமர்வதற்கு உகந்த பிரதேசங்களல்ல எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அம்மக்களின் மீள் குடியேற்றத்துக்கென நுவரெலியா மாவட்டத்திலுள்ள அல்மா (268 ஏக்கர்), ஹைபொரஸ்ட் (516 ஏக்கர்), டெல்மார் (458 ஏக்கர்), நடுக்கணக்கு (சென் லியனாட்ஸ் - 234 ஏக்கர்), ஓல்டிமர் 349தோட்டங்களிலிருந்து 1825 ஏக்கர் செழுமையான தேயிலைக் காணியைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்த நான்கு தோட்டங்களும் நுவரெலியா மாவட்ட இராகலை பிரதேசத்தில் இரு முனைகளில் உள்ளதுடன் தமிழர்கள் செறிவாக அதிகளவில் வாழும் தோட்டங்களாகும். செழிப்பான தேயிலைத் தோட்டங்கள் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுவதால் பாதிப்புக்குள்ளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தோட்டங்களின் நிரந்தரக் குடிகளான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் நிலைபற்றி யாரும் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேற்பட்டோரின் பொருளாதார வாய்ப்புகள் நேரடியாக இல்லாமற் போவதுடன் மலையகத் தமிழரின் புவியியற் தொடர் பாதிப்பிற்குள்ளாவது பற்றியும் யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு செழிப்பான காணிகள் வழங்கப்பட வேண்டுமாயின் நுவரெலியா மாவட்டத்திலேயே சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் வலப்பனை, ஹங்குரன்கெத பகுதிகளில் பெருமளவில் பயன்படுத்தப்படாத காணிகள் இருப்பதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பயன்படுத்தப்படாத செழிப்பான காணிகள் இருப்பது யாவரும் அறிந்த விடயமே. ஆனால் இதே அல்மா, ஹைபொரஸ்ட், டெல்மார், நடுக்கணக்கு, ஒல்டிமர் தோட்டக் காணிகளையே பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ராகலைப் பகுதியிலுள்ளஅரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரே மிகவும் தீவிரமாகச் செயற்படுவதாக அறிய முடிகிறது. இவர் தனது வாக்குப் பலத்தை அதிகரிப்பதுடன் நுவரெலியா மாவட்டத்தில் தமிழர்களின் செறிவைக் குறைப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்ப முதல் செயற்பட்டு வருகின்றார். இந்நிலையிலேயே குறித்த தோட்டத் தொழிலாளர்கள் மலையக அரசியல் தொழிற்சங்கத் தலைமைகளிடம் இந்த விடயம் பற்றி முறைப்பாடுகளைச் செய்தும் பலன் கிட்டாத நிலையில் சுயமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டுள்ளனர்.

வரலாற்றை நோக்கும் போது மலையகத் தமிழரின் செறிவைக் குறைப்பதற்கான முயற்சிகள் ஆரம்பம் முதலே மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கலாம். கேகாலை மாவட்ட யட்டியாந்தோட்டைப் பகுதியிலுள்ள வெற்றிலையூர் (இன்று புவக்கோபிட்டிய என்றழைக்கப்படுகிறது) 1931ஆம் ஆண்டுகளிலேயே இவ்வாறான ஆக்கிரமிப்புக்கு உள்ளானது. இவ்வாறு படிப்படியாக சுதந்திரத்திற்கு முன்னரே திட்டமிட்ட வகையில் மலையகத் தமிழரின் செறிவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் இவை தீவிரமடையலாயின.

**1952ஆம் ஆண்டு முதல் மலையகத்தின் பெரும்பாலான புறநகர்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மை சிங்கள இனத்தவரின் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்டதுடன் இன்றும் இத்தகைய முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதைக் காண முடியும். இதன் மூலம் படிப்படியாக மலையக நகரங்களின் தமிழரின் நிலையை ஆட்டங் காணச் செய்வதே ஆட்சியாளர்களின் திட்டமாகும்.**

**இது போன்று நாட்டிற்கு நீர் மின்வலு சக்தியைப் பெறுவதை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட காசல்ட்றி, லக்சபான, மவுசாகலை, கென்யோன், நோட்டன் போன்ற நீர்த்தேக்கங்களும் அதனோடு இணைந்த மின் உற்பத்தி நிலையங்களும் நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியாப் பிரதேசத்தையொட்டியே ஹட்டன் மேட்டு நிலப் பகுதியிலேயே அமைக்கப்பட்டன. இன்று அப்பிரதேசங்களைச் சுற்றிப் பெருமளவான சிங்களவர்களின் குடியேற்றங்கள் உருவெடுத்துள்ளதுடன் இவை பெருமளவில் மஸ்கெலியாவை ஒட்டிய பிரதேசத்தில் மலையகத் தமிழரின் புவியியற் தொடரை ஊடறுத்து தமிழர்களின் செறிவைப் பாதித்துள்ளது.**

1948ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமை, வாக்குரிமைச் சட்டங்கள் மூலம் லட்சக் கணக்கானோர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

1952ஆம் ஆண்டு முதல் மலையகத்தின் பெரும்பாலான புறநகர்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மை சிங்கள இனத்தவரின் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்டதுடன் இன்றும் இத்தகைய முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதைக் காண முடியும். இதன் மூலம் படிப்படியாக மலையக நகரங்களின் தமிழரின் நிலையை ஆட்டங் காணச் செய்வதே ஆட்சியாளர்களின் திட்டமாகும்.

இது போன்று நாட்டிற்கு நீர் மின்வலு சக்தியைப் பெறுவதை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட காசல்ட்றி, லக்சபான, மவுசாகலை, கென்யோன், நோட்டன் போன்ற நீர்த்தேக்கங்களும் அதனோடு இணைந்த மின் உற்பத்தி நிலையங்களும் நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியாப் பிரதேசத்தையொட்டியே ஹட்டன் மேட்டு நிலப் பகுதியிலேயே அமைக்கப்பட்டன. இன்று அப்பிரதேசங்களைச் சுற்றிப் பெருமளவான சிங்களவர்களின் குடியேற்றங்கள் உருவெடுத்துள்ளதுடன் இவை பெருமளவில் மஸ்கெலியாவை ஒட்டிய பிரதேசத்தில் மலையகத் தமிழரின் புவியியற் தொடரை ஊடறுத்து தமிழர்களின் செறிவைப் பாதித்துள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே 1977ஆம் ஆண்டு அன்றைய அரசாங்கத்தினால் தலவாக்கலை டெவன் தோட்டப் பகுதியில் பெரும்பான்மையினருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக சுவீகரிக்கப்பட்ட 7 ஆயிரம் ஏக்கர் காணி சிவனு லட்சுமணனின் வீரமரணத்துடன் தடுக்கப்பட்டது. இந்நிலையில் 1977ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற காமினி திஸாநாயக்கா துரித மகாவலி அமைச்சரான பிறகு மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டு தமிழரின் செறிவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மலையகத்தின் அனைத்து வீதிகளின் இரு புறங்களிலும் திட்டமிட்ட வகையில் சிங்களவரின் குடியேற்றத்தை முனைப்புப் படுத்தினார். இதன் மூலம் தமிழரின் புவியியற் தொடர் முழுமையாக பாதிப்புக்குள்ளானது. மேலும் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பொல்கொல்ல, விக்ரோரியா, ரந்தெனிகல, கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொத்மலை போன்ற நீர்த்தேக்கங்களும் மின் உற்பத்தி நிலையங்களையும் கட்டியெழுப்புவதற்காக கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் தமிழர்கள் பெருமளவில் வசித்த தோட்டங்களே மூடப்பட்டன. இதன் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் நிரந்தர தொழிலோ, வதிவிடமோ இன்றி அவதியுறுவதைக் காணலாம். மறுபுறத்தில் இத்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முழுப் பலனை அடையமுடியாதென்பது இன்று புலனாகியுள்ளது.

இதுபோன்றே ரத்தினபுரி மாவட்டத்தில் தமிழரின் வாழ்விடங்களைப் பறித்து, உருவாக்கப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய நீர்மின்வலு திட்டமான சமனலவெவ திட்டம் இன்று தோல்வியடைந்துள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். சமனலவெவ நீர்த்தேக்கத்தில் பல வெடிப்புகள் ஏற்பட்டதன் பின்னரே அதன் முழுப் பலனை நாடு அடைய முடியாது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் குடும்பங்களும் அம்மாவட்டங்களிலுள்ள செழிப்பான தேயிலை, இறப்பர் தோட்டக் காணிகளிலேயே மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மேல் கொத்மலை நீர் மின்வலுத் திட்டமும் பல ஆயிரக்கணக்கான செழிப்பான தேயிலைக் காணியை இல்லாமற் செய்வதுாடாகவும், பலவிதமான தனித்துவமிக்க இயற்கை வளங்களை அழிப்பதினூடாகவுமே செயற்படுத்தப்படவுள்ளது. அத்துடன் இத்திட்டம் நிறைவேறியபின் பலவிதமான மாற்றுக் குடியேற்றங்கள் அப்பிரதேசத்தில் ஏற்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே தென்படுகின்றன. அதேவேளை மேல்கொத்மலைத் திட்டமானது மலையகத் தமிழரின் மையப் பகுதியான நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலைப் பகுதியை ஊடறுத்தே நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு மலையகத் தமிழரின் புவியியற் தொடரை சரி நடுவில் இரு வேறு கூறுகளாக்கும் முயற்சியாகும். ஆனால் இத்திட்டத்தின் மூலம் சொந்த அனுகூலங்களை அடைய முயற்சிக்கின்ற அனைத்து மலையக அரசியல் தொழிற்சங்க தலைமைகளுக்கு இதன் பாதக விளைவுகள் பற்றிய விளக்கமோ அறிவோ உள்ளதாகத் தெரியவில்லை!

இவ்வாறு பல வழிகளிலும் மலையகத் தமிழரின் புவியியற் தொடர் திட்டமிட்டுச் சுருக்கப்படுவதுடன் அவர்களின் மக்கள் - செறிவு தன்மையும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருவதையும் காணலாம்.

ஆனால், ஆரம்ப முதலே இவை பற்றிச் சிந்திக்கவோ, நடவடிக்கைகள் எடுக்கவோ மலையக அரசியல் தொழிற்சங்கத் தலைமைகள் தலைப்பட்டதாக இல்லை. பாதிப்புகளை மக்கள் சுயமாக உணர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதெல்லாம் மலையகத் தலைமைகள் அவ்வெதிர்ப்பு நடவடிக்கைகளை பலமிழக்கச் செய்வதிலும், அவை தங்கள் கட்டுப்பாட்டை மீறிப் போகாமல் இருப்பதையும் நோக்காகக் கொண்டு செயற்பட்டனரே தவிர மக்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையை உணர்ந்து செயற்படவில்லை.

மலையக அரசியல் - தொழிற்சங்கத் தலைமைகளும் இந்திய அதிகார வர்க்கத்தின் மேலாதிக்க சிந்தனைக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட முயற்சிக்கின்றனவே தவிர மலையகத் தமிழரின் உண்மையான தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்படுவனவாக இல்லை. இது உண்மையில் மலையக சமூகத்தின் சாபக்கேடாகும். மாறி மாறி வரும் அரசாங்கங்களில் அமைச்சுப் பதவிகளையும் சலுகைகளையும் பெற்று சுகபோகம் அனுபவிக்கும் அனைத்து மலையகத் தலைமைகளும் சொந்த மக்களின் கருத்துக்களை மதிப்பதாகவோ அவர்களின் தேவை அறிந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவோ தெரியவில்லை.

இந்நிலையை மாற்றி வேறு நாட்டின் தேவைக்கோ, சொந்த சுகபோகத்திற்கோ முக்கியத்துவம் கொடுக்காது உண்மையாக மக்களின் தேவை அறிந்து செயற்படக் கூடிய தலைமை மலையகத்தில் உருவாக்கப்பட வேண்டும். இதை மக்கள் சக்தியால் மட்டுமே செய்ய முடியும். மக்கள் மத்தியிலிருந்து அந்தப் பொறுப்பு வாய்ந்த தலைமை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அப்போது தான் மலையகத் தமிழரின் பறிபோகின்ற வாழ்வாதாரப் பிரதேசங்களைப் பாதுகாக்கவும், அவர்களின் வரலாற்று விழுமியங்களுக்கு புத்தூக்கம் கொடுக்கவும், நீண்ட கால நோக்கில் அவர்களின் இருப்பை உறுதி செய்யவும் முடியும். இல்லாவிடில் மலையகத் தமிழரின் எதிர்கால இருப்பு என்பது கேள்விக்குறியாகிவிடும்!. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சர்வதேச முரண்பாட்டுத் தீர்வு அமைப்பின் அறிக்கை

- சில அறிமுகக் குறிப்புகள் -



படம்: க. துஷ்யந்தி

சிராஜ் மஷ்ஹூர்

இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் அக்கறை அண்மைக்காலமாக அதிகரித்து வருவது ஒரு ஆரோக்கியமான அம்சமாக உள்ளது. குறிப்பாக 2002 போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சர்வதேச சமூகம் முஸ்லிம்கள் தொடர்பாக போதிய அக்கறை காட்டியிருக்கவில்லை. எனினும் 2006 ஓகஸ்ட் மூதூர் நிகழ்விற்குப் பின்னர் இதில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இலங்கையில் நிலையான அமைதியை உருவாக்குவதற்கு முஸ்லிம் மக்களது விவகாரம் கூடுதல் கவனம் எடுத்து கையாளப்பட வேண்டும் என்பதை அவை படிப்படியாக உணரத் தொடங்கியுள்ளன.

இதன் ஒரு புதிய வருகையாக முரண்பாட்டுத் தீர்வுக்கான அனைத்துலக அமைப்பான International Crisis Group 'ஆயுத மோதலின் இடையே அகப்பட்டுள்ள இலங்கை முஸ்லிம்கள்' (Sri Lanka's Muslims : Caught in the Crossfire) என்ற தலைப்பில் அதன் புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது பயனுள்ள பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அது பற்றிய ஒரு சிறு அறிமுகக் குறிப்பே இதுவாகும்.

இலங்கையின் 25 வருடகால மோதல் வரலாறு பெரும்பான்மை சிங்களவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்குமிடையிலான முரண்பாடாகவே பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. இந்நாட்டின் முஸ்லிம்களது அபிலாசைகள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன. இவர்கள் தங்களைத் தனித்துவமான இனக்குழுவாகக் கருதுகின்றனர். இனப்பிரச்சினையில் அவர்களது பாத்திரத்தைப் புரிந்து கொள்வதும் அவர்களது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்துவதும் நிலையான சமாதானத் தீர்வுக்கு அடிப்படையான அம்சங்களாக உள்ளன.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களும் அதன் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட வேண்டும். முஸ்லிம்களது பாதுகாப்பு மற்றும் அரசியல் ஈடுபாட்டை உறுதிப்படுத்துவதற்காக அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அத்தோடு கருணா அணியினரும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதிக பொறுப்புவாய்ந்த உள்ளூர் மற்றும் தேசிய ஆளுகை முறை, முன்னேற்றமடைந்த மனித உரிமைக் கட்டமைப்புகள், கிழக்கின் சிறுபான்மை மக்களது அக்கறைக்குரிய விடயங்களை அங்கீகரிக்கும் வினைத்திறன்மிக்க அரசியல் மூலோபாயங்கள் என்பன ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அது வேண்டியுள்ளது.

முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அதிகமான பாதிப்புகளை எதிர்கொண்டு வந்துள்ளனர். 1990லிருந்து இனச்சுத்திகரிப்பு, படுகொலைகள், பலவந்த இடம்பெயர்வு என்பனவற்றுக்கு அவர்கள் ஆளாகியுள்ளனர். 2002 போர் நிறுத்த உடன்படிக்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை பெருத்த ஏமாற்றத்திற்குரிய ஒன்றாக அமைந்துள்ளது. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் பிளவுபட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்ள ஒருபோதும் ஆயுத ரீதியான வழிமுறையைக் கைக்கொள்ளவில்லை. முஸ்லிம்கள் ஆயுத வழிமுறைகளைக் கைக்கொள்ளக் கூடும் என்ற அச்சம் 1990களிலிருந்தே இருந்து வருகிறது. ஆனால் பெரும்பாலான முஸ்லிம்கள் அரசியல் வழிமுறையூடாக தமது இலக்கை அடைவதிலேயே நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் வன்முறை இல்லாமல் போகும் என்ற உத்தரவாதம் இல்லை. சில பிரதேசங்களில் குறைந்தளவு ஆயுதங்களைக் கொண்ட சிறு குழுக்கள் இருக்கின்றன. ஆனால் அவை பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தரக்கூடியவையல்ல. ஆயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கிய இஸ்லாமிய அமைப்புகள் பற்றிய அச்சங்கள் மிகைப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன. இந்த மிகைப்படுத்தல்கள் பெரும்பாலும் அரசியல் நோக்கங்களுக்காகவே செய்யப்படுகின்றன.


இஸ்லாமிய அடிப்படைவாதம் மீதான ஈடுபாடு முஸ்லிம்களிடையே அதிகரித்து வருகிறது. சூபி அமைப்புகள் மீது வன்முறைத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால் இவை வரையறுக்கப்பட்டவை. பெரும்பாலான முஸ்லிம்கள் மாற்றுக் குழுக்களுடனும் பிற சமயத்தவர்களுடனும் சகிப்புத் தன்மையுடனேயே நடந்து கொள்கின்றனர். முஸ்லிம்களது தீர்வு யோசனைகள் பிரதான தமிழ், சிங்களக் கட்சிகளது நிலைப்பாடுகள் மீதான எதிர்வினைகளாகவே கருதப்படுகின்றன. கிழக்கில் முஸ்லிம்களது தன்னாட்சிப் பிரதேசங்கள் பற்றிய நிலைப்பாடுகள் இருந்தாலும் தற்போதைய அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் குறைவு. கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக கொழும்பு கொண்டுள்ள திட்டங்கள் பற்றி முஸ்லிம்கள் எச்சரிக்கை உணர்வுடையவர்களாக உள்ளனர்.

சிறுபான்மை இனத்தவருடன் அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசு அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை. நீண்டகாலத்தில் ஒரு முழுமையான அரசியல் தீர்வே முஸ்லிம்களுக்கெதிராக இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகளுக்கு நியாயம் வழங்கும். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுடனான தமது அணுகுமுறைகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது அபிலாசைகளை உள்ளடக்கிய சமத்துவமான தீர்வே இலங்கையில் எல்லா சமூகத்துக்கும் நன்மையளிப்பதாக அமையும். இதன் பின்னர் முக்கியமான பரிந்துரைகள் இலங்கை அரசுக்கும், முஸ்லிம் சமூகத்துக்கும், அரசியல் கட்சிக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள அனுமதித்தல், வடக்கு முஸ்லிம்களது மீளத் திரும்பும் உரிமை, கிழக்கு மாகாணத்திற்கான புதிய இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள், அரச அனுசரணையுடனான குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தல், சிவில் சமூகத்தை வலுப்படுத்தல், முஸ்லிம் சமூகத்தை உள்ளக ரீதியாக ஜனநாயகமயப்படுத்தல் போன்ற பல பரிந்துரைகளும் அவற்றில் உள்ளன. ●

# வேட்டு புலிக்கல்ல கிலிக்கு!



புலிகளின் விமானக் குண்டுவீச்சு, கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் ஏற்படுத்திய கிலி பற்றி ஆச்சரியப்பட எதுவும் இல்லைத்தான். நேரடியாக யுத்தத்தைக் காணாத, குண்டுவீச்சுகள், ஷெல் வீச்சுகளின் உக்கிரத்தை அறிந்திராத மக்கள் மத்தியில் பயமும் பதட்டமும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், விமானம் குண்டு வீசியதென்று கேள்வியுற்றதும் இலங்கைப் படையினர் நடந்து கொண்ட விதம்தான்!

யுத்தம் எப்படியிருக்கும், குண்டு வீச்சு எப்படியிருக்கும் என்பது பற்றி அவர்கள் அறிந்திருக்க எந்த நியாயமும் இல்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடக்கும் யுத்தத்தில், யுத்தத்தை நேரில் தரிசிக்காத ஒரு படையினர் கூட இருந்திருக்க முடியும் என்று யாரும் சந்தேகிக்க முடியாது.

ஆனால் கடந்த 29ஆம் திகதி நடந்த புலிகளின் விமானக் குண்டுவீச்சை அடுத்து படையினர் நடந்து கொண்ட விதம் அவர்களுக்கு யுத்த அனுபவம் கொஞ்சம் கூட இல்லையோவென்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. விமான எதிர்ப்புப் பீரங்கிகள் கொண்டு புலிகளின் விமானங்களைத் தாக்கியதாகக் கூறப்படுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் பல்லாயிரக்கணக்கான சாதாரண துப்பாக்கிகள் மூலமாக வான்நோக்கி சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதற்கு என்ன காரணம் இருக்க முடியும். மக்களைக் கிலி கொள்ள வைத்ததைத் தவிர அவை வேறெதையாவது சாதித்திருக்க முடியுமென்று அவர்கள் உண்மையாக நம்பினார்களா?

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள அனைத்துப் படை முகாம்கள், தடுப்பு முகாம்களில் இருந்தெல்லாம் வான்நோக்கி துப்பாக்கியில் உள்ள குண்டுகள் தீரும்வரை படையினர் சுட்டுத் தள்ளியுள்ளனர். கையிலிருந்த கிரனேட்டை வானத்தை நோக்கி ஒரு இராணுவ வீரர் வீசினார் என்றால் பாருங்களேன்! விமானம் வந்ததோ குண்டு போட்டதோ தெரியாத அப்பாவி ஒருவர் இதனால் காயமடைந்துள்ளார். வானத்தில் வாண வேடிக்கை நடப்பது போன்ற தோற்றத்தையே அந்த நள்ளிரவில் அது மக்களுக்குக் கொடுத்தது. இந்த வாணவேடிக்கை விமானத்தைத் தாக்க எந்தளவில் பயன்பட்டிருக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்களோ தெரியவில்லை.

மின்சாரத்தை முற்றாக நிறுத்தி விட்டு நடந்த இந்த வேடிக்கையால் உண்மையில் பாதிக்கப்பட்டது ஒரு சில அப்பாவி மக்கள் மட்டும்தான். திரும்பி வந்து வீழ்ந்த குண்டுகள் வீடுகளிலுள்ள அவர்களைத் தாக்கிச் சென்றுள்ளது.

புலிகளுக்கு எதிராக அந்த வேட்டுக்கள் உண்மையில் தீர்க்கப்படவில்லை. தம்மிடையே நிலவிய அச்ச உணர்வுக்கெதிராகவே அவை தீர்க்கப்பட்டன என்று சிரிக்கிறார் எனது சிங்கள நண்பர் ஒருவர்.

எனக்கும் அது சரிபோலத்தான் படுகிறது. கொழும்பிலும் சுற்றுப் புறத்திலுமுள்ள படையினரை ஒரு தடவை யுத்த பிரதேசத்திற்கு அனுப்பியெடுத்தால் அவர்களது பயம் ஓரளவுக்காவது தெளிவடையும். அப்போது அவர்கள் தமது ரவைகளை இவ்வாறு வீணாக்க மாட்டார்கள் என்று சொல்கிறார் அந்த நண்பர் மேலும். இதுவும் சரிபோலத்தான்படுகிறது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமணசிறி லியனகே

# வி.புவுக்குப் பாலூட்டும் சு.க

*ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகள் குறித்த சில குறிப்புகள்*

உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஷ்வ வர்ணபால, இலங்கையின் உயர்மட்ட அரசியல் விஞ்ஞானிகளில் ஒருவர். ஓய்வொழிச்சல் இல்லாத அரசியல் வாழ்விற்குள் நுழைந்த பின்னும் அவர் பரந்த அளவில் பல்வகையான விடயங்கள் குறித்த பலவேறு நூல்களை எழுதியிருக்கின்றார். மிக அண்மையில் வெளியிடப்பட்ட அவரது நூல் இலங்கை - ரஷ்ய உறவு தொடர்பான நூல் ஆகும். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகளைத் தயாரிப்பதில் பிரதான பாத்திரத்தை வகிக்கப் போவது அதே வர்ணபால என்று தெரிய வந்த போது எம் எல்லோரிடமும் ஒருவகை நம்பிக்கை கலந்த எதிர்பார்ப்பு உருவாகி இருந்தது. காலனித்துவ காலத்திற்குப் பிந்திய இலங்கை அரசின் சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் தொடர்பாக அவர் போதிய கவனத்தைச் செலுத்துவார் என்ற எண்ணம் எம்மிடம் இருந்தது தான் இந்த எதிர்பார்ப்புக்குக் காரணம்.

ஆனால், 2007ஆம் ஆண்டு மே மாதம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் மக்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள், அக்கட்சியானது கடந்த காலம் முழுவதும் முன்னோக்கிச் செல்லாதது மட்டுமல்ல மிக மிகப் பின்னோக்கிச் சென்றிருக்கின்றது என்பதனையே காட்டுகின்றன. கடந்த காலத்தில் மிகப் பிரமாண்டமாக வளர்ந்து விட்ட சிக்கல் நிறைந்த பிரச்சினைகள் தொடர்பான அக்கட்சியின் 'புதிய அணுகுமுறை' சாரத்தில் ஐந்து தசாப்தங்களுக்கு முந்திய பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் பிரேரணைகளை விட எந்த விதத்திலும் முன்னேறிய ஒனறாகத் தெரியவில்லை!

வரலாறு சில வேளைகளில் (இலங்கையில் அடிக்கடி) திரும்பத் திரும்ப வருவதுண்டு. "ஆனால் அது முதற் தடவை வரும்போது ஒரு துன்பியல் நிகழ்வாகவும், இரண்டாம் முறை வரும்போது ஒரு கேலிக் கூத்தாகவும் வந்து சேர்கிறது" என்று ஒருமுறை மார்க்ஸ் சொன்னது போல ஒரு கேலிக் கூத்தாக இந்தப் பிரேரணைகள் வந்து சேர்ந்திருக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகள் கையிலுள்ள பிரச்சினைகளுக்கு எந்த விதத்திலும் பொருத்தப்பாடானவை அல்ல. அவை வெறுமனே அந்தக் கட்சியின் கடந்த கால நிலைப்பாடுகளை மீள வலியுறுத்துவதைத் தவிர வேறெதையும் செய்யவில்லை. இனத்துவ அரசியல் நெருக்கடிக்கு, நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய தீர்வைத் தரவல்ல அடிப்படையைக்கூட அது கொண்டிருக்கவிலலை. இந்தப் பிரேரணைகளைத் தயாரிக்க எடுத்த நேரமும் உழைப்பும் எனக்குப் பழைய சிங்களப் பழமொழியொன்றை ஞாபகம் ஊட்டுகிறது: 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்தாற் போல'.

இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகள்

1. அதிகாரப் பகிர்வுக்கான அலகாக, மாவட்டங்களை கௌ்வதும் அவற்றிற்கு இடையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதும்
2. இரண்டாவது சபை ஒன்றை உருவாக்குவதும்,

3. முதல் அமைச்சர்களை 72 உறுப்பினர்களைக் கொண்ட இரண்டாவது சபையின் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களாக்குதலும்,

4 தேசிய நீர் மற்றும் நில ஆணைக்குழுக்களை உருவாக்குதலும்,

5. மாவட்ட அளவில் இனத்துவ குறைகேள் அதிகாரி ஒருவரை நியமித்தலும் போன்ற விடயங்களை உள்ளடக்குவதாக அமைந்துள்ளன.

இந்த இரண்டாவது சபையின் அதிகாரங்கள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. பேராசிரியர் வர்ணபால கடந்த காலத்தில் ஒரு தீவிர ஒற்றைச் சட்டசபை ஆதரவாளராக இருந்தவர் என்பதால் (என் எம். பெரேராவின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை தனது இந்த நிலைப்பாட்டிற்கான ஆதரவாக அவர் மேற்கோள் காட்டியுள்ளார்.) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் இப்போது பிரேரிக்கப்பட்டுள்ள இரண்டாவது சபை என்பது முன்னைய கீழ்ச்சபை (Lower House)யின் இன்னொரு பிரதி என்பதை விட எந்தவிதத்திலும் உயர்ந்ததாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே நான் இலங்கையின் இனத்துவ அரசியல் சிக்கல் தொடர்பாக, இரண்டாவது சபை பற்றி எனது முன்னைய கட்டுரையொன்றில் (டெய்லி மிரரில் - பின்னர் இது 'A Glimmer of hope: A New phase of Constitutional, Reforms in Sri Lanka, Colombo South Asia Institute- 2007 இல் மீள்பிரசுரமானது) எழுதியுள்ளதால் இவ்விடத்தில் அதனை ஆராய விரும்பவில்லை.

இந்தப் பிரேரணையில் உள்ள ஒரு இனத்துவ குறைகேள் அதிகாரியை நியமித்தல் என்ற விடயம் ஒரு புதிய, கவனத்திற்குரிய ஒன்று தான். ஆயினும், இந்த குறைகேள் அதிகாரி நியமனத்திற்கான நடைமுறைகள், இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தகைய விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லையென்பதையே காட்டுகின்றன. மொழி தொடர்பாக இப்பிரேரணைகளில் பேசப்படும் விடயங்கள், இன்று நடப்பிலுள்ள அரசியலமைப்பு சட்டத்தில் மொழி பற்றிப் பேசப்படும் விடயங்களைக் கூட இப் பிரேரணையைத் தயாரித்தவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையே காட்டுகின்றன. எவ்வாறாயினும் இந்தக் கட்டுரையில் நான் ஆராய விரும்புவது அதிகாரப் பகிர்வு பற்றி மட்டுமே.

அதன் எல்லைப்படுத்தல்கள் எப்படி இருந்த போதும், உபகுழு B இன் அறிக்கை பல நல்ல விடயங்களைக் கொண்டிருந்தது. அது இலங்கையை ஒரு பல்லின, பல்மத, பலமொழி பேசும், பல் கலாசார தன்மையுடைய சமூகங்களைக் கொண்ட ஒரு நாடாக ஏற்றுக் கொள்கிறது. அது அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்றும், இப்போதுள்ள மாகாணங்கள் அதிகாரப் பகிர்வுக்கான அலகுகளாகக் கொள்ளப்பட வேண்டுமென்றும் பிரேரிக்கின்றது. இந்த உப குழுவுக்கு, இரண்டாவது சபை அதிகாரப் பகிர்வை பயன் விளைவுள்ள விதத்தில் செய்யுமானால், அது இருப்பது பற்றி எந்த மறுப்பும் இல்லை. மறுபுறத்தில் உபகுழு A, நீண்ட கால நோக்குடைய, நல்ல விளைவுகளைத் தரவல்ல பிரேரணைகளை முன் வைத்துள்ளது. இப்பிரேரணைகள் இலங்கை அரசை மிகவும் திறந்த மனதுடன் உள்வாங்கும் இயல்புடைய ஒன்றாக மாற்றக் கூடியவை. உபகுழு A யின் பிரேரணைகள் 2000 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மசோதாவுக்கு மிகவும் நெருக்கமானவை என்பதில் எந்த இரகசியமும் இல்லை. இம் மசோதா பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தால், மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பு சட்டப் பிரேரணைகளுக்கான உப குழுவிலுள்ள முக்கிய உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

உபகுழு A மற்றும் 2000ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்ட மசோதா இரண்டும் குறைந்த பட்ச அதிகாரப் பரவலாக்க அலகு மாகாணசபையே என்பதை அங்கீகரிக்கின்றன. இந்த இரண்டு ஆவணங்களும் தமிழ் முஸ்லிம் கோரிக்கைகளை உள்வாங்கக் கூடிய வெளியைத் தம்மகத்தே கொண்டிருந்தன. - விசேடமாக கிழக்கு மாகாணம் சம்பந்தமாக. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் திஸ்ஸ விதாரண கூட அதிகாரப் பகிர்வுக்கான அலகு மாகாணசபை அமைப்பை விட குறைந்ததாக இருக்கக் கூடாது என்று தெரிவித்திருந்தார். ஆனால் இன்றைய நிலை என்ன? 13ஆவது திருத்தச்சட்டம் மாகாணங்களை

**அண்மைக்கால உயர்நீதிமன்ற (Supreme Court) தீர்ப்பு ஒன்று, இந்த இணைப்பானது அரசியலமைப்பு ரீதியாக, சட்ட அடிப்படையில் - வலுவற்றது என்று அறிவித்தது. உண்மையில், அரசியலமைப்புப் பிரச்சினைகள் ஒரு பன்மைத்துவ சமூகத்தில் பெருமளவுக்கு அரசியல் தன்மையைக் கொண்டிருப்பதால், சட்ட எல்லைகளைத் தாண்டிச் செல்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. நான் இங்கு வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், இலங்கையின் அரசியலமைப்புத் தொடர்பான இதுவரையான உரையாடலானது, சில உடன்பாடுகளை எட்டியுள்ளது என்பதைத்தான். அதிகாரப்பகிர்வுக்கான அலகானது ஏற்கெனவே உள்ள மாகாண சபையை விடக் குறைந்ததாக இருத்தலாகாது என்ற உடன்பாட்டை இது ஏற்கெனவே எட்டியிருந்தது**

அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பரவலாக்கலை அறிமுகப்படுத்தியதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பையும் மேற்கொண்டது. அண்மைக்கால உயர்நீதிமன்ற (Supreme Court) தீர்ப்பு ஒன்று, இந்த இணைப்பானது அரசியலமைப்பு ரீதியாக, சட்ட அடிப்படையில் - வலுவற்றது என்று அறிவித்தது. உண்மையில், அரசியலமைப்புப் பிரச்சினைகள் ஒரு பன்மைத்துவ சமூகத்தில் பெருமளவுக்கு அரசியல் தன்மையைக் கொண்டிருப்பதால், சட்ட எல்லைகளைத் தாண்டிச் செல்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. நான் இங்கு வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், இலங்கையின் அரசியலமைப்புத் தொடர்பான இதுவரையான உரையாடலானது, சில உடன்பாடுகளை எட்டியுள்ளது என்பதைத்தான். அதிகாரப்பகிர்வுக்கான அலகானது ஏற்கெனவே உள்ள மாகாண சபையை விடக் குறைந்ததாக இருத்தலாகாது என்ற உடன்பாட்டை இது ஏற்கெனவே எட்டியிருந்தது

இப்போது ஏற்கப்பட்ட இந்தப் பொது உடன்பாட்டுக்கு மாறாக, மாகாணங்களுக்குப் பதிலாக, மாவட்டங்கள் எதிர்கால அரசியலமைப்பு உடன்பாட்டுக்குரிய அதிகாரப் பகிர்வுகட்கான அலகாக அமைய வேண்டுமென்று புதிதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்திருக்கிறது. இதற்கு, ஏதாவது நியாயமான காரணம் பின்னணியாக இருக்கிறதா? என்னைப் பொறுத்தவரை அப்படி எதுவும் இல்லையென்றே சொல்வேன். இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலுள்ள இனவாதிகள் கேலிக் கூத்தான விதத்தில் 'கிராம ராஜ்யம்' என்ற கருத்துருவாக்கத்தைக் கொண்டு வர முயல்கின்றார்கள்.

ஒரு பல்லின சமூகத்தில் இரண்டு கருத்துருக்கள் மிகவும் முக்கியமானவை. அவை குழு உரிமைகளை பாதுகாப்பதற்காக மட்டுமல்ல, அவற்றைப் பேணி வளர்க்கவும் அவசியமானவை. இதை இவ்வாறு விபரிக்கலாம். அரசியலமைப்பு ரீதியாக இரண்டு அரசாங்கங்கள் இணைந்த ஒரு அரசாங்கம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நியாயமான ஒன்றாகும். 'இரண்டாம் மட்டமான' என்ற கருத்து ஒரு தாழ்ந்த மட்ட அரசாங்கத்தை சட்டபூர்வமானதாக்கவே உதவி வந்திருக்கிறது. இணைந்த அரசாங்கம என்பதற்கு பல்வேறு அர்த்தங்கள் உள்ளனவாயினும், மிகவும் பொதுவானதும் பொருத்தமானதுமான அர்த்தம் என்னவென்றால், அமைப்பு ரீதியானதும் பிராந்திய ரீதியானதுமான முடிவெடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதற்குத் தேவையான கோட்பாடுகளை அது கவனத்தில் கொள்கிறது என்பதே. இவற்றை சாதாரண பிரஜைக்கு நெருக்கமான ஒரு வெளியில் செயற்பட வைக்கிறது. இந்த எண்ணக்கரு எல்லாப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமத்துவமும், சமமானவர்களாக இருந்து முடிவெடுக்கும் நடைமுறையில் பங்கு பற்றுவதற்கு வாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமிட்ட ஜனநாயகம் என்ற கருத்துடன் இணைந்து போகிறது. ஆயினும் இது ஒரு பிராந்தியத்தில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினரின் சுயநிர்ணய உரிமையை நேரடியாகப் பேசவில்லை.

RSCB மற்றும் திஸ்ஸ விதாரணவின் முன்மொழிவுகளின் இரண்டு கோட்பாடுகளும் - இரண்டாம் மட்டம் மற்றும் கிராம ராஜ்ஜியம் என்ற கோட்பாடுகளும் - ஒரு மூவிணை அரசாங்கத்தை அறிமுகப்படுத்துகின்றன. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள ஒரு அம்சமாகும். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 'கிராம ராஜ்ஜியத்தை அடிப்படையாகக் கொண்ட சு.தே.க மாதிரி' முழுக்க முழுக்க இந்திய அரசியலமைப்புச் சட்டம், இலங்கை நிலைமையின் சிக்கல் தன்மை மற்றும் இந்திய மாதிரி என்பவை பற்றிய அறியாமை அல்லது அக்கறையீனம் என்பவற்றில் இருந்து வருகிற ஒன்றாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் ஒரு சிறிய அலகை அதிகாரப் பகிர்வுக்காக பிரேரிப்பதன் மூலம் இங்குள்ள இனத்துவ அரசியலை மறுதலிக்கின்றது. சிறுபான்மையினரின் முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று, அவர்களையும், அவர்களது இருப்பையும் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பான முடிவெடுத்தல்களின் போது தாமும் பங்குபற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்பதாகும். எண்ணிக்கை அளவில் மிகப் பெரிதான ஒரு இனத்திற்குப் பொருத்தமான ஒன்று, எண்ணிக்கையளவில் சிறியதான அதே பிரதேசத்திலுள்ள ஒரு இனத்தின் பிரச்சினைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டுமென்று எந்த அவசியமும் இல்லை. பிரஜாவுரிமைச் சட்டம், 1956இன் உத்தியோகபூர்வ மொழிச்சட்டம் மற்றும் 1970இல் கொண்டுவரப்பட்ட மொழி சார்ந்த தரப்படுத்தல் என்பன இதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும்.
அரசியலமைப்பு மாற்றம் பற்றிய முழுப் பிரச்சினையும் எழுந்ததே இந்த இரு அரசியலமைப்புக்களதும் தோல்வியிலிருந்துதான் . இதற்குக் காரணம் இந்த அரசியலமைப்புச் சட்டங்கள், எண்ணிக்கை அளவில்

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஒருமுறை சொன்னதுபோல், தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள இனவாதத்தின் ஒரு குழந்தை. இந்த இனவாதத்தை இன்னொருமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த முன்மொழிவுகள் மூலம், அந்தக் குழந்தைக்குத் தொடர்ந்தும் பாலூட்டுதலை தொடர்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.**

பெரியதான சிங்கள இனத்தின் அபிலாஷைகளை மட்டும் கணக்கிலெடுத்துத் தயாரிக்கப்பட்டதே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சியானது திரும்பவும் அதே பழைய ஒன்றுதான். அதுவும் த.வி.கூ. (ஆனந்தசங்கரி), ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) மற்றும் முஸ்லிம் அரசியற் கட்சிகள் முன்வைத்த, இதைவிட அதிகமான விடயச் செறிவுள்ள முன்மொழிவுகளைக் கூடப் படிக்காமல் அல்லது புறக்கணித்து விட்டு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 30 மாவட்ட சபைகளை இரண்டாவது இணைப்பு அரசாங்கமாக முன் மொழிகிறது. 1958இல் செய்யப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் வடக்கு மாகாணத்தை ஒரு தனி அலகாகவும், பாராளுமன்றத்தில் பொது உடன்பாட்டுடன் அது வேறு அலகுகளுடன் இணைக்கப்பட முடியும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின்னணியில் உள்ள கோட்பாடு என்னவென்றால், அது எண்ணிக்கையளவில் சிறிதாயுள்ள மக்களுக்கு ஆட்சியில் பங்கு பற்றுவது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தமது நிலையான வளங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் உதவ வேண்டும் என்பதாகும். ஒரு மாவட்ட சபையால் தமிழ் மக்களின் கலாசாரத்தைப் பாதுகாக்கவும், பேணவும் வளர்த்தெடுக்கவும் உதவ முடியுமா? கிராமியக் குழுக்கள் வெறும் பிராந்தியக் குழுக்கள் மட்டுமே. அவை அரசியல் கலாசார அலகுகள் அல்ல. பெரும்பான்மைத்துவம் ஒரு பல்லின சமூகத்தால் எண்ணிக்கையில் சிறிதாகவுள்ள ஒரு சமூகம், பெரும்பான்மை இனத்தின் நியாயமற்ற மேலாதிக்க நடப்புக்களை எதிர்த்து செயற்பட முடியுமான ஒரு சூழலிலேயே இருக்க முடியும். சட்டசபைகள் அவற்றை மேலும் மேலும் உடைப்பதுடன், அவர்களையும் அவர்களின் அடையாளங்களையும் மேலும் பலவீனப்படுத்தவே உதவ முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரேரணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஒருமுறை சொன்னதுபோல், தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள இனவாதத்தின் ஒரு குழந்தை. இந்த இனவாதத்தை இன்னொருமுறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த முன்மொழிவுகள் மூலம், அந்தக் குழந்தைக்குத் தொடர்ந்தும் பாலூட்டுதலை தொடர்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- ஜீவகன்தாஸ்

### பிரித்தானியாவின் பாராளுமன்ற விவாதம்:

# உலக சிவில்சமூகத்தின் மனச்சாட்சியின் எதிரொலி

இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதற்கு உதவ வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை பிரித்தானியா நீக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதியை இந்தப் பாராளுமன்றத்திற்கு அழைத்துப் பேச வைத்து அவர்களது கருத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

ஜுலை மாதமளவில் லண்டனில் மாநாடு ஒன்று நடாத்தப்பட வேண்டும். அம்மாநாட்டுக்கு அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படல் வேண்டும்.

இந்த விடயங்கள் தாம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட விடயங்கள். யார் பேசினார்கள்? பாராளுமன்ற உறுப்பினர்கள். பல கட்சிகளின் பிரதிநிதிகள். இவர்களில் அமைச்சர்கள்கூட அடக்கம்.

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் மே மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற விவாதம் இலங்கையில் எதிர்ப்பு அலைகளைத் தோற்றுவித்திருக்கிறது.

ஈராக் நாட்டில் படுகொலைகளை நடத்தி வருகின்ற அமெரிக்காவிற்கு துணை போகும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் அந்நாட்டின் பாராளுமன்றத்திற்கும் இலங்கையின் உள்நாட்டு அலுவல்கள் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது என்ற தோரணையில் காரசாரமான கண்டனங்கள் பொறுப்புமிக்கவர்கள், அறிஞர்கள், சர்வதேச விவகாரங்கள் பற்றித் தெளிவான விளக்கம் உள்ளவர்கள் கூட வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையின் சரி பிழை ஒருபுறமிருக்கட்டும். அதைப் பற்றி நான் இக்கட்டுரையில் விவாதிக்கப் போவதில்லை. ஈராக் மீது கொடுரம் இழைத்தவர்களுக்கு அந்தக் கொடுமைகளைத் தடுக்க முடியாதவர்களுக்கு எங்கள் நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை பற்றிப்பேச என்ன யோக்கியதை இருக்கிறது என்ற தோரணையில் பேசுவது வேடிக்கையானது. இந்தப் பேச்சின் உள்ளே மறைந்திருப்பனவும் வெளிப்பட்டுத் தெரிவனவுமான தப்பெண்ணங்கள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

எமது உள்நாட்டு விவகாரம் பற்றிப் பேசும் உரிமை பிரித்தானியாவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடையாது. இது பற்றித் தீர்மானம் போடும் அதிகாரம் அந்தப் பாராளுமன்றத்திற்கு இல்லை என்று கூறுபவர்கள் அந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுச் சுதந்திரத்தை மறுக்கிறார்கள் இல்லையா? இவர்கள் பிரித்தானிய அரசாங்கத்திடம் கேட்பது என்ன?

“எங்கள் நாட்டு விவகாரங்கள் பற்றிப் பேச வேண்டாம் என்று உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லுங்கள். அவர்கள் வாயை அடக்கிக் கொள்ளச் சொல்லுங்கள் என்றல்லவா கேட்கிறார்கள்.

இதே பிரிட்டிஷ் பாராளுமன்றம் தான் 2001ம் ஆண்டில் 20 அமைப்புகள் குறித்து தடைச் சட்டம் கொண்டு வந்தது. அப்போது தமது பாராளுமன்றம் எடுத்த தீர்மானம் நல்விளைவுகளைக் கொண்டு வந்ததா? அதன் பாதக விளைவுகள் என்ன? சாதக விளைவுகள் என்ன? அவை பற்றி அவர்கள் தாராளமாக விவவாதிக்கட்டும் எம் நாட்டைப் பற்றி எமது மக்களைப் பற்றி அவர்கள் காட்டும் கரிசனைக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

எமது உள்நாட்டுப் பிரச்சினை இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. இந்தச் சர்வதேச மயப்படுத்தலினால் முதலாவதாகப் பாதிக்கப்பட்ட நாடு பிரித்தானியா தான். ஆந்த நாட்டுக்கு எம் நாட்டு மக்கள் அகதிகளாக ஓடினார்கள் 1983ல் அங்கே எத்தனையோ பேர் தஞ்சம் தேடி ஓடினார்கள் பிரித்தானியாவிற்கு எம் நாட்டினால் ஏற்பட்ட தரையிடிகளில் இது முக்கியமானது.

பிரித்தானிய அரசாங்கம் வேறு அந்த நாட்டின் பாராளுமன்றம் வேறு. பிரித்தானிய அரசியல் கலாசாரம் நம் நாட்டை விட உயர்வான பண்புகளை விழுமியங்களைக் கொண்டது என்பதை ஒப்புக் கொள்வதில் நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. இந்த நாட்டின் அகதிகளுக்கு ஏன் அவர்கள் தஞ்சம் கொடுக்க வேண்டும்,? தஞ்சம் கொடுத்து அவர்களை அங்கே வைத்திருக்க வேண்டிய கட்டாயம் எதுவும் அவர்களுக்கு இல்லையே. இருந்தாலும் மனித உரிமைச் சட்டங்களை மதிக்கின்ற அரசியல் கலாசாரம் அங்கு வளர்ந்திருக்கின்றபடியால் தான் அவர்கள் அகதிகளை ஏற்று அவர்களுக்கு வாழ்வளித்தார்கள். இவ்விடயத்தில் பரித்தானிய இன மத பேதங்களைக் காட்டிதாகக் கூற முடியாது.

பிரித்தானியாவில் 2001ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட தடைச்சட்டம் இப்பொழுது அங்கு புகலிடம் தேடியுள்ள தமிழர்களுக்கு இடைஞ்சல்களைத் தருவதாயும் அவர்களுடைய சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதை எட்வேட்டவே என்ற உறுப்பினர் சுட்டிக் காட்டிப் பேசினார்.

இந்த நாட்டில் உள்ள தமது பிரதிநிதிகள் மூலமாக இலங்கை அதிகாரிகள் மக்கள் பேசுவதைத் தடுக்க முற்படுகின்றனர். இந்த நாட்டில நாம் இது போன்ற விவாதங்களை நடத்துவோம் அது எமது ஜனநாயக உரிமை என்று அந்த உறுப்பினர் பேசினார்.

பிரித்தானியாவில் வாழுகின்ற தமிழர்கள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் அவர்களைப் புலி முத்திரை குத்தி ஓரங்கட்டுவதற்கு முயற்சி நடப்பதாக அங்குள்ள உறுப்பினர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்களில் கணிசமானோர் பிரிட்டிஷ் பிரசா உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்த நடவடிக்கை என்று சிலர் விமர்சிக்கிறார்கள். சரி வாக்குகளைப் பெறும் சுயநல நோக்கில் தான் பேசுகிறார்கள் இதய சுத்தியோடு பேசவில்லை என்று வைத்துக் கொள்வோம் பிரித்தானியாவின் உள்நாட்டு அரசியலின் முக்கியமான விடயமாக எமது பிரச்சினை ஆகிவிட்டதென்பதன் அடையாளமாக இதை நாம் கருதுவதா?

இலங்கையின் இன நெருக்கடிக்கு யுத்தத்தினால் தீர்வு இல்லை பிணக்கில் சம்மந்தப்பட்ட இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என விவாதத்தில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக் கூறினர். ஐரோப்பிய யூனியன் விடுதலைப் புலிகள் மீதான தடையை அறிவித்தமை பேச்சுவார்த்தை ஊடான சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவையே கொண்டு வந்தது என்ற கருத்தையும் பல உறுப்பினர்கள் வெளிப்படுத்தினர். பிரித்தானியப் பாராளுமன்ற விவாதம் எமது நாட்டுப் பிரச்சினை மீதான தலையீடு என்று நோக்குவதை விடுத்து பிறநாடுகளின் நேரடித் தலையீடு இன்று எம்பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை எம் நாட்டு மக்கள் மனதில் தோற்றுவிக்க வாய்ப்பாக நாம் இதனைப் பயன்படுத்த வேண்டும். அதனை விடுத்து ஈராக்கில் உங்கள் நாடு என்ன செய்தது? என்ற கேள்வியை எழுப்புவது பொருத்தமற்ற கேள்வி. இந்தக் கேள்வியை வேண்டுமாயின் பிரித்தானிய அரசாங்கத்திடம் இவர்கள் கேட்கட்டும் பிரித்தானிய அரசாங்கம் வேறு அந்த நாட்டின் பாராளுமன்றம் வேறு பாராளுமன்ற உறுப்பினர்கள் தனித்தோ ஒரு குழுவாகவோ ஒரு கருத்தை தெரிவிக்கும் போது அவர்களை அரசாங்கத்தின் கருத்தைக் கூறுபவர்களாக ஏன் முத்திரை குத்த வேண்டும். அவர்கள் தம் அரசாங்கத்தின் செயற்பாட்டை விமர்சனத்திற்கு உள்ளாக்குபவர்களே அன்றி அரசாங்கத்திற்காக வாதாடுபவர்கள் அல்லவே.

இந்த இடத்தில் தான் நாம் தவறு இழைக்கின்றோம். அரசுகளையும் அரசு அல்லாத பிற வகிபாகம் பெறுவோரையும் (Non State Action) பிரித்தறியும் மனப்பக்குவம் புரிதல் எமக்கு இல்லை. இந்தப் புரிதல் இல்லாதவரைக்கும் அரசு அல்லாத பிறவகிபாகம் பெறுவோரின் பங்களிப்பை ஆக்க பூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் எமக்குக் கைவரப்போவதில்லை.

பிரித்தானிய அரசாங்கம் வேறு அந்த நாட்டின் அரசியல் கட்சிகள், பாராளுமன்றம் என்பன வேறு என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பிரித்தானிய அரசியல் கட்சிகள் அந்த நாட்டின் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டவை தாம். அதே போன்று பாராளுமன்றம் அரசாங்கத்தின் ஒரு அங்கம் தான். ஆனால் கட்சிகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் தனித்த இருப்பு ஒன்று இருக்கின்றது என்பதை நாம் மறக்கக் கூடாது. அவை Non Statte Action என்ற வகையில் அடங்குபவை. அண்மையில் ரணில் விக்கிரமசிங்க யூட்டான், சீனா, ஆகிய நாடுகளுக்குப் போனார். அந்த நாடுகளின் விருந்தினராகவும் அங்கு இருந்தார். ஆனால் அவர் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகவா சென்றார். அவருக்கு Non Sttate Actor என்ற வகிபாகம் தானே இந்த தருணத்தில் இருந்தது. பிரித்தானிய பாராளுமன்றத்தில் குரல் எழுப்புபவர்களை அரசு அல்லாத வகிபாகம் பெறுவோர் என்ற முறையில் நாம் பார்க்க வேண்டுமல்லவா?

2. இதே தொடர்பில் இன்னொரு விடயத்தையும் நாம் நோக்குதல் வேண்டும் ஐரோப்பிய ஒன்றியம் வேறு. அந்த ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் வேறு. ஐரோப்பிய ஒன்றியம் அரசுகளுக்கு இடையிலான உறவை வெளிப்படுத்தி நிற்கும் நிறுவனம்.

மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் எமக்கு உணர்த்துவது யாது? அரசுகள் மீது தொடுக்கும் குற்றச்சாட்டுகளை அரசு அல்லா வகிபாகிகள் மீதும் விவஸ்தை இன்றி தொடுப்பதும் முத்திரை குத்துவதும் வசைபாடுவதும் எமது அறிவீனத்தையும் கையாலாகாத் தனத்தையுமே எடுத்துக் காட்டுகின்றது.

பிரித்தானியப் பாராளுமன்ற விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை எதிர்கொள்வோர் ஈராக் விவகாரத்தை இந்த விடயதில் சம்மந்தப்படுத்துவது தர்க்க நியாயத்தின் பாற்பட்ட விடயமல்ல.

அடுத்ததாக இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் உரிமை பிறநாட்டு அரசாங்கங்களுக்கோ நபர்களுக்கோ அமைப்புகளுக்குகோ கிடையாது என்ற வாதத்தை எடுத்துப் பார்ப்போம். உலக வரலாற்றை பல நூற்றாண்டுகள் பின்னோக்கி நகர்த்தும் வாதங்களில் ஒன்று தான் ஒரு நாட்டிற்குள் நடக்கும் உள்விவகாரங்களில் அயல்நாட்டுக்கோ தூரத்தில் இருக்கும் இன்னொரு நாட்டுக்கோ உரிமை இல்லை என்றும் நாடுகளின் இறைமை என்பதும் பற்றிய கருத்து. இந்தக் கருத்தை ஒரு கோட்பாடாக உருவம் கொடுத்தது வரலாற்று நிகழ்வுதான் 1646ம் ஆண்டின் வெஸ்ட்பாலியா உடன்படிக்கை. ஐரோப்பாவில் முப்பதாண்டுப் போர் என்னும் நீண்ட கொடிய யுத்ததின் முடிவில் எழுதப்பட்ட உடன்படிக்கை இது. முப்பதாண்டுப் போர் கத்தோலிக்க மதப்பிரிவினர், சீர்திருத்த மதப்பிரிவினர் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட மதச்சண்டையாகும். அக்காலத்தில் இன்றைய ஜேர்மனி பல சிறுசிறு அரசுகளாகச் சிதறுண்டு இருந்தது. போரின் பிரதான களமாக நிகழ்ந்தது ஒரு அரசின் எல்லைக்குள் சிறுபான்மையினராக உள்ள ஒரு மதப்பிரிவினரை அந்த அரசு வதைக்கின்றது என்ற காரணத்தைக் காட்டி அயலில் உள்ள அரசு தன் மதப்பிரிவினரை காப்பதற்காக தன் படைகளை அனுப்பும். இவ்விதமாக அரசுகள் ஒவ்வொன்றும் தத்தம் மதப்பிரிவினரைக் காப்பாற்றுவதற்காக களத்தில் இறங்கிப் போரிட்டன. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வெஸ்ட்பாலியா உடன் படிக்கை உதவியது. ஐரோப்பாவில் சமாதானத்தை கொண்டுவர உதவிய அந்த உடன்படிக்கையின் சாராம்சம் இது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழும் பிரசையை அந்த நாடு வதை செய்யலாம் கொலை செய்யலாம் என்னவும் செய்யலாம். அதனை அயல்நாடோ பிற எந்த நாடோ தட்டிக் கேட்கக் கூடாது. அந்தப்பிரச்சினை குறிப்பிட்ட நாட்டின் உள்விவகாரம்.

வெஸ்ட்பாலிய உடன்படிக்கையின் சாராம்சமான செய்தி இது தான். ஆனால் உலகில் இன்று மனித உரிமைகள் இயக்கம் பலம் பொருந்திய சக்தியாகப் பரிணமித்துள்ளது. அரசுகளின் தட்டிக் கேட்க முடியாத இறைமை என்ற கருத்தை உலக சமூகம் ஏற்க வேண்டும் எங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட உங்களுக்கு உரிமை கிடையாது என்று உலக சமூகத்தைப் பார்த்து உலகின் பாசிச அரசுகள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. அதற்கு உலக சிவில் சமூகம் கூறும் பதில் என்ன? நாம் எங்களில் ஒவ்வொருவரையும் உலக சிவில் சமூகத்தின் உறுப்பினர் என்ற நிலையில் வைத்துச் சிந்திப்பதன் மூலமே இதற்கு சரியான விடையைக் காணலாம்.

# சுடுதல்

– தேவஅபிரா –

திருக்கோவில் தெப்பக்குளம் போலவும்
தெருக்கோவிற் பிள்ளையார் போலவும்
சூடு சுறணையற்றிருந்தது வாழ்க்கை.
பால பருவமது
பாலப்பம் பகோடா
தோசை வடை சுடுதல் நடந்த காலம்

பள்ளிக் காலப் பொல்லாக் காதலோ
தீயினால் சுட்டவடு ஆறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடுவென்றறைந்தது.
சுட்டமண்,
சுட்டபழம்,
சுடாத பழமுமறிந்தேன்.

தன்வினை தன்னைச்சுடும்
ஓட்டப்பம் வீட்டைச் சுடுமென்று
உள்ளுறைந்த போதும் பயம் காட்டும்
அறிவறிந்த காலத்திலும்.

ஆயினும் சூடடைந்து சுறணை கொண்டது
வாழ்வொருநாள்
சுடுவதற்கான சுதந்திரம்
சுதந்திரத்திற்கான சூடுகள்
எனப்பல பரிமாணங்களில்
சூடுகளை நானப்பொழுது கேட்கத் தொடங்கினேன்

சுடுதலின் சுகத்தை நானறியேன்
(அறிய விரும்பவும் இல்லை)
சுடப்படும் துயரம் நானறியாவரம் வேண்டும்
சுடுவதற்கும்
சுடப்படுவதற்கும் இடையில் அகப்பட்ட
ஆயிரம் கண்கள் அடியேன் தன்வினையைச் சாருமோ?
நானறியேன்!

சுடுபவர்க்குத் தெரியாது
எதைச் சுடுகிறோமென்று!
சுடப்பட்டவர்க்குத் தெரியாது
எது சுடுகிறதென்று!!
சுடச் சொன்னவர்க்குச் சுடப்படுபவைகள் பற்றிக்
கவலைகள் இல்லை!


சுடுவதற்கும்
சுடப்படின் ஆறுவதற்கும்
ஆனதத்துவங்கள் எங்கள் வேர்களுக்குள் உள்ள போது
சுட்டவர்களையும் சூடுபட்டவர்களையும்
சொல்லிப் பெயரிடின் இது
கவிதையல்ல!
சூடுகள் பற்றி எவருமே எதுவுமே
அறியாக் காலமென்றொன்று
இருந்திருக்குமோவென்று
மாய்ந்தேன்

சுடுதல் சூடிக் கொண்ட நாடு!

நல்ல மாட்டுக்கோர் சூடு போதுமென்பார்
நன் மிருகங்களை நலமடித்துச் சூடு வைத்து
மேய்த்தவகையில்,

நாமறிந்த மாடுகளைக் கவிதையும் சுடுவதில்லை!

மாடுகள் மனிதர்க்காகி வந்தமைக்கு
மாடுகள் என்னை மன்னிக்க!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வரலாற்றை பின்நகர்த்தியதன் விளைவு**

**நீ.கந்தசாமி**
**மனித உரிமை செயற்பாட்டாளர்**
**மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்.**



இலங்கையின் இனப்பிரச்சினை ஆயுத மோதலாக உருவெடுக்க ஆரம்பித்த காலப்பகுதியான 1979இன் பிற்பட்ட காலப்பகுதியில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அக்கலந்துரையாடல்களில் முக்கியமான பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், சமய சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவர்கள் எல்லோருமே சுயநிர்ணய உரிமை மூலம் இப்பிரச்சினையைத் தீககலாம் என்ற முடிவுக்கு வந்திருந்தனர். அதற்காகச் செயற்படவும் முன்வந்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் அரசியல் எதிர்த்திசையில் சென்று விட்டது. சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று சொன்னவர்களுடைய கட்சிகள் எல்லாம் வரலாற்றைப் பின்னோக்கி இழுத்து இன்று கிராம ராஜ்ஜியத்தில் வந்து நிற்கின்றன. விளைவு தமிழ் மக்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்கள் சிங்கள மக்கள் என ஏராளமான மக்கள் கொல்லப்பட்டதோடு லட்சக்கணக்கானோர் தமது வாழிடங்களை விட்டு இடம் பெயரவும் நேரிட்டது. அந்தந்த மக்களுடைய தனித்துவமான கலாசாரக் கூறுகளும் அழிக்கப்பட்டன. இன்று திரும்பிப் பார்க்கும் போது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்குமாயின் இவ்வளவு அழிவுகளும் ஏற்பட்டிருக்காது. இன்றும்கூட காலம் கடந்து விடவில்லை. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இப்பிரச்சினையைத் தீர்ப்பது பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது. "இந்தப் பிரச்சினை உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். இல்லையேல் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படுவார்கள் என்று சுயநிர்ணய உரிமை: இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற நூலில் அதன் ஆசிரியர் ஹெலனா வோல் குறிப்பிடுவது நிதர்சனமாவதைத் தடுக்க முடியாது போய்விடும்.

**பேருண்மையை ஏற்க வேண்டும்..**

**எம்.எம்.எம்.நூறுல்ஹக்**
**ஊடகவியலாளர் பன்னூலாசிரியர்**




நமது நாட்டின் பெரும்பான்மைச் சமூக சிங்கள மக்களின் பெரும்பகுதியினர்களும், சிங்கள மக்களிலிருந்து காலத்திற்குக்காலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசாங்கங்களும் சிங்கள பௌத்த மேலாட்சிச் சிந்தனையின் கெடுபிடிகளை அடுத்த சமூகத்தினர்களான தமிழ் முஸ்லிம் மக்கள் மீது திணிக்கும் கடும் போக்கை ஒரு சர்வசாதாரணச் செயற்பாடாக நீண்ட காலம் தொட்டுக் கடைப்பிடித்து வருகின்றனர்.

சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே இலங்கை தாயகப் பூமி எனும் எண்ணக்கருவும் அதற்கேற்ற உறுதியான தொழிற்பாடுகளும்தான் நமது நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையின் ஆணிவேராகும்.. இதனாற்தான் இந்நாட்டின் இன்னுமிரு பூர்வீகக்குடிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் முஸ்லிம் சமூகங்களிலிருந்து வெளிப்படும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை பயங்கரவாத நகர்வென்றும், இனத்துவேச போக்கென்றும் சித்திரித்து நியாயபூர்வமான போராட்டங்களை மழுங்கடித்து விடுகின்ற இயல்பை சிங்கள பௌத்த பெரும்பான்மைப் பேரினவாதம் கொண்டிருக்கின்றது. அதேநேரம் தமிழ்ப்பேரினவாதம் முஸ்லிம் சமூகத்தினை அடிமைப்படுத்துவதிலும் நசுக்குவதிலும் குறியாகக் கொண்டு செயற்படுகின்றது.

பொதுவாக பேரினவாத மனோநிலை வலிமைப்படும் பாங்குகளும் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு முற்றாகக் களைந்தெறியப்படல் வேண்டும். சிங்கள தமிழ் முஸ்லிம் எனும் மூன்று சமூகத்தினர்களுக்கும் இந்நாட்டின் சிலபகுதிகள் தாயக பூமியாக இருக்கின்றதெனும் பேருண்மையை ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு சமூகத்தினர்களுக்கான உரிமைகளும் தனித்துவங்களும் மதிக்கப்படும் "சுயநிர்ணய உரிமையை" அங்கீகரிக்கும் வலியுறுத்தும் வகையிலான அதிகாரப்பரவலாக்கல் அதிகாரப்பகிர்வு மூலமே நமது நாட்டில் நீண்டகாலமாக இருப்புக் கொண்டுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர சமாதானத் திர்வை ஏற்படுத்த முடியும்.

**சுயநிர்ணய உரிமை வெறுமனே அரசியல் கோட்பாடு அல்ல**

**கோ. றுஷாங்கன்**
**ஊடகச் செயற்பாட்டாளர்**



சுயநிர்ணய உரிமை என்பது வெறுமனே ஒரு அரசியல் கோட்பாடு அல்ல. அது பொதுவான ஒன்று. அடிப்படையில் ஒருவர் தன்னைப்பற்றிய தீர்மானங்களைத் தானே எடுப்பது தொடர்பானது. இது எல்லோருக்குமே பொதுவானது. குடும்பம் என்ற அடிப்படைச் சமுதாய அலகின் கூறுகளான கணவன், அல்லது மனைவிக்கும் இது அவசியம். பிள்ளைகளுக்கும்கூட இந்த உரிமை அடிப்படையானது(அறியாப்பருவம் தவிர-அங்கும் ஒரு எல்லை உண்டு).

இந்தக் குடும்பம் என்பது ஒரு சமூகமாக, சமுதாயமாக, இனமாக இனங் காணப்படும் போது. இந்தச் சுயநிர்ணய உரிமை என்பதன் பரிமாணம் அதிகரிக்கிறது. இங்கு இது ஒரு பிரச்சினைக்குரிய விடயம் ஆகும் போது அது தவிர்க்க முடியாதபடி அரசியல் ஆகிவிடுகிறது. ஐ.நா. சாசனத்தில் 1960 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண்டில் இனங்களின் அல்லது நாடுகளின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலும் குறிப்பாக, முன்னாள் காலனியாதிக்க நாடுகள், சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட நாடுகள், இனவாத அரசுகள் ஆகிய அளவீடுகளின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஐ.நா. சாசனத்தின் இந்த மூன்று அடிப்படைகளுமே அவர்களுக்குப் பொருந்துகிறது. பிரித்தானியக் காலனியாதிக்கத்தால் இலங்கை பலவந்தமாக ஒற்றைத் தேசமாக்கப்பட்டது. காலனியாதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்னர் ஆட்சிபீடமேறிய பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் பாரம்பரியமாகச் செறிவாக வாழும் பிரதேசங்களை ஆக்கிரமித்தனர். இந்த ஆக்கிரமிப்பு இனவாத அரசியலாகவே முன்னெடுக்கப்பட்டது. ஆக. இந்த மூன்று அடிப்படையிலும்

ஐ.நா. சாசனத்தின்படி சுயநிர்ணய உரிமை கோரும் அந்தஸ்து ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

தமது போராட்டத்தை இந்த அடிப்படையில் சர்வதேச அளவில் தமிழர்கள் முன்னெடுப்பதுடன், அதனைச் சர்வதேச நாடுகளும், ஐ.நா.வும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதன்மூலம் ஒரு தீர்வை நோக்கி நகர முடியும்.

ஆனால், இந்த சுயநிர்ணயத்தின் எல்லை ஒன்றுபட்ட ஐக்கிய தேசத்துக்குள் இருப்பதற்கு இலங்கை அரசின் செயற்பாடுகள் அனுமதிப்பதாயில்லை. சுயநிர்ண உரிமையின் எல்லை விரிவடைந்து, பிரிவினையை நோக்கி நகரத் தலைப்பட்டமைக்கு இதுவே பிரதான காரணமாகும். இந்த நிலை மென்மேலும் நீடிக்கும்போது, பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். இதுவே இன்றைய அரசியல் யதார்த்தம்.

**சரியான அர்த்தப்படுத்தல் தேவை**

**மா.மங்களேஸ்வரி சங்கர்**
**சட்டத்தரணி**

"அனைத்து மக்களும் தமது அரசியல் அந்தஸ்து, தமக்கான பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளனர்" 'அரசியல் மற்றும், குடியியல் உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) 'பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைக்கான சர்வதேச உடன்படிக்கை' (ICESCR)



சுயநிர்ணய உரிமையென்பது மனித உரிமைகள் சட்டக் கேட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. மக்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக தீர்மானிப்பதற்கும் தமது பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கான உரிமை கொண்டவர்கள் என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பட்டயம் தெளிவாகக் கூறுகின்றது.

சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கு

- சுதந்திரக் கோரிக்கைக்கான வரலாறு
- எல்லையிடப்பட்ட நிலப்பரப்பை சுயமாக ஆட்சி செய்தல்
- குறிப்பான அல்லது தனியான கலாசாரம் அல்லது மொழி
- சுய ஆட்சியை மீளப்பெறுவதற்கான விருப்பும் தகுதியும் போன்ற தேவைப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்

சர்வதேச நீதிமன்றம், சுயநிர்ணய உரிமையானது அரசாங்கங்கள் தனித்து கொண்டிருக்கும் உரிமையென்பதிலும் பார்க்க மக்கள் கொண்டிருக்கும் உரிமையென்பதையே வலியுறுத்துகின்றது. Western Sahara Case 1975

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான இலங்கைத் தமிழர்களின் வரலாற்றை எடுத்து நோக்கினால் காலனித்துவ ஆட்சிக்கு முன்பதாக வடகிழக்கில் தமிழ் மன்னர்களது ஆட்சி பற்றிய வரலாறுண்டு. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதியை கைப்பற்றியபோது (முழுமையாக அல்ல) 1621 மன்னன் சங்கிலியனைக் கொலை செய்தமை இதற்கு சான்றாகும். இதன் பின்னர் ஒல்லாந்தர் இத்தீவைப் பொறுப்பேற்று ஒரு நிலையற்ற ஆட்சி நடத்தினர். இவர்களிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியராலேயே ஒற்றையாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இருவேறுபட்ட சமூகங்களிடையே ஒற்றையாட்சி முறை பற்றி கரீன் பாக்கர் 'சுயநிர்ணய உரிமையை விளங்கிக் கொள்ளல்' எனும் கட்டுரையில் 'ஒற்றையாட்சி முறை எனும் கட்டாயத் திருமணம்' எனக் கூறுகிறார்.

காலனித்துவத்திற்கு பின்னரான காலப்பகுதியில் ஒற்றையாட்சி நாடாக இருப்பதற்கான கருத்து முரண்பாடுகள் தோன்றியதால் 1947ம் ஆண்டு அரசியலமைப்பில் தமிழ், சிங்கள மொழி பற்றிய விடயம் உள்ளடக்கப்படவில்லை. எழுதிய மை காய்வதற்கிடையில் சிங்கள தலைமைத்துவமானது தமிழர்களது உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. 1950ஆம் ஆண்டுகளிலிருந்து தமிழ் சிங்களத் தலைமைகள் முரண்படுவதும் இணக்கப்பாட்டுக்கு வருவதுமாக கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் சாத்வீக வழியில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

1982களிலிருந்து தமிழர்களது உரிமை கோரிக்கையானது ஆயுதப் போராட்டமாக மாறியது. இற்றை வரைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் ஒற்றையாட்சி முறை பொருத்தமற்றது என உணரப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. இதற்கு சிறந்த உதாரணமாக 1987ம் ஆண்டில் அரசியலமைப்பு 13ம் இலக்க திருத்தச் சட்டம் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையைக் குறிப்பிடலாம். எனினும் இம்முறை கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுயநிர்ணய உரிமையும் நான்காம் உலகக் கோட்பாடும்.**

தெ.மதுசூதனன்
ஆசிரியர்
அகவிழி சஞ்சிகை

இன்று வரை இலங்கையில் நிலவுவது தேசிய இனப்பிரச்சினை என்பதை ஒத்துக் கொள்ளாமல் ஒரு பயங்கரவாதப் பிரச்சினை போன்று அணுகி கருத்துப் பரப்புகை செய்து கொண்டிருக்கும் சூழலில் சுயநிர்ணய உரிமை குறித்த அக்கறை அதன் பொருள் கோடல் எந்தளவிற்குப் பொருத்தமாக இருக்கும் என்பது சிக்கலானது. பொதுவாக நாம் சுயநிர்ணய உரிமையின் தாற்பரியம் பற்றிக் கோட்பாட்டு ரீதியில் பல்வேறு நூல்களை எழுத முடியும். கருத்தரங்குகள் வைக்க முடியும். ஆனால் இலங்கையின் ஆளும் அதிகார ஆதிக்க சக்திகளின் அரசியல் சொல்லாடல்களில் தேசிய இனப்பிரச்சினை என்பதை ஏற்காத அதன் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சொல்லாடல்கள் தான் தினமும் உற்பத்தியாகின்றன. இந்த நிலையில் சுயநிர்ணய உரிமை பற்றிய சாதகமான பரிசீலனை வருமா? சந்தேகம் தான் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் மனித உரிமைகள் பற்றிய அகல்விரி சிந்தனையும் பன்முகக் கலாசாரமும் முழுமையாக அரசியல் சொல்லாடல்களில் தாக்கம் செலுத்தவில்லை. அப்படியானால் சுயநிர்ணய உரிமை பற்றிய பரிசீலனை அரசியல் கலாசாரமாக பரிணமிக்க முடியுமா? முடியாது. இதற்கான சனநாயகப் பாரம்பரியமும் இங்கு இல்லை. அதை விட சனநாயகம் பற்றிய பார்வை நமக்குத் தெளிவாக உறுதிப்படவில்லை.

சனநாயகம் என்பது ஒரு ஆட்சி முறைமட்டுமல்ல. அது ஒரு கூட்டுவாழ்க்கை முறை. இதைத் தான் டொக்டர் அம்பேத்கார் ஒவ்வொரு மனிதரும் மற்ற மனிதர்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்து நடப்பதே சாராம்சம் எனக் குறிப்பிட்டார். ஆகவே நமக்கு சனநாயகம் குறித்து ஆழமான புரிதலும் விளக்கமும் வேண்டும். அப்பொழுது தான் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் யாவற்றையும் அங்கீகரிக்கும் வாழ்வியல் நெறிகள் சார்ந்து ஒழுக முடியும். இது தான் சமூக சனநாயகம்.

சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. இவை தனித்தனி அங்கங்கள் அல்ல. இவை மூன்றும் ஒன்றிணைந்து விளங்க வேண்டும். அதுவே சனநாயகத்தன்மை ஆகும். இந்தப் பின்புலம் தான் சுயநிர்ணய உரிமையின் பொருள் கோடலுக்கு தெளிவான தர்க்கங்களை வழங்கும்.

2ம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து பிற்காலத்தில் தான் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சும் நடைமுறையும் வியாபித்து வந்துள்ளன. அதனுடன் இணைந்து இறைமை பற்றிய கோட்பாட்டாக்கமும் முனைப்படைந்துள்ளன. ஆனால் இதுகாறுமான பன்னாட்டு வரலாற்று அனுபவங்கள் நடைமுறைகள் யாவற்றிலிருந்தும் இலங்கை இன்னும் பாடம் கற்கத் தயாராக இல்லை.

இந்த நிலையில் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமை பற்றிய பொருள் கோடல் கலந்துரையாடல் யாவும் சாத்தியமாக முடியுமா அல்லது சாதகமாகத் தான் உதவுமா? சிக்கல் மேல் சிக்கலாகத் தான் உள்ளது.

மாறிவரும் பன்னாட்டு நடப்பு நிலைமைகளில் இருந்து சனநாயகம் பற்றிய புதிய விளக்கத்துக்கும் பொருள் கோடலுக்கும் தயாராக வேண்டும். சனநாயகம் என்பது ஒரு ஆட்சி முறை மட்டுமல்ல அது ஒரு கூட்டுவாழ்க்கை முறை என்ற தன்மை நாம் அனைத்தையும் பரிசீலிக்க உதவும். ஆகவே நாம் எமது சிந்தனை சொல் செயல் யாவற்றையும் மாற்ற வேண்டும் அந்த ரீதியில் சுயநிர்ணய உரிமையும் புதிய விளக்கத்துக்கு உள்ளாகும் புதிய புதிய அர்த்தப்பாடுகளின் இணைவுக்கும் பொருந்தக் கூடியதாக மாற்றமுறும். ஆகவே நாம் வேறுவிதமாகச் சிந்திப்பது தான் முக்கியம். மேலும் இந்த இடத்தில் நாம் வேறொரு சிந்தனை முறைமையையும் பதிவு செய்ய வேண்டும்.

2ம் உலக யுத்த முடிவில் ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் புதிய அரசுகள் உதயமாயின. வடக்கு ஐரோப்பாவிலும் சீனாவிலும் புதிய அரசுகள் தோன்றின. இப்பிற்புலத்தில் மூன்றாவது உலகம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. முலாளித்துவ பொருளாதாரம் மூலம் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்க கனடா அவுஸ்திரேலியா நியூசிலாந்து ஆகிய நாடுகளையும் முதலாம் உலகம் என்றும்.

சோவியத் ரஷ்யா தலைமையிலான கம்யூனிஸ்ட் நாடுகளை இரண்டாம் உலகம் என்றும். இந்த இரண்டு உலகத்தினின்றும் வேறுபட்ட சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளைக் கொண்டிருந்த நாடுகள் யாவற்றையும் மூன்றாம் உலகம் என்றும் அழைக்கப்பட்டது. 1990களின் தொடக்கத்தில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியுடன் இரண்டாவது உலகம் என்ற வரையளவு பொருளற்றதாயிற்று அதே நேரம் 1980களின் பின்னர் உலகளாவிய ரீதியில் தேசிய இனங்களின் போராட்டங்கள் வலுப்பெறத் தொடங்கின.

1945 இல் உலகளாவிய ரீதியல் 72 அரசுகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 1993இல் 191 ஆக உயர்ந்தது. இந்த 191 அரசுகளின் எல்லைகளுள் 5000 தேசிய இனங்கள் உள்ளன. உலகில் 5000 வரையிலான தேசிய இனங்களின் நோக்கில் அரசியல் பொருளியல் வரலாறு பண்பாடு யாவற்றையும் நோக்கும் முறை நான்காவது உலகம் எனும் கோட்பாட்டால் விளக்கப்படுகிறது. அதாவது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பார்வையில் தேசப் படத்தை விளக்கும் சிந்தனை முறை தோற்றம் பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில் சுயநிர்ணய உரிமை எனும் கோட்பாடு மேலும் புது விளக்கம் பெறும் நான்காம் உலகம் எனும் கோட்பாடாக நம் புதிய வரையறைகளையும் புதிய விளங்கங்களையும் வேண்டி நிற்கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்காக முடியாது.

**2ம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து பிற்காலத்தில் தான் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சும் நடைமுறையும் வியாபித்து வந்துள்ளன. அதனுடன் இணைந்து இறைமை பற்றிய கோட்பாட்டாக்கமும் முனைப்படைந்துள்ளன. ஆனால் இதுகாறுமான பன்னாட்டு வரலாற்று அனுபவங்கள் நடைமுறைகள் யாவற்றிலிருந்தும் இலங்கை இன்னும் பாடம் கற்கத் தயாராக இல்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காமினி வியங்கொட

# பிரித்தானியப் பாராளுமன்றத்தின் தலையீடு

(கலந்துரையாடலின் தொகுப்பு)

ஒ இலங்கை விடயங்கள் குறித்து பிற நாடுகளின் பாராளுமன்றங்களில் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன. உதாரணமாகக் கூறுவதாயின், ஐரோப்பிய சங்கம் இலங்கைக்கு நிதி உதவி வழங்க தீர்மானித்த சந்தர்ப்பத்தில் அவர்களின் பாராளுமன்றத்தில் அது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம் பெற்றிருந்தது. எனினும் அவ்விடயத்தை எமது நாட்டு இறைமையில் தலையீடு செய்யும் விடயம் என்று எவரும் கருதவில்லை.

அதேபோன்று ஒரு காலகட்டத்தில் தென்னாபிரிக்கா தொடர்பில் இலங்கைப் பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. இஸ்ரேல் மற்றும் தென்னாப்பிரிக்காவின் இனவெறிக் கொள்கைக்கு எதிராக இலங்கைப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட போது அவ்விடயம் அந்நாடுகளின் இறைமையைப் பாதிக்கும் செயல் என்று நாம் அப்பொழுது கருதவில்லை. எம்மைப் போன்று அனைத்து ஜனநாயக நாடுகளும் அந்த நாடுகள் தொடர்பாக ஒரே கொள்கையைக் கடைப்பிடித்தமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இவை சர்வதேச ஜனநாயகத்தின் ஒரு அங்கமேயன்றி பிற நாடுகளின் சுயாதீனத்தன்மை மீது அழுத்தம் கொடுக்கும் செயல் அல்ல. இலங்கை, இஸ்ரேலுடன் தூதரக தொடர்புகளை மேற்கொள்ளாததைப் போன்று தென்னாபிரிக்காவில் கிரிக்கெட் விளையாடச் சென்றவர்களுக்கு 25 வருட காலம் கிரிக்கெட் விளையாட முடியாதவாறு தடையையும் விதித்திருந்தது.

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் இலங்கை விவகாரம் பற்றி பேசப்பட்டமையை ஒரு சிலர் கபடமான முறையில் நோக்குகின்றனர். மேற்கத்தேய நாடுகள் விடுதலைப் புலிகளை விமரிசித்து அறிக்கைகளை வெளியிடுகின்றனர். நாம் அவற்றை ஏற்றுக் கொண்டு அதிகப் பட்ச பிரசாரங்களை மேற்கொள்கின்றோம். ஆனால் அதேமுறையில் மேற்கத்தேய நாடொன்று இலங்கையைப் பற்றி விமர்சனம் செய்த சந்தர்ப்பத்தில் அதனை இறைமையில் தலையிடும் செயல் என்று இனம் காண்கிறோம். இது கபடத்தனமே அன்றி வேறில்லை. சாதாரண விமர்சனங்களின் போது கூட மேற்கத்தேய சக்திகள் இன்னும் இலங்கையை அதன் காலனித்துவ நாடாகவே நோக்கி செயற்படுகின்றன என்று கூறுகின்றோம். இது என்னைப் பொறுத்தவரை தந்திரோபாயமான சுயநலக் கொள்கையாகும்.

2002ம் ஆண்டு நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு கூறுதல், அரசாங்கம் விடுதலைப் புலிகள் மற்றும் நோர்வேயை பிரித்தானியாவுக்கு வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்துதல் ஆகிய விடயங்கள் இரண்டும் பிரித்தானியப் பாராளுமன்றத்தின் ஒரு உறுப்பினரின் பிரேரணைகள் மட்டுமேயன்றி முழுப் பாராளுமன்றத்தினாலும் நிறைவேற்றப்படவில்லை என்பதனால் இலங்கை இந்த விவகாரம் குறித்து கலவரப்படுதல் நீதியானது அல்ல. அவர்கள் அவ்வாறான பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவார்கள் என்று நான் கருதவில்லை. ஏனெனில் அரசுகளுக்கிடையிலான தொடர்புகளுக்கு அது முரண்பாடான விடயமாகும். பாராளுமன்ற உறுப்பினர்களினால் இவ்வாறான பிரேரணைகள் பலவற்றை முன்வைக்க முடியும். எனினும் அவற்றை நிறைவேற்றுவது மற்றும் அமுல்படுத்துவது அவ்வளவு எளிதாக மேற்கொள்ளக் கூடிய விடயங்கள் அல்ல.



இன்றைய நவீன உலகில் ஜனநாயக நாடுகள் பிற நாடுகளின் கண்காணிப்புக்குட்படாமல் நாட்டை ஆளும் உரிமையைக் கொண்டிருக்கவில்லை. சகல உலக நாடுகளும் மேற்கத்தேய கண்காணிப்பாளர்களின் கண்காணிப்புக்குள்ளாகின்றமை, தற்போது வழமையாக உள்ள உலக நியதியாகும். அதுவே சர்வதேச ஜனநாயகமாகும்.

நாம் தேசிய ஜனநாயகம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரையறைக்குள் இருந்துக் கொண்டே பேசுகின்றோம். அப்பொழுது இலங்கையின் ஜனநாயகம் எமது நாட்டிற்குள் வரையறுக்கப்பட்டதாகவுள்ளது. பிரித்தானிய ஜனநாயகம் அந்நாட்டின் எல்லைக்குள் வரையறுக்கப்பட்டதாகவுள்ளது. எனினும் ஜனநாயகம் தேசியளவில் அல்லாது சர்வதேச அளவிலானது என்பதனால் எப்பொழுதும் ஒரு நாட்டின் ஜனநாயகம் முழு சர்வதேச ஜனநாயகத்திற்கும் பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது.

நாடுகளினால் குறிப்பிடப்படும் இறைமை நிலையின் ஒரு சில பகுதிகளை அந்த சர்வதேச ஜனநாயகத்திற்கு தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நாம் ஐ.நாவின் பல தரப்பட்ட சமவாயங்களுடனும் உடன்படிக்கைகளுடனும் நாட்டின் இறைமையில் ஒரு சில பகுதிகளை விட்டுக் கொடுத்து விட்டே இணைகின்றோம். அத்துடன் ஒரு தனி நாடாக சுயேச்சையான முடிவுகளை எடுக்க மாட்டோம் என்று உறுதி பூண்டு விடுகின்றோம். சமவாயங்களுக்காக இறைமையை விட்டுக் கொடுக்க முடியுமாயின் தவறொன்றை சுட்டிக் காட்டும் போது ஏற்றுக் கொள்ள முடியாமலிருப்பது ஏன்? தனது படையினரை அனுப்புவதற்காக பிரித்தானியா அவ்வாறான விமரிசனத்தை முன்வைக்கவில்லை. மாறாக ஜனநாயகத்தின் பண்புகளைப் பின்பற்றியே அவ்வாறான விமரிசனத்தை அந்நாடு முன்வைத்திருந்தது.

இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் இலங்கையைச் சேர்ந்த எதிர்ப்பாளர்கள் மேலும் ஒரு குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றிய போது மிக மோசமான மனித உரிமைச் செயல்களில் ஈடுபட்டு சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். தற்போது அவர்கள் ஜனநாயகம் பற்றி எமக்கு சொல்லித் தருகின்றார்கள் என்று அவர்கள் குற்றம் கூறுகின்றனர். இது தவறான விளக்கமாகும். உதாரணமாக 15 முதல் 20 வருடங்களுக்கு முதல் ஜே.வி.பியினரும் இவ்வாறான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இன்று அவர்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் பேசும் போது பழைய சம்பவங்களை எடுத்துரைத்து அவர்களின் தற்போதைய செயற்பாடுகளை முடக்குவது எவ்வளவு தூரம் நியாயமானது? தர்க்க ரீதியானது?

1500-1900 காலப்பகுதிகளில் முழு உலக நாடுகளுமே ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டு மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டமையை நாம் அறிகின்றோம். ஆனால் இன்று அவ்வாறு நடைப்பெறுவதில்லை. மனித உரிமைகளை மீறக் கூடாது. என்ற நிலைப்பாட்டினை உலக நாடுகள் எடுத்துள்ளன. உலகில் மனித நாகரீகங்கள் அவ்வாறே கட்டியெழுப்பப்படுகின்றன. இந்த நிலையில் பிற நாடுகள் எம்மைப் பற்றி வெளியிடும் நீதியான விமர்சனங்கள் குறித்து நடுநிலையான சிந்தனையுடன் அத்தவறுகளை திருத்தும் வகையிலான நாகரீக நடைமுறைகளைப் பின்பற்ற நாம் முயற்சிப்பதே உகந்தது.

**கவிதை**

# வழி தவறிய இராணுவத்தினன்

பயங்கர மூர்க்க மரம்
நின்று பார்த்துக் கொண்டிருக்கும்,
சர்ப்பங்களின் சரசரப்புக்கிடையில்
ஆற்றில் நடந்து செல்லும்,
அடர்ந்த காட்டின் குகைக்குள்
அகோரமாக சிரிக்கும் இருட்டு.

துப்பாக்கியின் நாற்றம் திணறும்
கைகள் நடுங்கும்.
கனவுகளைக் கலைக்கும்
வெடிச் சத்தம்.
காற்று கிள்ளிச் செல்லும்
குளிர் கடித்துக் குதறும்.

எமனாகும் மிருகங்கள்
அண்மையில் உறுமிச் செல்லும்
சோர்ந்து போன கண்களில்
தோன்றி மறையும் மகனின் நினைவுகள்.

ஆஹா! ஒரு நண்பன் இருக்கின்றான்.
என்னைப் போன்று சிறியவன்.
அழுதுக் கொண்டேயிருக்கின்றான்
என்னைப் பற்றி நினைந்து

வானில் மறைந்து
கண்ணீரைச் சொரியும்
ஆம்! நீயே என் நண்பன்
கூட்டத்துடன் செல்லாமல்
எனக்காக தரித்து நிற்கும்
விண்மீன்
நீயே நண்பன்!

**லக்ஷாந்த அத்துகோரள**
**அமாவக்க சந்தக் சிம்பிமி நூலிலிருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுயாட்சி என்பது தமிழர்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்றுதலா?**

'எந்தவொரு மக்கள் சமூகத்தின் வாழ் நிலையானது, மனித வர்க்கத்தின் உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றுக்கிடையில் இருக்க வேண்டிய நடுநிலைத் தன்மை என்ற விடயத்திற்குள் உள்ளடங்கும். எனினும் இந்த நடுநிலைத் தன்மைக்கு சார்பாக இருந்தால் மட்டுமே அதனை அனைவரும் அங்கீகரிப்பார்கள். அதனுடன் சிறுபான்மையினரின் சுதந்திரத்திற்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்தல் அத்தியவசியமாகும். இந்த இரண்டு விடயங்கள் மீதும் கவனம் செலுத்தத் தவறுகின்றமை பல சந்தர்ப்பங்களில் எதிர்ப்பு இயக்கங்களுக்கு தூண்டுகோலாகி விடக் கூடும்.'

பெட்றிகோ மாரியோ தனது குறிப்புகளின் இடைநடுவே இவ்வாறு தெரிவித்திருந்தார். தேசியப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு சுயாட்சி என்று வடக்கிலிருந்து எழும் குரல் இனிமையாக வேண்டுமாயின் அது தென்னிலங்கை இதயங்களுக்குள் ஒலிக்க வேண்டும். சுருங்கக் கூறின் பெட்றிகோ மாரியோ கூறுவதனைப் போல் அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவ்விடயம் சாத்தியமாகும்.

**சுயாட்சி தர்க்க நிலை அற்றது**
**எழுத்தாளர் அனோமா ராஜகருணா**



சுயாட்சியைப் பெற்றுக் கொடுப்பது என்ற விடயம் தேசியப் பிரச்சினைக்கான தீர்வாக ஒரு சாராரினால் முன்வைக்கப்படும் யோசனை மட்டுமே. அதற்கு எதிராக அதிகாரப் பரவலாக்கலுக்குக் கூட இணங்காத எதிர்த் தரப்பினரும் உண்டு. இந்த இரு தரப்பினர் மத்தியில் நாம் இருக்கின்றோம். மாகாண சபை முறைகள் ஸ்தாபிக்கப்பட்டு இருபது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அவற்றை ஸ்தாபித்ததன் அடிப்படையைக் கூட நிறைவேற்ற முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம்.

அந்த நோக்கத்தைக் கூட நிறைவேற்ற முடியாத நாம் எப்படி சுயாட்சியைப் பற்றிப் பேச முடியும்? அந்தத் தீர்வு யோசனையை நோக்கி எவ்வளவு தூரம் பயணிக்க முடியும்? இவ்வாறான யோசனை இலங்கைக்கு எவ்வளவு தூரம் பொருந்தும்? அத்துடன் நாம் இவ்விடயத்தை சனத்தொகை, பூகோள அமைப்பு, வளங்கள் ஆகிய விடயங்களின் அடிப்படையிலேயே நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் நாம் எப்படி சுயாட்சி என்ற விடயத்தைப் பற்றிப் பரிசீலிக்க முடியும் என்று சிக்கல் எழுகின்றது.

மோதல் என்ற விடயம் ஆயுதப் போராட்டமாக மாறி நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினை வரை பயணித்துள்ளது. அதற்கு சுயாட்சியை வழங்குவது தான் ஒரே தீர்வு என்று எம்மால் விவாதிக்க முடியாது. சுயாட்சி பற்றிக் கதைக்கும் பொழுது எல்லை மற்றும் பிரதேசம் போன்ற விடயங்களையும் கருத்திற் கொள்ள நேரிடும். மறுபுறம் நோக்கினால் எல்லையிட்டு வகுக்கப்படும் பிரதேசத்தில் வசிக்கப் போகும் மக்கள் யார்? அந்த மக்களை சனத் தொகைக் கணக்கெடுப்பு மூலமாகவா தெரிவு செய்யப் போகின்றீர்கள்? அவ்வாறாயின் சுயாட்சியைக் கோருவது வட பகுதி மக்களா அல்லது ஆயுதக் குழுவா? இந்த சுயாட்சியை நாம் ஏற்றுக் கொள்வதானால் நாம் விடுதலைப் புலிகளையும் ஏற்றுக் கொள்ள நேரிடும். இதன்படி ஆட்சியாளர், மக்கள், பிரதேசம் ஆகிய மூன்றும் பிரச்சினைக்குரியதாகவுள்ளது. சுயாட்சி வழங்குவது தொடர்பில் எனக்கு உடன்பாடு இல்லை. வடக்கில் இவ்விடயம் குறித்து இணக்கப்பாடு ஏற்படுவதை விட தெற்கில் இணக்கப்பாடு ஏற்படுவதே முக்கியமாகும்.

**நாட்டைப் பிளவுப்படுத்தும் செயல்**
**கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானக் கற்கைப் பிரிவின் பேராசிரியர் டபிள்யூ.எஸ்.கருணாதாச**



வடக்கிற்கு சுயாட்சியை வழங்குவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்தச் சிறிய நாட்டை பிளவுபடுத்தும் செயலாகவே நான் இவ்விடயத்தைக் கருதுகிறேன். சுயாட்சி வழங்குவதைத் தவிர வேறு தீர்வில்லை என்று எவராவது கூறினால் அதனை ஏற்க முடியாது. எமது அண்டைய நாடான இந்தியாவிலிருந்து அதற்கான பல உதாரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தியாவில் குர்க்காலாந்து மற்றும் கொடாலந்து ஆகிய பிராந்தியங்கள் சுயாட்சியை உறுதியாகக் கோரியிருந்தன. ஆனால் இந்திய அரசாங்கம் சுயாட்சியை வழங்காமல் அவர்களை அடக்குமுறைக்குட்படுத்தியது. பிரதேச பிரிவினைவாதத்தின் பெறுபேறான குர்க்காலாந்து மற்றும் கொடாலந்து ஆகியவற்றை இந்திய சமஷ்டிக் கட்டமைப்புக்குள் சுயாட்சியை வழங்காமல் அடக்குமுறைக்குட்படுத்த முடியுமானால், ஏன் ஒற்றையாட்சியின் கீழ் நாம் சுயாட்சியை வழங்க வேண்டும்? எமது எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதனையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொழும்பில் 60 சதவீதமான தமிழர்கள் வசிக்கின்றார்கள் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டியது முக்கிய விடயமாகவுள்ளது. வடக்கிற்கு சுயாட்சி வழங்கினால் பிற பிரதேசங்களிலும் அதன் தாக்கம் இருக்கும் தானே. அதிலிருந்து விடுபட எம்மால் முடியாது. அப்பொழுது கொழும்பிலிருக்கும் தமிழ் மக்களின் நிலை என்ன? இது நகைப்புக்குரிய விடயமாகும். நாம் எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். வெளிநாட்டுச் சக்திகளை இணைத்துக் கொள்வது அவசியமற்றதைப் போன்று சுயாட்சியும் அவசியமற்றது. அதுவே சரியான முறை என்று எவராவது கூறுவார்களாயின் வடக்கு கேந்திரமாக அமையும் அதேவேளை கொழும்பு கேந்திரமற்ற பிரதேசமாக அமையுமா என்று நான் அவர்களிடம் கேட்க நேரிடும். ஒற்றையாட்சியின் கீழ் சுயாட்சி என்பது கேலிக்குரியது.


**தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவோம்**
**வண. மாதம்பாகே அஸ்ஸஜி தேரர்**

சுயாட்சி என்ற கோரிக்கையை யார் முன்வைக்கின்றார்கள் என்பதையே நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும். பெரும்பான்மையின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆட்சியாளர்கள் ஜனநாயக ரீதியில் அவர்களை நோக்காததன் காரணமாகவே விடுதலைப் புலிகளோ தமிழ் மக்களோ இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கும் அளவுக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்து சந்தோசமாக வாழக் கூடிய வழியை ஏற்படுத்திக் கொடுங்கள் என்றே நாம் அடிக்கடி கோரிக்கை விடுக்கின்றோம். ஆனால் நாம் எப்படி அவ்வாறு செய்வது? அதிகாரப் பரவலாக்கலை அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இப்பொழுது சுயாட்சியின் தேவையை திடமாக வலியுறுத்துகின்றனர். இதற்கான காரணம் எம் மீது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையீனமே. இந்த நிலையில் இவ்வாறான கோரிக்கை பாதகமான தன்மையைத் தோற்றுவிக்கக் கூடும். நாம் மட்டும் இணைந்து வரைவுப் பிரதிகளை நடைமுறைப்படுத்துவது வெற்றியைத் தராது. அவர்களுக்கு சுயாட்சி உரிமையை வழங்குவது நன்று என்றே நான் கருதுகின்றேன். சுயநிர்ணய உரிமையை நாம் வைத்துக் கொண்டு அந்நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இதனால் நாடு பிளவுபடும் என்று முன்வைக்கப்படும் கோஷங்களை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. பிரச்சினைக்கு தீர்வு அவசியம் எனில், அதற்காக நாம் சகல முயற்சிகளையும் எடுக்கின்றோம் எனில் நாம் அவர்களின் குரல்களுக்கு செவிசாய்ப்பதில் தவறில்லை. பெரும்பான்மையினம் என்ற ரீதியில் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல தமிழ் மக்களும் எம்மை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். நாம் இப்பொழுதாவது அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வேண்டும்.

**சுயாட்சி வழங்கப்பட வேண்டும்**
**ஜனாதிபதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா**



சுயாட்சி உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். அவர்களது கலாசாரம், மதம், நிர்வாக முறைகள் ஆகியவற்றை அவர்களுக்கே உரித்தான முறையில் ஒழுங்குப்படுத்திக் கொள்ள நாம் அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க பெரும்பான்மையினம் என்ற அடிப்படையில் எமக்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லை. பெரும்பான்மையினத்தின் தலையீடுகளற்ற விதத்தில் சுயாட்சியை முன்னெடுக்கும் சுதந்திரம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எனினும் சுய நிர்ணய உரிமை மற்றும் அதிகாரம் என்பன அரசாங்கத்திடம் இருக்க வேண்டும். மாகாண சபை முறையின் கீழ் செயற்பட்டும் அதிகாரங்களைப் பரவலாக்கும் நடைமுறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாமற் போய் விட்டது. அனைத்துத் தமிழ் மக்களையும் இந்த நடைமுறையின் கீழ் வட பகுதிக்குள் வரையறுத்து விடுவீர்களா என்று எவரும் கேள்வி எழுப்ப முடியும். இல்லை. இது அனைவருக்கும் சொந்தமான நாடு. வட பகுதி மக்கள் கொழும்புக்கும் வருகை தரவும் கொழும்பு வாழ் மக்கள் வட பகுதிக்கு செல்லவும் இயலுமாக இருக்க வேண்டும். நாம் அமெரிக்காவுக்குச் சென்றால் அந் நாட்டு கலாசாரத்தின்படி வாழ்கின்றோம். வட பகுதிக்குச் சென்றால் அங்குள்ள கலாசரத்தின்படி நாம் வாழ முயல வேண்டும். சிங்கப்பூரில் தமிழர் ஒருவர் பிரதமராகியிருக்கின்றார். எமது நாட்டில் தமிழர் ஒருவர் ஜனாதிபதி ஆக முடியுமா? குறுகிய மனப்பான்மைகளில் சிறைப்பட்டிராமல் பிரச்சினைகளை திறந்த மனதுடன் நோக்க நாம் இப்பொழுதாவது முயற்சிக்க வேண்டும். இதன்படி சுயாட்சி உரிமை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றே நான் கருதுகின்றேன்.

**அவர்களின் தீர்வுக்கு இடமளிப்பது அவசியம்**
**பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிகோ**


சுதந்திரத்திற்கு பின்னைய காலப்பகுதியிலும் முன்னைய காலப்பகுதியிலும் அவ்வாறான உரிமை கிடைக்காததன் காரணமாகவே சுயாட்சியின் அவசியத்தை தமிழ் மக்கள் கோருகின்றார்கள். அவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்கள் உண்மையில் தமிழ்க் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்திருந்தவர்களா என்ற கேள்வியே இதற்குக் காரணமாகும். லக்ஷ்மன் கதிர்காமர், திருச்செல்வம், செல்வநாயகம் ஆகியோரை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்திற்குச் சென்று ஆங்கிலக் கல்வி கற்று ஆங்கிலேயர்களைப் போன்று வாழ்ந்தவர்கள். அவர்கள் ஒருபோதும் தமிழ் மக்கள் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. சாதாரண தமிழ் மக்கள் மோசமான நிலையில் கீழ் மட்டத்திலேயே இருந்துள்ளனர். இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வு தரும் முறையையே சோல்பரி யாப்பும் 72ம் ஆண்டு யாப்பும் முன்வைத்திருந்தது.



இந்த அர்த்தத்தில் நோக்கும் போது இப்பொழுதாவது அவர்களின் விடயங்களை அவர்களே நிர்வகிக்கும் உரிமையை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டும். இதன் போது பல பிரச்சினைகள் ஏற்படலாம். அவ்வாறாயின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுப்பட்டு வாழக் கூடிய அரசியலமைப்பை நாம் உருவாக்க வேண்டும். அது ஒருபோதும் நடைபெறாது. நாம் அந்தளவுக்கு நேர்மையானவர்களும் அல்லர். சுயாட்சியை சிங்களவர்களிடமே கேட்க வேண்டும் என்று நாம் புரிந்துக் கொள்ளக் கூடாது. 12 சதவீதமானவர்கள் அவர்களின் உரிமைகளுக்காக விடுக்கும் சுய வேண்டுகோள் இது என்றே நாம் கருத வேண்டும். இந்தப் பிரச்சினை வடக்கிற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பது துரதிருஷ்டவசமானது. இப்பொழுதாவது நாம் அவர்களை விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு சுயாட்சியை வழங்குவதில் எந்தவிதமான தவறுகளும் கிடையாது. எமது தீர்வுத் திட்டங்கள் வெற்றி அளிக்காத போது அவர்களினால் முன்வைக்கப்படும் தீர்வினை பரிசீலித்துப் பார்ப்பதில் தவறில்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



amrashmy05/07

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப்பதிப்புரிமையுடையது
All rights Reseverd

ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examination Sri Lanka.

පරිපාලන සේවය සඳහා පොදු විභාගය / நிர்வாக சேவைப் பொதுத் தேர்வு
ආකෘති ප්‍රශ්න පත්‍රය / மாதிரி வினாத்தாள்

දේශපාලන විද්‍යාව / அரசியல் விஞ்ஞானம் (I)

සාක්කොගේ චින්තන / சாக்கோவின் சிந்தனைகள்

පැ. තුනයි மூன்று மணி

**பகுதி ஒன்று**

***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

1. **பின்வருவனவற்றுள் சாக்கோவின் சிந்தனைக் கைநூலைப் பற்றிய மிகப் பொருத்தமான கூற்று எது?**

அ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் ஒரு மத நூலாகும்.
ஆ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது சிறுவர்களுக்கான ஒரு சித்திரக் கதைப்புத்தகமாகும்.
இ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது சாக்கோவினது தேர்தல் விஞ்ஞாபனமாகும்.
ஈ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது சாக்கோ எழுதிய மர்ம நாவல்களில் ஒன்றாகும்.
உ) சாக்கோவின் சிந்தனைக் கைநூல் என்பது மேற்கூறிய எதுவுமில்லை.

2. **மக்கள் சகலரும் கேட்கமுனையும் கேள்வி பின்வருவனவற்றுள் எது?**

அ) படைக்கலங்களின் உரையாடல் தொடங்கிவிட்டதா?
ஆ) வாய்மொழி உரையாடல் என்பது நடைமுறையிலுள்ளதா?
இ) சமகாலத்திலுள்ள கடவுளர் எண்ணிக்கை யாது?
ஈ) சாக்கோவின் சுவாசம் அவன் சிந்தனைகள் மீதிருப்பது மெய்தானா?
உ) சாக்கோவின் சிந்தனைக் கைநூலிலுள்ள அறிமுக வாக்கியங்களிலுள்ள அறிமுக வாக்கியங்களை எழுதியிருப்பவர் சாக்கோவா?

3. **பின்வருவனவற்றுள் செம்மையான வாக்கியம் எது?**

அ) படைக்கலங்கள் முனைப்புடன் உரையாடத் தொடங்கினால் பாதுகாப்பு நோக்கம் கருதி எந்த அறைக்குள் நுழைந்து தாழிட்டுக் கொள்வதென எம்மால் தீர்மானிக்க இயலாது
ஆ) சமகாலத்தின் கடவுள் தனது படைக்கல மாடங்களை அகலத் திறந்து சீற்றத்தின் படைக்கலங்களை வெளிக்கொணரத் தொடங்கியதும் நில வழி தாழிடப்படுகின்றது.
இ) படைக்கலங்களின் உரையாடுதலுக்கான சாக்கோவின் சிந்தனைகள் வெற்றிலைகளில் எழுதப்பட்டிருப்பதால் வெற்றிலையொன்றின் விலை ஐந்து மடங்காக உயர்ந்துள்ளது.
ஈ) சாக்கோவின் சிந்தனைக் கைநூலிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை 300
உ) சாக்கோவின் சிந்தனைகள், கைநூல் வடிவில் வெளிவந்திருக்கும் தகவல் தெரிவிக்கப்படுவதால் அறைகளுக்குள் பதுங்கியிருப்பவர்கள் உடனடியாக வெளியேறுவது சாத்தியமில்லை.

4. **சமகாலத்திலிருக்கும் கடவுளின் சுவாசம் சாக்கோவின் சிந்தனை மீதுள்ளதால் யாது நிகழும்?**

அ) கடவுள் சாக்கோவின் சிந்தனைக்கு அருட் பொழிவு செய்கிறார்
ஆ) கடவுள் ஆன்மாக்களுக்கு நற்செய்தியைத் தெரிவிப்பதால் சிறைப்புகுதலே பாதுகாப்பளிக்கும்.
இ) விழித்தெழமாட்டாதவர் விழித்தெழுவர் எனக்கடவுள் முழங்குவதால் ஒடுங்குவோர் நிலையாகவே ஒடுங்குவர்.
ஈ) கடவுள் அருள் தருங்காலத்தை முழங்கித் தெரிவிப்பதால் சாக்கோவின் சிந்தனை அதிவிரைவில் காலாவதியாகாது.
உ) மேற்கூறிய யாவும் நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. சாக்கோவின் சிந்தனைக் கைநூலிலிலுள்ள அறிமுக வாக்கியங்களை அருளியவர் பின்வருவோருள் யாராகலாம்?**


அ) அரம்புக்கலியன் (ஆ) சமரகேசரி (இ) கோகர்ணன் (ஈ) சாக்கோ (உ) மேற்கூறிய எவருமல்ல.

**6. வாளேந்தும் கேசரியை எதையிழைத்தும் பேணக்கடப்பட்டு பெருங்கூத்து நிகழ்த்த வேண்டியிருப்பதேன்?**

அ) அரசகேசரி பாழினி என்றொரு அரக்கியைப் புணரப் பிறந்தவர் மரபில் தோன்றியவன் சாக்கோ
ஆ) சாக்கோ ஒரு மீசை அடர்ந்த கேசரி
இ) சாக்கோ விலங்கினியல்புகள் மிகப்பெற்றுள்ளவன்
ஈ) வெற்றிலையில் கேசரி வாளேந்துகிறது
உ) விசேட காரணமேதுமில்லை.

**7. படைக்கலங்களின் உரையாடலுக்கானதொரு நியமவடிவம் எதுவாகும்?**

அ) $1956x10^{-32}$ (ஆ) $1958x10^{-23}$ (இ) $1983x10^{-23}$ (ஈ) $110806x10^{-23}$
உ) படைக்கலங்களின் உரையாடலுக்கென நியமவடிவமேதுமில்லை.




**8. படைக்கலங்கள் உரையாடும் காலம் மகத்துவமானது எனக்குறிப்பிடப்படுவது.**

அ) மாமிசவுண்ணிகளுக்கு அரியவாய்ப்பாக அமைவதால்
ஆ) குருதிக்காகத் தாகித்திருந்த புலத்தில் மட்டுமல்லாமல் எங்கிலும் குருதிபரவுவதால்
இ) விதியின் கடவுளர் தோன்றி படைக்கலங்களால் உயிரிகளை ஆசீர்வதிப்பதால்
ஈ) உயிரிகள் தங்களின் வாழுங்கால அளவைக் கனவு காணாதிருப்பதால்
உ) உயிரிகளின் வாழுங்கணம் இமைப்பொழுதில் தீர்ந்துபோவதால்.

**9. விதியின் கடவுள் என்பது யாரைக்கருதும்?**

அ) யாதாவது உயிரியின் வாழுங்கணத்தைப் படைக்கலங்களால் தீர்மானிக்கும் கருணைக்குத் தொலைவானவர்.
ஆ) நிணமும் கொழுப்பும் அருந்தினாலன்றி விடாய் அடங்காதவர்.
இ) படைக்கலங்களைப் போற்றுவதால் மட்டுமே ஆனந்தக் களிப்புக்குள்ளாகும்
உதடுகளைக் கொண்டிருப்பவர்
ஈ) உயிரிகளினது கழிவகற்றுதலைக் கூட நெருக்கமாக அவதானிப்பவர்
உ) சாக்கோ, அரம்புக்கலியன், மாலினிரிஷி, கோகர்ணன், சமரகேசரி ஆகிய ஐவர் உள்ளடங்கிய குழு.

**10. சர்வவல்லமை பொருந்திய விதியின் கடவுள் யார்?**

அ) கைவசமிருக்கும் படைக்கலத்தின் வழியே ஆகக்கூடுதலான உயிரிகளை ஆசீர்வதிப்பவர்.
ஆ) தலைகீழாக உறங்குபவர்
இ) வாயினால் கழிவகற்றி குதத்தினால் அருந்துபவர்
ஈ) வாயினால் புணர்ந்து குதத்தினால் சுவாசிப்பவர்
உ) கைகளால் நடந்து கால்களால் எழுதுபவபர்

**11. படைக்கலங்கள் முனைப்புடன் உரையாடத் தொடங்கியதும் அருகிப்போகும் வினாவாக்கியத் தொகுதி பின்வருவனவற்றுள் எது?**

அ) ஏன்? எதற்கு? (ஆ) எப்போது? என்ன? (இ) எங்கே? எப்படி? (ஈ) யார்? ஏப்போது? (உ) யார்? ஏன்?

**12. படைக்கலங்கள் முனைப்புடன் உரையாடத் தொடங்கினால் முக்கியத்துவம் பெறும் வினாவாக்கியத் தொகுதி பின்வருவனவற்றுள் எது?**

அ) ஏன்? ஏதற்கு? (ஆ) எப்போது? எப்படி? எங்கே? (இ) என்ன? எது? (ஈ) யார்? ஏப்போது? (உ) யார்? ஏன்?

**13. அரசியல் விஞ்ஞானத்தில் உருவாகும் சிந்தனையொன்றின் ஆகக் கூடிய பிரயோகந்தரும் காலப்பகுதி எது?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) 12 நாள்கள் (ஆ) 12 மாதங்கள் (இ) 12 வருடங்கள் (ஈ) 12 கிழமைகள் (உ) 12 நிமிடங்கள்.

**14. சாக்கோவின் சிந்தனைக்கான மூலவர்ணம் (pure colour) பின்வருவனவற்றுள் எது?**


அ) நீலம் (ஆ) பச்சை (இ) சிவப்பு (ஈ) வெள்ளை (உ) ஊதா

**15. சாக்கோ தன்னை பின்வருவனவற்றுள் எந்த விலங்காக உருவகிக்கிறான்?**

அ) சிங்கம் (ஆ) தேவாங்கு (இ) கபரக்கொயா (ஈ) யானை (உ) பறக்கும் அணில்

**16. நிகழ்வது உண்மையில் படைக்கலங்களின் உரையாடல் அல்லது இது ஒரு தற்காப்பு நடவடிக்கை மாத்திரமே. அதாவது வாய்மொழி மூலமான உரையாடலைப் பாதுகாக்கவும் அதைத் தொடர்ந்து பேணவுமான நடவடிக்கை மட்டுமே. இந் நடவடிக்கைகளின் போது யாராவது பாதிக்கப்பட்டால் அவர்கள் யார்? ஏவர்? என்பது முக்கியமில்லை இவை தவிர்க்கப்பட முடியாதவை. இம்மகாவாக்கியம் யாரால்? யாருக்கு? எத்தருணத்தில்? விளம்பப்பட்டது.**

அ) சாக்கோவினால் அரம்புக்கலியனுக்கு இணைந்து கழிவகற்றும் போது
ஆ) அரம்புக்கலியனால் சாக்கோவிற்கு இணைந்து கரமைதுனம் செய்யும் போது
இ) மல்வியால் கோகர்ணனுக்கு ஒத்தபால் கலவியின் போது
ஈ) சாக்கோவினால் வாளேந்திய சிங்கத்திற்கு கலவியில் ஈடுபடும்போது
உ) மல்வியால் கபரக்கொயாவுக்கு இணைந்து கழிவகற்றும் போது



**17. தற்காப்புக்காக படைக்கலங்கள் உரையாடுகின்ற சூழலில் பாதிக்கபட்டவர்களை ஆண்கள், பெண்கள், என்று நோக்கவியலாது அவர்கள் கொண்டுள்ள நோக்கம் என்ன? என்று தான் நோக்குதல் வேண்டும் இம்மகாவாக்கியம் சாக்கோவின் சிந்தனையில் எத்தனையாவது ஏற்பாடாகும்?**

அ) 5 (ஆ) 7 (இ) 6 (ஈ) 12 (உ) 24

**18. வாளேந்திய சிங்கம் ஓர் இளவரசியைப் புணரத் தோன்றியவன் வழித்தோன்றல்கள் நாம். எனவே சிங்கம் எங்கள் தேசியமாகும். ஆதலால் தேசிய பாதுகாப்பிற்காக படைக்கலங்களால் உரையாடுவதே எமக்குள்ள மாற்றுவழியாகும் எனும் இவ்வாக்கியத் தொடரை எவ்வாறு மதிப்பிடுவீர்?**

அ) மிகப்பலவீனமானது வெளிப்படுத்தியவன் ஒரு முழுக்கோமாளி
ஆ) பலவீனமானது எனினும் வெளிப்படுத்தியவன் முழுக்கோமாளியல்ல
இ) ஓரளவுபலவீனமானது வெளிப்படுத்தியவன் புத்திகூர்மையானவனல்ல
ஈ) அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது வெளிப்படுத்தியவன் சமகாலக்கடவுள்
உ) அரசியல் முக்கியத்துமற்றது எனினும் வெளிப்படுத்தியவன் சமகாலக்கடவுள்

**19. பின்வரும் வாக்கியங்களுள் மிகச்சரியான மகாவாக்கியம் எது?**

அ) சகல நடவடிக்கைகளும் பாதுகாப்பு நோக்கங்கருதியவை
ஆ) சாக்கோவின் சிந்தனைக் கைநூலை வாசித்தவர் அனைவரும் மறைந்துபோன உருக்களாயினர்.
இ) தேசத்தைக் கட்டியெழுப்பக் கிடைத்துள்ள ஒரே மாற்றுவழி சாக்கோவின் சிந்தனைகளே
ஈ) உயிரிகளை நெருக்கடிக்குள்ளாக்குவதன் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்பலாம்.
உ) உயிரிகளை மழையில் நனைத்து வெயிலில் உலர்த்துவதன் மூலம் தேசத்தைப் பாதுகாக்கலாம்.

**20. சாக்கோவின் சிந்தனைக் கைநூலைத் திறனாய்வோர் அதை ஏன் ஒரு கைநூலாகக் கருதத் தயங்குகின்றனர்?**

அ) அதைக் கைநூலாகக் கருதுவது தேசத்துரோகமாகும்
ஆ) அது கைநூலொன்றுக்கான பக்கங்களின் நியம அளவினை பத்துமடங்கால் மீறியுள்ளது.
இ) மதகுருமார் இதைவாசித்து முடித்ததும் கரமைதுனத்துக்கு தயாராகி விடுகின்றனர்.
ஈ) சாக்கோவின் சிந்தனைக்கான பொழிப்புரைகள் ஏதும் இது வரை வெளியாகவில்லை.
உ) மேற்கூறிய காரணங்களில் எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பகுதி இரண்டு**

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பின்வரும் செய்தி உருக்களை (news images) கூர்ந்து அவதானித்து பொருத்தமான தலைப்புகளுக்கு மாற்றி பரபரப்பான செய்தியறிக்கைகளைத் தயாரிக்குக.**

(i) உரு (a) அடையாளந்தெரியாத நபர்களால் புரசு சுட்டுக்கொல்லப்படல்

பொதுவான சாத்தியங்கள்

(அ) பால்நிலை: புரசு ஆண் அல்லது பெண்

(ஆ) சுட்டுக்கொல்லப்பட்ட காலம் : நேற்று அல்லது நேற்று முன்தினம்

(இ) சுட்டுக்கொல்லப்பட்ட நேரம் : முற்பகல் - நண்பகல் - பிற்பகல் - மாலை - இரவு

(ஈ) சுட்டுக்கொல்லப்பட்ட இடம் : வீதி - சந்தை - வீடு - பொருத்தமான எந்த இடமும்.

(உ) சுட்டுக்கொல்லப்படக் காரணம் : சிறப்பாக எதுவுமில்லை

(ii) உரு (b) தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட உடலம் பரசுவுடையது என அடையாளங் காணப்படல்

பொதுவான சாத்தியங்கள்.

(அ) பால்நிலை : புரசு ஆண் அல்லது பெண்

(ஆ) தலை துண்டிக்கப்பட்ட நாள் : உடல் மீட்கப்பட்ட நாளுக்கு முன்னுள்ள ஏதாவது பொருத்தமான ஒரு நாள்.

(இ) உடலம் மீட்கப்பட்ட நாள் : செய்தியறிக்கை வெளிவரும் தினத்திற்கு முன்னுள்ள எந்நாளாகவும் அமையலாம்.

(ஈ) தலை துண்டிக்கப்பட்ட இடம் : தலை துண்டிக்கப் பொருத்தமானதெனத் தெரிவு செய்யப்பட்ட எந்த இடமாகவுமிருக்கலாம்.

(உ) உடலம் மீட்கப்பட்ட இடம் : பாழடைந்த வீடு - கிணறு - பொதுப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாதிருக்கும் வீதி.

(ஊ) உடலம் மீட்கப்பட்ட நேரம் : முற்பகல் - நண்பகல் - பிற்பகல் - மாலை - இரவு

(எ) தலை துண்டிக்கப்படக் காரணம் : சிறப்பாக எதுவுமில்லை.

(iii) உரு (c) பாழ்மனையொன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் யுவதியின் பெயர் புரசு.

(iv) உரு (d) பாழ் மனையொன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட புரசு எனும் இளம்யுவதி பாலியல் வன்புணர்ச்சியின் பின்னர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார்.

பொதுவான சாத்தியங்கள் (உரு (c) , உரு (d) தொடர்பானவை)

(அ) பரசு எனும் யுவதியின் சடலம் மீட்கப்பட்ட நேரம் : முற்பகல் அல்லது நண்பகல் அல்லது பிற்பகல்.

(ஆ) பரசு என்ற யுவதியின் சடலம் மீட்கப்பட்ட நிலை : உருக்குலைந்த நிலையில் நிர்வாணமாக அல்லது அழுகிய நிலையில் நிர்வாணமாக அல்லது உருக்குலைந்து அழுகிய நிலையில் உள்ளாடைகளுடன்.

(இ) பரசு என்ற யுவதியின் சடலத்தில் வன்புணர்ச்சிக்கான அடையாளங்கள் :

- மார்பகங்கள் குதறப்பட்டிருத்தல்
- பாலுறுப்பில் உதடுகள் கிழிந்திருத்தல்
- தொடைகளில் நகக்குறி.

**2. பின்வரும் உரைநடைப்பகுதியை நன்கு அவதானித்து தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடையளிக்குக.**

உரைநடைப்பகுதி:- புரசு என்னும் ஆண் அல்லது பெண் போன்றோரை எப்போதும் நோக்கிக் கொண்டிருப்பதும் அவர்களது பாதங்களை வலைக்கு நீக்கலாக்கி விடாததும் அவர்கள் மேல் முழு நோக்கமாகி அவர்களது நகர்வுகளில் வியாகுலங்களைப் பெருக்குவதும் இடுக்கண்களுக்கு அவர்களை நெருக்கமாக்குவதும் சத்துருக்களைப் பெருக்கி உக்கிர பகைக்கு தூண்டுவதுமே பட்சிராஜனின் சிந்தனைக் கைநூலாகும் என்ற வெளிநோக்கர்களின் வாசகம் தணிக்கை செய்யப்பட்டிருக்கக் காணலாம். சாக்கோவின் சிந்தனை வாக்கியங்களை முழுமையாக விளங்கிக் கொள்ளும் தகமையற்றவர்களே எதிர்வினை யாற்றத் துணிகின்றனர் என்பது சிந்தனைக் கை நூலிலுள்ள முக்கியமான அடிக்குறிப்புகளில் ஒன்றாகும். அடிக்குறிப்புகள் ஒவ்வொன்றும் உள்நோக்கர்களுகான எச்சரிக்கை வாக்கியங்களாகும். சிந்தனை வாக்கியங்களை விதந்து பொழிப்புரைக்கும் உள்நோக்கர்களே தேசவரலாற்றின் பக்கங்களில் நினைவு கூரப்படுவது இயல்பாகும். மாறாக சிந்தனை வாக்கியங்களின் மெய்ப்பொருளுணர்த்தும் வரைபுகளை முன்வைக்கும் உள்நோக்கர்களுக்கென மானியம் ஏதும் அனுமதிக்கப்படுவதில்லையென்றுணர்ந்து மௌனித்திருப்பவர்களுள் புரசுவும் உள்ளடங்கலாம். ஆனால் வெளிநோக்கர்களுக்கும் உள்நோக்கர்களுக்குமிடையே இலக்கமிடப்பட்ட அந்தரங்கத் தொடர்புநிலவி வரக்காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கோவின் சிந்தனைகள் தொடர்பான விமர்சனத் தொகுப்பிற்கான இலக்கம் - 5. முன்பொரு காலத்தில் கிளியரசனின் சிந்தனைகள் அதிகாரம் பெற்றிருந்தன. அதோடு கிளியரசன் என்போன் சிங்கமொன்று அரக்கியைப் புணர அரசாளும் தகமைவாய்ந்த புதல்வர் ஈனப்பட்டதென நம்பும் தேசத்தின் அரசியல் விஞ்ஞானத்தில் முதற்தடவையாக அதிகாரம் பெற்றிருந்ததால் அந்நாள் தொடங்கி சிந்தனைகளுக்கு எதிர்வினையாற்றும் வெளிநோக்கர்கள் கிளியரசனின் சிந்தனை தொடர்பிலான விமர்சனத் தொகுப்பிற்கு '1' எனத் தலையங்கம் எழுதினர். இதன் வழியேதான் சாக்கோ என்போன் தேசத்தின் அரசியல் விஞ்ஞானத்தில் ஐந்தாவது தடவையாக அதிகாரம் பெற்றிருப்பதால் வெளிநோக்கர்கள் சாக்கோவின் சிந்தனைகளுக்கு எதிர்வினையாற்றும் தொகுதிக்கு '5' என்ற இலக்கத்தைத் தேர்ந்தேடுத்தனர்.

'வாளேந்தும் சிங்கதேசத்தில் காலாதிகாலமாக அதிகாரம் பெறுவோர் வெளிப்படுத்தும் சிந்தனைகள் புரசு முதலானவர்களை அச்சுறுத்துவதாக இருப்பதேன்?' என ஆளும் வர்க்கத் தியானி ஒருவனிடம் வினவியதில் 'மாகாவமிசத்தை தகனஞ்செய்யாதிருப்பதே பிரதான காரணம்' என்றான். 'தொடர்ந்தும் மகாவம்சத்தினது தகனக்கிரியை பற்றின கருத்தை வெளிப்படுத்துதல் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவதால் தண்டனைக்குரிய குற்றமாகும்' என்றொரு பகுதி சாக்கோவின் சிந்தனைக்குள் அடங்கியிருப்பது பலருக்குத் தெரிந்திராத ஏற்பாடு. இவ்வாறாகத் தெரிந்திருக்காத பலரில் புரசுவும் உள்ளடங்கலாம்.

(அ) வெளிநோக்கர்களின் தணிக்கை செய்யப்பட்டிராத வாசகங்கள் மூன்றினை எழுதுக?

(ஆ) வெளிநோக்கர்கள், எதிர்வினையாளர்கள் ஆகியோருக்கிடையிலான ஐந்து பிரதான வேறுபாடுகளை எழுதுக?

(இ) உள்நோக்கர் குறித்த எச்சரிக்கை வாக்கியங்களுக்கான சரித்திர முக்கியத்துவம் யாது?

(ஈ) உள்நோக்கர்களுக்கு மானியம் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஐந்தினை எழுதுக?

(உ) வெளிநோக்கர்களுக்கும் உள்நோக்கர்களுக்கும் இடையில் நிலவும் இலக்கமிடப்பட்ட அந்தரங்கத் தொடர்பு என்பதற்கு வரைவிலக்கணம் கூறுக?

(ஊ) 'மகாவம்சத்தைத் தகனஞ்செய்தல்' எனும் தலைப்பில் நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரையொன்றை வரைக?

**3. கீழ் வரும் புனைவினை ஐந்து தடவைகளுக்குக் குறையாமல் வாசித்து இதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

பரசுவை சித்தார்த்தனின் தற்கொலை என்றொரு புனைவை மானசீகமாக எழுதத்தூண்டியது சூழ்நிலையின் அதிவெப்பம். சாக்கோ வெற்றிலைக் கொடிக்கால் தாவி அதிகாரபீடமேற்றதும் கிளர்ந்த அதிவெப்பத்தில் விழித்தெழுகின்றான் சித்தார்த்தன். தனதிருப்பு காலக்கழிவில் தகனமடையுமென எதிர்வுகூறப்படும் நிலையில் அங்கிருந்து தலைதெறிக்க ஓடுகிறான் சித்தார்த்தன். சாக்கோவின் சிந்தனையில் தலைதெறிக்க ஓடுகிறவன் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிப்பவனாவான் என்ற மகாவசனத்தை சித்தார்த்தன் தெரிந்து கொள்ளவில்லை நகர்காவலர்கள் சாக்கோவின் சிந்தனைகளைத் திரவமாக்கி அருந்தியதால் சித்தார்த்தனைத் துரத்திச் செல்கின்றனர். சித்தார்த்தன் தற்கொலைபுரியவிருப்பதே புனைவின் விதியாவதால் நகர்காவலர்களின் கைகளில் அவன் சிக்கவில்லை.

சித்தார்த்தன் பாதுகாப்பு நோக்கங்கருதி ஒளிந்து கொள்ள நேர்ந்தது மகாவிகாரையொன்றினுள்ளாகும். அது சவப்பெட்டிகளைச் செதுக்குவதற்கும் நாளொன்றிக்கு கொல்லப்படவுள்ளோரது எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கும் உடலங்களைப் பதப்படுத்தி வைப்பதற்குமான தலமாகும். இவ்விபரங்கள் எதையும் சித்தார்த்தன் அறிந்திருக்கவில்லை. பரசுவுக்கு பதின்மவயதிலிருந்தே சித்தார்த்தனின் அடிப்படை இயல்புகள் தெரிந்திருந்ததால் அவன் அந்த விகாரைக்குள் தங்கியிருக்க விரும்பமாட்டான் என்பது வெளிப்படை. இருப்பினும் பாதுகாப்பு நோக்கங்கருதி சித்தார்த்தன் விகாரைக்குள் ஒளிந்திருப்பது தவிர்க்க முடியாதது என்றே பரசுவால் கருதப்படுகிறது. ஆனால் விகாரைக்குள்ளிருக்கும் சித்தார்த்தன் காவியுடையைப் பிரயோகித்து தற்கொலை செய்வானென புரசு எதிர்பார்த்திருக்கவில்லை. உடலங்களைப் பதப்படுத்துவதே பிரதான கருமமெனக் கொள்ளும் 63 பிக்குமாருக்கும் நாளொன்றிற்கு 5 உடலங்களையேனும் ஆகக் குறைந்தளவாகப் பதப்படுத்தவேண்டியருப்பதான ஏற்பாட்டினால் அன்றைய தினம் நான்கு உடலங்கள் மாத்திரமே கிடைத்திருக்க, செய்வது அறியாது திகைத்திருந்த தருணம் உத்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்த சித்தார்த்தனின் உடலத்தைக் காண நேர்ந்ததில் அகமகிழ்வுற்றனர். பதப்படுத்தும் கருமத்தால் சித்தார்த்தனின் உடலத்தையும் சேர்த்து அன்றைய நாளில் கருமத்தை நிறைவேற்றிய பின்னர் 63 பிக்குமாரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் 'காவியுடை தரித்து தேசத்தின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் தலைநகருக்குள் வந்திருந்த பாதகனொருவனை நகர்காவலர்கள் கைது செய்ய எத்தனித்த போது அவன் வணக்கத்தலமொன்றினுள் புகுந்து காவியுடையைப் பிரயோகித்து சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டான்' எனக் குறிப்பிடப்பட்டிருந்ததை வாசித்து பரசு திகைப்புக்குள்ளானான். அவனது மானசீகப் புனைவில் இடைச்செருகலாக தேசத்தின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் சித்தார்த்தனின் தற்கொலை போன்ற தலையங்கங்களில் புனைவுகளை மேற்கொள்ளல் தண்டனைக்குரிய குற்றமாகும் எனச் சிலவாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கக் கண்டு புனைவாக்கல் செயற்பாட்டைக்கைவிடத் தீர்மானிக்கிறான் புரசு ஏற்கனவே திசைமாற்றப்பட்ட சித்தார்த்தனின் தற்கொலையில் தொடர்ந்தும் புனைவதால் என்னென்ன அபாயகரமான திசைமாற்றங்கள் நிகழலாமென்பது அவனுக்குத் தெரிந்திருக்காததால் புனைவை இந்தளவில் பதிவழிப்பதே மதிநுட்பமானது."

(அ) இப்புனைவின் பகுதிக்கு பின்வருவனவற்றில் பொருத்தமான தலைப்பாக (title) அமையக்கூடியது எது?

(I) சித்தார்த்தனின் தற்கொலை (ii) 63 பிக்குமார் வெளியிட்ட கூட்டறிக்கை
(iii) புனைதலில் மதிநுட்பம் (iv) புரசு எழுதிய புனைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) தலைப்பிட முடியாதது.

(ஆ) இப்புனைவின் பகுதியிலிருந்து உணரப்படும் அரசியல் தத்துவம் யாது? (பத்து வாக்கியங்கள் போதுமானது)

(இ) இப்புனைவின் பகுதி இத்தோடு நிறைவெய்திவிட்டதாகக் கருதமுடியுமா? (பத்து வாக்கியங்கள் போதுமானது)

(ஈ) இப்புனைவின் பகுதி குறித்த உங்களது விமர்சனத்தைத் தருக? (பத்து வாக்கியங்கள் போதுமானது)

(உ) நீங்கள் எழுதிய விமர்சனத்தை அடிப்படையாகக் கொண்டு இப்புனைவுப் பகுதியை மீள்வரைவு செய்க? (50 வாக்கியங்கள் போதுமானது.)

**4. (அ) பின்வரும் பந்தியை கவனமாகப் படித்து இதன் முக்கியமான உட்கருத்தை மூன்று வாக்கியங்களில் சுருக்கி எழுதுக?**

"சாக்கோவின் சிந்தனைக்குள் குறித்து பேசவல்ல அரம்புக்கலியன் முதலான குரங்குகள் திருவடித் தீட்சையின் வழியே ஈடேற்றப்பட்டவுள்ள நிலையில் 'விமர்சிக்க எத்தனிப்போரே கவனியுங்கள் செயலொன்றைச் செய்திடுவேன் யார் விளக்கிச் சொன்னாலும் நீங்கள் தப்பித்துக் கொள்வது இயலாததாகும்!' எனச் சாக்கோவின் சிந்தனைகள் முடிவடைகின்றன. இந்நிலையிலும் புரசுவினால் அவன் தற்போது பதுங்கியிருக்கும் புத்தகங்கள் உறங்கும் அறையை விட்டகலமுடியாதுள்ளது. கேட்டறிந்த தகவல்களினடிப்படையில் கனவுற்றுப் பயமெய்துபவளாகிறாள் அம்மா."

(ஆ) புரசுவின் கனவுக் குறிப்பேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதி வருமாறு

27.10.2006
தெரிந்தெடுக்கப்பட்டு கொள்கலனிடப்பட்டவர்களில் நானும் உள்ளடக்கப்பட்டுள்ளேன். தலத்தில் அம்மா இருக்கவில்லை. கொள்கலன்கள் கவசவாகனங்களில் மும்மூன்றாக அடுக்கப்படுகின்றன. கொள்கலனிடப்பட்ட நான் தருணம் பார்த்திருந்து வெளியேறி வீட்டுக்கு வந்துவிடுகிறேன். பங்கீட்டில் கிடைத்த அரிசியில் அம்மா சமைத்த வெண்பொங்கலை நான் விழுங்கிக் கொண்டிருக்க அந்தி முன்னேறுகிறது. இனந்தெரியாத நபர்கள் உந்துருளியில் வந்து வீட்டுவாசலில் நின்று கொண்டு என்னைக் கூப்பிடுகின்றனர். நான் வெண்பொங்கல் கிண்ணத்தைத் தூக்கிகொண்டு வெளிவளவுக்குள் ஓடும் போது அம்மாவைப் பார்த்து 'நான் கொள்கலனிடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக வந்திருப்பவர்களிடம் தெரிவி' எனக் கத்துகிறேன்.

உங்களை புரசுவெனக்கருதி பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?

(i) இந்தக் கனவை நீங்கள் கண்டிருக்கக் கூடிய நேரம் எதுவாகலாம்?
(ii) பங்கீட்டில் கிடைத்த அரிசி எனும் சொற்றொடர் உணர்த்தும் சூழல் யாது?
(iii) நீங்கள் கொள்கலனிடப்பட்டு எடுத்துச்செல்லப்பட விரும்பிய தருணம் எது?
(iv) 26.10.06 அல்லது 28.10.06 எனும் எதாவது ஒரு தினத்தில் உமக்கு நேர்ந்த கனவொன்றினைக் குறிப்பு வடிவில் தருக?
(v) முடிவில் புரசு சிந்தனைக் கைநூலின் பக்கங்களுக்குள் மறைந்து போன 'உரு'வாகியிருப்பதைத் தெரிந்திராதவளான அம்மா அவன் வீடு திரும்பக் காத்திருக்கிறாள். எனும் வாக்கியத்தில் விரவியுள்ள துயரத்தை ஆகக் குறைந்தது ஐந்து வாக்கியங்களிலாவது விபரிக்குக?

**தேர்வு நாடிகளுக்கான வழிகாட்டல் குறிப்புகள்.**

1. அரசியல் விஞ்ஞானம் எனும் பாடவிதானத்தினுள் மிக அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பாட அலகே சாக்கோவின் சிந்தனைகள் ஆகும். முன்பு அரசியல் மூலதத்துவங்கள் எனும் தலைப்பிலமைந்த பொது வினாத்தாளின் தலைப்பு அரசியல் விஞ்ஞானம் என மாற்றமுறுவதுடன் அரசியல் விஞ்ஞானம் I எனும் பொது வினாத்தாள் சாக்கோவின் சிந்தனைகள் எனும் உபதலைப்பிலும் அரசியல் விஞ்ஞானம் II என்னும் பொது வினாத்தாள் அரசியல் மூலதத்துவங்கள் எனும் உபதலைப்பிலும் அறிமுகமாகின்றன.

2. சாக்கோவின் சிந்தனைகள் பகுதி ஒன்று பல்தேர்வு வினாக்கள் இருபதைக் கொண்டமைவதுடன் அதற்கான மொத்தப்புள்ளிகள் 150 ஆகும். பகுதி இரண்டு கட்டுரை வினாக்கள் நான்கினைக் கொண்டமைவதுடன் அதற்கான மொத்தப் புள்ளிகள் 75 ஆகும். இவ் வினாத்தாளில் ஆகக் குறைந்தது 150 புள்ளிகளைப பெறாவிடின் தேர்வு நாடியொருவர் அரசியல் விஞ்ஞானத்தில் சித்தியெய்தியவராகக் கருதப்படமாட்டார்.

3. இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகள் இன்னமும் தீர்மானிக்கபடாத நிலையில் ஒவ்வொரு நிர்வாக மாவட்டங்களிலிருந்தும் முதற்கட்டமாக ஒன்பது தேர்வு நாடிகள் வீதம் மொத்தமாக 225 பேர் தெரிவு செய்யப்பட்டு இவ் வினாத்தாளுக்கு விடையளிக்க அனுமதித்து ஒவ்வொரு வினாவிற்கும் 2/3 பங்கினர் ஒரே மாதிரியாக விடையளித்திருந்தால் அவ்விடையே மிகப் பொருத்தமானதாகத் தெரிவு செய்யப்படும்.

- கௌதம ராகுலன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன்னலூடே பார்த்தேன், களைப்புற்று.
வருடா வருடம் இதுவேதான் நடக்கிறது:

அவர்கள் ஒரு தேசத்துள் நுழைவார்கள்

யோனிகளைப் பிளப்பதற்கான பத்திரத்துடன்
ஆக்கிரமித்த நிலப் பெண்களின் காதலர்களின்
குறிகளை வெட்டும் அனுமதியுடன்
தவிரவும் சித்ரவதைக் கூடங்களிற்கான திறப்புகளுடன்
துப்பறியும் பொலிஸ்காரர் கட்டை அவிழ்த்து
சாவை முகர்ந்துவர விடப் படும்
நாயினது துரிதத்துடன்
பார், பார் நகரின் அரசியல் தலைவர் அனுப்பிய
குண்டர் கொட்டாந் தடியுடன்
எதற்கும் தயாராக! ஜீப் ஜீப்பாய் தொங்கிக் கொண்டு--
கடைகளை காருகளை, உள்ளிருக்கும்
-அவர்கள் முன் மிகச் சிறிய மனிதர்களை
எரித்துக் கருக்கி
மகிழுமாறு - அவர்களது விசைகள் அமத்தப்பட்டுள்ளன.
(பயப்படாதீர்கள்: எல்லாவற்றையும் ஐ.நா. கண்காணிக்கிறது)
*அமெரிக்க இராணுவம், படையெடுத்த நாட்டின்
பெண்களை என்ன செய்யும் என்று
சீ.என்.என் சொல்லத் தேவையில்லை
(இந்திய இராணுவம் சொல்லித் தந்தது)
**தேச நலனிற்காய் பிற தேசத்தாரை ஆள
அனுப்பப்பட்டு,
கம்பத்தில் கயிற்றாற் கட்டி
இடுப்பு சராயைக் கழட்டி
அதுள் இருந்த ஆயுதத்தால் அடித்தால்--
அப்போது தரப்படுவது
"யாரையோ" அழிப்பதற்கான குரோதம்
(***அதில் குளிர்காய்பவர் யாரென்ற விமர்சனம்
திரும்பி விடும் கவனம்)

~~இராணுவத்திற்கு~~ தேசாபிமானம் ~~பயங்கரவாதிக்கு~~ இனப்பற்று
அப்படித்தான் அது என்றால் இப்படித்தான் இது
ஒரு கணித சமன்பாடு
இவ்வாறே இருந்தாக வேண்டும்
சகலத்தையும் கணக்கெடுக்கும் ஐ.நா. கண்டிக்க
செய்ய வேண்டியதெல்லாம்:
அழிப்பு... அழிப்பு...
தொடரும்: அறிக்கை அளிப்பு அளிப்பு

---

* தணிக்கையின்றி:
அமெரிக்க இராணுவமே,நீ படையெடுத்த நாட்டின்
பெண்களை என்ன செய்வாய் என்றெமக்கு
உன் சீ.என்.என் சொல்லத் தேவையில்லை
** தணிக்கையின்றி:
உன் தேச நலனிற்காய் நீ பிற இனத்தவரை ஆள
அனுப்பப்பட்டிருக்கிறாய்
*** தணிக்கையின்றி:
அதில் குளிர்காய்பவர் யாரென்ற விமர்சனம்
உன்னிடமே திரும்பி விடும் கவனம்!

பெப். 2007




# ஐக்கிய அமெரிக்க இராணுவம் X ஐ.நா. அறிக்கை

கற்பகம் யசோதரா கவிதைகள்

கற்பகம் யசோதரா, இவரது ஏனைய எழுத்துக்களை
mattavarkal.blogspot.com இல் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகம் யசோதரா கவிதைகள்

# கள்ளத் தோணிகள்

தப்பிச் செல்கிற மக்களுடன்
கள்ளத் தோணிகள் செல்கின்றன
"வரவேற்பு பலமாய்" இருக்கிற
அந்த நிலப் பிரதேசம் நோக்கி.
என் மக்களே
ஒரு படகின் படபடப்புகள்
உங்கள் இருதயத் துடிப்பினை விடவும், அதுவோ
எம் பால்யத்தின் ஓலைவீடு மழைக் காற்றில்
அடிஅடிப்பதை விடவும்,
மயிரிழையில் ஆடும் நம்பிக்கையில்
அச்சங்களிற்கு அப்பால்
எதை நோக்கிச் செல்கிறீர்கள்?
கோணமலையிருந்து புறப்பட்ட குடும்பமொன்று
இடைவழியில்
படகு மூழ்கி
தன் பிள்ளையைப் பறிகொடுத்த
தகப்பனின் கதறலோ
கரைகளை அடையவில்லை
கொந்தளித்த அலைகளுள் சிறு குரலோ எழும்பவில்லை
நட்சத்திரங்கள் கொட்டியில்லாத கரைகளில்
பாதங்கள் படிகிற போதினில்
(என் அன்பே, நண்பனே)
உமைத் தோய்ந்திருந்த குருதி
கழுவுப்பட்டு இருப்பதாக,
குரல்வளையைப் பிடித்திருந்த கொடும் கரங்கள்
இங்கும் நீட்டப்படா திருப்பதாக,
கிராமத்து தேவாலயங்களில் தஞ்சமடைந்த
பிள்ளைகளை
"அவர்கள்" கொன்று போட்ட குருதி
வற்றிப் போக முன்னர்,
அரசியலேதுமற்ற ஓர் அப்பாவிக் குடிமகனும்
"போகுது சவம்" என
"தட்டப்படும்" உயிர் குறித்த கரிசனைகளுள்,
அவனும் இவனும் போவ வர சுட்டுச் சுட்டுப்
போனவர்கள் விட்டுச் சென்ற கண்ணீர்
காய்ந்து போவ முன்னர்,
பெரும் அலைகளிற்கேற்ப
எழுந்து எழுந்து தாழும் தோணிகள்
எம் மேய்ப்பர்களைத் தாண்டி
எல்லைகள் கடந்து - கரை சேருமாக:
படபடத்த மழைவீட்டின் கிடுகோலை
வீட்டைப் பிளந்து
காற்றில் பறந்ததாக இல்லாது,
சேதமின்றித் தப்பிக் கரை சேருமாக, அக்
கரை சேருமாக.

**மார்கழி 2006**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகம் யசோதரா கவிதைகள்

உனது பிள்ளையை அவர்கள் கொண்டு போனார்கள்
வீட்டு முற்றங்களிற்கு யுத்தம் வந்த போது - போரிட
பிள்ளைகள் தேவையானார்கள்.
வாகனங்கள் புழுதி கிழப்பிச் சென்ற தெருக்களில்
உனது கடைசிப் பிள்ளையின் வாசம் வந்துகொண்டிருக்க
நெஞ்சடைத்து நீ விழுந்தாய்
ஆஸ்பத்திரியில் அவனது வரவை
ஒருபோதுமே அறிவிக்காத சுவர்களுக்குள் உயிரை விட்டாய்

உன்னை அவர்கள் எடுத்துச் சென்றபோது
பிள்ளையை நினைத்து நினைத்துப் போன தெருக்கள் துயரத்துடன் அழுதன
கண்ணீர் சிந்திச் சிந்தி தடம் கீறும் கன்னங்களில்
மீசை முளைத்திராத பிஞ்சு முகம் மோதி மோதி அழுதது

பூவரசம் பூத்திருக்கும் காலமாயிருக்குமா இது...
கொண்டல் பூக்கள் தொங்கும் ஒப்பாரத் தெருக்கள் துயர் கொண்டு அழுதன
கிராமத்துப் பறவைகள் வானில் சிலகணம் அந்தரித்து நின்றன
உனது பருவ மகன் தன் ஆசைகளை அள்ளிப் போட்ட தாய்நிலத்தில்
சலனமின்றி விரைந்த வாகனத்துள்
-எங்கிருந்தோ ஒரு கழுகு நிழலாகத் தொடர -
அவன் அழுது கொண்டே போனான்,
உதடு பிதுக்கிப் பிதுக்கி,
முலையைக் கொடுத்தால்
இப்போதே குடித்து விடுவான் போன்ற முகத்துடன்
கடைவாயில் பால்கசிய

கொடியில் ஈரம் உலரா சேட்டுக்கள் காற்றில் உதறி உதறி விசும்பின
சலுகையுடன் அவன் நின்ற தூணும்
சாய்ந்திருந்த சமையற்கட்டும் அவனைத் தேடின
ஊளையுடன்அவர்களை நாய் தொடர்ந்தோடிய முற்றத்தில்
தம் உயிர்த்தோழனின் பிரிவை
மாமரங்கள் குளறித் தீர்த்தன
நீ அவனது நினைவுடன் இறந்தாய்.

காசிநாதா,
அவர்களழைக்கிற ஓர் புனித தினத்தில்
உள்ளே அவனது சதைத்துண்டு இருப்பதறியாத் துண்டு நிலத்தில்
உன் மனைவி தீபங்களை ஏற்றி வைக்க
இனி நீ அழ வேண்டி வராது
உனக்கு முன்னால் அவன் போன கனத்தை
உன்னோடு சுமக்க வேண்டியதுமில்லை
நல்லதொரு சாவு!
யாருக்கும் வாய்க்காது

மாசி, 2007

# பிள்ளைகள் தேவை



அருந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதைகள்
சினங்கொள்ளக் கூடாதென்கிறார்கள்..
பெருந்தன்மை வாய்ந்தவையென்கிறார்கள்..

**எற்றுண்டு கிடத்தல்...**

மரணபீதியில் வெளிறியிருந்த பௌர்ணமி நிலவு
சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்படும்
தமிழரின் முகத்தை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது
ஒன்றாய்.. ஒவ்வொன்றாய்..
மனங்கொள்ளா எதிர்பார்ப்புகள் பொய்த்திடப் பொய்த்திட
வானக் கந்தலிலிருந்து கழன்றுவிழும் தாரகைகள்
முக்கால் மணிநேரத்தில் முற்றத்தில் கிடந்த
முழுவாளி நிறைத்தன
அது விளிம்புடைந்த பழம் வாளியென்பது வேறு கதை.

**புறநிலைக் குறிப்பு**

தனித்தனியே பொறுக்கியெடுத்து தூசு தட்டி
சேலை நெய்து அணிந்திட்ட ஒருத்தி
தேவதையாக உருக்கொண்டு - அவர்கள்
கதவுகளைத் தட்டத் தொடங்கினாள்
அகலத் திறந்த கோட்டைகளின் கதவுகள்
அல்லோலகல்லோலத்துடன் ஆடம்பரமாய் வரவேற்க
பாளம் பாளமாய் வெடித்திருந்த வறள் நிலத்தில்
முதல் துளியின் ஸ்பரிசத்தை உணர்ந்து ரசித்தவள்
'நீ மட்டுமா வந்தாய்' என்ற புருவமுயர்த்தல்களை
கவனிக்கத் தவறியதை எப்படிக் கண்டிக்க..

எல்லாம் தேவதையாய் உருக்கொண்டதால் வந்த வினை

விருந்துக்கும் உபசாரத்துக்கும் பரிகாரமாய்
இனி அவள் அரசர்களை அழைத்துவர வேண்டும்
வெடிச்சத்தங்களும், வாணவேடிக்கைகளும்,
தோரணங்களும், பந்தல்களுமென
கோட்டைகளும் இப்போது விழாக்கோலம் பூண
இம்முறை வரவேற்பு இன்னமும் பலமாகவிருக்கும்

அரசர்களை உள்நுழைய அனுமதித்த பின்
கோட்டையின் சுவர்களிலிருந்து வெளிக்கிளம்பும் பிசாசொன்று
அவளைப் பிதுக்கி வெளித்தள்ள
அதிக காலமெடுக்காதென..
அவளது தயவின்றி அரசர்களின் அருட்கடாட்சம் கிட்டாதென்பது
அவர்களுக்குத் தெரியுமென - பாவம்
அவளெப்படி அறிவாள்?

**அகவயத் தெளிவு**

கழுத்தைப் பிடித்து புறந்தள்ளப்பட்ட வேதனையுடன்
புழுதியில் கிடந்துகொண்டு
அண்ணாந்து பார்க்கிறேன்..
நெடிதுயர்ந்த மதில்களுக்கும் மேலால்
இன்னமும் ஓரிரண்டு தாரகைகள்
அந்தரத்தில் தொங்கிக்கொண்டுதான் கிடக்கின்றன

இனியென்ன..
கலைந்த ஆடைகளை சரிசெய்தபடி
அடுத்த கதவினை நோக்கி விரைய வேண்டியதுதான்,
தூக்கியெறியப்படுதலை எதிர்பார்த்தபடி.
எனினும்
நீட்டிய கரங்களுடன் நீங்கள் ஓடிவருமோர் நாளில்
புறந்திரும்பி,
உங்கள் எல்லை கடந்து
வெகுதூரம் சென்றுவிட்டிருந்திருப்பேன்

தேவதைகள் காத்திருப்பதில்லை எவருக்காகவுமே.



அருந்ததி

## தேவதைகள் காத்திருப்பதில்லை

2007-04-27

இயற்பெயர் யாழினி, இவரது ஏனைய எழுத்துக்களை
rekupthi.blogspot.com இல் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சரியாய் அமைதியாய்
அழகாய்த்தானிருக்கின்றன..
சுயத்தினை நோக்கிய தேடல்களும்,
உள்ளார்ந்த தொலைதல்களும்
என்றும் சுவாரசியமானவைதான்..,
தடுத்து நிறுத்தி
எதிர்க் கேள்வி கேட்க
எவரும் முன்வராத வரையிலும்.

தெருவில் தற்செயலாய்க்
கடந்து போகுமொரு சைக்கிள்,
அநிச்சையாய் எதிர்கொள்ளுமொரு
பாடசாலைச் சிறுவன்,
போதிமரம் தேவைப்படுவதில்லை...
இவை போதும்
எனக்கும்,
தூசி படர்ந்த மூலைக்குள்
மீளாத் துயில்கொள்ளும்
என் புத்தருக்கும்..

நான் வாழ விரும்புகிறேன்
அவர்கள் அனைவருக்கும் மத்தியில்,
என் சுயம்
காணாமல் போயினும்,
அடையாளம் தொலைப்பினும்..
அனைத்தையும் ஏற்றுக்கொண்டு..,
மரண பயத்தினையும் கூட..

மனிதர்களை என் நேசத்துக்குரியவர்கள்..,
வேறெதனையும் விட.....


மோனிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமெங்கும் பொழியும் முன்பனிக்கால மந்தாரங்கள்

நிவேதா கவிதைகள்

1.
உதடுகள் இறுகத் தாளிடப்பட்டு
ஊடறுக்க முடியா மௌனங்களுடன்
வாழ்தலின் கனம்
உயிர்தின்னத் தொடங்கியவோர் பொழுதில்
கழற்றியெறிந்த கச்சையின்
வியர்வை தோய்ந்த பெண்மையின் வாசனையை
ஆழ உள்ளிழுத்து
குலுங்கிக் குலுங்கியழுதபடி,
ஏதுமற்ற வெளியில் குருதி துளிர்க்க
காற்றைக் கிழித்து சுழன்று கீழிறங்கும்
மனச்சாட்டையின் முறுக்கிய மொழியில்
என் முலைகளுக்கு நான்
பேசக் கற்றுக்கொடுத்தேன்

சுவாலைவிட்டு நிலவு எரிந்து
கருகும் பிணவாடை கவிந்திருந்த இரவதனில்
ஊர் கேட்ட முதற் குரல்:
"நான் மகத்தானவள்..."
என்பதாயிருந்தது
நட்சத்திரங்களும் எதிரொலித்து
அண்டசராசரமெங்கும் நிறைந்து வழிய
காம்புகளில் துளிர்த்த
முதல் துளியின் வாசனை
பறைசாற்றிப் போகும்
நான் மகத்தானவள்..
மகத்தானவள்..

மொழியின் லாவகம் கைவந்த மறுகணம்
காலங்கள் பற்றியதான
இல்லாமலேயே போய்விட்ட பிரக்ஞைகளோடு
வெறித்த கண்கள்
தெருவோரமெங்கும் நிலைகுத்தி நிற்க
நொடிக்கொரு திசையில்
திரைகளை விலத்தியபடி
விட்டேத்தியாய் சிறகடித்துப் பறக்கும்
என்னொரு முலை..
சமூகத்தின் அடிவயிற்றைக் கிழித்தெறிந்த
தடயங்களைச் சேகரித்தபடி
நானுமொரு பெண்ணென்ற கெக்கலிப்புடன்
பின்தொடரும் மற்றொன்று..

இனியெதற்கு என் தயவு
முலைகளே பேசட்டும்..,
கழுத்தை நெரிக்கும்
'ஆம்பிளை'த்தனங்களைப் பற்றி..
கால்களைப் பிணைக்கும்
யுத்தச் சங்கிலியைப் பற்றி..
இன்னமும்,
அந்தரத்தில் அலைவுண்டிருக்கும்
என் எப்போதைக்குமான
கனவுகளைப் பற்றி...

2.
அனைத்தையும் களைந்தெறிந்து
கனவுகளோடு மட்டுமேயென
வாழ முற்படுவது
தேவலை போலவும்...
அவள் தந்த உடலுக்காகவும்,
நோயில் வீழ்ந்த தேசமொன்றில்
நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்தலுக்காகவும்
கண்காணா பரப்பிரம்மத்தை
சபித்துச் சபித்து
தேறுதலடைவது போலவும்...
கட்டற்று பிரவகிக்கும் வார்த்தைகளை
அதன் போக்கிற்குப் பெருக்கெடுத்தோட
அனுமதிக்க மறுத்தவோர்
தனித்த இரவதனில்
எப்படியும் நெஞ்சு வெடித்து
என்றென்றைக்குமாக இறந்துபோவேன்
யாரும் எதிர்பாரா பிரளயமொன்றிற்கு வித்திட்டபடி...



வாசுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரளவே தானா நீராம்பல்?

**சமகால ஈழத்துப் பெண் கவிதை**
**- மித்ரா -**

1986இல் சொல்லாத சேதிகள். அதற்குப்பிறகு 1992இல் புகலிடத்திலிருந்து மறையாத மறுபாதி தொகுப்பு. இவையிரண்டுக்கும் பிற்பாடு ஈழத்தமிழ்க் கவிதைப் பரப்பில் பெண்கள் எடுத்துக்கொண்ட இடம் எத்தகையது என்பது தொடர்பில் விரிவாகவே பேசப்பட்டுள்ளது. இவற்றின் பின்பாகவே 'பெண்ணின் தன்நிலை.' வலுவாக பிரக்ஞைக்கும் பிரச்சினைக்கும் உட்படுத்தப்படுகிறது. பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்வும் அதிகரித்த காலப்பகுதியாக 90களை சொல்லலாம்.

மேற்குறித்த கவிதைத் தொகுப்புகளில் உள்ள கவிதைப் பிரதிகள் கவிதைகள் தானா? இவை உண்மையாகவே பெண்ணிய அரசியலை பேசுகிற பிரதிகள் தானா? இப்படியான கேள்விகள் ஒருபுறமிருக்க, இத்தொகுப்புகள் முன்னெப்போதுமில்லாத விதத்தில் பெண்ணின் தனித்துவமிக்க குரலை ஈழத்துக் கவிதை வெளிக்குள் ஒலிக்கும் வகை செய்தவை என்பதை மறுக்கவியலாது. சிவரமணி, செல்வி போன்றோரின் கவிதைச்செயற்பாடுகள் இன்னமும் கூட 'தூக்கியெறியப்பட முடியாத கேள்விகள்' தான். 90களில் சிவரமணி கவிதைகள் தொகுப்பாக்கப்பட்டன. அதேபோல் வானதி, தூயவள் போன்ற போராளிப் பெண்கவிகளது கவிதைகளும் தொகுப்பு வடிவையடைந்தன. 95இல் கஸ்தூரியின் 'விலங்கிடப்பட்ட மானுடம்' தொகுதி வெளிவந்தது. 90களின் பிற்கூற்றில் 'உயிர்வெளி' 'கனல்' தொகுதிகள் வெளியிடப்பட்டன. இவை தவிர பெண் எழுத்து 90களில் எவ்வாறிருந்தது என்பதற்கான ஆவணங்கள் இல்லை. இக்காலப்பகுதியில் வெளிவந்த சிறுபத்திரிகைகள் மாற்றுப்பத்திரிகைகள் அனைத்துமே பெண்களால் எழுதப்படும் கவிதை புனை பிரதிகளுக்கு முக்கியத்துவமளித்து வெளியிட்டன. 90களின் முற்கூற்றில் 'திசை' பத்திரிகை வழியாக மைதிலி அறிமுகமாகிறார். பின்பு சரிநிகர், பூவரசு, மூன்றாவது மனிதன், நோக்கு போன்றவற்றில் பெண்ணியா, கலா, ஔவை, ஆழியாள் ஆகியோர் எழுதினர். தாயகம் இதழும் சில பெண் கவிதைகளை பிரசுரித்திருக்கிறது.


சுகந்தி

2000மாம் ஆண்டின் பின்னரே அதிகளவு பெண் கவிதைத்தொகுப்புகள் வெளி வந்தன. 'எழுதாத உன் கவிதை' தொகுப்பு நூல். ஆழியாளின் 'உரத்துப்பேச' (மறு.2000) 'துவிதம்' (மறு.2005), ஔவையின் 'எல்லை கடத்தல்' (மூன்றாவது மனிதன். 2000), மைதிலியின் 'இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்' (காலச்சுவடு.2003), அனாரின் 'ஓவியம் வரையாத தூரிகை' (மூன்றாவது மனிதன்.2004), ரஞ்சினி கவிதைகள் (உயிர்மை.2005) பெண்ணியாவின் 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை' (ஊடறு.2006) என்பன முக்கியமான கவிதைப் பிரதிக் குழுமங்கள். 2000த்திற்கு பின்னர் மூன்றாவது மனிதன், வெளிச்சம் இதழிலும் உயிர்நிழல், அற்றம் போன்ற புகலிட சஞ்சிகைகளிலும் அதிகளவில் பெண் கவிகள் இயங்கினார்கள். ஊடறு இரண்டு தொகுப்பு நூல்களில் பல கவிதைகள் இடம் பெற்றிருந்தன. புகலிடத் தொகுப்புகள் (இன்னுமொரு காலடி, கண்ணில் தெரியுது வானம்) பலவற்றிலும் பெண்களது கவிதைகள் இருந்தன. வீரகேசரி 'உயிர் எழுத்து' பகுதியும் பெண்கள் பலரது கவிதைகளை பிரசுரித்து ஊக்குவித்தது. ஆகர்ஷியா, பிரதீபா, ரி.உருத்திரா, தான்யா, பஹீமா ஜகான், விநோதினி (அருந்ததி), எஸ்.கார்த்திகா, சித்தி றபீக்கா, துர்க்கா, தில்லை, மலரா, ராசு போன்றவர்கள் இக்காலப்பகுதியில் அச்சு ஊடகங்கள் வாயிலாக அறியப்பட்டவர்கள். இணையத்தளங்கள், வலைப்பதிவுகள் வாயிலாக அறிமுகமானோரில் முதலிடம் கற்பகம் யசோதரவுக்கும் (மூன்றாவது மனிதனிலும் சில கவிதைகள் பிரசுரமாயுள்ளன.) 'ரேகுப்தி' நிவேதாவுக்கும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2000க்குப் பின்னான ஈழத்துப் பெண்கவிதைப் பரப்பில் பாடுபொருளின் தீவிரம். பெண்ணிய அரசியலையும் கவிதையியலையும் புரிந்து கொண்டமை. பயில் புலத்தின் வடக்கு மையம் அகன்று போதல். முஸ்லிம் /புகலிட அனுபவங்கள் கவிதை வெளிக்குள் வருதல் எனச் சில சாதகமான அம்சங்களை பட்டியலிட முடியும்.

சமூகத்தில் தமது நிலை, தாம் ஒடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம் என்பது குறித்த புரிதல் மேற்குறித்த பெண் கவிகள் அனைவரிடமும் உண்டு.

ஆயினும், 'பெண் எழுத்து' என்ற வகைமையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில், ஈழத்துப் பெண்கவிதையின் போதாமைகள் இலகுவில் புலப்படும். இதுவரையான ஈழத்துப் பெண்கவிதை பெற்று வந்த விமர்சனங்கள் இந்த நிலைக்கு முக்கிய காரணம். 'பெண்' என்பதற்காகவே முன்னுரிமையும் முற்சாய்வும். அணுகல் முறையில் ஒருவித பரிதாபமும் சேர்ந்து விடுகிறது. சிவசேகரம், மு.பொ, மதுசூதனன் என அனைத்து தரப்பினரதும் பலவீனம் இதுதான். 'பெண்' அதிலும் 'ஈழத்துப் பெண்' என்று வருகையில் 'கவிதை' 'கோட்பாடு' எல்லாம் இரண்டாம் மூன்றாம் பட்சமாகி விடுகிறது. இந்த பண்பை தீவிர இடதுசாரி விமர்சகரான சி.சிவசேகரம் 'சொல்லாத சேதிகள்' 'மறையாத மறுபாதி' இரண்டுக்கும் செய்த விமர்சனப் பிரதிகளில் காண முடியும். விமர்சனம் என்பது மிஞ்சிப்போனால் கவிதையியல் /மொழிப்பிரயோகம் சார்ந்ததாக மாத்திரம் தன்னை மட்டிறுத்திக் கொள்கிறது. இவற்றையொட்டியே சி.சிவசேகரத்தின் ஏற்பும் மறுப்பும் அமைந்து விடுதலை துல்லியமாய்க் காண இயலும். குறித்த கவிதைப் பிரதிக் குழுமங்கள் கோரி நின்ற அரசியல் வாசிப்புகளை சிவசேகரமோ அல்லது அக்காலப்பகுதியில் தாமும் கதைத்ததாய் நினைப்பவர்களோ செய்யவில்லை. இதன் காரணமாகத்தான், சிவரமணியையொத்த இன்னொருத்தரை இன்றளவும் ஈழத்துக் கவிதைப் பரப்பு சந்திக்கவேயில்லை.

... ... ...

ஈழத்துப் பெண் கவிதைகளில் சிறப்பாக குறித்துச் சொல்லப்பட வேண்டியது ஆயுத வன்முறைக்கெதிராக அக்கவிதைகளில் எழுந்து கொண்டேயிருக்கும் ஈனக்குரலிலான ஓலமும் எதிர்ப்பு மறுப்பும் தான். ஆண்கவிகள் வன்முறையை உவந்தேற்றுப் பாடுபவர்களாக இருந்த காலப்பகுதிகளிலேயே சிவரமணி,



மோனிக்கா

மைதிலி, ஔவை போன்றோர் அதை மறுத்துரைப்போராய் இருந்தனர். வன்முறைக்கெதிரான தாயின் அநாதைக் குரலாய் இவர்களது கவிதைகள் ஒலித்தன.

பெண்ணாக போரை, வன்முறையை பதிவு செய்வதில் கலாவும், கற்பகம் யசோதரவும் முக்கியமானவர்கள் கலாவின் கோணேஸ்வரிகள் ஏற்படுத்திய அதிர்வுகளை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். கற்பகம் யசோதர வன்முறையின் அவலமிக்க தருணமொன்றை பின்வருமாறு கவிதையாக்குகிறார்

*// அந்தரா, ரூபி, மித்தாலியா.*
*தூரத்தில் என் பிள்ளைகள் கதறின...*

***தூக்கி குறிபார்த்து கல்லை***
*எறிய - கூடிருந்து சிதறி -*
*பறவைகள், கலைந்து...*
*(ஓ. ஒரு நாயைப் போல கிடந்தாய்)*

*சேர்ட் பட்டன்கள்*
*அறுந்து விழுந்து*
*திறந்த நெஞ்ச மயிர்களில்*
*சிதறி இரத்தம்*
*இன்னும் பிளந்தால்*
*நெஞ்சு வெடித்துக் கதறும்*
*என் பிள்ளைகள் இருப்பார்கள்//*

கவிதைக்கான தனிமொழியென தமிழில் கற்பிக்கப்பட்டு வந்ததை சிதிலப்படுத்தி நேரடியாக புலம்புகிற/ எடுத்துச் சொல்கிற தொனியில் அதிர வைக்கும் கற்பகம் யசோதர வன்முறைக்குள் பெண்ணாக இருத்தலின் பதிவுகளை கவிதையாக்குவதில் முதன்மையானவர். கலா அரசியல் சரிபிழைகளுக்குள் குறுகி நின்றுவிட கற்பகம் யசோதர எல்லாவற்றையும் புறக்கணித்து இயங்குகிறார். கழிவிரக்கத்தையும் கையாலாகாத உணர்வையும் இன்னும் என்னென்னவோ அந்தரமிக்க உணர்வுகளையும் தொற்றச்செய்து விடும் கவிதைகள் முதன்முறையாக ஈழத்துக் கவிதையில் யசோதரவிடமிருந்து மட்டுமே கிடைக்கின்றன. 'யுத்தத்தை நிறுத்தியிருந்த போது...' கவிதையில்

*//பதுக்கப்பட்டு*
*கடந்த வதைகளின் தடங் காட்ட*
*வன்மங் கொண்டு நிற்கிறது*
*யுத்த காலம்!*

*இப்படித்தான் தன் துணையிழந்து*
*இங்கே ஒரு பெட்டை நாய்*
*தனது குட்டிகளை வளர்க்க*
*உங்கள் விசர் தீர்க்க*
*தனது குறியை*
*"இருக்கிறதும் கிழிய விட்டபோது"'*
*அத்*
*தீராக் கிடங்கில் விழுந்து*
*எழுந்த*
*ஒருத்தன் சுட்டான்*
*எக்களிப்புடன்.*

*வெட்கங் கெட்டவன்கள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் குறியைக் பிடித்துத்
தொடர்ச்சியாய்
தம் பத்திரிக்கைகளில் அடித்தார்கள்:
"தெரு நாய் கொலை!"
ஆனால் அருகிருந்து கதறிய
பிள்ளைகள் அழுதது
திசையறியா ஓர் எதிர்காலத்தின்
மீதாக.
அவை அழுதன,அழுதன,
தொடர்ந்து அழுதன!//
என்கிறார்.

knives & collapses i இல் யுத்தத்தினுள் பெண்ணாயிருத்தலை கச்சிதமாக படம் பிடித்துக் காட்டுகிறார்.

//அவளிடம் யாரும் சொன்னார்
இல்லை
வெடுக் வெடுக்கென நடக்கும்
கோழிபோல
உள்ளுணர்வுகளில் அனர்த்தம்
வெடுக்கென நீட்ட
கைப்பிள்ளையோடு
ஒரு விசரியாய் ஓடினாள்
அவள்
(அந்தரா அப்போ உனக்கு
வயது நான்கு)
உணர்வுகள் கணமும் காயம்
பீறிட்டு வெளிப்பட நிக்கும்
அவளிடம் சொல்ல
யாரும் துணிந்தாரில்லை.

வயிற்றலடித்து அழுதாள்
அம்மையின் அம்மா
ஐயோ... என்ர பிள்ளைக்கு
இப்பிடி ஆனதே
என்ர பிள்ளைக்கு இப்பிடி
ஆனதே

வன்னிக் காடே உனக்கு
நினைவிருந்திருக்கும்
குடா நாட்டுக் கடல்களே
உங்களுக்கு
நினைவிருந்திருக்கும்
ஒரு கறிக்குதவா மரக்கறியாய்
உணர்ச்சியற்ற மரமாக
'வழங்காத' உடலாக
ஏனும்..ஏனும்
'உயிருடன்' கடவுளே
அவனைத் திருப்பித் தா
திருப்பித் தா
- என அவள் கதறிய கதறலை //

கலா, கற்பகம் யசோதர ஆகியோருக்கு அடுத்து அனாரை சொல்ல முடியும். 'மேலும் சில இரத்தக் குறிப்புகள்' என்ற அவரது கவிதை இந்த வகையில் முக்கியமானது,

//சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும்
சுவர்களில்
மன்றாடும் மனிதாத்மாவின்
உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன
வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறிபிடித்த தெருக்களில் உறையும்
அதே இரத்தம்
கல்லறைகளில் கசிந்து
காய்ந்திருக்கும் அதே இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து
கொண்டே இருக்கிறது//

கலா, கற்பகம் யசோதர, அனார் போல இல்லாவிடினும் கூட வன்முறைக்கெதிரான குரல் என்பது பிற பெண்களிடமும் உள்ளது தான். இப்படியான உதாரணங்களை ஒவ்வொருத்தரிடமிருந்தும் பெற்றுத் தர முடியும். போராளி கவியான


அருந்ததி

அம்புலி கூட வன்முறைக்கெதிரான தனது உணர்வுகளை எழுதியிருக்கிறார். அம்புலியின் 'நான் எப்போதும் மரணிக்கவில்லை' கவிதை இவ்வாறு தொடங்குகிறது.

// குண்டு மழைக்குளிப்பில்
குருதியுறைந்த வீதிகளில்
நிணவாடை கலந்த சுவாசிப்புகளில்
வெறுப்படைகிறேன் //

இந்த ஒரு அம்சமே ஈழத்துப் பெண் கவிதைகளுக்கு முக்கியத்துவத்தை வழங்குகிறது. இப்படியான அம்சங்கள் ஏற்படுத்தும் மனக்கிளர்வையும் முற்சாய்வையும் நீக்கி விட்டு இக்கவிதைகளை வாசிப்புச் செய்ய வேண்டும்.

....

இவர்கள் கவிஞர்கள் தான் என்பதில் எனக்கு மறுப்புக்களோ சந்தேகங்களோ இல்லை. அடையாளச்சிக்கல், பின் காலனித்துவம் என்றெல்லாம் புத்திபூர்வமான வாசிப்புகளை கோரும் கவிதைகள் ஆழியாளிடம் உண்டு.(துவிதம் தொகுப்பு) ஹனீபா சொன்னது போல கவிதையை அசையும் ஓவியச்சீலையென மாற்றும் திறமை பஹீமா ஜகானின் (ஒரு கடல் நீரூற்றி...) மொழிக்கு உண்டு. ஆயினும் தமது கவிதைக்குள் எந்தளவு தூரம் 'பெண்களாய்' இவர்கள் இருக்கிறார்கள்? பெண் மொழி பற்றி தமிழில் விவாதிப்போரில் முன்னணியில் இருக்கும் மாலதி மைத்ரி எழுதுவதைப் பாருங்கள் "பெண் மொழி என்று கவிதையில் தனியாக அடையாளப்படுத்த சில தெளிவுகளும் அதற்கான கோட்பாடும் உருவாக வேண்டியிருக்கிறது. பெண் பாலுறுப்பை குறிக்கும் கவிதைகளை பயன்படுத்தினால் பெண் மொழி உருவாகி விடாது. பெண் மொழி என்பது அரசியல். பெண்ணிருப்பை பற்றியும் பெண் உடல் பற்றியும் சமூக குடும்ப நிறுவன வெளிகளில் உருவாக்கப்பட்டுள்ள அவளுக்கெதிரான கருத்தாக்கங்களையும் மதிப்பீடுகளையும் சிதைத்து அவற்றின் வன்முறைக்கெதிராக குரலெழுப்புவதுதான் பெண்ணின் மாற்று அரசியல். ஆண்மைய மொழிக் கலாசாரத்தின் அகப்புற வெளி எல்லைகளை மீறி மொழிக்குள் இயங்குவதன் மூலம் பெண் மொழியை உருவாக்க முடியும். காலங்காலமாக சுமத்தப்பட்ட நிர்ப்பந்திக்கப்பட்ட கருத்தியல் வன்கொடுமைகளுக்கு எதிராக அரசியல் கவிதைகள் தமிழில் அதிகம் உருவாகும் போதுதான் பெண்மொழி பெண்ணிய மொழி சாத்தியமாகும்' (விடுதலையை எழுதுதல். காலச்சுவடு ப.12)

தமது எழுத்துக்குள் உருவாக வேண்டிய இந்த அரசியல் போர்க்குணத்தை, அதன் வரலாற்று நிர்ப்பந்தத்தை ஆழமாக பல ஈழப்பெண்கவிகள் உணரவில்லை. உணர்ந்த ஒரு சிலர் ஆண் எதிர்ப்பு பிரகடனங்கள், அறிவுரைகள், துறவு என முடங்குகிறார்கள். உணர்ந்தவர்களில் வேறு சிலர் அந்த அரசியலுக்கு முரணாகவும் இயங்குவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கவிதை வெளிப்பாட்டு மொழியிலும் உத்திகள் படிமங்களிலும் அபாரமாக வளர்ச்சியடைந்து வரும் அனாரின் 'நிறங்களாலானவனைக் காத்திருக்கிறேன்' கவிதை தனக்கு உவப்பானவனை கவிதை வெளிக்குள் உருவாக்கிப் பார்க்க முனைந்து தோற்றுப் போய் காவியக் காத்திருப்பை மேற்கொள்கிறது. பெண்ணியா கண்ணீர்த்துளிகளுடன் எல்லாம் வெறுத்து சன்னியாசினியாகி விடுகிறார். இடைக்கிடை பிரகடனங்கள் செய்து கொள்வது அவரது ஸ்ரைல்.

சித்தி ரபீக்கா, ராக ஆகியோர் பெண்ணாக அனுபவிப்பவற்றை அரசியல் பிரதிகளாக மாற்ற முனைவதேயில்லை. இவர்களது கவிதைகள் வெறுமனே புலம்பல்களாக எஞ்சிப்போய் விடுகின்றன. தில்லையின் கவிதைகள் இப்புலம்பலில் இருந்து சற்று மேல் நகர்வது போல் தோன்றினாலும் கூட திரும்பவும் யதார்த்த வட்டத்துள் வந்து விழ்கிறது. அன்னா அஹ்மதோவாவின் கவிதையியல் பற்றி விரிவாக பேசும் ராக பெண்ணிய அரசியலையே மறுக்கும் விதமாக ஆணை மட்டுமன்றி அவனது வன்முறையையும் சேர்த்தே உவந்தேற்றுப் பாடுகிறார்.
எ.கா:

*'நண்ப*
*என் ஆதர்ஸ நண்ப*
*அலையோடு அள்ளி*
*கதைகளை எறிந்த*
*உன் மௌனம்*
*உலக மொழிகளுள் சிறந்தது'*

பெண்ணியா ஆணை நோக்கிய விளழவைப் பாடுதலை சினிமாத்தனமான படிமங்களுடனும் சோகத்துடனும் செய்கிறார். எனினும் கூட பெண்ணிய பிரக்ஞையுடன் அவர் வெளியிடும் கவிதைப் பிரகடனங்களில் சில வலிமையாக இருப்பதை மறுக்கவியலாது.

*// என் பயணம் ஆரம்பித்தாயிற்று*
*முடிவுகளற்ற இலக்கை நோக்கி*
*தனித்தாயினும் பயணிப்பதே*
*இயன்றவரை*
*என் சிறகுகளின் மீது நீளும்*
*எல்லா கைகளுக்கெதிராகவும்*
*என் கனவுகளின் மீது*
*கொடூரங்களை வரைய நீளும்*
*எல்லா தூரிகைகளுக்கெதிராகவும்//*

ஆனாலும் கூட இந்தவகைப் பிரகடனம் 80களுக்குரியது. காலவழக்கொழிந்தது என்பதை சொல்ல வேண்டியுள்ளது.

பெண்ணியா காலவழக்கொழிந்த பிரகடனங்களை மீறி நகராமல் இருப்பது அவரது பலவீனம். இதை விட பெண்ணியாவை குறித்து இன்னுமொன்று தானே நான்கு விதங்களில் விளம்பாக்கப்பட்டவராய் இருந்து கொண்டு (முஸ்லிம்-தமிழ்-இஸ்லாமிய-பெண்) 'நான் உன்னதம். உங்களில் ஒருத்தியில்லை' என்றெல்லாம் இறுமாப்பு கொள்ள இயலுமாகிறது.

*//தோற்கடிக்கப் படலாமென*
*உணர்ந்தும்*
*நான் போரிடுகின்றேன்*
*உங்களுள் ஒருத்தியாய் அல்ல*
*ஓர் உன்னதப் பிறவியாய் //*

... ... ...



ஆரதி

அறிவுஜீவித்தனமானவையாகவும் கோட்பாட்டு ரீதியான அணுகல் முறை கொண்டவையாகவும் பார்க்கப் படக்கூடிய கவிதைகளைத் தந்த ஆழியாளின் கவிதைகள் பெண்ணிய அரசியல் நோக்கில் பெரும் வீழ்ச்சி துயரமானது. 'பறத்தல் அதன் சுதந்திரம்' தொகுப்பாளர்களான பெண்ணியர்களுடன் கூட சமரசத்தை விரும்பாத ஆழியாள் தனது ஒடுக்குமுறையாளனுடன் பண்ணிக் கொள்கிற சமரசம் சிரிப்பை வரவழைப்பது.

*//நீயும் நானும்*
*வரையறைகளைக் கடக்க வேண்டும்*
*- நான்,*
*உன் விவேகத்தோடும்*
*நீ என் வீரியத்தோடும்*
*கடக்கவேண்டும்.*

*எனினும்*
*என் கருவறையை*
*நிறைப்பது உன் குறியல்ல*
*என்ற புரிதலோடு*
*வா!*

*ஒன்றாய்க் கடப்போம்.*
*நீ என் விவேகத்தோடும்*
*நான் உன் வீரியத்தோடும் //*
('தடைதாண்டி' உரத்துப்பேச தொகுப்பு)

அவனது ஒடுக்கு முறையை உணர்ந்து கொண்டதன் பின்போ என்னவோ சண்டை இடுகிறார்

*//இத்தனைக்குப் பின்னும் பெண்*
*போகமா உமக்கு*
*போக்கிடமே இல்லையா*
*அவளுக்கு? //* (உரத்துப் பேச)

பின்னர் நிலையுணர்ந்து...

*// ஆளுமை கண்டால்*
*ஆட்டக்காலடி என்பீர்*
*அஞ்சி ஒடுங்கிவிட்டால் அசல்*
*குத்துவிளக்கு என்பீர் - அந்த*
*வெள்ளிடிதான் உம்வாயில்*
*விரைந்தோடி வீழாதோ? //*
(உரத்துப் பேச)

என சபிக்கிறார். இவ்வளவு தான் 'உரத்துப் பேச' தொகுப்பில் ஆழியாள் எனும் பெண் கவிஞர் செய்வது.

... ... ...

புலம்பலும் சபித்தலும் திட்டலும் பிறிதொரு சமயம் சமரசம் செய்தலுமாய் இவர்களது கவிதைப் பரப்பு நிரம்புகிறது. தொகுத்துப் பார்த்தால் இந்தப் பெண் கவிகள் சாடலும் ஊடலும் கூடலுமாய் கணவன் காலடியில் கிடக்கும் தமிழ்ப் பெண்டாட்டி வகைமாதிரிகளே தவிர வேறில்லை.

—

இந்த மென்போக்கு பெண்கவிகளின் கிணற்றுத்தவளைத் தனத்தில் இருந்து வேறுபட்ட கவிதை வெளியை. தமக்கான அரசியலை உருவாக்க முனைவோராக ஒரு சிலரையே சொல்லலாம். கலா, கற்பகம் யசோதர மற்றும் மைதிலி ஆகியோர் குறிப்பிட்டுச் சொல்லப்படக் கூடிய முன்னுதாரணங்கள். கலாவின் சர்ச்சைக்குள்ளான 'கோணேஸ்வரிகள்' கவிதையை சிங்கள தமிழ் முரணைப் பின்புலமாகக் கொண்டு அணுகுவது தவிர்க்க முடியாதது தான் என்றாலும் ஆண் பெண் முரண்பாட்டில் சிக்கற்பாடான பெண்ணிய வெளிப்படுகையாகவும் கூட அதை வாசித்துப் பார்க்கலாம். அப்படிக் கொள்ளப்படுமாகில் அக்கவிதை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும் அர்த்த விரிவுகள் எல்லையற்றவை. தனியே சிங்கள இன ஒடுக்குமுறைக்கான அரசியல் எதிர்ப்பு பிரதியாக மாத்திரமன்றி பெண்ணிய அரசியல் பிரதியாகவும் உள்ளது. 'இக்கவிதையில் கையாளப்படும் யோனி எனும் குறியீடு படைப்பின் அதி உச்ச சாத்தியப்பாட்டை புலப்படுத்தி நிற்பதாக' கூறுகிறார் சி.ரமேஷ் (காண்க. ஈழத்து நவீன கவிதையில் பெண் புனைவு. சி.ரமேஷ். தெரிதல்)

-

மைதிலியின் கவிதைப் பரப்புக்குள் ஆண் பலமான தாக்குதலுக்காளாகிறான். வெளிப்படையாகவே சொல்லப்போனால் மைதிலியின் கவிதைகள் ஒடுக்குமுறையாளனை Castrate செய்ய முயற்சிப்பவை. தனது நிலையை உணர்ந்து கொண்ட விதத்தை இவ்வாறு எழுதுகிறார் மைதிலி

*// குறும்பும் சிரிப்பும்*
*கொண்டவளாய்*
*கனத்த மார்புகளுடையவளாய்*
*நேசிக்கப்படுகிறேன் நான். //*

இதற்கான எதிர்ப்புணர்வு ஆதங்கமிக்க கேள்வியாய் வெளிப்படுகிறது

*//யோனி முலைகளற்ற*
*பெண்ணை*
*யாரும் காதல் கொள்வாரா? //*

தன் ஒடுக்குமுறையாளனின் போலி வேஷங்களையும் ஒடுக்குமுறையின் நுண்ணிய உத்திகளையும் புரிந்து கொள்கிறார் மைதிலி. அவற்றை அவரால் இனங்கண்டு நிராகரிக்கவும் முடிகிறது.

*// கலங்குகின்றன உன்*
*விழிகள்*
*தலையை வருடுகின்றன*
*கரங்கள்*
*இது ஒன்றும் விசேடமானதல்ல*
*எனக்கு*
*நீ நடக்கிற பாதையில்*
*ஒரு மரத்தைக் கடக்கிறாய்*
*அவ்வளவேதான் //*

வெகு இயல்பாக மிகவும் அழுத்தமாக தான் அவனைப் பொறுத்தவரை ஒரு பொருள் மாத்திரமே என்பதை சொல்கிறார்.

*// அவன் தனது பேனாவால்*
*தாள்களில் கிறுக்குவது போல*
*தனக்குரிய சீப்பால்*
*தலையை அழுத்தி வாரிக் கொள்வது*
*போல*
*தாடியைச் சீவுகிற சவரக் கத்தியை*
*கவனமாக கையாள்வதைப் போல*
*எல்லாம் முடிந்து*
*அமைதியாய் தூங்குகிறான் அருகே*
*என் இத்தனை நாளைய*
*காதலும் கனிவும்*
*இதந்தரு மென்னுணர்வுகளும்*
*பொங்கியெழுந்த குறியின் முன்*
*ஒழுகிக் கிடக்கிறது*
*கட்டிலின் கீழே //*

இவ்வாறு ஆணை நிராகரித்து வரும் மைதிலி ஆண்குறியின் உன்னத Filler பிம்பத்தை உடைத்து castrate செய்து விடும் இடம் இது

*//கோபம்*
*உன் குறியை*
*சூம்ப வைத்து விடுகிறது //* (பக்62. இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்)

—

மூன்றாவது மனிதன் இதழ்கள் சிலதிலும் பெரும்பாலும்



மோனிக்கா

இணையத்திலும் எழுதும் கற்பகம் யசோதர, போரின் அவலம், பெயர்தல், அகதியாக்கப்படல், வன்முறை, பெண்ணாயிருத்தல் என தனது கவிதை வெளியை உற்பவிக்கிறார். இவருடைய கவிதை மொழி தமிழுக்கு முற்றிலும் புதியது. வித்தியாசமான அதிர்வுகளை தரக்கூடிய நேரடி முன்நிலை விபரிப்பு பெரும்பாலான கவிதைகளில் பயன்படுத்தப்படுகிறது. பெண்ணிய அரசியல் மாத்திரமன்றி ஈழதேசப்போராட்டத்தையும் அதன் உடன்நிகழ்வுகளையும் பாடுபொருளாக்கும் யசோதர ஆண்களின் அரசியல்/சமூக/போராட்ட களங்களில் பெண்ணாக வலியற்றிருப்பதன் அசாத்தியங்களைப் பேசுகிறார். தாய்மை, நேசம், மென்னுணர்வுகள் பொங்கும் பெண்ணொருத்தி வன்முறைக்குள் இயக்கமடையும் விதங்களை எழுதும் வல்லமை யசோதரவுக்கு அபரிமிதமாக கைகூடி வந்திருக்கிறது.

*//சைக்கிளை மிதித்துக் கொண்டு*
*பிரதேசத்தின் வயல் வெளிகளில்*
*இன்னுமொரு கொலைநாளில்*
*ஓர் இன்னுமொரு கொலைநாளில்*
*உல்லாசமான பாடல்களின்*
*சீட்டியடிப்புகளின்றி*
*வதைமுகாம்கள்*
*இராணுவ முகாம்கள்*
*சோதனைச் சாவடிகள் ஊடு*
*முகமூடி "யாரோ"*
*எதிர்ப்படும் நொடி வரையில்*
*இரண்டு சகாப்தங்களாய்*
*யாராலோ*
*கொல்லப்படுவதற்காகவே*
*காலங்கள் சுழலும்*
*இத் தெருக்களில்*
*போய்க் கொண்டிருக்கிறேன் //*

ஔவை போன்றவர்களின் போலித்தனங்கள் நீங்கி அதீத பின்நவீன யதார்த்தப் பாங்கில் நகரும் வரிகள். மொழியின் அர்த்தம், தொடர்ச்சி அற்றுப்போக ஒரு ஓப்பாரியைப் போல அல்லது இடப்பெயர்வின் நடுவே அந்தரமிக்க துக்க விசாரிப்பை போல ஒலிப்பவை இவை

*// எம் பால்யத்தின் ஓலைவீடு*
*மழைக் காற்றில்*
*அடி அடிப்பதை விடவும்,*
*மயிரிழையில் ஆடும்*
*நம்பிக்கையில்*
*அச்சங்களிற்கு அப்பால்*
*எதை நோக்கிச்*
*செல்கிறீர்கள்?//*
*கோணமலையிலிருந்து*
*புறப்பட்ட குடும்பமொன்று*
*இடைவழியில்*
*படகு மூழ்கி*
*தன் பிள்ளையைப் பறிகொடுத்த*
*தகப்பனின் கதறலோ*
*கரைகளை அடையவில்லை*

*கொந்தளித்த அலைகளுள் சிறு*
*குரலோ எழும்பவில்லை*
*நட்சத்திரங்கள் கொட்டியில்லாத*
*கரைகளில்*
*பாதங்கள் படிகிற போதினில்*
*(என் அன்பே, நண்பனே)*
*உமைத் தோய்ந்திருந்த குருதி*
*கழுவுப்பட்டு இருப்பதாக,*
*குரல்வளையைப் பிடித்திருந்த*
*கொடும் கரங்கள்*
*இங்கும் நீட்டப்படா திருப்பதாக,*
*கிராமத்து தேவாலயங்களில்*
*தஞ்சமடைந்த*
*பிள்ளைகளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்கள்" கொன்று போட்ட குருதி
வற்றிப் போக முன்னர்,
அரசியலேதுமற்ற ஓர் அப்பாலிக்
குடிமகனும்
"போகுது சவம்" என
"தட்டப்படும்" உயிர் குறித்த
கரிசனைகளுள்,
அவனும் இவனும் போவ வர
சுட்டுச் சுட்டுப்
போனவர்கள் விட்டுச் சென்ற
கண்ணீர்"//
என்னதான் அன்பு பாசம் நேசம்
தாய்மை என்று சொன்னாலும் ஆண்
உலகின் வன்முறை மீது
யசோதர அளவு கடந்த
வெறுப்பை உமிழ்கிறார். ஆண்
அரசியல் தான் அனைவரையும்
ஆட்சி செய்கிறது என்பது
தொடர்பில் யசோதர
தெளிவாயிருக்கிறார். எழுதும்
பெண்களுக்கு முதலாவது
தணிக்கையாளனாய் இருக்கும்
அறப்பொறுப்புணர்வில் இருந்து
விடுபட்டு ஆண் அரசியல் மீது
கீழ்வரும் விமர்சன வரிகளை
எழுதுகிறார்
// உன் தேச நலனிற்காய் நீ பிற
இனத்தவரை ஆள
அனுப்பப்பட்டிருக்கிறாய் //
//யோனிகளைப் பிளப்பதற்கான
பத்திரத்துடன்
ஆக்கிரமித்த நிலப் பெண்களின்
காதலர்களின்
குறிகளை வெட்டும்
அனுமதியுடன்
தவிரவும் சித்ரவதைக்
கூடங்களிற்கான திறப்புகளுடன்
துப்பறியும் பொலிஸ்காரர்
கட்டை அவிழ்த்து
சாவை முகர்ந்துவர விடப்
படும்
நாயினது துரிதத்துடன்
பார், பார் நகரின் அரசியல்
தலைவர் அனுப்பிய
குண்டர் கொட்டாந் தடியுடன்
எதற்கும் தயாராக! ஜீப் ஜீப்பாய்
தொங்கிக் கொண்டு //
// வெட்கங் கெட்டவன்கள்
ஆண் குறியைக் பிடித்துத்
தொடர்ச்சியாய்
தம் பத்திரிக்கைகளில் அடித்தார்கள்
//
தனது நிலை தொடர்பான புரிதலுடன்
ஆத்திரத்தை முன்வைத்து தனது
அன்பு, நேசம், காதல் காமம் எல்லாம்
வீணாய்ப்போய் விட்டதான
ஆத்திரத்துடன் மாற்றுப்பாலியல்
(சுயபுணர்வு, லெஸ்பியன்) சார்ந்து
நகரும் உந்துதலும் யசோதர
கவிதைகளில் உண்டு.
// தெருவோரம் நின்று
சிறிதளவு அன்பிற்காய்
மண்டியிட்டிருந்தவன் நான்.
இன்றோ -
நான் யார் யாரோ
நினைப்பிற்கும் "ஆட"ப் பிறக்காத்
தாடகை சிறாம்பி!
கடவுளின் ஒரு பகுதி
அல்லது நானே கடவுள்.
இத் தற் பிரேமங்கள் குறித்து
எதுவும் பேசாதே -

என்றைக்கோ
எனக்கான முத்தங்களைக்
காற்று விழுங்கிவிட்டது
என்னை என்னால்(க்) கை
விட முடியாது முடியவில்லை //



அருந்ததி

// தலை தேய்த்துத் தோயவிட்ட
தோழி
நாம் பேச ஒன்றுமற்றுப்
போய்விட்டது
(தோழியைப் புணரு)
....
பெருஞ்சாலைகளில் துணை வருகிற
ரத்த உறவானவனிடம்
உதட்டின் சுவை உணரக் கேட்கத்
தயக்கம்
(அவனைப்....) //

கற்பகம் யசோதரவின் கவிதைகளில்
சில வலிமையான Allusion களைக்
கொண்டவை. புத்திபூர்வமான
வாசிப்பிற்கு உட்படுத்தப்பட
வேண்டியவை. கற்பகம் யசோதரவின்
Knives & Collapses ii கவிதையை
வாசிப்பதற்கு முன்னர் ஒருவர் Frida
Khalo வின் Broken Column
ஓவியத்துடனும் ஆன்
செக்ஸ்டனுடனும் தன்னை
பரிச்சயப்படுத்திக் கொள்வதவசியம்.

.... ... ...

மேற்குறித்த மூன்று
பெண்கவிகளிடமும் தென்படும்
வலிமையான அரசியலையும்
கவித்துவத்தையும் சாதிக்கக்
கூடியவர்கள் என்று சிலரைக் கூற
முடியும். இருண்மை மிக்க
அலூஷன்களுடன் கவிதையெழுதும்
பிரதீபா. கவிதையியல் தொடர்பில்
நிறைந்த அறிவுடனிருக்கும்
ஆழியாள். பூடகமானதும்
வலிமையானதுமான படிமங்கள்
நிரம்பிய கவிதைகளைத் தரும்
தான்யா. அன்றாட வாழ்வில்
இருந்து சாதாரண படிமங்களை
கோர்ப்பதனூடாக வித்தியாசமான
வாசிப்பனுபவத்தைத் தரும்
ஆகர்ஷியா. தனது முதலாவது
தொகுப்பின் பிரகடன தொனியில்
இருந்து விடுபட்டு முன்நகரும்
அனார். புணர்வின்
அதிருப்தி/ஐமேய்க்க காதலன்
என தடைகளற்றுப் பாடும்
ரஞ்சனி.
மனோரதியமாகவெனினும்
வெளிப்படையாக எழுதும்
நிவேதா. என்போர்
நம்பிக்கையளிக்கிறார்கள்.

பஹீமா ஜகான். தில்லை. ஔவை.
பெண்ணியா. மலரா. சித்தி ரபீக்கா.
ராகு. என நீளும் இதர பெண்
கவிகள். தமது அன்றாட
வாழ்வியல்
நெருக்கடிகளுக்கூடாகவும்
கவிதை/எழுத்து என
இயங்குவதற்காய்
முக்கியத்துவமளிக்கப்பட
வேண்டியவர்கள் தான் என்ற
போதும் விமர்சிக்கப்பட
வேண்டியவர்களே. இவர்களது
கவிதைகள் சராசரி
வாசிப்பாளருக்கு அருட்டுணர்வையும்
பாதிப்பையும் தருகிற போதும்
'எழுத்து' பெண்ணிடம் கோரி நிற்கிற
விடயங்களை பூர்த்தி
செய்வதாயில்லை.

ஆணாதிக்கத்திலிருந்து மட்டுமன்றி
தாமே உருவாக்கி வைத்திருக்கும்
வரம்புகள், கட்டுகள்,
சினிமாத்தனங்களிலிருந்து விடுபடுகிற
போது இவர்கள் செல்லக்கூடிய தூரம்
அதிகம்.

கவிதை வெளி விரிந்து பரந்து
கொண்டேயிருக்கிறது. அதற்குள்
பெண்ணின் தனித்துவமிக்க குரலை
செப்பமாக ஒலிக்கச்
செய்பவர்களுக்காக இன்னமும்
காத்திருக்க வேண்டித்தான்
இருக்கிறது.

ஓவியங்களுக்கு நன்றி : ஊடறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை எழுதத் தொடங்கிய மனநோயாளிகளிடம் சில கதைகள் உண்டு

**பெண்ணியா கவிதைகள் குறித்து...**

- ராகு -

அ இன்னும் கண்டறியப்படாத நந்த வனங்கள் பற்றிய கனவை சிலர் மட்டுமே காண்கிறார்கள். எளிமையும் உறுதியும் விரிந்து கிடக்க முற்றிலும் மாறான அந்த உலகை ஆதர்ஷிக்கிற ஜீவன்களை புனிதர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

1

நெஞ்சு கனக்க மூச்சு விட்டுக்கொண்டிருக்கும் பெண் இனம் பற்றிய கட்டுக்கதைகளையும் (கற்புக்கரசி கண்ணகி, பத்தினி சீதை), இன்னும் புரியப்படாத மர்மமொன்று அவளை சுற்றியலைவதாக வெற்று யூகங்களில் திரிய வைத்த சூன்ய இலக்கியங்களையும் பகிஷ்கரித்துக்கொண்டு முற்றிலும் வேறான புதிய இலக்கிய செல்நெறியை தமிழில் பெண் கவிதையாளர்கள் ஏற்படுத்தினர். மதம், கலாசாரம், பழமை பேணல் போன்ற பாரம்பரிய சமூக அசைவியக்கக் கட்டமைவுகளுடன் விழுந்து கிடந்த குடும்ப நிறுவனமே பெண்களது முதலாவதும் மிகப் பெரியதுமான சவாலாக எழுகிறது. அதேவேளை, அடிமைப்படுத்தப்படுகிறோம் என்று தெரிந்தே அடிமைப்படுத்தப்படுவதும் ஒடுக்கப்படுகிறோம் என்று தெரியாமல் ஒடுங்குவதுமான தார்மீக விஷயங்களும் பெண்களுக்குப் புரிந்து போயிற்று. உடல் அமைப்பைக் காரணம் காட்டி பெண் மென்மையானவள் அதனாலேயே வலுக்குன்றியவள் என்று கீழ்மைப்படுத்துகிற ஒரு கருத்தியலும், தாய்மையைக் காரணம் காட்டி மதிக்கப்படவேண்டியவள், பூஜித்துப் பாதுகாக்கப்படவேண்டியவள் (சக்திரூபி) என்று மேன்மைப்படுத்துகிற மற்றொரு கருத்தியலுமே இலக்கிய மரபாகிப் போனது. இலக்கியவாதிகளோடு சமூகவியலாளர்களும், வரலாற்றாய்வாளர்களும் சேர்ந்து செய்த கூட்டுச் சதி இது. ஆண்வழிப்பட்ட சிந்தனைகளே பெண்ணின் சிந்தனைகளாக இருந்த காலம் போய் நவீன இலக்கிய காலம் ஒரு திருப்பு முனையாக எழுகிறது. பெண்ணை ஏன் உயர்த்த வேண்டும் அல்லது கீழ்மைப்படுத்த வேண்டும் என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டு அவளை அவளாக இருக்க விடுங்கள் என்ற நியாயமான கேள்வியை மனித உறவுகளிடம் விடுத்துக் கொண்டு எழுந்தவை தான் பெண் எழுத்துக்கள். இங்கு நிழல்களின் இரைச்சலாய் எழுத்துக்கள் குவிகிற வழக்கம் மாறி பெண் பதுக்கி வைத்த பார்வைகள் வெடித்துச் சிதறியது. பனியில் எழுந்து விழியால் கரைந்து அறைக்குள் கழித்த மூன்று காலங்களையும் மரண விசாரணை செய்தார்கள். மட்கிப் போகிற மார்பின் அளவுகள் பற்றிய சந்தேகங்களை கொளுத்தி விட்டு கடற்கன்னிகளைச் சந்திக்கப் புறப்பட்டுப் போனார்கள்...

சங்கரி, சிவரமணி, ஆழியாள், ஔவை, மைத்ரேயி, செல்வி போன்றவர்களிலிருந்து இன்றைய திகதி வரை எழுதிக்கொண்டிருக்கும் பெண்ணியா வரை பெண்ணிய அமைப்புகளாலும், சஞ்சிகைகளாலும், ஊக்குவிக்கப்பட்டார்கள். அந்த வகையில் பெண்ணிய அமைப்பான ஊடறுவின் முதல் முயற்சி 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை' எனும் பெண்ணியாவின் கவிதைத் தொகுதி. இதில் 15 கவிதைகள் உள்ளன.

2

ஒரு படைப்பாளியின் ஆளுமையை ஆய்வு செய்வதென்பது அதன் வடிவம் புலப்பாடு, என்ன விதமாக அமைந்துள்ளது என்பதோடும், அவை படைப்பாளியின் எந்த விதமான உளவியலை வெளிப்படுத்துகிறது என்பதோடும், இவை எல்லாவற்றுக்கும் காரணமான படைப்பாளியின் வாழ்க்கைப் பின்னணி எவை என்பதை ஆய்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதோடும் தொடர்புடையது. அதேவேளை பழம் பெரும் பண்பாட்டுக்குள் மனிதர்களைப் புதைக்கிற வாழ்க்கை மரபை மிக அவதானமாக மறு விசாரணைக்குப் போடுகிற எழுத்தாளர்களை திறனாய்வின் மூலம் மீள்கட்டுமானம் செய்யும் போதுதான் இலக்கியத்தின் வீரியத்தன்மையும் எல்லை கடக்கிறது. மொழியின் எளிய அழகிய வெளிப்பாடான கவிதையில் மொழியினுடைய திரிபு நிலை அற்புதமாகச் சாத்தியப்பட்டுப் போவதால் தான் இலக்கிய வகைகளில் கவிதை உன்னதமாகப் பார்க்கப்படுகிறது.

3

அது நாங்கள் புலம்பெயர்ந்து மறவன்புலோவில் ஜீவனம் நடத்திக் கொண்டிருந்த காலம். அழகிய குளம், கண்ணுக்கெட்டிய தூரம் வரை விழுந்து கிடக்கும் வயல், நெல்லி மரத்துடனான பால்ய சினேகம். நான் போகும் போது கையாட்டி விடைபெறவும், அழும் போது தலை தடவி ஆறுதல் சொல்லவும் ஒரு சினேக ஜீவனாய் அந்த நெல்லி எனக்கிருந்த காலம். புளிப்பும் இனிப்பும் தட்டிய அதன் கனிகளையும், அந்த நெல்லி மரத்துடனான நேசத்தையும், பனியடர்ந்த ஒரு அதிகாலையில் பெண்ணியாவை வாசித்த போது நான் உணர்ந்தேன். 'நேசம் அல்லது நெல்லிமரம்' என்ற கவிதையில் பத்து வருடங்களுக்கு முன் கரைந்த என் காலங்களைக் கண்டெடுத்தேன். இயற்கையின் செல்வங்களில் அலாதியாக அன்பு கொள்ளும் பெண்ணியா - ஒவ்வொரு மாலைகளிலும் மிளிரவைக்கும் நட்சத்திரங்களை எண்ணி இராக்களைக் கழிப்பவர், பறவைகளுடன் பனிதூவும் இரவுகளுடன் அமைதியும் மகிழ்வுமாக வாழ்ந்து கழித்தவர். கரும் பறவைகளில், பரந்த மேகங்களில் மெல்லிய பனித்திரையின் பின் அடுக்கடுக்காய்த் தொடரும் பெரும் மலைகளில் கால் நனைந்து சலித்துக் கொள்ளும் சிற்றலைகளில், தன் ஊமைத் தனத்தை ஒளித்து வைத்தவர். மலர்ந்து வாடிய பூக்களையும் தேய்ந்து மறைகிற நிலவையும் குறியீடாக்கி மாறுபட்ட இயற்கை நயத்தலைச் சாத்தியமாக்கியவர்.

*'உன்னை*
*உன் பிரிவை*
*நான் உணர்கிற போது*
*ஒருவரும் இல்லாத தனி வீதியில்*
*ஒரு மஞ்சள் விளக்கு கம்பத்தின் கீழ்*
*மெல்லிய மழைத்துளியில் நனைய*
*நான்.*
*என் கண்களில் நீ*

**இங்கு நிழல்களின் இரைச்சலாய் எழுத்துக்கள் குவிகிற வழக்கம் மாறி பெண் பதுக்கி வைத்த பார்வைகள் வெடித்துச் சிதறியது. பனியில் எழுந்து விழியால் கரைந்து அறைக்குள் கழித்த மூன்று காலங்களையும் மரண விசாரணை செய்தார்கள். மட்கிப் போகிற மார்பின் அளவுகள் பற்றிய சந்தேகங்களை கொளுத்தி விட்டு கடற்கன்னிகளைச் சந்திக்கப் புறப்பட்டுப் போனார்கள்...**

*நினைவுகளாய் ஈரலிக்க...*
என்று கூறி காதல் நினைவுகளில் நனைகிறார். அவன் நினைவில் அமிழ்வதும் அழிவதும் பெண்ணியாவுக்குப் பிடித்திருக்கிறது. அவனது குளிர்கரங்கள் பற்றி கைவிரல்கள் சூடேறினாலும், அவனது இரவுகள் பனிதூவினாலும் அவன் பிரிவை தூக்கியெறிந்து விட்டுத் தன்பாட்டில் பயணிக்கிற தன்மை பெண்ணியாவுக்கு இருக்கிறது.

இவரது கவிதைகள் பேசும் முக்கிய பொருள்:
1) பெண் பற்றிய சிக்கல்களும், விடுதலையை அவாவுகிற தன்மையும்.
2) காதல்.
3) இயற்கை

பரம்பரை பரம்பரையாக இருட்டுக்குள் இருக்கும் தன் மூதாதைகளிடம் என்னை வாழ விடுங்கள் அல்லது கொன்று போடுங்கள் எனக் கேட்கும் பெண்ணியா சம்பிரதாயங்களால் பிழிந்து கயிற்றில் தொங்கவிடும் ரகசியம் வாய்ந்த மூலங்கள் பற்றி அலுத்துப் போகிறார். தகப்பனின் நம்பிக்கையற்ற பார்வைகளினூடும், தாயின் குமுறல்களினூடும், உறவுகளின் சகிக்க இயலாத பேச்சுக்களினூடும் வாழ்வேன் என்று மார்தட்டிக் கொள்ளும் துணிச்சல், எதுவெல்லாம் தம் உரிமைகள் வென்று சுதந்திரம் பற்றிப் பறந்து திரிகின்றனவோ அதுவெல்லாமாய் தன்னை நினைத்துக் கனவு காணுகிற தன்மை இவருக்குண்டு.

முற்றிலும் மாறான மனித அனுபவங்களையும் அவற்றைட பதிவு செய்வதற்கான அவசியத்தையும் ஒரு கவிஞர் கட்டாயம் உணர்ந்திருக்க வேண்டும். அன்றாட வாழ்வின் சிக்கல்களை பதிவாக்கியிருக்கும் பெண்ணியா சமூக அனுபவங்களை ஏன் தவற விட்டார் என்ற கேள்வி எழுகிறது. ஒரு பெண்ணுக்குரிய அனுபவங்கள், அவளின் குடும்ப உறவுகளுடன் மாத்திரம் கட்டுப்பட்டவையல்ல. தந்தையின் பூடகத் தன்மையையும், வாழ்க்கைக் கடப்பாடுகளையும் கதைக்குமளவுக்கு கலாச்சார மத ரீதியில் பெண்ணை மறுதலித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமிய சம்பிரதாயங்களில் கட்டுண்ட அவரது வாழ்க்கைப் பின்னணியையும். அதற்குள்ளிருந்து வெளிவரும் சமூக, அரசியல், பொருண்மியக் கோட்பாடுகளையும், அதனை அர்ச்சிக்கிற அவரது பார்வை என்ன என்பதையும் ஏன் தெளிவுபடுத்தவில்லை என்ற கேள்வியுடன், இவர் இந்த வாழ்க்கையை நிராகரித்து அந்நியமயப்பட்டுப் போகிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

நாத்தழுதழுக்க வந்து விடும் பெண் சோகமும், காதலிலிருந்து கிளைத்தெழுகிற பிரிவின் கதைகளும் என்ற இரண்டிற்குமிடையிலாகவே இவரது கவிதை மொழி விழுகிறது. அவரது கவிதைகளும் அதையே கதைக்கிறது. போலி இருப்பை மறுதலிக்கும் உக்கிரம் விடியலுக்காகப் பிரயாசைப்படும் தனித்த குயிலின் சோகம் இவையே இவரது கவிதையின் பாடு பொருட்கள்.

'இன்றைய பொழுதில்
எனக்கு அவளும் இல்லை
அந்த உலகும் இல்லை'

பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையிலான வேறுபாடு என்பது மேய்ந்து திரியும் பசுவுக்கும், காட்டெருமைக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றது. இவரது கவிதையின் உயிர்நாடி எளிமை. அதைத் தொட்டு அணுகியிருக்கிறார். 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை' என அழகாக எளிமையாகக் கூறுகிற அதே நேரம், சிந்திக்க வைக்கிற கவிதை மொழி பெண்ணியாவுக்குக் கைகூடியுள்ளது. 'நான் துயிலறுத்திருக்கிறேன்' போன்ற கவித்துவமான சொற்களின் சேர்க்கையும் ஆங்காங்கே காணப்படுகிறது. இந்தத் தொகுதி அது பேசும் பொருள், அதன் எளிமை என்பவற்றாலேயே முக்கியப்பட்டுப் போகிறது. கவிதையின் எண்ணிக்கையை விட அதன் கனம் தான் படைப்பாளியின் இருப்பைத் தக்க வைக்கிறதென்ற உண்மையையும் விளங்கச் செய்கிறது. தேவைக்கு அதிகமாகச் சொல்வதற்கும், சொற்சிக்கனத்தை சில சமயங்களில் கவனத்தில் எடுக்காத தன்மையும்... இப்படி அலுப்படைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிற பலவீனங்களைப் பலவீனம் என்று சொன்னால், திறந்த நிலையிலான எளிமையும், பேசும் பொருட்களும் இவரது கவிதையில் பலம் என்று சொல்லலாம். அதோடு துருப்பிடித்த சமூக விழுமியங்களை வலியோடு பேசுகிற குரலும் கவனிக்கப்பட வேண்டியது. 'கல்' 'வெறுமை' போன்ற கவிதைகள் கவனிப்பிற்குரியவை.

'மழைக்காலங்களில்
அடுப்பில் வைத்துக் கறுத்த
சட்டியின் நிறம் போன்ற
அதன் தண்டு' - என்ற படிமம் வழக்கமாக கையாளுகிற படிமங்களைத் தூக்கியெறிந்து விட்டு தான் புழங்கிக் கொண்டிருக்கும் உலகிலிருந்து ஒரு படிமத்தை எடுத்தாளுகிற வல்லமை பெண்ணியாவுக்கே உரியது என்பதைக் காட்டுவதோடு அவருக்கான பாதை அடுப்புக்கும் சட்டிகளுக்கும் இடையிலேயே மட்டும் திறந்து விடப்பட்டிருப்பதையும் காட்டுகிறது.

'எப்பிறவியின் சாபமோ
நானும் அவர்களும் அறியோம்
ஒரு யுகத்திலும் எறிந்து விடாதபடி
கறுத்த பின்புறத்தை எம் வாசல் நோக்கி
திருப்பிப் பிடித்திருப்பது எவருடைய கைகளோ'
என்று யதார்த்தத்தை படிமத்தின் மூலம் எழுதுகிற மனத்தின் வெளிப்பாடாயும் தெரிகிறது.

அந்தரங்க அனுபவத்தை இவர் கதைக்கும் போது தியானித்தலையும் கதை சொல்லல் கலையையும் கலந்திருக்கிறார். ஆனாலும் எந்த வடிவத்துக்குள்ளும் அடங்காத தனிக்கோட்டுக் கவிதைகளும் சில இடங்களில் கலந்திருக்கிறது.

தான் என்ற சுயம் ஓங்கி ஒலிக்க அக நிலையில் நின்று விடுதலையை யாசிக்கிற, வேலி தாண்டிய கூக்குரலே இவரது கவிதையின் எல்லையும் ஆழமுமாக விரிகிறது.

மிருகத்தனத்தின் முடிச்சுக்கள் தேடியலையும் அவரது விரல்களிலேயே அவரது கவிதைகளுக்கான இருப்பும் அர்த்தமும் வழிகிறது.

நவீன கவிதைகளின் தொனியில் புனையப்பட்டிருப்பதனால் தெரிந்தோ தெரியாமலோ இவரது கவிதைகளில் அழகியல் அனுபவம் மட்டுப்பட்ட அளவிலேயே கிடைக்கிறது. ஆனால், கவிதையின் பயன் என்பது அழகியல் அனுபவத்துடன் மட்டும் முடிந்து போகிற ஒன்றல்ல. அது இலக்கிய மரபில் ஏற்படுத்த வேண்டிய தாக்கங்களையும் சுட்டிக் காட்டுவது. அந்த வகையில்,

1. தெரிந்தெடுத்த பாடு பொருள்.
2. புலப்பாட்டு உத்தியில் காட்டப்பட்ட எளிமை.
3. காலாதி காலமான சமூக மரபை கேள்விக்குள்ளாக்குவதன் ஊடாக அந்த சமூக மரபில் தொங்கிக் கொண்டிருக்கும் இலக்கிய மரபையும் கேள்விக்குள்ளாக்குவது.
4. காத்தான் குடியில் இருந்து வெளிவரும் முதல் பெண்கவிதைத் தொகுதி என்ற வகையில் அப்பிரதேசத்தின் இலக்கிய வரலாற்றுப் போக்குக் கோட்டை அசைத்தமை.

ஆகியவற்றைப் பலங்களாகக் காணலாம்.

1. மட்டுப்படுத்தப்பட்ட பாத்திரப் படைப்பின் சிருஷ்டிப்பு. (தந்தை காதலன் - தோழி)
2. அடைக்கப் பட்ட எல்லைக்குள் நின்று கொண்டு பாடுவது.
3. சமூக விமர்சனம் இடம்பெறாதது பற்றிய கேள்விகள்

என்பவற்றைக் குறைகளாகவும் சுட்டலாம்.

மொத்தத்தில், நவீன கவிதையின் திறந்த நிலை சாத்தியமாக்கப்பட்டு கவிதை வனப்பு பெருமளவுக்கு கலைக்கப்பட்டிருக்கிறது. பெண்ணியா சிதைந்த காலத்தின் முன் திகைத்துப் போன கண்களைப் பிடுங்கியெறிந்து விட்டு கவிதை புனைய முயன்றிருப்பதும் தெரிகிறது. அவரது சிறகுகளின் மீது நீளும் எல்லாக் கைகளுக்கெதிராகவும் ஆரம்பிக்கப் பட்ட பயணம் இன்னொரு கவிதைத் தொகுதியும் எமக்காக காத்துக் கொண்டிருப்பதை புலப்படுத்துகிறது.

**நவீன கவிதையின் திறந்த நிலை சாத்தியமாக்கப்பட்டு கவிதை வனப்பு பெருமளவுக்கு கலைக்கப்பட்டிருக்கிறது. பெண்ணியா சிதைந்த காலத்தின் முன் திகைத்துப் போன கண்களைப் பிடுங்கியெறிந்து விட்டு கவிதை புனைய முயன்றிருப்பதும் தெரிகிறது. அவரது சிறகுகளின் மீது நீளும் எல்லாக் கைகளுக்கெதிராகவும் ஆரம்பிக்கப் பட்ட பயணம் இன்னொரு கவிதைத் தொகுதியும் எமக்காக காத்துக் கொண்டிருப்பதை புலப்படுத்துகிறது.**

●


**ஆயிரத்தோராவது வேதனையின் காலை**
**பைசால் கவிதைகள்**
**வெளியீடு :மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்.**
**கொழும்பு**
**பக்கங்கள்: 74**
**விலை: ரூபா 100.00**




**பைசால் உடைய முதலாவது கவிதைத் தொகுப்பு இது. பைசாலுடைய கவிதைகளுக்கான தேடலில் புதிய விடயங்கள், புதிய பார்வைகள், தெரிகின்றன. புதிய தொனியை வெளிக்கொணரும் நோக்குடன் எழுத முனைவதை சாத்தியமான முயற்சியாக நான் கருதுகிறேன். தனித்தன்மைகள் வெளிப்படும் ஒரு முயற்சியை பல கவிதைகளில் காணக் கூடியதாக உள்ளது என்கிறார் கவிஞையான அனார் தனது பின்னுரையில்.**

---

**திண்ணைக் கவிதைகள்**
**டீன்கபூர்**
**வெளியீடு: புதுப்புனைவு இலக்கிய வட்டம்**
**மருதமுனை**
**பக்கங்கள்: 52**
**விலை: ரூபா 100.00**





**1994இல் குரோட்டன் அழகி என்ற தொகுப்பைத் தந்த டீன்கபூரின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது.**

**திண்ணைக் கவிதைகள் இயற்கைப்பிரிவு, அதன் அரசியல், நாட்டு அரசியல், அதன் போலித்தனம், வக்கிரத்தனம், அரசியல்வாதிகள், சுனாமியின் அரசியல், சுனாமி அகதிவாழ்வின் நெருக்குவாரங்கள், யுத்த அவலம், சமாதானத்திற்கான ஏக்கம் பற்றியெல்லாம் பேசுகின்றன என்கிறார் அம்ரிதா ஏயெம் தனது கருத்துரையில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதம் தரும் கடலானது!

கோகிலா மகேந்திரன்.

"எழுத்து எனக்கு ஒரு குளியலைப் போன்றது. ஏனெனில் குளியலில் நான் மூழ்கி எழும் போது தூய்மையாக ஆரோக்கியமாக நலமாக, சுதந்திரமாக இருப்பதாக உணர்கிறேன்" என்று நாடக மேதை இப்சன் கூறினார்.

எமது நாட்டைப் பொறுத்தவரை இந்தக் குளியலில் சுகம் காண்பவர்கள் பெரும்பாலும் கலைப்பிரிவைச் சேர்ந்தவர்களே. விஞ்ஞானம் கற்றவர்களுக்கு தமிழ் மொழியில் இப்படியெல்லாம் குளிப்பது ஒத்து வருவதில்லை. இதற்கு விதிவிலக்கான ஒரு சிலரைப் பார்க்கும்போது மனம் பூச்சொரியும். விதிவிலக்குகளில் ஒருவர் டொக்டர் சிவதாஸ்.

"A dollar earned is of far more value than five found" என்று ஆபிரகாம் லிங்கன் சொன்னார். ஒரு நூலை எழுதுவது ஐந்தை வாசிப்பதை விடச் சிறந்தது. ஏனெனில் அது கடினம். செயற்கரிய செயிலர் பெரியர்.

நூல் சொல்ல வந்த விடயம் மிக முக்கியமானது. "அனர்த்தம்" என்ற சொல்லை எல்லோரும் பாவிப்போம். ஆயினும் அதன் அர்த்தத்தை முழுப் பரிமாணத்துடன் புரிந்து கொண்டு பயன்படுத்துவோர் மிக மிகக் குறைவு.

"சுனாமி" என்ற பெரிய அனர்த்தம் வந்து விட்டது. மக்களின் உளநலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. உதவப் போகிறோம் என்று ஆயிரக்கணக்கானோர் ஓடித் திரிந்தார்கள். தொண்டர்கள், இரண்டு நாள் மூன்று நாள் பயிற்சியோடு களத்திற்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால் உளப் பாதிப்பில் பொருத்தமான உதவி என்பது அவ்வளவு எளிதான விடயம் இல்லை. எமது சமூகம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அனர்த்தத்தின் பின் ஏற்படும் ஒரு முக்கிய உளநோய் நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு. அந்த நோய்க்கான மிகச் சிறந்த சிகிச்சை எது என்பது இன்னும் உலகளாவிய ரீதியிலேயே ஆய்வு நிலையில் இருக்கும் போது. ஒரு வாரம் பயிற்சி பெற்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு உதவப் புறப்படுவது பகிடியான விடயம்.

எமது சமூகத்தின் விஞ்ஞானப் பார்வையென்பது மிக ஆரம்ப நிலையில் இருக்கும் ஒரு விடயம். மதுபானப் பாவனை என்பது உளநலப் பாதிப்பினால் வருவது என்பதே உண்மையாக இருக்கும் போது இங்கே அது நாகரிகமாகக் கருதப்படுவதும் குடிக்காதவர்களுக்குப் பருக்கப்படுவதும் வேதனை தரும் விடயம். அத்தகைய சமூகத்தில் ஒரு சிறு விழிப்புணர்வைத் தானும் ஏற்படுத்துவதற்கு டொக்டர் பெரிதும் முயன்றிருக்கிறார்.

சுனாமி போர் போன்ற அனர்த்தங்கள் எந்தப் பாகுபாடுமின்றி மனிதர்களைத் தாக்குகின்றன. (ஆண் - பெண், பணக்காரர் - ஏழை, படித்தவர் - படிக்காதவர், என்ற எந்தப் பாகுபாடுமின்றி)

நாங்கள் தயார்படுத்தப்பட்ட நிலையில் இல்லாததாலும் வளம் குன்றிய வறிய நாடாக இருப்பதாலும் தாக்கம் அதிகம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சுனாமியாலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் யுத்தத்தாலும், யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்கள் வெள்ளத்தாலும் பாதிக்கப்படும் போது (அண்மையில் மட்டக்களப்பில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஏறத்தாழ அழுதபடி பேட்டி கொடுப்பதைத் தொலைக்காட்சி காட்டியது) அவர்கள் தமது தாங்கு திறனை முற்றாக இழக்க நேரிடுகிறது. (Bulding Block effect).

சுனாமி அனர்த்தத்தின் போது உளவள ஆற்றுப்படுத்தல் சேவை உடன் ஆரம்பிக்கப்பட்டது நல்ல விடயம். (போர் அனர்த்தத்தில் அவ்வாறு செய்ய முடிவதில்லை) அனர்த்தங்களின் போது பெற்றோர்களை இழந்த சிறுவர்களை ஹொஸ்டல்களுக்கும், இல்லங்களுக்கும் அனுப்புவதை விட அவர்களை உறவினருடன் வளர விட்டு ஆதரவளிப்பது சிறந்தது. உளப் பாதிப்பு தங்களை ஒன்றும் செய்யாது என்ற மறுதலிப்பு மக்கள் மத்தியில் வளர்ந்து வருவது ஆபத்தானது.

"மனநல மேம்பாட்டாளர்களினால் கூடக் குறிப்பிட்ட எல்லைகளுக்கப்பால் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை."

"பாலியல் வல்லுறவு உளப்பாதிப்பினை ஏற்படுத்துவதில்லையென்ற எண்ணம் பரவலாக இருக்கிறது."

"ஒரு சமூகத்தில் அனர்த்தத்தில் எத்தனை பேர் இறந்தார்கள் என்பதை விடச் சமூகத்தில் எத்தனை வீதம் பேர் பாதிக்கப்பட்டார்கள் என்பது முக்கியமானது.

"கரையோரத் தாவரங்கள்
அழிக்கப்படாத பகுதியில்
சுனாமித்தாக்கம் குறைவு. ஆகவே
சூழல் பாதுகாப்பு முக்கியமானது"

"இயற்கை அனர்த்தங்களை விட
மனிதனால் ஏற்படுத்தப்படும்
அனர்த்தங்கள் அதிக பாதிப்பினை
ஏற்படுத்துகின்றன."

"சமூக ஆதரவு இருக்கும்போது
உளத்தாக்கத்தினை எதிர் கொள்வது
சுலபமானது."

"ஒரு நாட்டின் சிறுபான்மைச் சமூகம்
அனர்த்தங்களின் போது அதிகம்
பாதிக்கப்படுகிறது."

"ஆண்களை விடப் பெண்களும்,
ஏனைய பருவத்தினரை விடச்
சிறுவர்களும் முதியோரும் அதிகம்
பாதிக்கப்படுகிறார்கள்."

போன்ற பல உண்மைகளையும், கருத்துக்களையும் இந்த நூல் மிக ஆழமாகச் சொல்லியிருப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

மக்களை விழிப்பூட்டும் நோக்கில் உளப் பேரதிர்வு பற்றியும், அதனால் ஏற்படக் கூடிய "தீவிர நெருக்கீட்டு எதிர்த்தாக்கம்", "நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு", "மெய்ப்பாடு", பதகளிப்பு", "மனச்சோர்வு" போன்ற மிகமான உளநோய்கள் பற்றியும் எளிமையாக எடுத்துக் கூற முயன்றிருக்கிறார். ஆயினும் இது உளவளத்துணையாளர்களுக்கும், நட்புதவியாளர்களுக்குமே அதிகம் பயன்படும் என்பது தனிப்பட்ட கருத்து.

உதவும் வழிமுறைகள்கூட மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. ஆயினும் இதனை வாசித்து விட்டு யாரும் சிகிச்சை செய்ய ஆரம்பித்து விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் போலும், உதவும் முறைகள் பற்றிய நுணுக்க விபரங்கள் கூறப்படவில்லை. அரங்கச் செயற்பாடு ஒரு சிகிச்சை முறையாதல் விமர்சிக்கப்பட்டுள்ளது. அங்கு நிபுணத்துவ ஆலோசனை அவசியமானது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

உயர் நிலைகளில் விஞ்ஞானம் கற்றவர்களிடம் அழகியற் பார்வை இருப்பது அரிது. முளையமேற்பட்டையின் இடதுபுறமும், வலது புறமும் சம வளர்ச்சி காண்பது அற்புதமான ஆளுமை என்று சொல்வார்கள். டொக்டர் சிவதாஸிடமிருக்கும் கலையுணர்வை அவரது புகைப்படங்களும் கவிதைகளும் உறுதி செய்கின்றன.

முதற்படம் முல்லைத்தீவின் உடைந்த தேவாலய முகப்பும் அதனூடு தெரியும் கடவுளும் அருமையான எளிய படம். நிகழ்ந்த அனர்த்தத்தை அந்த முகப்பு - சங்கிலியன் தோப்புப் போல நினைவுபடுத்த - "நான் எதுவும் செய்யவில்லையே" என்பது போல, அச்சாப்பிள்ளைபாக உறங்கும் கடல்! எவ்வளவு நேரமும் அதை இரசிக்கலாம்.

நாகபட்டினத்தின் வெறுமையைக் குறியீடாகக் காட்டும் இலைகளற்ற அந்த முள்ளு மரம். அதில் அகப்பட்டுத் தொங்கும் வலை - அதுவும் ஒரு அருமையான கிளிக்!

முகப்பு அட்டை இன்னும் சிறப்பாக வந்திருக்கலாமென்று தோன்றுகிறது. கவிதைகளிலும் சில வரிகள் எம்மை ஈர்க்கின்றன.

"இதம் தரும் கடலானது
இழவு வீட்டின் ஒலி சுமந்தது"

"எச்சங்களில் முகம் புதைத்து
மீளும் பொழுது
வாழ்வு சூனியமானது
மீள அலை வரும்
கடல் வெளி
புலம்பிச் சென்றது"

சுனாமி வந்து சென்ற ஓரிரு வாரங்களில், "மீள அலை வரும்" என்ற பயம் பாதிக்கப்பட்ட மக்களைப் பெரிதும் ஆட்கொண்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம்.

யாரும் ஆசிரியராகிப் பாடக் கற்பிக்கலாம், யாரும் கணனி இயக்குனராகி நூல்களை அச்சிடலாம். நல்ல காலம்! யாரும் உளநல மருத்துவராகவாமில்லை! என்பதால் நூலில் பல எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. கவிதைகளில் வரும் எழுத்துப்பிழை கவிதையைக் கொலை செய்து விடுகிறது 'மழலையா? மழழையா?.

மொத்தத்தில் சமூகம் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய விஞ்ஞான உண்மைகளைத் தன் அனுபவம் சேர்த்துக் கலை உணர்வுடன் வெளிக் கொணர்ந்திருக்கும் நூல் "நலமுடன்".


இந்த நூலை வாசித்து முடிக்கிறபோது மனதில் ஒரு கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

"ஏன் எமது இனம் இத்தனை அனர்த்தங்களைச் சந்திக்கிறது? ஏன் எமக்கு மட்டும் - இவ்வளவு நீண்ட காலமாக இந்த விதி?"

●


# வரவு

வாழ்க்கையின் நிறங்கள்
நீ.பி.அருளானந்தம்
வெளியீடு: திருமகள் பதிப்பகம்.
பக்கங்கள்: 320
விலை: ரூபா 440.00




எழுத்தாளர் நீ.பி.அருளானந்தத்தின் எழுத்தாற்றலை சிறப்பாக எடுத்துக் காட்டுகிற இந்த நாவல் மனித வாழ்க்கையின் விதம் விதமான போக்குகளையும், மனிதர்களின் உணர்ச்சிகரமான செயல்பாடுகளையும் அவற்றின் விளைவுகளையும் யதார்த்தமாகவும் அழகாகவும் பிரதிபலிக்கும் படைப்பாக விளங்குகிறது என்கிறார் வல்லிக்கண்ணன்.

முஸ்லிம் பூர்வீகம்
எம்.எம்.எம்.நூறுல்ஹக்
வெளியீடு: மருதம் கலை இலக்கிய வட்டம்.
பக்கங்கள்: 128
விலை: ரூபா 200.00





1998 இல் வெளியான இவரது தீர்வும் தீர்வுகளும் 2002இல் வெளியான சிறுபான்மையினர் சில அவதானங்கள் என்ற அரசியல்சார்ந்த இரு நூல்களும் அறிவுஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களிலும், ஊடகத்துறைகளிலும் அதிகரித்த கவன ஈர்ப்புக்கு உட்பட்டதொன்றாகும். முஸ்லிம் பூர்வீகம் இவரது மூன்றாவது நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பின் மனோநிலை




**சேரன்**

சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவின் 'முக்கியமான கறுப்பு' எழுத்தாளர்களில் ஒருவரும் போராளியுமான வில்லியம் எட்வேர்ட் டூ பொய்ஸ் **(William Edward Du Bois)** தனது நூலொன்றை வெளியிட்டார். **The Souls of Black Folk** (கறுப்பு மக்களின் ஆத்மாக்கள்) என்ற தலைப்பில் வெளியான அந்த நூலில் டூபொயிஸின் பதின் மூன்று கட்டுரைகளும் ஒரு சிறுகதையும் அடங்கியிருந்தன. கறுப்பு மக்களின் வாழ்வு, அரசியல், குறித்துக் கூர்மையான பார்வையுடன் எழுதப்பட்டிருந்த அந்த நூல் இன்று வரை ஒரு சிறப்பான ஆவணமாக இலக்கியகாரராலும் சமூக விடுதலைப் போராளிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1903இல் வெளியான முதல் பதிப்புக்குப் பிற்பாடு இப்போது மொத்தம் 119 மறுபதிப்புக்களைப் பெற்றிருக்கிறது டூ பொயிஸின் இந்த நூல்.

கொத்தடிமைகளாகக் கட்டுண்டு கிடந்த கறுப்பு மக்களின் உணர்நிலை, கட்டாயப் புலம்பெயர்வால் அவர்களுடைய வாழ்க்கையிலும் உளவியலிலும் ஏற்பட்டு விட்ட மாற்றங்கள், கறுப்பராகவும் அதே நேரம் அமெரிக்கராகவும் இருப்பதால் ஏற்பட்டு வந்த பிளவுண்ட மனநிலை போன்ற சமூகவியல், உளவியல் கூறுகளை ஆய்வு செய்வதாக அமைந்தது டூ பொயிஸின் நூல்.

எவ்வித உரிமைகளும் அற்று, கல்வி கற்பதற்கே தடைவிதிக்கப்பட்டிருந்த ஒரு சூழலில் எவ்வாறு கறுப்பு மக்களிடம் இசையும், நடனமும், வேறு சிறப்பான கலைகளும் முகிழ்த்தன என்பதைச் சுட்டிக் காட்டுகிற டூ பொயிஸ், அமெரிக்காவின் அடிமை உடைமைச் சூழலில் இந்தக் கலாசாரப் பரிமளிப்பு எவ்வாறு எதிர்ப்பின் குரலாகவும் அமைந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

எமது சூழலிலும் சதிர் பரதமாக மாறிய கதையும், ஏனைய நாட்டார், பஞ்சமர் கலைகளின் அக் காலத்தைய வெளிப்பாடுகளும், அமெரிக்கக் கறுப்புக் கலாசாரத் துடன் சமாந்தரமாக வைத்துப் பார்க்கக் கூடியன.

தனது நுட்பமான அவதானிப்புக்கள் மூலம் டூ பொயிஸ் எமக்குத் தெரிவிப்பது ஒரு முக்கியமான சேதி: கறுப்பு நிறத்தையும் கறுப்புத் தோலையும் கறுப்பு மக்களின் சமூக பண்பாட்டு வாழ்வையும் பார்த்தபோது டூ பொயிஸ் கண்டு கொண்டது, அமெரிக்கக் கறுப்பு மக்களுக்கு இரண்டு முகங்கள் இருந்தன என்பது. எப்போதுமே அமெரிக்கராகவும் கறுப்பராகவும் இரட்டை நிலையில் கறுப்பு மக்கள் இருக்கிறார்கள் என்று டூ பொயிஸ் எழுதினார்.

"இரண்டு ஆத்மாக்கள், இரண்டு சிந்தனைகள், எப்போதுமே இணக்கத்திற்கு வரமுடியாத இரண்டு இழுபறிகள், எப்போதும் தமக்கிடையே மல்லுக்கட்டும் இரண்டு இலட்சியங்கள் பொதிந்து ள்ள ஒரு கறுப்பு உடல்"

என்று இந்த நிலையை டூ பொயிஸ் தன்னுடைய **The souls of Black Folk** இல் உருவகிக்கிறார். இந்த இரண்டக நிலையைத் தான் டூ பொயிஸ் இரட்டை உணர்வு நிலை **(Double**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Consciousness) என்று குறிப்பிடுகிறார். துண்டு துண்டாகப் பிளவுற்ற ஒரு மனோநிலையை விளக்குகிற டூ பொயிஸின் சிந்தனைகள் சமூகவியலிலும் சமூக உளவியலிலும் பல சிந்தனைத் திருப்பங்களை ஏற்படுத்தின.

"இரட்டை உணர்வு நிலை" என்னும் கருத்தின் மூலங்களைத் தனது வாழ்வனுபங்களினூடாக டூ பொயிஸ் பெற்றுக் கொண்டிருந்தாலும், அறிவுலக அனுபவங்களும் அவருக்குத் துணை செய்திருந்தன. டூ பொயிஸ் ஜேர்மனியின் பேர்லின் நகரிலும் சிலகாலம் கல்வி பயின்றவர். ஆண்டானுக்கும் அடிமைக்கும் இடையே இருக்கிற உறவைப் பற்றி ஹெகெல் எழுதியிருப்பதை இவ்விடத்தில் நினைவு கூர முடியும். ஆண்டான் அடிமை உறவு எப்படி இருவரையுமே உளவியல் ரீதியாகப் பாதிக்கிறது என்பது பற்றிக் ஹெகெல் கவனம் செலுத்தியிருந்தார்.

டூ பொயிஸின் சிறப்பு என்னவெனில் பிளவுற்ற தன்மை, இரட்டை உணர்வு நிலை என்பவற்றை உளவியல் தளத்திலிருந்து சமூகத்தளத்திற்கு மாற்றியமை தான். அமெரிக்கக் கறுப்பு மக்களின் சமூக வாழ்க்கையே இத்தகைய இரட்டை உணர்வு நிலையால் நோய்க் கூறான முறையில் பீடிக்கப்பட்டிருந்தது என்று அவர் கருதினார்.

"அமெரிக்க நீக்ரோவுக்கு எப்போதுமே உண்மையான சுயஉணர்வு இருக்கப் போவதில்லை. எப்போதுமே மற்றவர்களுடைய பார்வையூடாகவே அவன் தன்னைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியி ருக்கிறான். ஆனால் மற்றவர்க ளுடைய பார்வையோ நீக்ரோவைப் பற்றி வெறுப்பும் தீண்டாமையும் நிறைந்ததாக உள்ளது"

என்று நியாயமாகக் கோபப்படுகிறார் டூ பொயிஸ்.
கறுப்பு மக்களுடைய துயரம் என்னவென்றால், அவர்கள் ஒரே நேரத்தில் கறுப்பர்களாகவும் அமெரிக்கர்களாகவும் வாழ விதிக்கப்பட்டுள்ளமை தான். இந்த நிலைமை அவர்களுடைய தன்னுணர்வையும் ஆளுமையையும் வெகுவாகப் பாதித்தது. என்று டூ பொயிஸ் கருதினார். கறுப்பின் மீதான சுயவெறுப்பை ஏற்படுத்துவதற்கு இந்த இரட்டை உணர்நிலையே காரணம் என்பதும் அவரது முடிவாக இருந்தது. இன்னொரு தளத்தில் காலனித்துவம் நமக்கிடையே ஏற்படுத்தி வைத்திருக்கிற முக்கியமான பாதிப்புக்களில் ஒன்று இத்தகைய சுயவெறுப்பு என்பதையும் நாம் நினைவுகொள்ள முடியும். கறுப்பின் மீது வெறுப்பு, 'வெள்ளை மோகம்' ஆங்கிலேயமே உயர்ந்தது என்று 'திரிகரணசுத்தியாக' நம்புகிற மனோபாவம்.
இந்தச் சமூகவியல், உளவியல் சிக்கலுக்கு டூ பொயிஸ் இனங்கண்ட தீர்வு, கறுப்பு மக்களை 'முழுமை' யானவர்களாக மாற்றுவது என்பது எவ்வாறு இது சாத்தியம்?



முற்று முழுதான சமத்துவமும் வெள்ளை மக்களிடம் இருந்து முற்றாகவே பிரிந்து தனியாக வாழ்வதும் தான் டூ பொயிஸின் தீர்வாக இருந்தது. இப்போதும் கூட அமெரிக்காவின் சில கறுப்பினத் தலைவர்கள் குறிப்பாக Nation of Islam எனும் அமைப்பின் தலைவர் லூயிஸ் ஃபராக்கான் (Louis Farkahan) இக் கருத்தை முன்வைக்கிறார்.

எனினும் 'இரட்டை உணர் நிலை' என்பதே நவீன சமூக வாழ்வின் இயல்பாக மாறிவிட்டது என்று பல ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்த 'இரட்டை உணர்வு நிலை' கறுப்பர்களுக்கு மட்டுமன்று, வெள்ளை மக்களுக்கும் உரியதான ஒன்று என அவர்கள் கூறுகிறார்கள். Carl Jung என்கிற உளவியலாளர் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்த பிற்பாடு எழுதிய சில குறிப்புக்களை இங்கு எடுத்துக் காட்டாகத் தரலாம்.

"அமெரிக்கா என்றாலே வெள்ளைத் தேசியம் என்று புரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த ஞானம்கெட்ட ஐரோப்பியர்கள். உண்மையில் அமெரிக்கா முற்று முழுதாக வெள்ளை அல்ல. அதனுடைய ஒரு பகுதி கறுப்பு. இதனால் தான் பல வெள்ளை அமெரிக்கர்களிடம் நீக்ரோக்களுடைய உடலியல் பண்பாட்டுத் தாக்கங்கள் உள்ளன."

என்று எழுதுகிறார் ஜூங். "நீக்ரோ உங்களுடைய நகரங்களிலும் வீடு களிலும் மட்டும் வசிக்கவில்லை. அவன் உங்களுடைய தோலுக்குக் கீழேயும் உங்களுடைய ஆழ் மனதிலும் கூட வாழ்கிறான்" என்று கார்ல் ஜூங் மேலும் விளக்கமாகக் குறிப்பிடுகிறார். இதனைத் தான் வேறு வார்த்தைகளில் டூ பொயிஸ் இனம் காண்கிறார். "நீக்ரோ அமெரிக்கன் தான்: அமெரிக்கனும் நீக்ரோ தான்.


தவிர்க்க முடியாதபடி நாம் அனைவரும் இரண்டுமாக இருக்கிறோம். ஆணுக்குள்ளே பெண்: பெண்ணுக்குள்ளே ஆண். கறுப்பர்களின் உள்ளே வெள்ளை: வெள்ளையர்களுக்குள்ளே கறுப்பு. மொத்தத்தில் தூய்மை அல்ல, கலவைதான்" என்பதே இன்றைய போக்காக எழுந்து வருகிறது என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இரட்டை உணர்நிலை புலம் பெயர்ந்த புகலிடத் தமிழர்களின் வருங்காலத் தலைமுறைகளை எவ்வாறு பாதிக்கப் போகிறது.? இந்த இரட்டை மனோநிலை தமிழ்த் தேசியத்தின் மீது எத்தகைய பாதிப்புக்களைச் செலுத்தப் போகிறது? என்பன இன்று எம்முன்னே இருக்கும் கேள்விகளாகும்.

பன்முகப் பண்பாடு, அடையாளங்களின் பன்முகத் தன்மை, பல்கலாசாரம் போன்ற கருத்தமைவுகளும் கோட்பாடுகளும் இன்று இரட்டை உணர்வு நிலையை அல்ல ஒரு பன்முக உணர்வு நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவற்றின் சமூக அரசியல் தாக்கங்களும் விளைவுகளும் இந்த நூற்றாண்டுத் தமிழர்களுக்கு ஒரு முக்கியமான சவாலாக அமையும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மல்கம்

## திரைப்படம் குறித்து சில குறிப்புகள்

மணிதர்ஷா

"நான் உங்களுக்கு கூறுகிறேன் இந்த உலகத்திலேயே மிக மோசமான கொலைகாரர்கள் வெள்ளையர்கள் தான்"

"நான் குற்றஞ் சுமத்துகிறேன் இந்த உலகத்திலேயே மிக மோசமான கடத்தல்காரர்கள் வெள்ளையர்கள் தான்"

"அந்த மனிதர்கள் போகாத ஓரிடமும் இந்த உலகத்தில் இல்லை. எல்லா இடங்களுக்கும் சென்று அவர்கள் கூறுகிறார்கள் தாங்கள் சமாதானத்தையும் இணக்கப்பாட்டையும் கொண்டு வருவதாக. ஆனால் அவர்கள் மிக மோசமான நாசகாரர்கள். அடிமை வணிகம் செய்பவர்களும், கொள்ளைக்காரர்களும் வெள்ளையர்கள் தான். அவர்கள் இதனை மறுக்க முடியாதபடி வாழும் சாட்சியங்களாக நாங்கள் உள்ளோம். நீ அமெரிக்கன் இல்லை. அமெரிக்கனால் பழிவாங்கப்பட்டவன். நீயும் நானுமே அதற்குச் சாட்சிகள்."

இந்த வரிகளுடன் காட்சிப் படிமங்களினூடு செல்லும் ஸ்பைக் லீயின் கமெரா ஒரு கறுப்பு இளைஞனை வெள்ளைப் பொலிஸ் அடித்து நொறுக்குவதையும் அதன் காரணமாக பற்றியெரியும் நெருப்பில் அமெரிக்கக் கொடி பொசுங்கிப் போவதனையும், கொழுந்து விட்டெரியும் அந்த நெருப்பு எக்ஸ் எனும் எழுத்தாக உருமாறுவதனூடாகவும் வாழும் சாட்சியாக இருந்து தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி விட்டுப் போன மாபெரும் கறுப்பினத் தலைவனான மல்கம் எக்ஸை உயிர்பெற வைக்கின்றது.

பல நூற்றாண்டு காலமாக கறுப்பர்களுக்கெதிரான நிறவெறி வன்முறைகள் வெள்ளையர்களினால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. ஆபிரிக்காவிலிருந்து கறுப்பின மக்களை பலவந்தமாக ஏற்றுமதி செய்து விலங்குகளைப் போல் உலக நடப்புக்களையே அறியா வண்ணம் தமது ஏவல் வேலைகளைச் செய்யும் அடிமைகளாக வைத்திருந்தனர் வெள்ளையர். இந்த நிறவெறியை எதிர்த்து பல கறுப்பினத் தலைவர்கள் போராடியுள்ளனர், போராடி வருகின்றனர். போராடும் கறுப்பினத் தலைவர்கள் அமெரிக்காவிற்குப் பெரும் தலையிடியாகவே எப்போதும் இருந்து வந்துள்ளனர். அதில் மல்கம் எக்ஸ் மிகவும் முக்கியமான ஒருவர். அமெரிக்கக் கறுப்பர்களின் தலையெழுத்தை மாற்றக் கூடிய ஒரேயொரு சக்தியாகவும் மல்கம் இருந்துள்ளார் என்பதில் மிகையில்லை.

அலெக்ஸ் ஹெலி எழுதிய மல்கம் எக்ஸின் வாழ்க்கைக் காவியத்தைத் திரைக்காவியமாக எமக்குத் தந்திருக்கிறார் ஸ்பைக் லீ. ஸ்பைக் லீ 1957ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் பிறந்த ஒரு கறுப்பினத்தவர். கலைத்துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றவர். திரைப்படக்கலை சம்பந்தமாகவும் கற்றுத் தேர்ச்சி பெற்றவர் 15க்கு மேற்பட்ட சிறந்த திரைப்படங்களையும், இசை அல்பங்களையும், குறுந்திரைப்படங்களையும் இயக்கியுள்ளார். அது மட்டுமில்லாமல் அவர் ஒரு எழுத்தாளரும் கூட. இயக்குனர், தயாரிப்பாளர், இசையமைப்பாளர், எழுத்தாளர், நடிகர் என்று பல பரிமாணங்களில் பிரகாசிப்பவர் ஸ்பைக் லீ. இவருடைய பல படங்கள் கறுப்பர்கள் மீதான வெள்ளையர்களின் இனவெறி மற்றும் நிறவெறி பற்றியே பேசுகின்றன. இவருடைய மிக முக்கியமான திரைப்படங்களிலொன்று மல்கம் எக்ஸ். இத்திரைப்படத்தின் மூலம் பலத்த சர்ச்சைகளுக்கும் ஆளானவர். அந்த வகையில் மல்கம் எக்ஸ் திரைப்படம் மூலம் கறுப்பர்களை மட்டுமல்லாமல் எம்மையும் வரலாற்றை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வைக்கிறார் ஸ்பைக் லீ.

திரைப்படம் மல்கம் எக்ஸின் இளம்பராய வாழ்க்கையுடன் ஆரம்பிக்கிறது. இதில் இளம் பராய மல்கம் எக்ஸின் தோழனாக ஸ்பைக் லீயே நடித்துள்ளார். கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய மல்கமின் தந்தை ஏர்ல் லிட்டில் "கு க்ளக்ஸ் க்ளன்" எனும் வெள்ளையர்களின் கொலைவெறிப் படையால் கொலை செய்யப்படுகிறார். சிறந்த ஆளுமையும், சிறந்த பேச்சுத் திறமையும், மார்க்கஸ் கார்வியின் "உலகெங்கும் உள்ள கறுப்பர்கள் அனைவரும் ஆபிரிக்காவுக்குத் திரும்ப வேண்டும்" என்ற கொள்கைக்கான உலக நீக்ரோ முன்னேற்றக் கழக அமைப்பின் ஒமாஹா பகுதியின் தலைவராகவும் இருந்த ஏர்ல் லிட்டில் மல்கமுக்கு ஆறு வயதாக இருந்தபோதே படுகொலை செய்யப்படுகிறார்.

மல்கமின் சிறுவயதில் நடந்த சம்பவங்களை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இளைஞனாகவுள்ள மல்கம் நினைத்துப் பார்ப்பது போல் பின்னோக்கி நகரும் காட்சியின் உத்தியில் திரைப்படத்தை நகர்த்திச் செல்கிறார் லீ. ஒரு சந்தர்ப்பத்தில் பாடசாலையில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவர்களாக, நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் என்னவாக வர விரும்புகிறீர்கள் என்று கேள்வி கேட்கிறார். அதற்கு வெள்ளையின மாணவர்கள் கூறும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலால் திருப்தியடையும் ஆசிரியர். மல்கமைப் பார்த்து நீ என்னவாக வர விரும்புகிறாய் எனக் கேட்க, நான் ஒரு வழக்கறிஞராக வர விரும்புகிறேன் எனக் கூறும் மல்கமை நோக்கிய ஆசிரியர் வெறுப்பும், சினமும் கொள்கிறார். அதனைக் காட்டிக் கொள்ளாதவாறு "நீ ஒரு தச்சுத் தொழிலாளியாக வரலாமே" என்று கூறுகிறார். இந்தப் பதில் மல்கமின் பிஞ்சு மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மாணவர்களிலேயே திறமைசாலியான மாணவனாக இருந்தும் கறுப்பன் என்ற காரணத்திற்காக அவன் ஒதுக்கப்படுகிறான். பிஞ்சு மனங்களிலே நஞ்சு விதைக்கப்படுகிறது. கறுப்பு மாணவன் என்ற காரணத்திற்காக அவனது விளையாட்டு ஆர்வமும் தடைப்பட்டுப் போகிறது.

இளைஞனாக இருந்த காலத்தில் வெள்ளைக்காரர் போல் தான் இருக்க வேண்டும் என்று ஆசை கொண்ட மல்கத்தை படத்தின் ஆரம்பக் காட்சிகளில் லீ தெளிவாகக் காட்டியுள்ளார். கறுப்பர்களுக்கே உரித்தான தனது சுருண்ட தலைமயிரை 'ஸ்ரைற்' பண்ணி வெள்ளைக்காரர் மாதிரி பாவனை செய்து கொள்வதும், அவர்கள் மாதிரியே நடையுடை பாவனையை மாற்றிக் கொள்வதும், வெள்ளையினப் பெண்களுடன் சல்லாபிப்பதுமாக இருக்கும் மல்கமையே லீ முதலில் எமக்கு அறிமுகம் செய்கிறார். படத்தின் முதல் அரைவாசியும் மல்கமின் இளம் பராய வாழ்க்கை பற்றியே பேசப்படுகிறது. போதைப் பொருள் கடத்துவது, விற்பது, சூதாட்டங்களில் ஈடுபடுவது போன்றவற்றில் மல்கம் கைதேர்ந்தவராக இருக்கிறார். ஒருமுறை கொள்ளை ஒன்றில் ஈடுபட்டு பொலிஸாரிடம் பிடிபடும் மல்கம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்.



சிறை செல்லும் மல்கம் வெள்ளைக் காவலர்களிடம் காட்டும் எதிர்ப்பின் காரணமாக பல சித்திரவதைகளை அனுபவிக்கிறார். எவ்வளவுதான் உல்லாசமாகத் திரிந்தாலும் அவ்வப்போது அவரது வெள்ளையர்கள் மீதான எதிர்ப்பும் வெளிப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. சிறை மல்கமுக்குப் பல பாடங்களைக் கற்றுத் தருகின்றது. சிறையில் சந்திக்கும் பெய்னிஸ் எனும் சக கைதியினால் கறுப்பின அடையாளத்தைப் பற்றியும். 'நேஷன் ஒவ் இஸ்லாம்' எனும் அமைப்பைப் பற்றியும் அதன் தலைவரான இலிஜா மொஹமட்டைப் பற்றியும் தெரிந்து கொள்கிறார். வெள்ளையர் பற்றிய மல்கமின் மாயையைத் தகர்த்து இலிஜா மொஹமட்டால் மட்டும் தான் உன்னையும், உனது மனதையும் வெளிக் கொண்டு வர முடியும் எனக் கூறுகிறான் பெய்னிஸ். கறுப்பர்கள் தான் உன்னதமானவர்கள். கடவுள் கூடக் கறுப்புத்தான். வெள்ளைக்காரர்கள் தான் கூறுகிறார்கள் ஜீஸஸ் வெள்ளை உடம்பும், நீலக் கண்களும், பொன்னிறத் தலைமயிரும் உடையவர் என்று. அதை நாமும் நம்புகிறோம். ஆனால் எல்லாமே கறுப்புத்தான், நாங்கள் தான் உண்மையான மனிதர்கள். இந்த உலகத்தில் முதன் முதலில் பிறந்தவர்கள் கறுப்பர்கள் தான் எனக் கறுப்பர்களின் பலம், ஆளுமை என்பவற்றைப் புரிய வைக்கின்றான். இந்தச் சம்பவமே மல்கமின் வாழ்வை இன்னொரு திசைக்கு இட்டுச் செல்ல வழி சமைக்கிறது. மேலதிகமாக வாசிக்கவும் அதனால் யோசிக்கவும் தூண்டுகிறது.

சிறையிலிருந்து வெளிவரும் மல்கம் நேஷன் ஒப் இஸ்லாமில் இணைந்து கொள்கின்றார். அமைப்பின் அமைச்சராக அதைக் கட்டியெழுப்புவதற்காக முன்னின்று உழைக்கின்றார். பலதரப்பட்ட மனிதர்களையும் தனது அமைப்பிற்குள் கொண்டு வருகிறார். மனிதர்களின் ஆன்மாவை ஊடுருவி அவர்களோடு உறவை ஏற்படுத்திக் கொள்வதும் அமைப்பாக மாற்றுவதும் மல்கமுக்கு கைவந்த கலையாக இருக்கிறது. இதில் மல்கம் எக்ஸாகவே மாறியுள்ள டென்ஸில் வோஷிங்ரனின் அற்புதமான நடிப்பு எங்களையும் மூன்று மணி நேரம் மல்கம் எக்ஸுடன் வாழ வைத்து விடுகிறது.

இந்தவேளையில் அமைப்பின் உறுப்பினராக இருந்த சகோதரி பெற்றி எக்ஸின் மேல் மல்கமுக்கு ஈர்ப்பு ஏற்படுகிறது. பெற்றியின் ஆளுமை அவரை கவனம் கொள்ளச் செய்கின்றது. பெற்றியும், மல்கமும் இலிஜா மொஹமட்டின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்கின்றனர்.

மல்கம் எக்ஸின் புகழ் கூடக் கூட அமைப்பிற்குள்ளேயே மல்கமிற்கு எதிரிகள் உருவாகத் தொடங்குகிறார்கள். மல்கமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைக்கு முகம் கொடுக்க முடியாதவர்களாக மாறுகிறார்கள். சிறையில் மல்கமுக்கு நேஷன் ஒப் இஸ்லாமை அறிமுகப்படுத்தும் பெய்னிஸ்ஸே ஒரு கட்டத்தில் மல்கம் மீது பொறாமை கொள்கின்றான். அவனுக்கு மல்கமின் வளர்ச்சி தாங்கிக் கொள்ள முடியாததாக இருக்கிறது. ஆனால் மல்கமோ பெய்னிஸ் தனக்கு எதிரியாக மாறுவான் என நம்ப முடியாதவராக இருக்கிறார். பெற்றிக்கும் அவருக்குமான உரையாடலில் மல்கம் எவ்வாறு சகோதரர் பெய்னிஸை நம்பினார் என்பதை தெளிவுபடுத்துகிறார் லீ. சகோரதரர் பெய்னிஸ்தான் சிறைக்குள் விலங்கைப் போல் வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு கௌரவத்திற்குரிய இலிஜா மொஹமட்டை அறிமுப்படுத்தியவர். எனது வாழ்க்கையைப் பத்திரப்படுத்தியவரும் அவரே. அவரால் எனக்குத் துரோகம் செய்ய முடியாதென மல்கம் பெற்றியிடம் கூறுகிறார்.

இந்த நேரத்தில்தான் இலிஜா மொஹமட்டால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட அமைப்பின் பெண் சகோதரிகள் இருவர் தமக்குப் பிறந்த குழந்தைகளுக்கு தந்தை இலிஜா மொஹமட் என்று பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளிக்கிறார்கள். பேட்டியின் மூலம் அது தெரிய வரும்போது இலிஜா மொஹமட் மீதான குற்றச்சாட்டை மறுக்கும் மல்கம் பாதிக்கப்பட்ட பெண்கள் இருவரையும் நேரில் சந்தித்துப் பேசும் போது உண்மையை அறிந்து கொள்கிறார். அதன் பிறகு பெய்னிஸுடன் நடைபெறும் உரையாடலில் பெய்னிஸ் கூட மொஹமட் செய்ததில் தவறில்லையெனக் கூறுகிறான். இலிஜா மொகமட் கூட தான் செய்தது தவறில்லையெனும் கருத்துப்பட மல்கமுடன் உரையாடுகிறார். ஆனால் மல்கத்தால் இதனை ஒத்துக் கொள்ள முடியவில்லை. நாங்கள் மக்கள் தலைவர்கள். நாங்களே இவ்வாறு செய்யலாமா? எனக் கேள்வியெழுப்புகிறார். இந்த விடயமும், கென்னடியின் கொலை தொடர்பாக மல்கம் அளித்த பேட்டியும் நேஷன் ஒப் இஸ்லாமுக்கும் அவருக்குமான உறவில் பிளவு ஏற்படக் காரணமாகிறது.

இதன் பிறகு முற்றாக நேஷன் ஒப் இஸ்லாமிலிருந்து விலகும் மல்கம் "ஆப்ரோ அமெரிக்க ஒற்றுமை நிறுவனம்" (OAAU) என்ற புதிய அரசியல் அமைப்பை, நிறுவி மக்கள் முன் பிரகடனப்படுத்துகிறார்.

மல்கமைத் தமது அமைப்பு தடை செய்துள்ளதாக நேஷன் ஒப் இஸ்லாமும் தகவல் வெளியிடுகின்றது. மல்கமின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல், மல்கமை அழிப்பதற்காக அமெரிக்காவின் FBI உளவுப்படையுடன் கூட்டுச் சேர்கிறது நேஷன் ஒப் இஸ்லாம். இதற்கிடையில் மல்கமின் ஒவ்வொரு நடவடிக்கையும் FBI யினால் கண்காணிக்கப்படுகிறது.

மல்கம் மக்காவிற்கு புனிதப்பயணம் மேற்கொள்ளும் போது FBI உளவாளிகள் அவருடன் சென்று அவரைக் கண்காணிக்கிறார்கள். அதனை மல்கம் பெற்றிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கிறார், "நான் போகுமிடமெல்லாம் இரண்டு வெள்ளையர்கள் என்னைப் பின் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறார்களென". அடிமைத்தனம் மல்கமின் மனதை எவ்வளவு புண்படுத்தியுள்ளது என்பதனை அவர் கூறும் இந்தக் கருத்துக்கள் ஊடாக நாம் புரிந்து கொள்ளலாம். "இப்பொழுது நான் இதைச் சொன்னால் நீங்கள் திகைத்துப் போவீர்கள்! மக்காவில் நாங்கள் முஸ்லிம்களுடன் ஒரு கோப்பையில் உண்டோம், ஒரு கிளாஸில் குடித்தோம், ஒரு கடவுளை வழிபட்டோம். அவர்களுடைய கண்ணும் நீலமாக இருந்தது. அவர்களது தலைமயிர் பொன்னிறமாக இருந்தது. அவர்களுடைய தோலும் வெள்ளையாவே இருந்தது. ஆனால் நாங்கள் எல்லோரும் உண்மையான சகோதரர்களாக இருந்தோம். எல்லா நிறத்தவர்களும், எல்லா இனத்தவர்களும் ஒரே கடவுளையே, ஒரே மனிதத்துவத்தையே நம்புகின்றனர். நான் இனவாதியல்ல. எனக்கென்று எதுவும் வேண்டியதில்லை. ஆனால் எல்லா மக்களுக்கும், சுதந்திரம், நீதி, சமத்துவமான வாழ்க்கை, விடுதலை, மகிழ்ச்சி என்பன கிடைக்க வேண்டும். மனிதர்களை தோலின் நிறத்தை மட்டுமே வைத்து எடைபோடும் அமெரிக்க வெள்ளையர்களின் மனிதாபிமானமற்ற செயலுக்கு மாறாக அங்கிருந்த சூழ்நிலை காணப்பட்டது" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

மல்கமைக் கொன்றொழிப்பதற்கான சதிவலைகள் வேகமாகப் பின்னப்பட்டுக் கொண்டிருக்கிறது. கொலை மிரட்டல்களும் விடுக்கப்படுகின்றன. அவரது வீட்டிற்குக் கூட குண்டு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறியப்படுகிறது. இதன் போது பத்திரிகையாளர்கள் கேட்கும் கேள்விக்கு இலிஜா மொஹமட்டின் கடினமான உத்தரவின் கீழ் நேஷன் ஒப் இஸ்லாம் தான் அதனைச் செய்துள்ளது. செய்தது கூட யாரென்று எனக்குத் தெரியுமென மல்கம் அடித்துக் கூறுகிறார். ஆனால் மல்கம் தனக்கான பிரபல்யத்துக்காக தானே இதனைச் செய்து விட்டு தம்மீது பழி போடுகிறாரென நேஷன் ஒப் இஸ்லாம் தெரிவிக்கிறது. மல்கமின் மெய்ப் பாதுகாவலர்களுக்குள் அவரை அழிப்பதற்காக நேஷன் ஒப் இஸ்லாமின் விசுவாசிகளும் சேர்ந்து கொள்கிறார்கள்.


அதன் பிறகு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ளும் மல்கமின் கடைசி நடவடிக்கைகள், எந்நேரமும் மல்கமை ஒழித்துக் கட்டுவதிலேயே குறியாகவுள்ள எதிரிகளால் கண்டு பிடிக்கப்படுகிறது. தனக்குப் பின்னால் துப்பாக்கிகள் துரத்திக் கொண்டிருக்கின்றன என்று தெரிந்தும், தன்னுடைய மக்களை ஏமாற்றக் கூடாதென நினைத்து மக்கள் முன் தோன்றி பேசும் பொழுது அவருடைய மனைவி, மகள்கள், அமைப்பில் உள்ளவர்கள் முன்னிலையில் சுட்டுக் கொல்லப்படுகிறார்.

அமெரிக்க புலனாய்வுத்துறை எப்படி கறுப்பின விடுதலைக்காக அகிம்சை வழியில் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கை திட்டமிட்டுக்கொலை செய்ததோ, வேறு நாடுகளில் தமது தேச விடுதலைக்காகப் போராடியவர்களை எவ்வாறு சதிவலையில் வீழ்த்திக் கொன்றொழித்ததோ, அவர்களுடைய ஆளுமைகளை ஒடுக்கியதோ அதுபோலவே நேஷன் ஒப் இஸ்லாமைப் பகடைக்காயாக உருவாக்கி மல்கம் எக்ஸையும் திட்டமிட்டுக் கொலை செய்தது. மல்கத்தின் கொலைக்கு பின்புலமாக இருந்தது அமெரிக்கப் புலனாய்வுத்துறையான FBI.

மல்கம் நேஷன் ஒப் இஸ்லாமில் இணைந்ததன் பிறகே சிறிய அமைப்பாக இருந்த நேஷன் ஒப் இஸ்லாம் அசைக்க முடியாத அரசியல் சக்தியாக அமெரிக்காவில் தலைதூக்கியது. ஒவ்வொரு கறுப்பரையும் வெள்ளையர்கள் துன்புறுத்தும் போது தட்டிக் கேட்கும் மல்கத்தின் பின் கறுப்பின மக்கள் திரண்டனர். அவரை ஆதரித்தனர். ஒரு கட்டத்தில் மார்ட்டின் லூதர்கிங்கின் அகிம்சை வழியை விட, மல்கம் எக்ஸின் தீவிரத் தன்மையின் மேல் மக்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர். தீவிரமான இந்தத் தலைவரின் ஆணையின் கீழ் ஆபிரிக்க அமெரிக்கர்கள் எதனையும் செய்யத் தயாராக இருந்தனர். இந்தத் தீவிரத் தன்மை அமெரிக்க வரலாற்றிலேயே அவ்வளவு காலமும் இல்லாத ஒன்றாகவும் அமெரிக்காவின் தலையெழுத்தையே மாற்றக் கூடிய ஒன்றாகவும் இருந்தது.

மல்கத்தின் இந்த உறுதி, ஆளுமை, தன்னம்பிக்கை என்பன அவரின் தாயின் மூலமே ஏற்படுகின்றதென நான் நினைக்கிறேன். ஒரு கட்டத்தில் மல்கம் தனது தாயைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்: "எனது அம்மா கர்வமிக்க, படித்த, ஆளுமையுள்ள பெண். அவருடைய அம்மா வெள்ளையனால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதால் அவர் வெள்ளையாக இருந்தார். வெள்ளைத்தோலை வெறுத்த அவர் தனது பிள்ளைகள் கறுப்பாகப் பிறக்க வேண்டுமென விரும்பினார். எனது அப்பாவை அவர் திருமணம் செய்ததன் காரணமே அப்பா மிகவும் கறுப்பாக இருந்தார் என்பதே." இவ்வளவு ஆளுமையுடன் இருந்த மல்கத்தின் தாய் ஏர்ல் லிட்டிலின் படுகொலையின் பின் வெள்ளையர்களினால் மனநோயாளியாக்கப்பட்டு இறந்து போகிறார். அதன் பிறகு சகோதரர்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படுகின்றனர். இவ்வளவும் மல்கத்தின் கண் முன்னாலேயே நடைபெறுகின்றது.

'புரட்சி என்பது இரத்தம் சிந்துவது. புரட்சி என்பது சமரசமற்றது. புரட்சி என்பது தனது பாதையில் எதிர்ப்படும் அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிப் போடுவது' என்று தான் கூறிய இந்தக் கருத்திற்கு ஏற்றவாறே இறுதிவரை தனது மக்களுக்காகப் போராடி, தனது மக்கள் முன்னாலேயே இரத்த வெள்ளத்தில் காவியமாகிப் போனான் இந்தக் கறுப்பு மனிதன்.



நெறியாளர் ஸ்பைக் லீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி.ரி.கேதாரநாதன்

# கமோஸ்பானி

# மாற்று சினிமாவுக்கான வெளியை நோக்கி...

அமைதி தவழும் விவசாயக் கிராமம் சார்க்கி. பெருநகரான ராவல்பிண்டியிலிருந்து அதிகளவு தொலைவில் இல்லாமல் ஆனால் ஒரு புறத்தில் ஒதுக்காக இது பாகிஸ்தானிய பஞ்சாப்பில் உள்ளது. இரு நடுத்தர வயதுள்ள பெண்கள் ஈரமான நீண்ட துணியொன்றினை கொடியில் உலரவிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தி ஆயிசா. 18 அல்லது 19 வயது இளைஞனான சலீமின் விதவைத் தாய். மற்றப்பெண் அயல் வீட்டில் வசிப்பவள். தன் வாழ்வில் எல்லாமுமே தன்மகன் சலீம் தானென்று வாஞ்சையுடன் கூறுகிறாள் அவள். சலீம்மீது அவளுக்கிருக்கும் முழு அளவிலான நம்பிக்கையையும் அளவற்ற பாசத்தையும் வெளிப்படுத்துகிறாள் ஆயிசா. இதற்கு அவள் காரணத்தையும் விபரிக்கிறாள். நீண்ட காலம் பிள்ளைப் பேறில்லாது இருந்து கடும் பிரார்த்தனைகளின் பயனாக அவனைப் பெற்றெடுக்கும் பாக்கியம் தனக்குக் கிடைத்ததாகப் பெருமையுடன் பூரிக்கிறாள் அவள். சுருக்கமாகக் கூறப் போனால் சலீம் தான் அவளது வாழ்க்கை. எல்லாவற்றையுமே அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அயல் வீட்டுப் பெண் மிக நிதானத்துடன் "பிள்ளைகள் எப்போதுமே பெற்றோருக்கு அருகிலிருக்கப் போவதில்லை. எனவே எவையும் எமக்குச் சாசுவதமான சொந்தமல்ல." என்கிறாள். திரைப்படத்தின் ஆரம்பப் பகுதியில் வரும் உரையாடல்தான் இது. ஒரு வகையிலான முன்னுணர்வுடன் கூடிய அழுத்தம் நிறைந்த தொனி இந்த உரையாடலில் இழையோடி ஒலிக்கிறது.

கமோஸ்பானி திரைப்படம் அடிப்படையில் ஒரு அரசியல் திரைப்படமாகும். இது மத, சமூக முரண்பாடுகளையும் எவ்வாறு மதம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அடிப்படைவாதமாக உருவெடுக்கும் போது தாய் - மகன், காதலி - காதலன் போன்ற மிக நெருக்கமான மனித உறவுகள்கூட அந்நியப்பட்டு அவற்றின் அர்த்தங்களை இழந்து சிதைந்து போவதையும் மூடத்தனமிக்க பிரசாரங்களுக்கு சமூகம் எத்தகைய விசாரணைகளுமின்றி எளிதில் இலக்காகி இரையாகிப் போவதையும் சித்திரிக்கிறது. உண்மையில் இத்திரைப்படம் ஒரு வரலாற்றுப் பின்னணியில் தேசியம், மதம், சமூகம், மற்றும் அடிப்படைவாதம் போன்ற ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தவற்றை திரையூடகத்தின் மையக்கூறுகளாகக் கொண்டு அலச முற்பட்டிருக்கின்றது.



1977இல் பாகிஸ்தானில் இராணுவச் சட்டத்தின் கீழ் சியா உல் ஹக் ஆட்சியின் தொடக்க காலப்பகுதியினை, இஸ்லாமியச் சட்டங்களின்படி ஆட்சிபுரியும் அரசாக அது துரிதமாக மாறிக்கொண்டு வரும்கால கட்டத்தினையும் இத்திரைப்படம் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது. இம்மாறும் காலகட்டம் திரைப்படத்தின் பின்புலமாக அருமையான முறையில் மிகக்காத்திரமாக அரசியல் பரிமாணங்களுடன் கூடிய படிமங்களில் சபிகா சுமரால் வெளிக்கொணரப்படுகின்றது.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை மதவாதிகளே கடும் அடிப்படைவாதிகளாக இருக்கிறார்கள். சிறுபான்மையான ஒரு தொகையினரே இவர்கள். ஜெனரல் சியாவின் ஆட்சியின் போது ஒரங்களில் இருந்த இந்த சக்திகளுக்கு மத்தியில் ஆதிக்கம் செலுத்துவதற்கான வாய்ப்பும் அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கின்றது. மத்தியில் இக்குழுக்களின் ஆதிக்கமும் அதிகாரங்களும் தலையெடுக்க ஆரம்பித்ததும் குழப்பங்களும் வன்முறைகளும் உருவாகின்றன.

திரைக்கதை எழுத்தாளரே நெறியாளராகவும் இயங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால் வெவ்வேறான இரு தளங்களிலும் எதிர்கொள்ளக் கூடிய கடினங்களைக் கடந்து சரளமானதொரு அரசியல் பிரக்ஞையுடன் கூடிய படத்தை சபிகா சுமரால் உருவாக்க முடிந்திருக்கிறது. அரசியல், அழகியல் என்ற இரு அம்சங்களிலும் தடம் புரண்டு போய் விடாது அவர் ஓரளவு சமநிலையினைப் பேணி உள்ளார். ஒரு சிறுகுழுவினரின் அடிப்படைவாதம் கட்டற்ற நிலையில் எத்தகைய கேள்வியும் இன்றி வளர விடப்படும் ஒரு பேராபத்தான அனுபவத்தை எதுவித அதீதமும் இன்றி சினிமா ஊடகத்தின் மூலம் தொற்ற வைக்க அவரால் முடிந்திருக்கின்றது. இதனாலேயே லொக்கானாவில் ஏழாயிரம் பேரை உள்ளடக்கிய பார்வையாளருக்கு இத்திரைப்படத்தைக் காண்பித்த போது எத்தகையதொரு அந்நியப்பாடும் இன்றி அவர்களால் ஒன்றிக்க முடிந்திருக்கின்றது. மிகவிரிந்ததானதொரு பரப்பெல்லையில் கமோஸ்பானியின் இயங்குதளம் இருந்தமைக்கும் சினிமாவின் சாத்தியமான ஆற்றலை வசப்படுத்தும் கலைத்திறன் நெறியாளருக்குக் கைகூடி இருந்தமைக்கும் இதைவிட வேறு சான்று தேவையில்லை.

> **கமோஸ்பானி திரைப்படம் அடிப்படையில் ஒரு அரசியல் திரைப்படமாகும். இது மத, சமூக முரண்பாடுகளையும் எவ்வாறு மதம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அடிப்படைவாதமாக உருவெடுக்கும் போது தாய் – மகன், காதலி – காதலன் போன்ற மிக நெருக்கமான மனித உறவுகள்கூட அந்நியப்பட்டு அவற்றின் அர்த்தங்களை இழந்து சிதைந்து போகின்றன என்பதையும் மூடத்தனமிக்க பிரசாரங்களுக்கு சமூகம் எத்தகைய விசாரணைகளுமின்றி எளிதில் இலக்காகி இரையாகிப் போகின்றது என்பதையும் சித்திரிக்கிறது.**

கனவு வயப்பட்ட இசையில் ஈடுபாடும் மென்மையுணர்வும் கொண்ட அதேவேளை கலைஞனாக வரவேண்டும் என்ற ஆர்வம் நிரம்பிய சலீம் லாகூரிலிருந்து வரும் இரு அடிப்படைவாதிகளின் போதனைப் பொறியில் சிக்கி ஜிகாத்தாக மாறுவது, அதையடுத்து காதலியிடம் இருந்தும் தாயிடமிருந்தும் அந்நியப்பட்டுப் போவது, தாயின் கடந்தகாலத்தை நெகிழ்ச்சியுடன் ஒரு மகனாகப் பாராது வேதனையில் அவளை ஒதுக்கிப் புறந்தள்ளி அவளது தற்கொலைக்குக் காரணமாக இருப்பது, அடிப்படைவாதிகளுடன் சேர்ந்து காதலியின் கல்லூரிக் கட்டிடத்தை மூடிச் சுவர் எழுப்புவது, தாய் - மகனிடையே தொடரும் உணர்ச்சி மயமான போராட்டங்கள் மற்றும் கலவரமான மௌனங்கள், பிரிவினையின் பின்னர் சீக்கியர்கள் தமது புனித இடங்களுக்கு வருவதால் அவர்களின் பிரசன்னங்கள் காரணமாக சகிப்பின்மையால் ஏற்படும் பதற்றங்கள் - கொந்தளிப்புகள், புனித குரானை

ஆவேசமற்று மனித நேசங்களுடன் பற்றுறுதி கொண்டு வியாக்கியானப்படுத்துவோருக்கும் அடிப்படைவாதிகளாக மூர்க்கத்துடன் வியாக்கியானப்படுத்துவோருக்கும் இடையேயான மனப்பான்மை வேறுபாடுகள் மற்றும் அவர்களது செயற்பாடுகள் இன்னும் அவை போன்ற பல நுண்ணுணர்வுமிக்கதான வெளிப்பாடுகள் அரசியல் கூர்மையுடன் பல தளங்களிலும் அடுக்குகளிலும் எத்தகைய ஆயாசமுமின்றி வெகு இயல்பாக நெறியாளரால் வெளிக்கொணரப்படுகின்றன.

உண்மைச் சம்பவங்களை அடியொற்றியதாக ஆழமான ஆய்வுகளின் அடிப்படையில் மிக வலுவானதொரு திரைக்கதையினை நெறியாளர் அமைத்திருக்கிறார். ஒரு வரலாற்றுப் பின்னணியில் உணர்வுகள், கருத்தாக்கங்கள், சித்திரிப்புகள் என்பன நம்பகத் தன்மையுடன் காட்சிப்படிமங்களாக வெளிக்கொணரப்படுவதற்கு ஆய்வு அடிப்படைகளில் அமைந்த வலுவானதொரு திரைக்கதை அவசியமாகும். இந்தியத் துணைக்கண்டத்தை இருவேறு நாடுகளாக உருவாக்கிய வரலாற்றுக்காலமான 1947 காலப்பகுதியில் நடந்த உண்மைச்சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. பிரிவினைக்கு முற்பட்ட பஞ்சாப்பில் முஸ்லிம்களும் சீக்கியர்களும் அருகருகாக வாழ்ந்தனர். ஆனால் பிரிவினையின் போது இருபிரிவினரும் ஒருவரையொருவர் குரோத உணர்வுடன் கொன்றனர். சொத்துக்களை அபகரித்தனர். இதில் இரு தரப்புப் பெண்களும் கூட அடங்குவர். பசு நிரைகளை, மந்தைகளைக் கொள்ளையடிப்பதற்கும் பெண்களைக் கடத்துவதற்கும் எத்தகைய வேறுபாடும் இருக்கவில்லை. பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர். விற்கப்பட்டனர். வாங்கப்பட்டனர். சில வேளைகளில் கொலையும்

செய்யப்பட்டனர். சிலர் கடத்தியவர்களையே திருமணமும் செய்தனர். பெண்களது கருத்துப்படி அவர்கள் தத்தமது குடும்பங்களிலுள்ளஆண்களாகிய அவர்களது தந்தையர்கள், சகோதரர்கள் அல்லது கணவன்மார்கள் ஆகியோரால் குடும்ப சமூக மானங்களை 'கற்பை' (Chastity) காப்பாற்ற தற்கொலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். உத்தயோகபூர்வ கணிப்பின்படி இந்தியாவில் ஐம்பதாயிரம் முஸ்லிம் பெண்களும் பாகிஸ்தானில் 33ஆயிரம் இந்துக்கள் மற்றும் சீக்கியப் பெண்களும் கடத்தப்பட்டனரெனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அது சரியான கணக்கெடுப்பு அல்லவென்றும் சரியாகக் கணக்கெடுக்கப்படின் எண்ணிக்கை இதனை விட மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெண்ணென்பவள் வன்முறைக்குப் பலியாகி தன்தலை விதியைத் தானே நிர்ணயிக்க முடியாது எங்கு தான் சொந்தம் என்ற நிலையில் நிர்க்கதியாவது மிகப்பாரதூரமானதும் பயங்கரமானதுமானதொரு அனுபவம் எனத் தெரிவிக்கும் நெறியாளர் சபிகா சுமர் அவளுக்கு காலாதிகாலமாக இழைக்கப்பட்டுவரும் அநீதிகளையும் அவளது நொய்மையினையும் தாம் திரைப்படத்தில் பிரதிபலித்திருப்பதாகவும் அத்தகைய பெண்களது மொத்தத் துயர அனுபவங்களின் சிறு துளியே கமோஸ்பானி உருவாகக்காரணம் எனவும் கூறியுள்ளார். மேலும் இந்த விதத்தில் பொஸ்னியா, கொசோவா, மற்றும் வேறு பல இடங்களிலும் கடத்தப்பட்ட, கைப்பற்றப்பட்ட பெண்களது துயர அனுபவங்களையும் யுத்தத்தால் சிதறுண்ட ஐரோப்பாவில் யூதப்பெண்கள் அனுபவித்த கொடுமைகளையும் அவலங்களையும் நினைக்கையில் பதைபதைப்பும் பீதியும் ஏற்படுவதாகக் கூறுகிறார். இத்துடன் நின்று விடாது அவர் பின்வருமாறு விபரிக்கின்றார். "இந்த விதத்தில் பார்க்கையில் கமோஸ்பானி திரைப்படத்தில் எனது பிரதான கதாபாத்திரமான ஆயிசா யுத்தவலய வன்முறைகளில் சிக்கிய எந்த நாட்டுப் பெண்ணையும் கூட பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உலகளாவிய நெருக்கடி ஒன்றினை வெளிப்படுத்துவதாகவும், இந்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் ஆயிசா பொஸ்னியா, சிறிலங்கா, ஆப்கானிஸ்தான், ஏன் ஈராக் நாட்டிலுள்ள பெண்ணாகவும் கூட பரிமாணம் அடையலாம்

கமோஸ்பானி திரைப்படம் கூர்மையான பெண்ணியக் கூறுகளை அதன் உள்ளார்ந்த வலிமையாகவும் வலுவாகவும் கொண்டிருக்கின்றது. இந்த விதத்தில் சலீமின் தாய் ஆயிசா, அவன் காதலி சுபைதா ஆகியோர் ஆன்ம உறுதியும் உயிர்ப்பும் பெறும் பரிமாணத்தை எய்தியிருக்கின்றனர். ஆயிசாவுக்கு இறுதி வரையும் துணையாகவும் பக்கபலமாகவும் இருப்பவள் சுதந்திரமும் தீர்க்கமான முடிவெடுக்கும் ஆற்றலும் கொண்ட சுபைதா ஆவாள். உண்மையாகத் தான் நேசித்த சலீமின் இழப்பு அவளைப் பாதித்தாலும் அவள் அலட்டிக் கொள்ளவில்லை. உறுதி குலையவில்லை. திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் இசைக்கலைஞனாக அவளைக் காதலித்த கிராமத்துப் பையனான சலீம் பின்னர் மத அரசியலில் அடிப்படைவாதியாகி உயர்பீடத்திலிருக்கும் சலீம்கானாக தொலைக்காட்சி ஒன்றில் பேசிக்கொண்டிருக்கும் போது அவளது அழகான முகத்தில் ஒரேயொரு வினாடியின் கூறில் தோன்றி மறையும் புன்சிரிப்பு விமர்சனப்பாங்கான ஒன்றாகும்.

கமோஸ்பானி மத அரசியல் சகிப்பின்மை குறித்து மிக ஆழமான விசாரணைகளை, பயங்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றது. கனவுலகில் சஞ்சரிக்கும் கள்ளங்கபடமற்ற இளைஞன் ஒருவன் மெல்ல மெல்ல அடிப்படைவாதியாக மாறிக்கொண்டிருக்கையில் ஏற்பட்டுவரும் விகாரமான மாற்றங்களை ஆரம்பநிலையிலிருந்து இடைநிலை, இறுதிநிலை வரைக்கும் பல நுணுக்கவிபரங்களுடன் மிகக்கூர்மையாக முழு அளவில் பகுப்பாய்வு செய்திருக்கின்றது. இத்தகைய பகுப்பாய்வு குடும்ப, மத, சமூக அரசியல் பின்புலத்தில் பல்வேறு தளங்களிலும் அடுக்குகளிலும் உள்ளார்ந்த தன்மையுடன் மிகக்கூர்மையாக வெளிப்பாடும் அர்த்தமும் பெறக்கூடிய விதத்தில் கலையாக்கமும் பெற்றிருக்கிறது.

ஆயிசா பாத்திரத்திற்கு கிரோண் ஹேர் தெரிவு மிக அற்புதமானது. அவரது முகம் கனிவு, துயரம், மலர்ச்சி, இயலாமை மற்றும் நெகிழ்ச்சி போன்றவற்றை மிக இயல்பாக அடக்கமாக வெளிப்படுத்துகிறது. மங்கிய வண்ணத்தில் பளபளப்பற்றதாக ரால்வ் நெற்சன் இன் ஒளிப்பதிவும் மதன்கோபால்சிங் மற்றும் அர்சாத்மஹ்மூட்டின் சோகத்தினையும் வலியினையும் பிசைந்து தரும் இசையும் பரஸ்பரம் ஒன்றையொன்று அர்த்தப்படுத்துவனவாயும் ஆழப்படுத்துவனவாயும் வியாபகம் கொள்கின்றன. இஸ்லாத்தின் புதிரான சூபிஸத்தின் பரிமாணத்தினை தழுவியதாக இசை உயிர்ப்படைகின்றது. சொர்க்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கு மாத்திரமின்றி நற்செயல்களைச் செய்யும் எவருக்கும் பரந்திருப்பதாக புனித குரானை ஆயிசா அவளிடம் படிக்கும் சிறுமிகளுக்கு வியாக்கியானப்படுத்துவது கூட இந்த உலகு தழுவிய இசை வியாபகத்துடன் ஒத்து வருவது போல் தெரிகிறது. இந்த வகையில் தான் வளர்ந்த சூழலினாலும் கற்ற கல்வியினாலும் மற்றும் கூர்மையான தாராள சிந்தனைகளாலும் நெறியாளரும் எழுத்தாளருமான சபிகா சுமர் பண்படுத்தப்பட்ட ஆளுமையினைப் படைப்பாற்றல் என்ற ரீதியில் பார்க்கையில் இந்தியாவைச் சேர்ந்த அபர்ணா சென் மற்றும் ஈரானைச் சேர்ந்த ரக்மினா மிலானி ஆகியோருக்கு நிகரானவர் இவர் எனக் கூறலாம். ஒரு விதத்தில் அபர்ணா சென்னை விடவும் கூர்மையானதொரு அரசியல் சமூக விமர்சனப்பாங்கும் பார்வையும் இவருக்கு இருக்கிறது. இந்த வகையில் ரக்மினா மிலானியுடன் இவரது ஒப்பீடு கூடுதலாகப் பொருந்துமென நான் நினைக்கிறேன். தனது நாட்டு அரசியல் சமூக விமர்சனங்களை துணிச்சலாக படைப்புகளின் மூலம் கலைத்துவம் குன்றாமல் வெளிப்படுத்தும் சபிகா தனது நோக்கம் சமூக அசைவாக்கம் எனத் தெரிவிக்கிறார். சியாஉல்ஹக் ஆட்சியின் போது அவரது கெடுபிடி நடவடிக்கைகளாலும் அவர் கையாண்ட தணிக்கை கட்டுப்பாடுகளாலும் பாகிஸ்தானில்



பெற்றிருப்பது நன்கு பளிச்சிடுகின்றது.

சுதந்திர திரைப்பட நெறியாளரான சபிகா சுமர் இதுவரை ஆறுக்கும் மேற்பட்ட ஆவணப்படங்களையும் கமோஸ்பானி என்ற கதைப்பாங்கான திரைப்படத்தையும் நெறியாள்கை செய்திருக்கின்றார். சமூக விமர்சனப்பாங்கான திரைப்படங்களின் மூலம் வெளியுலகின் கவனத்தை ஈர்த்த இவர் கமோஸ்பானி மூலமே முழு அளவிலவான சர்வதேச அங்கீகாரத்தையும் விமர்சகர்களது பாராட்டுதல்களையும் பெற்றார். ஒரே திரைப்படத்திற்குக் கூடுதலான விருதுகள் என்ற வகையிலும் கூட கமோஸ்பானி சாதனை புரிந்திருக்கிறது. பெண் நெறியாளர்களைப் பொறுத்தவரையில் சினிமாக் கலாசாரம் முற்றாகவே அழிந்திருந்தது. இறுதி மூச்சுக்கூட விடமுடியாத நிலையில் நலிந்திருந்த வர்த்தக சினிமா அண்மைக் காலங்களில் துளிர்த்து இப்போது தான் ஓரளவு வளர்ச்சி கண்டு வருகிறது. இத்தகையதொரு பின்னணியில் மாற்று சினிமாவுக்கானதொரு வெளி இன்னும் ஏற்படாததொரு நிலையில் சபிகா சுமர் போன்றோரது சினிமா யாத்திரை இயக்கம் பெரியளவில் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்திட்டத்திற்கு மக்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவைப் பார்க்கையில் சிறிது காலம் எடுத்தேனும் மாற்று சினிமாவுக்கானதொரு வெளியைத் தனது நாட்டில் சபிகா ஏற்படுத்துவாரென்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.



# சமூக அசைவாக்கமே எனது திரைப்படத்தின் நோக்கம்

**- சபிகா சுமர் -**

**உங்களது முதலாவது கதைப்பாங்கான திரைப்படமான ஹமோஸ் பானியின் உருவாக்கம் பற்றி...**

ஆவணத் திரைப்படத்திலிருந்து கதைப்பாங்கான திரைப்பட உருவாக்கத்திற்குள் நுழைவது என்பது சற்றுக் கடினமான ஒரு முயற்சியென்றே கூற வேண்டும். ஒரு வகையில் இதனையொரு பாய்ச்சலாகவே கொள்ளலாம். உண்மையில், ஹமோஸ் பானியினை ஒரு ஆவணத் திரைப்படமாக எடுக்கவே நான் முதலில் எண்ணியிருந்தேன். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக் காலத்தின்போது பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் குறித்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது சட்டசபை விவாதங்கள் பலவற்றை நான் படிக்க நேர்ந்தது. அதன்போது குறிப்பாக மீட்பு சட்டத்தின் (Recovery - Act) மீது என் கவனம் படிந்தது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையினைப் பிரதிபலிக்கும் சட்டம் இதுவாகும்.

எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலுமே கடத்தப்பட்ட சம்பவங்கள் முறைப்பாடுகளில் பதிவாகியிருந்ததையடுத்து இந்த விவகாரங்களைக் கையாளுவதில் இந்தியாவில் மிராத்துல்வ சாராபாய் என்றழைக்கப்படும் பெண் ஈடுபட்டிருந்தார். இவ்வாறான சம்பவங்களுக்கு உள்ளாக நேர்ந்த பெண்களை மீட்டு, அவர்களை அவர்களது முன்னைய மூலக் குடும்பங்களிடம் ஒப்படைப்பதே இச்சட்டத்தின் நோக்கமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 1948ஆம் ஆண்டளவில் கொண்டுவரப்பட்ட இச் சட்டம் நீண்டகாலம் அமுலில் இருந்தது. இத்தகையதான துன்ப துயரங்களுக்கு இலக்கான பெண்கள் திருமணமாகிப் பிள்ளைகளைப் பெற்றிருந்தார்கள் என்பதை, இச்சட்டம் கணக்கிலெடுக்கத் தவறியிருந்தது மிகவும் துர்ப்பாக்கியமானது. இது அவர்கள் மீது விலங்கமாக நிர்ப்பந்திக்கப்பட்ட, திணிக்கப்பட்ட ஒன்றென்று எவருக்கும் விளங்கும்.

எல்லைப்புறத்தின் இரு பக்கங்களிலுமே இவ்வாறான சம்பவங்கள் நேர்ந்துள்ளன. இப்பெண்களை நிர்ப்பந்தமாக அவர்களது மூலக் குடும்பங்களுக்கு அனுப்பி வைத்ததுடன் கதை முடிந்துவிடவில்லை. இவ்வாறாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெரும்பாலான பெண்களை அங்கு மூலக் குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். முஸ்லிம் ஆண்களுடன் குடும்பம் நடத்திவிட்டுத் திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்களென்பதே இதற்காகக் கூறப்பட்ட காரணமாகும். அங்குமில்லாமல், இங்குமில்லாமல் வீடற்றவர்களாக, குடும்பமற்றவர்களாக நிர்க்கதியாக விடப்பட்ட எத்தனையோ பெண்கள் இறுதியில் பைத்தியமானார்கள். வரலாற்றில் மிகக் கொடிதான துன்பம் இதுவெனவே நான் நினைக்கிறேன். இத்தகைய மொத்தத் துயர அனுபவங்களின் சிறுதுளியே ஹமோஸ்பானி உருவாகக் காரணமாக இருந்தது.

**திரைப்படம் பாகிஸ்தான் பற்றி மாறுபாடான தன்மையினை வெளிப்படுத்துவதாக சிலர் விமர்சிக்கிறார்கள் இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

அவ்வாறான விமர்சனம் எதனையும் நான் கேள்விப்படவில்லை. ஜனாதிபதி காரியாலயத்திலிருந்து திரைப்படம் தொடர்பாக பாராட்டி எழுதப்பட்ட கடிதமொன்றினையும் நான் பெற்றிருந்தேன். திரைப்படத்தைப் பார்க்கும் எவருக்கும் திரைப்படம் என்னத்தைக் கூற விரும்புகிறது என்பது குறித்துத் தெரியாது போகாது. சிறுபான்மையினரான ஒரு தொகையினரை மத்தியில் அதிகாரத்தைச் செலுத்த அனுமதியளித்தால் நடப்பது என்ன? அதுவே ஜெனரல் ஸியா ஆட்சியின் போது நடந்தது. மௌலவிகள் எமது வாழ்க்கையுடன் இணைந்துள்ளனர். உலகில் எல்லாப் பகுதிகளிலுமே தீவிர போக்குடையோர் இருக்கின்றனர். பிரிட்டனில் தேசிய முன்னணியினர், ஜேர்மனியில் நவ - நாஸிகள், அமெரிக்காவில் கு - குக்ஸ் கிலான், இந்தியாவில் இந்துத்துவ... ஆனால் ஓரங்களிலிருக்கும் இச்சக்திகளுக்கு எவரும் மத்தியைக் கையளித்து அதிகாரம் செலுத்த அனுமதிக்கவில்லை. ஆனால் இதைத்தான் ஸியா - உல் - ஹக் எமக்குச் செய்தார்.

**யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் குறித்த படிமங்கள் மீது அவை குறித்த அலசல்களின் மீது நாட்டம் ஏற்பட்டது. இப்பெண்கள் தொடர்பில் உருவாகியிருக்கும் படிமங்கள் மிக முரண்பட்டனவாய், கறாரானதாய் எனக்குத் தோன்றின. வெளியுலகில் அவர்கள் அதீத தன்மை கொண்ட பேய் அணங்குகளாக உருப்பெற்றிருந்தனர். ஒரு விதத்தில் உண்மைத் தேடல் முயற்சியே தற்கொலைப் போராளிகளான பெண்கள் தொடர்பான இந்த ஆவணப் படம்.**

ஆனால் திரைப்படம் கதைவடிவில் ஒரு குறிப்பிட்டதைத்தான் எமக்குரியதைத்தான் கூறுகின்றது எனக் குறுக்கி மட்டுப்படுத்தி சினிமாவின் அசாத்திய ஆற்றலை அதன் சக்தியினை நாம் குறைவாக மதிப்பிட்டு விடக் கூடாது. ஏனெனில் சினிமாவின் இயங்குதளம் மிக விரிந்த பரப்பிலமைந்த ஒன்றாகும். லொக்கானாவில் 7000 பேர்களை உள்ளடக்கிய பார்வையாளர்களுக்கு திரைப்படத்தைக் காண்பித்தபோது அவர்களால் திரைப்படத்துடன் எத்தகைய அந்நியப்பாடுமின்றி ஒன்றிக்க முடிந்தது. திரைப்பட முடிவில் அவர்கள் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி தமது பாராட்டை வெளிப்படுத்தினர். பெண்களில் சிலர் தமது மகன்மார்கள் நவநாஜிகளாக உருமாறி தம்மிலிருந்து அந்நியப்பட்டுப் போவதையொத்த வேதனை மிக்க அனுபவத்திற்கு ஆளானதாகத் தெரிவித்தனர். சிறுகுழுவினரின் அடிப்படைவாதம் எத்தகைய கேள்வியுமின்றி கட்டற்ற நிலையில் வளரவிடப்படும் பேராபத்தானதொரு அனுபவத்தை அவர்களிடமும் தோற்றவைக்க முடிந்தது.

**பாகிஸ்தானின் பல பாகங்களுக்கும் திரைப்படத்தை ஒரு யாத்திரை போன்று எடுத்துச் சென்று பொதுமக்களுக்குக் காண்பித்தது பற்றி...**

பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்த ஆர்வத்துடன் திரைப்படத்தைப் பார்த்தார்கள். நிலத்திலும் கூரைகளிலுமிருந்து அவர்கள் திரைப்படத்தைப் பார்த்தார்கள். திறந்த வெளி அரங்குகளில் மிகக் கூடுதலான மக்கள் பார்க்கக் கூடியவாறு ஏற்பாடுகளைச் செய்தோம். சிந்து, பஞ்சாப் மற்றும் பலோஜிஸ்தான் ஈறாக எல்லாமாக 41 கிராமங்களிலும் மற்றும் நகரங்களிலும் இவ்வாறாகக் காண்பித்தோம்.

**இதன்போது ஏதேனும் இடையூறுகள் அல்லது தடைகள் உங்களுக்கு ஏற்பட்டனவா?**



சிந்தில் உள்ள கிராமமொன்றில் திரையிடுகையின் பொருட்டு மக்கள் குழுமியிருந்த இடமொன்றிற்கு சாதாரண உடைகளில் வந்த பொலிஸ்காரர்கள் சிலர் திரைப்படம் இஸ்லாத்துக்கும், பாகிஸ்தானுக்கும் விரோதமானது எனக் கூறி திரையிட அனுமதிக்க முடியாது எனத் தடுக்க முற்பட்டபோது கூட்டத்திலிருந்தோர் குறிப்பாகப் பெண்கள் அதனை ஆட்சேபித்ததுடன், திரைப்படம் ஒரு நேர்மையான முயற்சியென்று வாதாடியதுடன் அவர்களைக் கலைந்து செல்லுமாறும் செய்தனர். பஞ்சாப்பில் யாங்குக்கு அருகில் இன்னொரு இடத்தில் மௌலவிகள் குழுவினர் சூழ்ந்து கொண்டு தாங்கள் முதலில் பார்த்து அனுமதித்தாலே கூட்டத்தினர் பார்க்க முடியுமெனக் கூறித் தடுத்தனர்.

நாங்கள் அத்தகையதொரு தணிக்கைக்கு உடன்பட முடியாதெனக் கூறி வேறொரு கிராமத்திற்குச் சென்று திரையிட்டோம். பெஷாவரில் ஒரு இடத்தில் ஆண்களும் பெண்களுமாகக் குழுமியிருந்தபோது, ஆண்களில் சிலர் தமக்கு முதலில் காண்பிக்குமாறும் அதன் பின்னர் பெண்களுக்குத் தனியாகக் காண்பிக்குமாறும் வற்புறுத்தினர். இதற்கு நாங்களும், கூடியிருந்த பெண்களும் உடன்படவில்லை. எனவே வேறு வழியின்றி ஆண்கள் பெண்களின் வரிசைக்கு அருகாக வேறொரு பக்கத்திலிருந்து பார்க்க நேர்ந்தது.

**Who will cast the first stone? என்ற ஆவணத் திரைப்படத்துடன் உங்களது திரைப்படப் பிரவேசம் ஆரம்பமானது. இதனை எடுப்பதற்கு நீங்கள் ஆர்வம் கொண்டது எவ்வாறு நிகழ்ந்தது?**

சாரா லோறன்ஸ் கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரைப்படத்துறை மற்றும் அரசியல் விஞ்ஞானம் போன்றவை குறித்துக் கற்றேன். கேம்பிரிட்ஜில் எனது பட்டப்பின் படிப்பை முடித்த பின்னர் கராச்சி திரும்பி சில ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். சிறைகளில் இருக்கும் பெண்கள் குறித்த ஆய்வுகளில் சட்டத்தரணியான நண்பர் நொஷீன் அகமட் என்பவருடன் இணைந்து ஈடுபட்டேன். அக்கால கட்டத்தில் ஜெனரல் ஸியா - உல் - ஹக் பயன்படுத்திய இஸ்லாமிய குற்றவியல் தண்டனை சட்டங்களுக்கு எதிராகப் பெண்கள் அமைப்புக்கள் போர்க்கொடி ஏந்தின. இத்தகைய சட்டங்களால் பாதிப்படைந்த பெண்கள், அவை அப் பெண்களது வாழ்க்கையில் ஏற்படுத்திய சிக்கல்கள் மற்றும் குறிப்பாக பாகிஸ்தானிய சமூகத்தில் உருவாகிய அவலங்கள் போன்றன பற்றிய சரியான கணக்கெடுப்போ அல்லது புள்ளிவிபர ஆய்வுகளெதுவுமோ இருக்கவில்லை. இந்த நிலையில், கராச்சி சென்ரல் ஜெயிலில் சிறியளவிலான ஆய்வொன்றினை நடத்தி விபச்சார தண்டனைச் சட்டம் குறித்ததான சகல விபரங்களையும் சேகரித்துக் கொண்டோம். பெரும்பாலும் பெண்கள் திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவுகளில் ஈடுபட்டமைக்காகவும் தாங்கள் விரும்பித் தெரிவு செய்தவர்களையே திருமணம் செய்தமைக்காகவும் சிறைகளில் இருந்தார்கள். பல பெண்கள் தாம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்களென்பதை முறையிடச் சென்ற போது சிறையிலடைக்கப்பட்டவர்கள். இதன் பின்னர் இத்தகைய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் திருமணத்திற்குப் புறம்பான பாலியல் உறவில் குற்றமிழைத்தவர்களாகப் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள். எனவே, பாலியல் வல்லுறவுக்கு ள்ளானது குறித்த வழக்கு எடுக்கப்படும்வரை, இப்பெண்கள் சிறையில் நலிவடைய வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தார்கள்.

அச்சமயத்தில், அதாவது 80களின் பிற்கூறுகளில் 69 பெண்கள் சிறையிலிருந்தனர். அவர்களுள் 68 பெண்கள் விபச்சாரத் தண்டனைச் சட்டப்பிரிவின் கீழ் வருபவர்கள்.

இந்த ஆய்வுகளின் அடிப்படையில் சில நண்பர்கள் ஒன்றிணைந்து குழுவொன்றினை ஏற்படுத்தியதுடன் நான்கு பிரதான பத்திரிகைகளினூடாக இஸ்லாமியக் குற்றவியல் தண்டனைச் சட்டங்களுக்கு எதிராக கையெழுத்துப் பிரச்சார இயக்க நடவடிக்கையில் ஈடுபட்டோம். இந்தக் காலப் பகுதியில்தான் who will cast the first stone? என்ற ஆவணப்படத்தை எடுப்பதற்கான எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறானதொரு திட்டம் குறித்து நான் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் பிரிட்டிஷ் கொம்பனியான 'றீரேக்' என்ற கொம்பனியினை நடத்தும் எனது நண்பரான அலாவுடீன் ஜமால் என்பவர் தொடர்பு கொண்டு திரைப்படம் ஒன்றை எடுப்பதற்குக் குறிப்பாகச் சிறையிலிருக்கும் பெண்கள் தொடர்பில் ஆவணம் எதனையும் தர முடியுமா என என்னை விசாரித்தார். இத்தகையதொரு பின்னணியின் அடிப்படையில் நான் எடுக்க இருந்த திரைப்படத்திற்கு அவர் தயாரிப்பாளரானார். நான் நெறியாளரானேன். இதன் பின்னர் திரைப்படத்தைப் பூர்த்தி செய்து நான் லண்டனுக்கு எடுத்துச் சென்று தொகுப்பு வேலைகளைச் செய்த பின்னர் 'சனல் 4' ஊடாக அதனைக் காண்பித்தோம்.

**இந்தத் திரைப்படத்தின் தாக்கம் என்ன?**

பெனாஸிர் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு இஸ்லாமிய குற்றவியல் தண்டனைச் சட்டங்களுக்கு எதிரான எமது பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கையெழுத்திட்டார். பெனாஸிர் அதிகாரத்திற்கு வந்ததும் நாங்கள் ஏற்கெனவே எமது கையெழுத்து இயக்கம் மூலமும், திரைப்படம் மூலமும் தோற்றுவித்து வைத்திருந்த ஆதரவுத் தளத்தை அனுகூலமான வழியில் பயன்படுத்துவாரென எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால் எமது எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாக, பெனாஸிர் அரசாங்கம் Who will cast the first stone? திரைப்படத்தை பாகிஸ்தானில் திரையிட அனுமதி மறுத்தது. இதனையடுத்து P.T.V யின் தலைவராக பணியாற்றிய அஸ்லாம் அஸ்கர் என்பவரிடம் திரைப்படத்தை கொண்டு சென்றேன். அவரும் அனுமதி மறுத்தார். "முல்லாக்கள் எம்முடன் மல்லுக் கட்டுவார்கள். எனவே எம்மால் முடியாது" என அவர் ஒரேயடியாக மறுத்து விட்டார். இந்த நிலைமை முற்றிலும் அபத்தமானது என்றே கூற வேண்டும். ஏனெனில், பெனாஸிரின் காலகட்டத்தில் முல்லாக்களின் தலையீடும் ஆதிக்கமும் மிகக் குறைந்தளவிலேயே இருந்து வந்தது. பெனாஸிர் மக்கள் ஆதரவுப் பலத்தின் மூலமே பதவிக்கு வந்தார். திரைப்படத்தைப் பொறுத்தவரையில் சர்வதேச ரீதியாகப் பெரியளவில் கவனத்தை ஈர்த்தது.

**முதலாவது திரைப்படத்திற்கும் ஹமோஸ்பானிக்குமான இடைக் காலத்தில் என்ன செய்தீர்கள்?**

நான் வேறு எத்தனையோ ஆவணப்படங்களை எடுத்திருந்தேன். ஆனால் பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் அவற்றைப் பார்ப்பதிலோ அல்லது திரையிடுவதிலோ எவருக்கும் ஆர்வம் இல்லை. நான் Where Peacocks Dance என்ற படத்தை எடுத்திருந்தேன். சிந்தில் நிலவிய கலாசார தேசியம் பற்றி இது கூறுகிறது. மொஹஞ்சதாரோ பின்னணியில் அமைந்தது. பாகிஸ்தானில் நாம் எமது பாரம்பரியத்தை மறுத்து வருகிறோம். மொஹஞ்சதாரோ உண்மையில் எமக்குச் சொந்தமானதல்ல எனவும் ஏனெனில் அது இஸ்லாமிய காலகட்டத்திற்கு முற்பட்டது எனவும் கூறப்படுகிறது. மேலும் எமது வரலாறு 711 AD யில் மாத்திரமே இஸ்லாமிய வருகையுடன் ஆரம்பிக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. எமது பாரம்பரியத்தை நாம் மறுக்கும் ஆபத்துக்கள் பற்றி இத்திரைப்படம் சுட்டிக் காட்டுகின்றது. சிந்திலுள்ள மக்கள் மொஹஞ்சதாரோ பற்றி அது தமது பாரம்பரிய சொத்தெனக் கூறும்போது, அவர்களுக்கு அவர்களுடைய பாகிஸ்தானிய அடையாளத்தை உங்களால் மறுக்க முடியுமா?
Where Peacocks Dance ஒரு ஆவணத் திரைப்படமாகும். 1993இல் றொற்றர்டாம் சர்வதேச திரைப்பட விழாவில் அது காட்டப்பட்டது. அதே வருடத்தில் சனல் 4 இல் காண்பிக்கப்பட்டது. பாகிஸ்தானில் மிகப் பரவலாக சினிமா யாத்திரை என்ற எமது செயற்திட்டத்தின் மூலமாக பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்கப்பட்டது.

**அடுத்த திட்டம் என்னவாக இருந்தது?**

அதற்கு அடுத்ததாக, மீண்டும் சனல் 4 க்காக Karachi in Crisis எடுக்கப்பட்டது. மொஹாஜிர் சிந்தி தகராறு பற்றியது அது. பின்னர் Suicide Warriors என்ற ஆவணத் திரைப்படத்தினை எடுத்தேன். அது இலங்கையின் தமிழ்ப் போராளிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியது. இலங்கையின் கிழக்குப் பிராந்தியமான மட்டக்களப்பில் யுத்தப் பகுதிகளான சில வனங்களிலும், அவற்றைச் சுற்றிய பகுதிகளிலும் எடுக்கப்பட்டது.

**இந்த ஆவணத்திரைப்படத்தில் ஈடுபாடு கொண்டதற்கான பின்னணி என்ன?**

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் குறித்த படிமங்கள் மீது அவை குறித்த அலசல்களின் மீது நாட்டம் ஏற்பட்டது. இப்பெண்கள் தொடர்பில் உருவாகியிருக்கும் படிமங்கள் மிக முரண்பட்டனவாய், கறாரானதாய் எனக்குத் தோன்றின. வெளியுலகில் அவர்கள் அதீத தன்மை கொண்ட பேய் அணங்குகளாக உருப்பெற்றிருந்தனர். ஒரு விதத்தில் உண்மைத் தேடல் முயற்சியே தற்கொலைப் போராளிகளான பெண்கள் தொடர்பான இந்த ஆவணப் படம். இதன்போது மிக நெகிழ்ச்சியான அனுபவங்கள் ஏற்பட்டன. அழகான இப்பெண்கள் குறுகிய சில நாட்களுக்குள்ளேயே எனக்கு நெருக்கமான தோழிகளானார்கள். அவர்கள் சில நாட்களுக்குள்ளேயோ, வாரங்களுக்குள்ளேயோ இறப்பதற்கு நிச்சயிக்கப்பட்ட தற்கொலைப் போராளிகள் தான் என்பது என் மனதை வருத்துவதாக என் பிரக்ஞையில் தீராத வலியினை ஏற்படுத்துவதாயிருந்தது. இப்பெண்களில் ஒருவரான சாளி என்பவருடன் திரைப்படத்திற்கான நேர்காணலைப் பதிவாக்கியிருந்தேன். இதன் பிறகு அவர் இறந்து விட்டார். இப்பெண் தோழிகளை விட்டுப் பிரிவது எனக்கு மாத்திரமல்ல என் குழுவில் அடங்கியிருந்த எல்லோருக்குமே மனக் கசிவினை ஏற்படுத்தியது. பலர் வாய்விட்டு அழுதார்கள். 16 இலிருந்து 20 வயதிற்குட்பட்ட இப்பெண்களது நினைவுகளையும் கனவுகளையும் நெருக்கமாயிருந்து அனுபவித்த எமக்கு அவர்கள் சொற்ப நாட்களுக்குள் இறந்து விடுவார்கள் என்பது மனப் பதைபதைப்பினை ஏற்படுத்துவதாயிருந்தது. ஆனால், இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளான அவர்களது யுத்தப் பிரதேசத்தில் அவர்களின் சாவு என்பது தற்கொலைப் போராளிகளற்ற நிலையிலும் கூட, ஏற்கெனவேயே நிச்சயிக்கப்பட்ட ஒன்றுதானென்பதே எமது மனப் பதைபதைப்பினைப் போக்க அவர்கள் கூறும் ஆறுதலாகும். மேலும் தற்கொலைப் போராளிகளாக மிகவும் கௌரவமானதொரு மரணத்தையே தாம் தழுவுவதாக அவர்கள் புன்னகை புரிந்து திருப்தி தெரிவித்தனர்.

**எங்கு இப்படம் காண்பிக்கப்பட்டது?**

சனல் 4க்கான திரைப்படமே இதுவாகும். இலங்கை அரசாங்கம் இதற்குத் தடை விதித்தது. எவருக்குமே கிலியினையும், பீதியினையும் ஏற்படுத்தும் இப் பெண்கள் ஆடலிலும் பாடலிலும் ஈடுபாடு கொண்ட சராசரிப் பெண்களைப் போன்று சித்திரிக்கப்பட்டிருந்தமையே தடைக்கான காரணம் என இலங்கை அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டிருந்தது.

**இதன் பிறகு என்ன?**

இலங்கை தொடர்பில் வேறு சில ஆவணப்படங்களையும் எடுத்தேன். பின்னர் Don't ask why என்ற ஆவணப்படம், கராச்சியைச் சேர்ந்த 17 வயதுப் பெண்ணே இதன் கதாநாயகி. இப்பெண் உண்மையாகவே எழுதிய நாட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டே இது எடுக்கப்பட்டது. ஐரோப்பா முழுவதும் இது காண்பிக்கப்பட்டது. இதுவரையில் கடைசியாக நான் எடுத்த ஆவணத் திரைப்படம் A Place under the Heaven என்பதாகும். இது இஸ்லாமிய மயப்படுத்தல் குறித்து ஆழமானதொரு பார்வையைச் செலுத்துகிறது. இதன் முற்பகுதி நான் பிறப்பதற்கு முன்பிருந்த காலகட்டத்தைப் பிரதிபலிக்கின்றது. பாகிஸ்தான் 50களிலும் மற்றும் 60களிலும் எப்படி இருந்தது என்பது குறித்து எனக்கு எனது தந்தையாரும், தாயாரும் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்ட சித்தரிப்பு. சுதந்திரம், பால்சூம், காபரே நடனங்கள் போன்றவற்றின் காலகட்டம். எங்கிருந்து இந்த மாற்றத்தின் கூறுகள் தோற்றம் பெறுகின்றன என்பது குறித்த ஆழமான விசாரணைகள். அரசியல் யாப்பு, இறைமை, மக்கள் ஆணை போன்றவை குறித்த அலசல்கள். பல்வேறு தளங்களிலும் இவற்றின் தாக்கங்கள் உருவாக்கியிருக்கும் விவாதங்கள், சர்ச்சைகள் என்பன ஆராயப்படுகின்றன.

**உங்களுடைய ஆய்வுகள், ஈடுபாடுகள், படைப்புகள் மற்றும் போராட்டங்கள், செயற்பாடுகள் போன்றவற்றின் பின்னணியை நோக்கினால் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக, உந்து சக்தியாக ஆழமானதொரு சமூக அக்கறை உங்களுக்கு இருப்பது வெளிப்படை. இவ்வாறானதொரு ஆளுமையினை எங்கிருந்து பெற்றீர்கள்?**



வளமான, அறிவார்ந்த தளத்தில் இயங்குகின்ற குடும்பச் சூழலில் சிறுவயதிலிருந்தே நான் வளர்க்கப்பட்டேன். குறிப்பாக எனது தந்தையார் - குவாலிஸ், சுபி கதைகள் மற்றும் பேர்ஸியக் கவிதைகள் போன்றவற்றை எப்போதும் கூறிக் கொண்டிருப்பார். சிறுபராயத்திலிருந்தே நானும் எனது சகோதர, சகோதரிகளும் அவற்றை அர்த்த பூர்வமாகக் கேட்டு வளரும் பாக்கியம் பெற்றிருந்தோம். நாங்கள் எல்லாமாக எட்டுப்பேர். எங்களுக்கிடையே வயதெல்லைகள் பலவாறாக இருந்தன. எனவே, அபிப்பிராய பேதங்கள் நன்றாக வெளிப்படும். அரசியலிலிருந்து பல முக்கிய விடயங்களை விவாதிப்போம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு கட்டத்தில் பழமையான, பிற்போக்கான சமூகப் பெறுமதிகளிலிருந்து நீங்கி புதிய மாற்றங்களுக்கு உடன்படும் மனப்பான்மையின் தேவையினை எமது தந்தையார் வலியுறுத்தியதும் நாம் எல்லோரும் அவருடன் உடன்படுவோம். எனது தந்தையார் தாராள மனதுள்ளவர். பெற்றோர்கள் இருவரும் என்று கூறலாம். ஏனெனில் தாயாரும் அத்தகைய குணநலன்கள் நிரம்பியவரே. பம்பாயிலிருந்த போது மிகவும் கஸ்டப்பட்டார்கள். எனவே பணத்தின் தேவையினை நன்குணர்ந்திருந்ததன் காரணமாக, அவற்றைக் கொடுக்கும் நிலையினை எய்தியவர்கள். இல்லையென்று கூறாது, எவருக்கும் உதவும் இயல்பு அவர்களுக்கிருந்தது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம்* மிக அழகானது

-இவ்வழியால் வாருங்கள் (Take this road) படத்தை முன்வைத்து-



டி.சே.தமிழன்

சக மனிதரை நேசிப்பதென்பதைப் போன்று இவ்வுலகில் அழகானது எதுவுமேயில்லை. இனங்களை, மொழிகளை, நிறங்களை மீறி மனிதாபிமானம் என்ற புள்ளி நம் எல்லோரையும் ஒரு புள்ளியில் இணைத்துவிடக்கூடும். எங்கோ ஒரு நாட்டில் தன் சொந்த ஊரை இழந்து கொண்டிருப்பவனின் துயரம்.... ஒடுக்கப்படும் மக்களின் இருப்பிற்காய் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் போராளியின் மனவுறுதி.... உயிர்களை, உடலுறுப்புக்களை இழந்து கொண்டிருக்கின்ற மக்களின் அவலம்... இவையெல்லாம் போர் நடந்து கொண்டிருக்கும் எந்தப் பகுதிக்கும் பொதுவானது. அதேபோல் அதிகாரமும் ஆயுதமும் வைத்திருப்பவர்களின் ஒடுக்குவதற்கான ஆதிக்கமும் சிந்தனைகளும் நாடுகளுக்கிடையில் அவ்வளவாய் வித்தியாசப்படுவதுமல்ல. இவ்வழியால் வாருங்கள் என்று ஏ9 நெடுஞ்சாலையை ஊடுருவிச் செல்லும் இப்படத்தில் எல்லா இன மக்களும் வருகின்றார்கள். போரை அவரவர்களின் பார்வைகளால் பார்க்கின்றார்கள். இறுதியில் தாம் நினைத்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல சரியான பார்வை நாம் அறியாத இன்னும் பல விடயங்களும் இருக்கின்றன என்ற புரிதல்களையும் பெற்றுக் கொள்ளுகின்றார்கள்.

சமாதானம் வந்து, ஏ9 நெடுஞ்சாலை திறக்கப்படுவதிலிருந்து கதை ஆரம்பிக்கின்றது. சமாதானம் வந்து ஏ9 திறக்கப்பட்டாலும் தமது உரிமைகள் முற்றுமுழுதாக தரப்படாதபோது இந்நெடுஞ்சாலை திறக்கப்படக்கூடாது என்று -தன் சக போராளிகளின் இழப்புக்களை நினைத்தபடி- கதறும் ஒரு போராளியின் காட்சிகளோடு படம் ஆரம்பிக்கின்றது. புத்தர் வாழ்ந்திருக்கக்கூடும் என்ற நாகதீபத்தை (நயினாதீவை) பார்க்க ஒரு சிங்களக் குடும்பமும், 90களில் யாழிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு புத்தளத்தில் வாழும் ஒரு முஸ்லிம் குடும்பமும் ஏ9 பாதையினூடாக பயணிக்கின்றது. சிங்களக் குடும்பம் கிட்டத்தட்ட அரசாங்கத்தின் செய்திகளைக் கேட்டு தமக்கான அரசியலை வைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்களின் மகள் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவி, ஜே.வி.பி சார்பு நிலைகொண்டவர். அவரது தம்பியோ சராசரி இளைஞன். அக்காவின் புரட்சிக்கனவுகளை தொடர்ந்து பகிடி செய்து கொண்டேயிருப்பவன். அவனுக்கு கல்பனா என்று பாடுகின்ற ஒரு சிங்களப் பெண்ணின் மீது ஈர்ப்புண்டு. இவர்கள் ஏ9 பாதையின் இடைநடுவில் முஸ்லிம் குடும்பத்தைச் சந்திக்கின்றார்கள். முஸ்லிம் குடும்பம் தாம் தமது பூர்வீக நிலங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட துயர்களை பகிர்கின்றார்கள். நதி (வளாக மாணவி) தான் தமிழர்களைப் பற்றி நினைத்தது சரியென்ற இன்னும் தீர்க்கமான முடிவில் இருக்கிறார்.

இரவில் தங்க இடமில்லாது சிங்களக் குடும்பம் யாழ்ப்பாணத்தில் தவிக்கையில், நதியோடு கொழும்பு வளாகத்தில் படித்து சில வருடங்களில் படிப்பை நிறுத்திவிட்டு யாழ் போன தனது (தமிழ்) தோழன் ஒருவரை வீதியில் நதி காண்கின்றார். அந்த இளைஞன் நதியுடன் பேசுகின்ற போதும், அவர் தமிழரென்றபடியால் நதிக்கு -அவரில் நம்பிக்கையில்லாது- அவரின் வீட்டில் போய் தங்க விரும்பமில்லாது இருக்கின்றார். அந்த இளைஞர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டு ஒரு ஆசிரியரின் வீட்டில் தங்கியிருக்கின்றார். ஆசிரியரின் மகன் இயக்கத்துப்போய் சமாதானம் வந்ததால் - இயக்கத்திலிருந்து விலகி- வீட்டுக்கு வருகின்றார். போராளியாக இருந்தவருக்கு இப்படி சிங்களக் குடும்பம் தங்கள் வீட்டில் வந்து நிற்பது அவ்வளவு உவப்பானதில்லை. எனவே அவர் தொடர்ந்து வீராப்பாய் திரிந்து கொண்டிருக்கின்றார்.



அந்த ஆசிரியரின் மகளுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்யும் இளைஞர் மீது ஈர்ப்புண்டு. ஆசிரியரின் மகள் பக்கத்து வீட்டில் இருக்கும் சிறுமிக்கு நடனம் சொல்லிக் கொடுக்கின்றார். நடனப் போட்டியில் பங்குபற்றுவதற்கான கனவில் இருக்கும் சிறுமிக்கு. மிதிவெடியில் கால் போகின்றது. அந்தக் காட்சியை நேரடியாகப் பார்க்கின்ற சிங்களக் குடும்பத்தினருக்கு -முக்கியமாய் ஜேவிபி ஆதரவாய் இருக்கும் நதிக்கு- தனது போர் குறித்த பார்வைகளை மீளாய்வு செய்ய வேண்டிய அவதி வருகின்றது. தமிழ் ஆசிரியரும். அந்த சிங்கள குடும்பத் தலைவரும் தொடர்ந்து அரசியல் குறித்து உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த தமிழ் ஆசிரியர் ஒரு முன்னாள் சமசமாஜக் கட்சி உறுப்பினர். எப்படி பண்டாரநாயக்கா குடும்பம் தமிழர்களின் உரிமைகளைச் துறையாடுகின்றது என்று விரிவாக உரையாடுகின்றார். எனினும் சிங்களக் குடும்பத்தலைவருக்கோ, எப்படி தமிழர்கள் பண்டாரநாயக்கா குடும்பத்தினரை தாழ்த்தலாம் என்ற கௌரவப்பிரச்சினை அல்லது இனப்பிரச்சினை.

நோயுடன் இருக்கின்ற சிங்களக் குடும்பத்தலைவருக்கு, மிதிவெடியில் அந்தச்சிறுமி கால்களை இழந்ததைப் பார்த்தவுடன் இதய அழுத்தம் கூடி சில நாட்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்க வேண்டியதாய்ப் போகின்றது. இதற்கிடையில் நதிக்கு. அந்த அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றும் இளைஞர் மீது ஈர்ப்பு வருகின்றது. இளைஞருக்கும் தான். எனினும் இறுதியில் இளைஞருடனான ஆசிரியரின் மகளின் காதல் வென்றுபோகின்றது.

மீளவும் குடியேறுகின்ற முஸ்லிம் குடும்பத்தினரை வறுமை விரட்டுகின்றது. தங்கள் வீட்டில் இன்னமும் மிதிவெடிகள் அகற்றப்படாததால் பக்கத்துவீட்டில் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு இருப்பதற்கு இடமிருக்கின்றதே தவிர. பசிக்கு உணவிருப்பதில்லை. பக்கத்து வீட்டிலிருக்கும் பெண்மணியோ சற்று மனப்பிறழ்வான இளைஞனை பணஞ் சம்பாதிக்கத் துரத்துகின்றார். வேறு வழியில்லாத அவர் ஒரு திருடனாகின்றார். இனியும் பட்டினி தாங்க இயலாது என்கின்ற நிலை வருகின்ற போது பக்கத்துவீட்டு பெண்ணிடம் அகதி முகாமிலிருந்த போது செய்த பாலியற் தொழிலை தனக்கும் கற்றுத்தாவென்று புத்தளத்திலிருந்து வந்த குடும்பத்தின் மகள் கதறியழுகின்றார். இப்படியாக நமது நிலை போய்விட்டதேயென்று பித்துப்பிடித்தபடி மிதிவெடி அகற்றப்படாத வீட்டிற்குள் அந்த பெண்ணின் தகப்பன் கதறியபடி ஓடுகின்றார்.

பல்வேறு கிளைகளாய் கதை நகரும் இப்படத்தில் அடிநாதமாய் ஓடிக்கொண்டிருப்பது போர் தந்த வலிகளும். அதிலிருந்து எப்போதாவது மீள்வோம் என்று நம்பிக் கொண்டிருக்கும் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையும் தான். இனங்களை. மொழிகளை மீறி நம் அனைவருக்குள்ளும் ஓடிக்கொண்டிருப்பது மனித நேயமே என்று கூறியபடி படம் முடிகின்றது. கடந்தகாலத்தை இனி மாற்ற முடியாது ஆயினும் நமது எதிர்காலத்திலாவது போரில்லாது வாழும் சிந்தனையாவது நாமெல்லோரும் வளர்க்க வேண்டும் என்ற சிறுவிதையை இப்படம் விதைக்கின்றது. சமாதானம் மிக மிக அழகானதுதான். வேறு வழியில்லாது பாலியல் தொழில் செய்தாவது பிழைப்போம் என்று கதறுகின்ற போது அந்த முஸ்லிம் பெண் சொல்வார்... சமாதானமாம் சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மண்ணாங்கட்டி! அதுதான் நம் நிகழ்காலமாய்ப் போய்க் கொண்டிருப்பதுதான் மிக அவலமானது.

இப்படத்தின் உரையாடல்கள் மிகக் கூர்மையானவை. உரையாடுகின்றபோது மொழிப்பிரச்சினை வருகின்றபோது நதிக்கு, தமிழ் இளைஞர் கூறுவார், அரசகரும மொழியாக இருக்கும் மொழியையே நீங்கள் கற்றுக் கொள்ள முன்வராதபோது எப்படி எங்களுக்கான உரிமைகளைப் புரிந்து கொள்ளுவீர்களென்று. அதேபோன்று போரின் அழிவுகள் குறித்து உங்களுக்கு என்ன தெரியும்....? கொழும்பில் குண்டுவெடிக்கும் போதும், கனத்தை மயானத்தில் இராணுவ உடல்கள் எரியூட்டப்படும் போதும் மட்டுமே கொழும்பிலிருப்பவர்களுக்கு போர் நடப்பது தெரிகின்றது. மற்றும்படி போரின் அழிவுகளை உணர்ந்திருக்கின்றீர்களா? என்பது கத்தியாய் இறங்கும் வசனம்.

இன்னொரு காட்சியில் குளித்துவிட்டு நதி குங்குமப்பொட்டை வைத்து அழகு பார்க்கும் போது, அந்த இளைஞன் சலனமடைந்து அவரைத் தொட முயல்வார். அதற்கான காரணமாய் இளைஞன் கூறுவார், உனது குங்குமப்பொட்டு என்னைச் சலனமடையச் செய்து விட்டது என்று. அதற்கு நதி, எந்தப் பெண் குளித்துவிட்டு வந்தாலும் எந்த ஆணும் ஆசைப்படத்தான் செய்வான். உன் தமிழ் அடையாளத்தை சாட்டாய் வைத்து அதை நியாயப்படுத்தாதேயென்று கூறுவார். அதுபோல், தமது மகன் இரவில் எங்கையோ போய்விட்டார் என்று சிங்களக் குடும்பம் தெருவில் தேடிக் கொண்டிருக்கின்றபோது, அதைப் பார்த்து ஒரு தமிழ்த்தாய், என்னுடைய மகனும் இப்படித்தான் பாடசாலைக்குப் போகின்றேன் என்று போனான் இன்னும் திரும்பிவரவில்லை, யாராவது கண்டுபிடித்துத் தாருங்கள் என்று கதறும்போது (செம்மணியையும் இணைத்துப் பார்க்கலாம்) எல்லாத் தாய்மார்களின் சோகமும் ஒன்றுதான் என்பது புரியும். இன்னொரு காட்சியில் காலிழந்து இருக்கும் சிறுமியை சிங்கள இளைஞன் சந்திக்கும்போது, அந்தச் சிறுமி சொல்வார், 'அண்ணா கொழும்பு போனாப்பிறகு ஒரு கால் அனுப்புவீங்களா? நான் நடனம் ஆடவேண்டும்.' இந்த வார்தைகளில் பின்னியிருக்கும் பெருஞ்சோகத்தை வேறு எது சொல்லிவிடும்? படத்தில் படிமமாய் ஒரு பெண் சிவப்புச் சேலை கட்டியபடி போய்க் கொண்டிருக்கின்றார். சிலருக்கு மட்டுமே - போராளி இளைஞனுக்கு, சிங்களக் குடும்பத் தலைவருக்கு, அவரின் மகனுக்கு- மட்டும் தெரிவதாய்க் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அந்தப் பெண்ணை பார்க்கும் நாம் சமாதானமாய் உருவகித்துக் கொள்ளலாம். கண்ணுக்கெட்டும் தூரத்திலிருந்தாலும் ஒவ்வொருமுறையும் நழுவியபடி இருக்கின்றது சமாதானம் என்ற வகையிலும் விளங்கிக் கொள்ளலாம்.

இப்படத்தைப் பார்ப்பவர்களுக்கு, எளிமையான உரையாடல்களால் கூட மிகப்பெரும் அரசியல் புள்ளிகளைக் கொண்டுவரும் நெறியாள்கையாளரின் படைப்புத்திறன் எவ்வளவு நுட்பமானது என்பது புரியும். இதைப் படமாய்ப் பார்த்தாலும், ஒரு தொலைக்காட்சி தொடராய் இது எடுக்கப்பட்டது என்று வாசித்திருக்கின்றேன். எந்த முறையில் எடுக்கப்பட்டாலும் பார்க்கும்போது அது நம்மை பாதிக்கின்றதா இல்லையா என்ற கேள்விதான் முக்கியமானது. அந்தவகையில் இந்தப்படைப்பு வெற்றி பெறுகின்றது. எல்லா நடிகர்களும் மிக இயல்பாய் நடிக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் நடக்கும் காட்சிகளில் வரும் உரையாடல்கள் எல்லாம் அப்படியே ஊரின் பேச்சு வழக்கை நமக்கு நினைவூட்டுகின்றன. புலம்பெயர்ந்த நாட்டில் எடுக்கப்பட்ட எத்தனையோ படங்களில் கூட செயற்கைத்தனமான உரையாடல்கள் இருக்கும்போது ஒரு சிங்கள இயக்குனரால் இதிலெல்லாம் எப்படி கவனம் எடுக்க முடிந்தது என்ற வியப்பு வராமல் இருக்க முடியவில்லை என்பது மட்டுமில்லை இப்படி யதார்த்தமாய் சின்ன சின்ன காட்சிகளின் மூலம் போர் தந்துகொண்டிருக்கும் அழிவுகளை நம் எல்லோரையும் பாதிக்கச் செய்வதைப்போல ஏன் எந்தவொரு தமிழ் படைப்பாளியாலும் எடுக்க முடியவில்லை என்ற ஆதங்கம் வருகின்றது. இன்னமும் தேசியம் X எதிர்த்தேசியம் என்ற உரையாடலை விட்டு வெளியேறாத ஈழத்தமிழ்ச்சூழலிருந்து இதையெல்லாம் எதிர்ப்பார்ப்பது கூட சற்று அதிகப்படியோ என்று தான் தோன்றுகின்றது.

படைப்பாளி என்றவகையில் A Lankan Mosaic என்ற தொகுப்பிலிருந்து அசோக ஹந்தகமவின் ஒரு கதையை கதவைத் திறக்காதே பார்வதி (Don't Open the door Parvathi) அண்மையில் வாசித்தேன். அது இந்திய இராணுவ காலத்தில் இந்திய இராணுவத்தால் ஒரு தமிழ்ப்பெண் பாலியல் வன்முறைக்குள்ளாகும் புள்ளியுடன் முடிகின்றது. அதில், இந்திய இராணுவத்தில் நம்பிக்கை கொள்ளும் தமிழ் மக்களை நோக்கி படைப்பாளி ஒரு கேள்வி எழுப்புவார். இத்தனை காலம் சொந்த மண்ணிலேயே இருக்கும் இராணுவமே இத்தகைய கொடூரங்களைச் செய்ததைப் பார்த்த பின்னும் எப்படித்தான் இந்த மக்கள் இன்னொரு நாட்டு இராணுவத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றார்கள் என்று. இதிலிருந்து, நாம் அருகிலிருக்கும் சிங்கள மக்களையும், முஸ்லிம் மக்களையும் புரிந்து கொள்ளாது வேறு நாடுகள் நமக்கு விடுதலையைப் பெற்றுத் தந்து விடும் என்று நினைத்துக் கொண்டிருப்பதன் அரசியலையும் ஒருமுறை மீளாய்வு செய்யலாம்.



கலைஞர்களுக்கு இனம், மொழி என்ற பாகுபாடு இருப்பதில்லை. மானிட நேசம் என்பதே அவர்களின் விரிந்த எல்லையாக இருக்கும். நாம் நமது நடுநிலை என்ற புள்ளிகளை நிரூபிப்பதற்கு பெரும்பாடு பாடுவதை விடுத்து, உண்மைகளை முன்வைத்து உரையாடல்களை ஆரம்பிப்பதே உன்னதமாயிருக்கும்.

**அசோக ஹந்தகமாவின் பிற படங்கள்:**
Chanda Kinnari
Me Mage Sandai (This is my Moon)
Thani Thatuwen Piyambanna (Flying with one wing)
Aksharaya (Letter of Fire)
இப்படத்தை அரசாங்கம் தடை செய்துள்ளது.

**இயற்பெயர் இளங்கோ - 'நாடற்றவனின் நாட்குறிப்புகள்' என்ற தலைப்பில் இவருடைய கவிதைத் தொகுப்பு ஒன்று அண்மையில் வெளியானது. இவரது ஏனைய கட்டுரைகளை djthamilan.blogspot.com இல் காணலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவற்ற ஒரு வியாழன் பின்னேரம்

ரோஹித பாஷண

இரவு முழுக்க பெய்த மழையினால் அதிகாலைப் பொழுதில் குளிரும் ஈரலிப்பும் காற்றில் பரவிக் கொண்டிருந்தது. விடிந்தும் விடியாமலும் காலை அதன் மாயாஜால வித்தையினைக் காட்டிக் கொண்டிருந்தது. எமது காரியாலய முன்வாசல் பகுதியில் இன்னும் வெளிச்சப்புள்ளிகள் பரவாது இருள் கனத்துக் கிடந்தது. மனதிலும் சிவராமின் உருவம் கலைந்து விடாது படிந்து நெஞ்சில் பாரமாக அழுத்தியது.

இன்று 2005 மே மாதம் 5ம் திகதி. 2ம் திகதி காலை நகரின் வீதிகளில் சிங்களவர்களும், தமிழர்களும் கோபாவேசத்துடனும், வேதனையுடனும் தர்மரட்ணம் சிவராமின் கடத்தலையும் படுகொலையினையும் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வீதிப் போக்குவரத்துகளை மறித்து கோஷங்களுடன் பதாதைகள் தாங்கி அவர்கள் ஊர்வலமாகச் சென்றபோது பெரிய அளவிலான உருவப்படமாக சிவராம் எம்முடன் வந்து கொண்டிருந்தார். இன்று சிவா பல நினைவுகளைத் தந்து மறைந்து போய் விட்டார்.

சிவராம் அல்லது தராகி என்ற பெயரில் எழுதப்படும் கூர்மையான பகுப்பாய்வுகளைக் கிட்டத்தட்ட கடந்த பதினைந்து வருடகாலமாக நான் தவறாது படித்து வந்திருக்கிறேன். 1993 காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் பூநகரி - நாகதேவன்துறை இராணுவத்தளத்தை அழித்துக் கைப்பற்றிய போது நான் 'ஹிரு' பத்திரிகையில் அது தொடர்பாக ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். 'பூநகரி சூழல்காற்றின் பின்' என்ற தலையங்கத்தில் நான் எழுதிய அக்கட்டுரைக்கு முழு அளவில் ஆதாரமாக இருந்தது சிவா எழுதிய பகுப்பாய்வுகளேயாகும். அக்கட்டுரைகள் அவரது கூர்மையான பகுப்பாய்வுத்திறனையும் அவை தொடர்பில் அவருக்கிருந்த மேதாவிலாசத்தினையும் முழு அளவில் வெளிப்படுத்தின எனலாம். இத்தனைக்கும் நான் அவருடன் நேரடியாகப் பழகியதில்லை. அவருடைய புகைப்படத்தைக் கூட கண்டிருக்கவில்லை. அப்போதைய பிணைப்பு அவருடைய கட்டுரைகள் மீதான ஈர்ப்பு மாத்திரமே. இராணுவ விவகாரங்கள் மற்றும் அரசியல் மாற்றங்கள் தொடர்பான பகுப்பாய்வுகளை எழுதுவதில் அவருக்கு நிகராக எவரும் இருந்தது கிடையாது. சிவா 'ஐலண்ட்' பத்திரிகைக்கு எழுதியதை நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மிட்வீக் மிரருக்கு' எழுதத் தொடங்கியதும் என் கவனம் முழுக்க 'மிட்வீக் மிரர்' மீது திரும்பியது. ஒவ்வொரு புதன்கிழமையும் அப்பத்திரிகையை வாங்கத் தொடங்கினேன். இது டெல்கந்தவில் எமது காரியாலயம் இருக்கும் வரை தொடர்ந்தது.

ஜே.விபி. அரசியல் போக்குகளை நாம் தீவிரமாக எதிர்க்கிறோம் என்பது குறித்து 'சரிநிகர்' நண்பர்கள் மூலமாக சிவா அறிந்து கொண்ட போதிலும், நாம் நேரடியாக சந்தித்துக் கொண்டது 2001 காலப்பகுதியிலேயாகும். 'ஹிரு' பத்திரிகையை மீண்டும் வெளிக்கொணர ஆரம்பித்ததிற்கு சற்றுப் பிறகு சிவாவும் திஸநாயகமும் 'North Eastern Herald பத்திரிகையை ஆரம்பித்தார்கள். வடக்கு கிழக்கு யதார்த்த நிலைமைகளை 'ஹெரால்ட் தெளிவாக வெளிக்கொணர்ந்தது.

இக்காலப் பகுதியிலேயே ஒரு நாள் முதல் தடைவயாக நாம் சந்தித்தோம் முதல் நாளன்று அன்றைய தினம் ஸ்கோபீல்ட் அவெனியூவிலுள்ள "North Eastern Herald" காரியாலயத்திற்கு இடத்தைக் கண்டுபிடித்து வருவதற்கு நான் சிரமப்படக்கூடும் என முன்னரே யூகித்து காலி வீதியில் எனக்காக அவர் காத்து நின்றார். வீதியைக் கடந்து செல்வதற்கு நான் தரித்து நின்ற போது அவர் ஆவலுடன் என்னை நோக்கி கையசைத்தார். இக்காட்சியை நினைவுகூரும் போது அவரது இழப்பு என்னை இறுக்கி வெறுமையை உணர்த்துகிறது.



**கேந்திரவியல் தொடர்பான மற்றும் பூகோள அரசியல் விவகாரங்கள் குறித்து தேடலுடன் கற்க வேண்டுமென்ற தேவையினை எமக்கு உணர்த்தியவர் சிவராம்**

முதலாவது சந்திப்பின் போது திஸநாயகமும் கவிஞர் ஜெயபாலனும் எம்முடன் இணைந்து கொண்டார்கள். நீண்ட நேரம் நாம் அளவளாவினோம். சிவாவை நேரடியாகச் சந்தித்து அளவளாவிய முதல் சந்தர்ப்பம் என்ற வகையில் இது எனக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றும் நினைவில் பசுமையாக ஒட்டிக் கொண்டிருக்கிறது.

நுண்மை வாய்ந்த இராணுவ, அரசியல்துறை பகுப்பாய்வாளராகத் திகழ்ந்த சிவா. பழகுவதற்கு எளிமையான. திறந்த மனதுடன் கதைக்கக் கூடிய அபிப்பிராயங்களைப் பகிரக்கூடிய ஒருவராகவும் காணப்பட்டார். இதற்குப் பின்னர். நாம் நேரிலும் அவ்வாறு வசதிப்படாத காலங்களில் தொலைபேசியிலும் கதைத்துக் கொள்வோம். அவருடைய கட்டுரைகள் பலவற்றை சிங்களத்தில் மொழி பெயர்த்து 'ஹிரு' பத்திரிகையில் வெளியிட்டோம். சில வேளைகளில் இரவு வேளைகளில் நண்பர்களுடன் நகரில் குதூகலமாக இருந்து கொண்டு சற்றுப் போதையேறிய நிலையில் சிவா ஏதேனும் அரசியல் விடயத்தைக் கதைத்து சர்ச்சையையும் தர்க்கத்தையும் கிளப்புவார். உண்மையைக் கூறப்போனால் சற்றுச் சூடு கிளப்புவதாக அவரது உரையாடல் போக்கு தோன்றினாலும் பின்னர் வழமை நிலைக்குத் திரும்பி முடிவடையும். வெளிப்படையாகப் பேசும் சிக்கலற்ற நல்ல நண்பர் அவர்.

2003ல் சிங்கள தமிழ் ஒன்றுகூடல் கலைவிழாவை 'ஹிரு' குழுவினர் ஏற்பாடு செய்த காலத்தில், சிவா பல வழிகளில் அந்த விழா சிறப்புற நடந்தேறப் பேருதவி புரிந்தார். இனவாதிகள் தாக்குதல் செய்து விழாவைக் குழப்ப முற்பட்ட போது தமிழ் நண்பர்களுக்கு எத்தகைய ஊறும் நேர்ந்து விடாது காக்கும் விதத்தில் விழா முன்றலுக்கு ஒரு கணமேனும் தாமதியாது முன்னோக்கிப் பாய்ந்தோடிய தோழர்கள் குழுவில் சிவாவும் ஒருவர். நடந்த சம்பவத்தை ஒரு சில மணிநேரத்திற்குள் உலகறியச் செய்தவரும் அவர் தான்.

2004 காலப்பகுதியில் 'பாட்டா' தொழிலாளர் பிரச்சினை ஏற்பட்ட போது சிவாவுடன் நான் தொடர்பு கொண்டு சகல விபரங்களையும் தெரிவித்தேன். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களது புகைப்படங்களையும் விபரங்களுடன் அனுப்புமாறு அவர் கேட்டுக் கொண்டார். அடுத்த நாள் தமிழ்நெற் பிரதான தலையங்கத்தில் பாட்டா தொழிலாளர் பிரச்சினை உரிய முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதையடுத்து அன்றைய தினம் நண்பகல் பொலிஸாரால் தொழிலாளர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட செய்தியையும் தெரிவித்தேன். ஒரு மணித்தியாலத்திற்குள் சகல விபரங்களுமடங்கிய செய்தி படங்களுடன் வெளிவந்தது.

எடுத்துக் கொண்ட காரியத்தில் துரிதமாகவும் திறமையாகவும் இயங்கும் அவரது பண்பு தனித்துவமானது. இதைப் போன்றே பின்னர் 'ரெயில்வே' தொழிலாளர் பிரச்சினை மற்றும் தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைகள் என்பனவும் உரியகாலத்தில் உடனுக்குடன் செய்திகளாக வருவதற்கு எங்களுக்கு உதவினார். சிவராமின் இந்தப்பக்கம் பலருக்கு தெரியாமற் போனது துரதிர்ஷ்டம் வாய்ந்த ஒன்றாகும்.

கேந்திரவியல் தொடர்பான மற்றும் பூகோள அரசியல் விவகாரங்கள் குறித்து தேடலுடன் கற்க வேண்டுமென்ற தேவையினை எமக்கு உணர்த்தியவர் சிவா. இதற்காகப் பலவழிகளிலும் எம்மை ஊக்கப்படுத்தினார். 'ஹிரு' குழுவினரால் 'புஷ். புலிகள் மற்றும் யு.எஸ்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர் கருத்தரங்குகளை சிறப்பாக பயனுள்ள முறையில் நடாத்துவதற்குப் பின்னணியில் அச்சாணியாக இருந்து செயற்பட்டு உதவினார்.

நாட்டு நிலைமைகள் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் நாளுக்கு நாள் மோசமடைவதால் நாட்டைவிட்டு சற்றுக் காலம் வெளியேறியிருப்பது உசிதம் என்ற கருத்துப்பட நான் கூறியதை இப்போது நினைவு கூருகிறேன். 'மச்சான் இந்த இடத்தை விட்டு வெளியேறுவதானால் நிச்சயம் இதற்கு அச்சுறுத்தல் அல்ல நுளம்புக் கடியே காரணமாக இருக்க முடியும்' என ஒருவகை நகைச்சுவையுடன் அவர் பதிலளித்தார். எனினும் இருந்திருக்கக் கூடிய அபாயம் குறித்து அவருக்கு பிரக்ஞை ஓரேயடியாக இல்லையெனவும் கருதிவிட முடியாது. ஆனால், அவருக்கே உரித்தான பாணியிலே எதனையும் ஒரு பொருட்டாகக் கருதாது புறக்கணித்து வந்துள்ளார். வாழ்க்கையின் சாத்தியம் எவ்வளவு உண்மையோ அதே போன்று இறப்பும் நிச்சயம் என்பதை புதிரானதொரு புன்னகையுடன் அவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிருந்திருக்க வேண்டுமென்றே நான் கருதுகிறேன். எனது எஸ்.எம்.எஸ் க்கு பதிலாக மரணிப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக 'நாங்கள் பின்னேரம் சந்திப்போமா?' என சிவா கேட்டார். அன்றைய தினம் நண்பகலுக்குப் பிந்தியவேளை ஹோட்டல் சபையர் 'பாரில்' நாம் சந்தித்தோம். மட்டக்களப்பிலேயே பெரும்பாலும் தனது நேரத்தைச் செலவிட்ட சிவா இடைக்கிடை அவ்வப்போது கொழும்புக்கு வருவார். அன்று சற்றுப்பிந்தி வந்த சிவா அவசர, அவசரமாக மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருப்பதை யன்னலினூடாக நான் கண்டேன்.

இரண்டு மணித்தியாலங்களுக்குப் பிறகு நாங்கள் விடை பெறுவதற்கு அவ்விடத்தை விட்டு எழுந்த போது சிவா மீண்டும் புதன்கிழமை சந்திப்பதற்கு வசதியாக இருக்குமா எனக் கேட்டார். இதற்கு 'ஹிரு' பத்திரிகை வரவேண்டியிருப்பதால் வியாழக்கிழமை சந்திப்பதற்கு முடிவெடுத்தோம். சிவா எழும்பிய போது கவனமாகச் செல்லுமாறு நான் கூறியதையடுத்து சிவா 'வியாழக்கிழமை சந்திப்போம் மச்சான்' என்று வலியுறுத்தி கூறிவிட்டு காலி வீதியை நோக்கி சற்று வேகமாக நடந்தார்.

அந்த வியாழன் எப்போது இனி எமக்கு வரப்போகிறதோ? 28ஆம் திகதி சிவாவின் எஸ்.எம்.எஸ். முற்பகல் 11 மணிக்கு வந்தது. 'நான் கொழும்பில் நிற்கிறேன். வரமுடியுமெனில் பின்னேரம் சந்திப்போம்' என்பதே அவரது எஸ்.எம்.எஸ். ஆகும். '5 மணிக்குச் சந்திப்போம்' எனப் பதிலளித்தேன். 'எனக்கு ஒரு கூட்டம் 5:30 - 7:00 வரை உள்ளதால் அதற்குப் பிறகு சந்திக்க முடியுமா? நான் கூட்டத்தை ரத்துச் செய்து வர முயற்சிக்கிறேன். எனினும் நிச்சயப்படுத்திக் கூறமுடியாது' இது 2 மணிக்கு. 'அவ்வாறெனில் வெள்ளி சந்திப்போமா' என நான் கேட்டேன். சிவாவினுடைய கடைசித்தகவல் பி.ப.4 மணிக்கு வந்தது. 'இன்றைய தினமே உங்களுக்கு 7 மணிக்குப் பிறகு வசதியெனில் நல்லது. எஸ்.எம்.எஸ். மூலம் உங்கள் வசதியைத் தெரிந்து கொள்கிறேன். நாளை வீரகேசரியில் வேலையிருப்பதால் ஆமர்வீதிப் பக்கம் நீங்கள் வரவேண்டும்' நான் இணக்கம் தெரிவித்தேன்.

7 மணிக்கு காரியாலயத்தை விட்டு வெளியேறி அவரைச் சந்திப்பதற்கு அவரது தொலைபேசி அழைப்பிற்காகக் காத்திருந்தேன். 7 மணிக்கு தொலைபேசியில் சிவா கதைத்தார் 'மச்சான் நான்




பம்பலப்பிட்டி சந்தியில் நிற்கிறேன். அங்கு வரமுடியுமா? குஷல் பெரேராவை இப்போது சந்தித்தேன். உங்களுக்கு அங்கு வரமுடியாதெனில் குஷலுடன் கதைத்துவிட்டு கோட்டைப் பக்கமாக வருகிறேன்: கோட்டைக்கு வந்ததும் உங்களுடன் மறுபடியும் தொடர்பு கொள்கிறேன்' என்றார். நான் இணங்கினேன்.

இதன் பின்னர் நீண்ட நேரமாக ஒரு தகவலுமில்லை 9:30மணிக்கு அவருக்கு 'இன்னும் நீங்கள் குடித்துக் கொண்டு இருக்கிறீர்களா' என எஸ்.எம்.எஸ். ஒன்று அனுப்பினேன் 10:30 கடந்தும் ஒரு பதிலுமில்லை. எல்லாவற்றையும் கைவிட்டு இருந்து விட்டேன்.

அன்றைய இரவு சிவராம் எங்களை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விடுவாரென எவரும் நினைத்திருக்க மாட்டார்கள். எனினும் அதுதான் நடந்து விட்டது. அறிவிலும் செயற்பாட்டிலும் எங்களையும் விட முன்னோக்கி இயங்கிய சிவராம் மரணத்திலும் எம்மை முந்திக் கொண்டார். காலை 7:30 மணிக்கு குண்டுகள் துளைக்கப்பட்ட அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக கேள்விப்பட்டோம். நாங்கள் நேசித்த மனிதநேயம்மிக்க தோழன் இன்று எம்மத்தியில் இல்லை. பம்பலப்பிட்டி சந்தியில் சந்திக்க வேண்டிய சிவாவின் உருவம் என்மனதில் நீங்காமல் ஒட்டிக் கொண்டு விட்டது. முடிவற்ற ஒரு வியாழன் பின்னேரம் இனி ஒருபோதும் வரப்போவதில்லை.

கூரிய கத்தி முனையினால் இதயத்தை ஊடுருவித் துயர்படுத்துகிறது சிவாவின் நினைவு!


துணிவும் நேசிப்பும் கொண்ட சிவா என்ற இந்த மனிதன் எமக்கு நண்பனும் தோழனும் ஆவான்.

றோஹித பாஷண - ஹிரு பத்திரிகை ஆசிரியர் -

தமிழில் ஜி.ரி.கேதாரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Artwork by K. B. Abro

நன்றி: IFJ

# அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்!

கருணாகரன்

அச்சத்தைத் தின்று சாம்பருமின்றி அழித்துவிடும்' 'உயிர் நிழல்' என்று அறிவிக்கும் சில ஸ்ரிக்கருடன் ஒரு முன்னிரவில் எதிர்பாராதவிதமாக என்னிடம் வந்திருந்தார் எஸ்போஸ். 'உயிர் நிழல்' என்ற பெயரில் புதிய இதழொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறினார்.

அப்போது அவர் 'நிலம்' என்ற கவிதைக்கான இதழை வெளியிட்டுக் கொண்டிருந்தார். அவர் திட்டமிட்ட அளவுக்கு அந்த இதழ் வரவில்லை. அந்தக் குறையும் கவலையும் அவரிடமிருந்தது. அதற்குப் பதிலாக இப்போது உயிர் நிழலை வெளியிட முயன்றார்.

"அந்தப்பெயரில் ஏற்கெனவே ஒரு இதழ் பிரான்ஸிலிருந்து வருகிறதே" என்று கேட்டேன்.

"அதனாலென்ன" என்று என்னிடம் திருப்பிக் கேட்டார் எஸ்போஸ்.

"ஏற்கெனவே அந்தப் பெயரில் ஒரு இதழ் வந்து கொண்டிருக்கும் போது அதே பெயரில் இன்னொரு இதழ் சமகாலத்திலேயே வெளிவருவது பலருக்கும் குழப்பத்தை ஏற்படுத்துமல்லவா. தவிர ஏற்கெனவே அந்தப்பெயரில் இதழைக் கொண்டு வருபவர்கள் ஏதாவது சொல்லக்கூடுமே " என்று அவரிடம் திருப்பிக் கேட்டேன்.

"பெயரில் என்ன இருக்கிறது" என்றார் எஸ்போஸ்.

பசுவய்யாவின் ஒரு கவிதையில் 'பெயரில் என்ன இருக்கிறது' என்று ஒரு அடி வரும். எனக்கு அந்தக் கவிதைதான் அப்போது நினைவில் வந்தது.

வந்தவரின் பெயர் என்னவென்று அவனிடம் கேட்க. பெயரில் என்ன இருக்கிறது என்றபடி அவன் அதைச் சொல்லாமல் போகிறான்.

பத்தாண்டுகளுக்கு முன் இந்தக் கவிதையைப் பற்றி எஸ்போஸுடன் பேசியிருக்கிறேன்.

சற்று நேர அமைதிக்குப்பிறகு "ஏன் வேறு பெயரொன்றைத் தெரிவு செய்யலாமே" என்றேன். அவர் அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை.

அன்றிரவு நீண்ட நேரம் புதிய இதழ் பற்றி ஆர்வத்தோடு பேசினார். ஒரு புதிய இதழுக்கான தேவை, அதைக் கொண்டு வருவதற்கான சாதக பாதக அம்சங்கள், ஏற்கெனவே வெளிவந்த இதழ்களின் நிலைமை எனப் பலவற்றையும் பேசினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச்சீரியஸாகவே அவர் பேசிக்கொண்டிருந்தார்.

எஸ்போஸின் இயல்பே அப்படித்தான். எப்போதும் எல்லாவற்றையும் மிகச்சீரியஸாகவே எடுக்கும் ஆள் அவர். எல்லாவற்றிலும் அவர் கொள்ளும் தீவிரம் தான் இதற்குக் காரணம் என நினைக்கிறேன். அதேவேளை அவர் அதேயளவுக்கு எல்லாவற்றிலும் கடுமையான அலட்சியத்தையுமுடையவர். எதிலும் பொறுப்பற்ற விதமாக அவர் நடந்து கொள்வதாகவே தோன்றும். விறுத்தாப்பி' என்று சொல்வார்களே அதுமாதிரி எதிலும் அலட்சியம். எதிலும் எதிர்நிலை தன்னிச்சையாக இயங்குவதில் அவர் தனக்கான ஒரு வகைமாதிரியை உருவாக்கியிருந்தார். அவ்வாறு உருவாக்கிய அந்த வெளியில் தான் அவர் இயங்கி வந்தார்.

எந்தத் திட்டங்களுக்குள்ளும் வரையறைகளுக்குள்ளும் ஒழுங்குமுறைகளுக்குள்ளும் நிற்கும் இயல்பற்றவர் எஸ்போஸ். இதனால் அவர் தன்னுடைய நெருங்கிய உறவினர்களிடத்திலேயே கடுமையான கண்டனங்களுக்கும் விமரிசனங்களுக்கும் ஆளானவர். ஆனால் அவரை யாராலும் புறக்கணிக்க முடியாது. அதுதான் அவருடைய பலம். அதுதான் அவரை பலரிடத்திலும் ஆழமாக நேசிக்க வைத்தது.

அவர் எல்லோருடனும் சண்டையிட்டிருக்கிறார். ஆனால் பகைமை கொண்டதில்லை. பலநாட்கள் எங்களின் வீட்டில் பெரும் மோதலே ஏற்பட்டிருக்கிறது.

"இலக்கியத்தையும் அரசியலையும் விட்டிட்டு வேற எதைப்பற்றியாவது கதையுங்கள்" என்று வீட்டில் சொல்வார்கள். அந்தளவுக்கு மோதல் நடந்திருக்கிறது. இதுமாதிரியான சந்தர்ப்பங்கள் வேறு நண்பர்களுக்கும் நடந்திருக்கிறது. ஆனால் எந்த வீட்டிலும் யாருக்கும் அவர் மீது கோபம் வந்ததில்லை. பழகும் எல்லா வீடுகளிலும் உரிமை எடுத்துக் கொண்டு பழகுவார். மிகச்சரியாகச் சொன்னால் அவரின் மீது எல்லோருக்கும் ஒருவிதமான அன்பும் இரக்கமும் கருணையும் பரிவும் இருந்தது. அவருடைய தோற்றமும் அலைந்த வாழ்வும் இதற்கெல்லாம் காரணமாக இருக்கலாம். எல்லோரும் அவரை தங்களின் குடும்பத்தில் உள்ள ஒருவராகவே கருதினார்கள்.

அவருடன் நாம் சீரியஸாகப் பேசிக்கொண்டிருக்கும் போது சடுதியாக கிளம்பிப் போய்விடுவார். பிறகு ஒருநாள் எதிர்பாராத தருணத்தில் திடுதிப்பென வந்து முன்னே நிற்பார். அவர் எப்போது வருவார் எப்போது போவார் என்று யாருக்கும் தெரியாது. இதுதான் பிரச்சினை. அவருடைய இந்தமாதிரியான நடவடிக்கைகளினால் அவர் மற்றவர்களால் புரிந்து கொள்ளக் கடினமானவராக இருந்தார்.

அடுத்த கணத்தில் அவர் என்ன செய்வார் என்று அவருக்கும் தெரியாது. நமக்கும் தெரியாது. அவருடைய படைப்புகளிலும் இந்த இயல்புகள் காணப்படுகின்றன. தீவிரம். அலட்சியம் என்ற இருநிலைகளுக்கிடையில் சஞ்சரிக்கின்ற அல்லது அலைகின்ற மனதைப்பிரதிபலிக்கின்ற எழுத்து அவருடையது.

எஸ்போஸின் வாழ்வும் ஏறக்குறைய அப்படித்தான் இருந்தது. அவர் தன்னுடைய இளைய வயதிலேயே நிலையற்று அங்குமிங்குமாக அலைந்தார். சிறு வயதிலேயே தந்தையை இழந்திருந்தார். தாயுடனும் பாட்டியுடனும் வாழ்ந்த காலத்திலேயே அவருள் இந்த எதிர்நிலையம்சம் காணப்பட்டது. பள்ளியிலும் அவர் வேறுபட்ட தன்மையிலேயே இருந்தார் என்று அவருடைய இளவயது நண்பர்கள் நினைவு கூர்கிறார்கள். அநேகமாக ஆசிரியர்களுடன் அவர் அடிக்கடி பிரச்சினைப்பட்டிருக்கிறார். அதனால் அவரால் தொடர்ந்து படிக்க முடியவில்லை.

இதுபற்றி பின்னாளில் அவர் என்னுடன் கதைத்திருக்கிறார்.

# சந்திரபோஸ் சுதாகர்

**24.08.1975 - 16.04.2007**



சந்திரபோஸ் சுதாகர் பளையில் 1975 இல் பிறந்தார். பிறகு வன்னியில் அக்கராயன்குளத்தில் படித்தார். தந்தை பளை முகமாலையைச் சேர்ந்தவர். தாய் நெடுந்தீவில் பிறந்தவர். தாய் அக்கராயன் பொது மருத்துவமனையில் தாதியாகப்பணியாற்றியபடியால் அங்கேகுடியேறியிருந்தனர்.

ஈழநாதம், வெளிச்சம், ஈழநாடு, நிலம், காலச்சுவடு, வீரகேசரி, சரிநிகர், மூன்றாவது மனிதன், தமிழ் உலகம், இன்னொரு காலடி ஆகிய இதழ்களில் இவருடைய கவிதைகள் வந்திருக்கின்றன.

சந்திரபோஸ் சுதாகர் என்ற தன்னுடைய பெயரிலேயே ஆரம்பத்தில் எழுதி வந்தவர் பின்னாளில், எஸ்போஸ், போஸ்நிஹாலே என்ற பெயர்களிலும் எழுதினார்.

வெளிச்சம், ஈழநாதம், ஈழநாடு, தமிழ் உலகம், வீரகேசரி ஆகிய இதழ்களிலும் பத்திரிகைகளிலும் பணியாற்றினார்.

நிலம் என்ற கவிதைக்கான இதழை ஆசிரியராக இருந்து வெளியிட்டார்.

புத்தக வடிவமைப்பிலும் ஈடுபட்டு வந்தார். கவிதைகளுடன் சிறுகதைகளையும் எழுதியுள்ளாரர். விமர்சனக் கட்டுரைகள் சிலவும் வந்திருக்கின்றன.

இரண்டு பிள்ளைகள். இரண்டும் ஆண்கள்.

துணைவி செந்தா, மருத்துவத்தாதியாக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியை எஸ்போஸ் அதிகாரம் திரண்டிருக்கிற மையமாகவே பார்த்தார். கைத்தடியில்லாமல் ஒரு ஆசிரியரை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா என்று கேட்டார். அந்தளவுக்கு எங்களின் மனதில் ஆசிரியரைப் பற்றிய படிமம் ஏற்பட்டிருக்கிறது. குழந்தைகளிடம் அதிகாரத்தை திணிக்கும் பெரும் நிறுவனமே பள்ளி என்பது அவருடைய நிலைப்பாடு.

பிள்ளைகளுக்கு அடிக்கக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களே என்றொரு நண்பர் சொன்னார். எஸ்போஸ் சிரித்தார். இதற்கெல்லாம் சட்டம் கொண்டு வரவேண்டுமா என்பது போலிருந்தது அந்தச்சிரிப்பின் அர்த்தம். அதுவும் படித்த மனிதர்கள் தான் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். அவர்களையே சட்டம் போட்டுத்தான் கட்டுப்படுத்த வேணுமா என்றமாதிரி இருந்தது அவருடைய மௌனம்.

அவர் பள்ளியில் நிறையத் தாக்கப்பட்டிருக்கிறார். அந்த வடு அவரின் ஆழ்மனதில் பதியமாகியிருந்ததை உணர்ந்திருக்கிறேன். அவரிடம் இளவயதின் பல வடுக்களிருந்தன. ஆனால் அவையெல்லாவற்றையும் கடந்து அவரிடம் அசாத்தியமான திறமைகள் வளர்ந்திருந்தன. அது பள்ளிகள் காணாத ஆற்றல். நம்முடைய எந்தப் பள்ளியும் கண்டடைய முடியாத திறன். அதனாலென்ன, கவனங்கொள்ளாமல் விடப்பட்ட அவருடைய படைப்புகளில் கூர்மையும் தீவிரமும் கூடிய ஆழமிருந்தது. நவீனமிருந்தது.

எஸ்போஸ் தன்னுடைய இளவயதிற்குள் அதிகமாக வாசித்தார். காப்காவும் காம்யுவும் ஆரம்பத்தில் அவருக்குப் பிடித்திருந்தனர். பிறகு அவர் பின்நவீனத்துவ எழுத்துகளில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கி, மார்க்வெஸ் போன்றோரின் எழுத்துகளை அதிகம் விரும்பிப்படித்தார்.

தமிழில் அவருக்குப்பிடித்த படைப்பாளிகள் ஜி.நாகராஜன், சாருநிவேதிதா, கோணங்கி, விக்ரமாதித்யன், ஜெயமோகன், சல்மா, மனுஷ்யபுத்திரன் போன்ற சிலர். பிரமிளை அவர் அதிகம் நேசித்தார். பிரமிளின் மீது ஒருவகைப்பித்து நிலை எஸ்போஸுக்கிருந்தது. இவர்களின் எழுத்துகளை அவர் அதிகமாக விரும்பிப் படித்தார். ஈழத்தில் திசேரா, ரஞ்சகுமார், உமா வரதராஜன், அனார், பா.அகிலன், நிலாந்தன், சோலைக்கிளி, சு.வி ஆகியோரின் எழுத்துகளில் அவருக்கு ஈடுபாடிருந்தது.

என்றாலும் எஸ்போஸ் பின் நவீனத்துவ எழுத்துகளையே தேடிக்கொண்டிருந்தார். எம்.ஜி. சுரேஷின் புத்தகங்களை எப்படியோ எங்கோ கண்டு வாங்கிக் கொண்டு ஒருநாள் திடீரென வந்தார். இரண்டு நாட்கள் வீட்டில் தங்கி நின்று இரவு

**அவர் பள்ளியில் நிறையத் தாக்கப்பட்டிருக்கிறார். அந்த வடு அவரின் ஆழ்மனதில் பதியமாகியிருந்ததை உணர்ந்திருக்கிறேன். அவரிடம் இளவயதின் பல வடுக்களிருந்தன. ஆனால் அவையெல்லாவற்றையும் கடந்து அவரிடம் அசாத்தியமான திறமைகள் வளர்ந்திருந்தன. அது பள்ளிகள் காணாத ஆற்றல். நம்முடைய எந்தப் பள்ளியும் கண்டடைய முடியாத திறன். அதனாலென்ன, கவனங்கொள்ளாமல் விடப்பட்ட அவருடைய படைப்புகளில் கூர்மையும் தீவிரமும் கூடிய ஆழமிருந்தது. நவீனமிருந்தது.**

பகலாக வாசித்தார்.

வாசித்து ஓயும் பொழுதுகளில் பேசத் தொடங்குவார். பேச்சு ஏதோ ஓர் புள்ளியில் விவாதமாகும். விவாதம் உச்சநிலைக்குப் போகும்போது, தான் மீண்டும் புத்தகத்தை வாசிக்கப் போவதாக கூறிச்சென்று விடுவார்.

மூன்றாவது நாள் நான்கு மணித்தியாலத்துக்கு மேல் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். தேடிவந்த நண்பர்கள் திரண்டிருக்க முழு உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவர் பேசிக்கொண்டிருந்த காட்சி ஒரு அழியக்கூடாத சித்திரம்.

அவரின் அரைவாசிக்கு மேற்பட்ட கவிதைகளை எஸ்போஸ் இந்தக் கலவையில், இந்தப் பண்பில்தான்- பின்நவீனத்துவப்பண்பில் எழுதினார். 'செம்மணி' என்ற கவிதைத் தொகுதியில் இப்படி ஒரு கவிதையைத் தொடக்கத்தில் எழுதினார். பிறகு 'சரிநிகரில இவ்வாறு சில கவிதைகள் வந்ததாக ஞாபகமுண்டு.

எஸ்போஸின் படைப்புலகம் தீவிர நிலையிலானதென்று சொன்னேனல்லவா. அதைவிடத்தீவிரமானது அவருடைய உரையாடல். சண்டையிடுவது போலவே தான் பேசுவார். அதிகம் உணர்ச்சிவசப்பட்டு விடுவார். அந்தக் கீச்சுக்குரல் அவருடைய சக்தியை மீறியொலிக்கும்.

அவருடன் பேசிக்கொண்டிருந்த பல நாட்களில் அவருடைய கைகள் நடுங்குவதைப் பார்த்திருக்கிறேன். ஆனாலும் அவர் தீவிர உணர்ச்சிவசப்படுகின்ற போது அமைதியாகி விடுவார். ஆனாலும் ஒரு அரை மணித்தியாலம் அல்லது பத்து பதினைந்து நிமிடத்தின் பிறகு மீண்டும் விவாதத்தை ஆரம்பித்து விடுவார். பேசவேண்டும், விவாதிக்க வேண்டும், அதனூடாக பல விசயங்களைப் பகிர வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவரிடமுண்டு. அதுவும் எப்பொழுதும் எதிர்நிலையில் நின்றே விவாதிக்கும் ஒரு வகைப்போக்குடையவர்.

"நீர் முன்பொருதடவை பேசும்போது வேறு விதமாக அல்லவா இந்த விசயத்தைச் சொன்னீர். இப்ப அதுக்கு நேரெதிராகக்கதைக்கிறீரே" என்றால், "அதை யார் மறுத்தது. எல்லாச்சந்தர்ப்பத்திலும் ஒரே மாதிரித்தான் இருக்க வேணுமா. அப்படி எதிர்பார்ப்பது ஒரு வகை அதிகாரம்" என்பார். "இப்போது இதுதான் என்னுடைய வாதம்" என்று சொல்வார். ஆனால் அதையிட்டு சற்று வருத்தமோ, தயக்கமோ அவருக்கிருக்காது.

எதிர் நிலையில் நின்று விவாதிப்பதன்மூலம் பல விசயங்களை வெளியே கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. அதற்காக அவர் மற்றவர்களைச் சீண்டிக் கொண்டேயிருப்பார். இதனால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருடன் மோத வேண்டியிருந்தது. பலர் எஸ்போஸை விட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால் கடுமையாக மோதிக்கொண்டு வெளியேறிப்போன அவர் பிறகொரு நாள் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் சண்டையிட்டவரின் முன்னால் வந்து நிற்பார். எனவே அவருடன் யாரும் நிரந்தரமாகப் பகைக்க முடியாது. கோபத்தையும் அவரே உருவாக்குவார், பிறகு அதை அவரே துடைத்தழிப்பார். இதனால் அவருடன் பலர் கோவித்துக் கொண்டார்களே தவிர பகைக்க முடியவில்லை.

அவருடன் இனிமேல் விவாதிப்பதில்லை என்று நீங்கள் தீர்மானமெடுக்க முடியாது. நீங்கள் மிகப்பிடிவாதமாக உங்களுடைய தீர்மானத்தில் நிற்கலாம். ஆனால், எதிர்பாராத ஒரு புள்ளியில் வைத்து உங்களை அவர் விவாதத்தில் இழுத்து விடுவார். மனதில் பகைமையோ தீமையோ இல்லை என்பதால் அவரை நிரந்தரமாக யாரும் நிராகரித்ததில்லை.

எஸ்போஸின் எழுத்துகளில் மிகத்தீவிரமானவை அவருடைய கவிதைகளே. அவை மிகப்புதியவை. அப்படித்தான் அவற்றைச் சொல்ல வேண்டும். நவீன தமிழ்க்கவிதை வெளிப்பாட்டில் எஸ்போஸ் அளவுக்கு மொழியையும் சொல்முறையையும் பொருளையும் இணைத்து நேர்த்தியாக கவிதையை எழுதியவர்கள் வேறெவரும் இல்லை எனலாம். அவருடைய கவிதைகள் மிகக்கவர்ச்சியானவை. மிக ஆழமானவை: மிக நேர்த்தியானவை.

மொழியை அதன் உச்சமான சாத்தியப்பாடுகளில் வைத்து படைப்புக்குப் பயன்படுத்தியவர் எஸ்போஸ். அவர் கவிதையை உணர்முறைக்குரிய படைப்பென்றே கருதினார். சொல்முறையிலான கவிதையை அவர் முற்றாக நிராகரித்தார். இதனால் அவர் பலருடனும் நேரடியாக மோதவேண்டியேற்பட்டது. ஆனால் அவருக்கு அதையிட்டு வருத்தமெல்லாம் கிடையாது. அப்படியொரு மாற்று வெளியிருப்பதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியான வெளியிருந்தால் புதிய கவிதைக்கான இடத்தை அது மறைத்து விடும் என்று நம்பினார்.

புதிய கவிதையை நாம் வீரியமாகவும் புதுமையாகவும் எழுதுவோம். அதன்மூலம் அதற்கான வெளியை உருவாக்க முடியும் என சொன்னபோது அவர் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அந்த மென் வழிமுறையை அவர் பின்பற்றத்தயாராக இருக்கவில்லை. அதனால் அவர் பலருடனும் ஓய்வில்லாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். சொல்முறையிலான கவிதையை நிராகரிக்கும் நோக்கம் அவருக்குள் அந்தளவுக்கு ஆழமாக வேரோடியிருந்தது.

சொல்முறையிலான கவிதை வாசகனை அதிகம் பலவீனப்படுத்துகிறது. அதில் ஜாலங்களே அதிகம். மொழியின் அலங்காரங்களை நம்பியே அது கட்டியெழுப்பப்படுகிறது. ஒற்றைப்படைத்தன்மையும் சீரழிவும் அதற்குள் தாராளமாக நிரம்பிக் கிடக்கின்றன என்ற எண்ணங்கள் சொல்முறையிலான கவிதை குறித்து அவரிடம் இருந்தன. தீவிரத்தன்மையை நோக்கி வாசகரை அழைத்துச் செல்லும் வலிமை சொல்முறைக் கவிதைக்கில்லை. அதனால் அவை வாசகருக்கெதிரான அதிகார மையத்தைக் கொண்டிருக்கின்றன என்று வாதிட்டார். சொல்லல் கேட்டல், சொல்லல் ஏற்றுக் கொள்ளல் முறையில் ஒருவகை அதிகாரம் இருக்கிறது என்று நாம் பேசியதை வைத்துக் கொண்டு தன்னுடைய இந்தத்தீவிர நிலைப்பாட்டைக் கட்டியெழுப்பியிருந்தார்.

உணர்முறைக் கவிதைகளில் அதிகம் வாசகன் மதிக்கப்படுகிறான். வாசகனுடைய அறிவை விரிவாக்கம் செய்யும் ஆழமான நம்பிக்கையைக் கொண்டே அந்தக்கவிதை உருவாகிறது. பன்முக வெளிகளில் வாசகன் பயணம் செய்யக்கூடிய சுதந்திரமும் வழிகளும் அந்தக் கவிதைகளில் நிரம்பக் கிடைக்கின்றன. உணர்தலினூடாக நிர்மாணிக்கப்படும் பேருலகத்தை, பகிரும் வழிமுறையை ஏன் யாரும் புறக்கணிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

அவருடைய கவிதைகளின் ஆற்றல் அவர் வலியுறுத்திய நிலைப்பாட்டைப் பிரதிபலித்தன. மிகக்குறைந்தளவு கவிதைகளையே எஸ்போஸ் எழுதியிருந்தாலும் அவருடைய கவிதைகள் பரந்தளவிலான கவனிப்பைப் பெற்றிருக்கின்றன. தொண்ணூறுகளில் எழுத வந்த படைப்பாளிகளிடத்தில் எஸ்போஸ் முதல் ஆளாகத் தன்னுடைய படைப்புகளின் வழியாக அடையாளம் காணப்படுகிறார். அதிலும் அவருடைய கவிதைகள் முன்னெப்பொழுதும் கிடைத்திராத புதிய அனுபவப்பிராந்தியத்தை விரிப்பதால் வாசகரிடத்தில் அவற்றுக்குத் தனி மதிப்புண்டாகி விட்டது.

அவருடைய கவிதைகளை பா.அகிலன், அ.யேசுராசா, சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன், கருணாகரன், றஷ்மி, புதுவை இரத்தினதுரை, சித்தாந்தன், தானா. விஷ்ணு, நிலாந்தன், அனார், எம்.பௌசர், சு.வி, போன்றோர் புதிய போக்கொன்றின் அடையாளமாகக் கண்டார்கள். இன்னும் பலர் அவ்வாறு கண்டிருக்கக்கூடும்.

இதுவரையும் எழுதிய கவிதைகளை தொகுதியாக்கலாமே என்று கேட்டேன். "பார்க்கலாம்" என்றார் எஸ்போஸ். ஆனால் இறுதிவரையில் அவருடைய தொகுதி வரவேயில்லை. அவருடைய கவிதைகள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி அவை வராதது பெருந்துக்கமே. அவர் இதுவரையில் எழுதிய கவிதைகள் நூறுக்குள் தான் இருக்கும் எனத்தெரிகிறது. இவற்றை எப்படி ஒன்று சேர்ப்பது என்பது இன்றைய நிலையில் பெருங்கேள்வியே.

'நிலம்' இதழ் புதிய கவிதைக்கான தளத்தை நிர்மாணிக்க வேண்டும் என்றே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது அவ்வாறு வரவில்லை. அதில் பெருந்துக்கமும் சலிப்புமடைந்திருந்தார் எஸ்போஸ். அது அவருடைய திட்டத்தையும் எதிர்பார்ப்பையும் கடந்து, சாதாரண இதழாகவே வந்தது. யேசுராசா இளங்கவிஞர்களுக்காக நடத்திய 'கவிதை ' இதழையும் விட நிலம் மேலெழும்பவில்லையே என்று சில நண்பர்கள் அவரிடம் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்வியை அவர் மதித்திருக்கிறார். அதற்குப்பிறகுதான் அவர் 'உயிர்நிழல்' என்ற பெயரில் புதிய இதழைப்பற்றி யோசித்தது.

அதிகாரத்துக்கெதிரான சிந்தனைதான் எஸ்போஸின் அடையாளம். எந்தப்போராட்டமும் தன்னை ஒடுக்கும் அதிகாரத்துக்கு எதிரானதுதான். சாதியோ, நிறமோ, வர்க்கமோ, மதமோ எதுவாயினும். கைது, சித்திரவதை, கொலை, சிறை எல்லாமே அச்சத்தின் வெளிப்பாடுகள் தான். எஸ்போஸின் எழுத்துகளின் ஆதாரம் இந்த மையத்தில் இருந்துதான் வேர்கொண்டெழுகிறது.

ஒருதடவை கைதியின் நிலை பற்றிப்பேசிக் கொண்டிருந்தோம். ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர்களுக்கு கைது, சிறை, சித்திரவதை அனுபவங்கள் நிறையவுண்டு. அப்போது எங்களுடன் மயன் என்ற சு.மகேந்திரனும் இருந்தார். மகேந்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைக்குப் போய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த போது வெலிக்கந்தவில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் இரண்டரை வருசங்கள் சிறையிருந்தவர். இன்றுவரையில் அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் என்னவென்று அவருக்குத் தெரியாது. கைதுக்கான காரணத்தை அவரைப் பிடித்தவர்களும் சொல்லவில்லை. இவ்வளவுக்கும் அவர் ஒரு ஆசிரியர். இலங்கை இந்திய ஒப்பந்தம் வரவில்லையென்றால் தான் இன்னும் நீண்டகாலம் சிறையிலே தான் இருந்திருக்க வேண்டுமோ என்று சொன்னார்.

அன்று கைது, தண்டனை, சிறை, படுகொலை பற்றியே அதிகமும் பேசினோம். ஒரு கட்டத்தில் கைது செய்யப்படுவோனிடமா அல்லது கைது செய்வோனிடமா அதிகாரமிருக்கிறது என்ற கேள்வி பிறந்தது. இது நடந்து ஆறு அல்லது ஏழு மாதத்துக்குப்பிறகு 'சித்திரவதைக்குப் பின்னான வாக்குமூலம் ' என்ற கவிதையை எஸ்போஸ் மிகத்தரமாக எழுதியிருந்தார். அது சரிநிகரில் பிறகு வெளிவந்தது.

விவாதிப்பவற்றை, உரையாடலை படைப்பாக்குவதில் அசாதாரண திறமை எஸ்போஸூக்கு உண்டு. எங்களுக்கிடையே நிகழ்ந்த பல விவாதங்களையும் பேச்சுகளையும் அவர் நல்லமுறையில் பலவிதமாக எழுதியிருக்கிறார்.

எஸ்போஸின் படைப்பியக்கம் ஒடுக்குமுறைக்கெதிரானது. அதன் வழியான அதிகாரத்துக்கு எதிரானது. அவர் சமரசங்களுக்கும் விட்டுக் கொடுப்புகளுக்கும் இடமளியாமல் தன்னை வைத்துக் கொண்டார். அதனால் அவர் துருத்திக் கொண்டிருப்பதாகவே பலருக்கும் தெரிந்தார். அதனால் தான் அதிகாரத்துக்கு எதிரான படைப்பியக்கத்தில் அவரால் தீவிரமாகவும் ஆழமாகவும் ஈடுபட முடிந்தது. இந்த மையத்தைச் சுற்றியே அவர் தொடர்ந்து தன்னுடைய படைப்பியக்கத்தையும் உருவாக்கியிருந்தார்.

எஸ்போஸூக்குத் தெரியும். தான் என்றோ ஒரு நாள் கைது செய்யப்படுவேன். சித்திரவதைக்குள்ளாவேன் அல்லது சுட்டுக் கொல்லப்படுவேன் என்று. அவர் அதைப்பற்றி முன்னுணர்ந்து எழுதியிருக்கிறார். 'விலங்கிடப்பட இருந்த நாளொன்றில் எழுதிய அஞ்சலிக்குறிப்பு ' 'சிலுவைச் சரித்திரம்' என்ற கவிதைகள் உட்பட பலகவிதைகள் இவ்வாறுள்ளன.

*'சிறகுகள், குருதியொழுகும்*
*சிறகுகள்*
*ஆணிகள், குருதியொழுகும்*
*ஆணிகள்'*


**சிலுவையில் இன்னொரு மனிதன். ஜீசஸ், உம்மைப்போல மெலிந்த மனிதன். உம்மைப் போலவே தாடி வைத்திருந்த மனிதன். உம்மைப்போலவே சனங்களைப் பற்றிச்சிந்தித்த மனிதன்.**

**அந்த இரவில் அவர்கள் அந்த மனிதனைச் சுட்டுக் கொன்றார்கள்.**


*எனது அடையாளம்*
*நான் யாரைக் குறித்து*
*இருக்கிறேன் என்பது*

*'அதிகாரத்தைச்*
*சிலுவையிலறைவதா*
*அதிகாரத்திற்கெதிரான நமது*
*இருதயங்களைச்*
*சிலுவையிலறைவதா '*

எஸ்போஸ் விடுதலைக்காகப் போராடுவோரைக் குறித்திருந்தார். அதுதான் அவருடைய அடையாளம். அந்த வாழ்வின் போது தான் அவர் சிலுவையிலறையப்பட்டார். அவர் முன்னரே எழுதியிருந்ததைப்போல, தனக்கான சிலுவை காத்திருக்கிறது என்று அவர் நம்பியதைப்போல அவருக்குச் சிலுவை பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

எஸ்போஸ் இளமையிலே தன்னுடைய தந்தையை இழந்ததைப்போல அவருடைய பிள்ளைகளும் இளமையிலேயே தங்களின் தந்தையை இழந்திருக்கிறார்கள். அவருடைய தாய் தன்னுடைய துணையை இழந்ததைப்போல அவருடைய மனைவி தன் துணையை இழந்திருக்கிறார். நாங்கள் மகத்தானதொரு கவிஞனை இழந்திருக்கிறோம். அபூர்வமானதொரு மனிதனை இழந்திருக்கிறோம். நல்லதொரு தோழனை இழந்திருக்கிறோம்.

*அவர் எழுதினார்*
*'உன்னை அவர்கள்*
*கொல்வார்கள்*
*நிச்சயமாக நீயே அதை*
*உணர்வாய்*
*அப்பரிசு*
*நிச்சயமற்ற உனது காலத்தில்*
*எப்போதாவது*
*உனக்குக்கிடைக்கத்தான் போகிறது.*

இதுதான் நடந்தது அவர் எதைச் சொன்னாரோ அதுவே நடந்தது.

அன்றிரவு ஒரு மெல்லிய மனிதனைக் கொல்வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் அவனுடைய வீட்டைத் தேடிப் போனார்கள். ஒரு நிராயுதபாணியைக் கொல்வதற்காக துப்பாக்கிகளைக் கொண்டு போனார்கள். எஸ்போஸ் ஒரு கவிதையில் எழுதியதைப்போல ' நீ துப்பாக்கியை இழுத்துக் கொண்டு வருகிறாய் ' என அவர்கள் அந்த ஒட்டி உலர்ந்த மனிதனிடம் போனார்கள். அவனுடைய குழந்தையின் முன்னாலேயே அந்த மனிதனைப் பலியிட்டார்கள். ஒருபாவமும் செய்யாத அந்த மனிதன் குருதி தெறிக்க புரண்டு கிடந்தான் அகாலமாக.

சிலுவையில் இன்னொரு மனிதன். ஜீசஸ், உம்மைப்போல மெலிந்த மனிதன். உம்மைப் போலவே தாடி வைத்திருந்த மனிதன். உம்மைப்போலவே சனங்களைப் பற்றிச்சிந்தித்த மனிதன்.

அந்த இரவில். அவர்கள் அந்த மனிதனைச் சுட்டுக் கொன்றார்கள். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலாநிதி அன்டன் பாலசிங்கம்

04.03.1938 – 14.12.2006

# அர்த்தமும் அபத்தமும்

சேரன்

கலாநிதி அன்டன் பாலசிங்கம் பற்றி இந்த நினைவஞ்சலிக் குறிப்பை நீங்கள் வாசிக்கின்ற இக்கணம் அவர் பற்றியதும் அவரது இறப்புக் குறித்ததும் அவரது இறுதி ஊர்வலம் பற்றியதுமான விவரணங்களும் தொலைக்காட்சி ஆவணங்களும் பெருமளவுக்கு இணையத் தளங்களில் இல்லாமல் போயிருக்கும். கண்மூடித்தனமான புலி எதிர்ப்பு நிலையிலிருந்து அவர்மீது வீசியெறியப்பட்ட தாக்குதல்களைகளும் விசுவாசத்தில் வேர்விட்டுத் தளைத்த புலி மோகத்தில் இருந்து அவருக்குச் சூட்டப்பட்ட புகழாரங்களும் மெல்ல மெல்ல உருவற்றுப் போன நிலையில் அவர் பற்றிய நேரிய கண்ணோட்டம் ஒன்றை அஞ்சலிக் குறிப்பாகத் தர முயற்சிப்பதே என் நோக்கம்.

மிக நீண்ட காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், தத்துவாசிரியர், பேச்சாளர் போன்ற பல மகுடங்கள் காலத்துக்குகாலம் அமைப்பினராலும் வெகுசன ஊடகங்களாலும் அவருக்குச் சூட்டப்பட்டாலும் மகுடங்கள் எவையுமே அன்டன் பாலசிங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் மற்றும் அதன் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே இருந்த சேதனா பூர்வமான இணைப்பையும் பிணைப்பையும் முற்றுமுழுதாகச் சுட்டுவதற்குப் பயன்படா.

விடுதலைப் புலிகளது இயக்க அரசியல், போராட்ட வழிமுறைகள், தேசியக் கருத்தியல் போன்ற விடயங்களிலும் இயக்கத்தில் அவரது பங்கு, தாக்கம் பற்றியும் எழுதுவது எனது நோக்கமல்ல. அதைச் செய்வதற்கு என்னைவிடத் தகுதியான விவரங்கள் அறிந்த வேறு பலர் இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு இடதுசாரி புத்திசீவியாக பரிணமித்த அன்டன் பாலசிங்கம் குறித்துத்தான் நான் எழுத விழைகின்றேன்.

எழுபதுகளின் ஆரம்பத்திலும் நடுப் பகுதிகளிலும் இலங்கை இடதுசாரி இயக்கத்துக்குப் பெரும் சவால் எழுந்தது. தீர்க்கமாக மேலெழுந்த தேசிய இனப் பிரச்சினையை எவ்வாறு கோட்பாடு ரீதியாகவும் நடைமுறையிலும் அணுகுவது என்பதில் பல குழப்பங்களும் பின்னடைவுகளும் நிகழ்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தை முன்னிறுத்தி இனத்துவத்தைப் பின்தள்ளிவிடுகிற போக்கும் இனப் பிரச்சினையை வலியுறுத்தி வர்க்கத்தைப் பின்தள்ளி விடுகிற இன்னொரு போக்கும் என விவாதங்கள் எழுந்தன.

மார்க்சியத்தையும் தேசியத்தையும் புரட்சிகரமான முறையில் இணைக்க முடியுமா என்பது பற்றிய கேள்விகளையும் நடைமுறைத் திட்டங்களையும் பலர் எழுப்பவில்லை. ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய இடங்களில் ஆங்காங்கே தேசிய விடுதலை என்ற கருத்துநிலை மேலெழ ஆரம்பித் திருந்தாலும் அவை பெருமளவுக்கு காலனித்துவத்துக்கு எதிரான எதிர்ப்பு என்ற அடியில் இருந்து தான் மேற்கிளம்பியிருந்தன.

காலனித்துவத்துக்குப் பிற்பாடான தேசிய இனச்சிக்கல்கள் என்ற தலைப்பில் அதிகமான அளவு கோட்பாட்டு உருவாக்கமும் எதிர்ப்புப் போராட்டங்களும் வடிவம் பெற்றிருக்கவில்லை. பலஸ்தீனம், தென்னாபிரிக்கா, நிக்கரகுவா, போன்ற போராட்டங்களில் இருந்து அரசியல் சார்ந்த ஊக்கத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும் பின்காலனிய சூழலில் மார்க்சியத்தையும் தேசியத்தையும் இணைக்க முடியுமா என்ற கேள்வி பல நாடுகளிலும் இருந்த புரட்சியாளர்களிடம் பரவலாக இருந்தது.

ஈழப் போராட்டச் சூழலில் கோட்பாட்டு ரீதியாக இதனைச் செய்தவர்களுள் முதன்மையானவர் அன்டன் பாலசிங்கம். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அவரது ஒரு கையேட்டில் புரட்சிகரத் தேசியவாதம், தேசிய விடுதலை போன்றவற்றை அவர் முன்வைத்ததோடு மட்டுமல்லாமல் இத்தகைய தேசிய விடுதலையில் மத்தியதரவர்க்கமும் ஏனைய இடையின வர்க்கங்களும் (petty bourgeoise) சிறப்பானதும் புரட்சிகரமானதுமான பங்கை வகிக்க முடியும் என்று அவர் எழுதினார். இன்னும் குறிப்பாக, நிறுவனமயப்பட்ட தொழிலாளர், விவசாய வர்க்கங்கள் இல்லாத ஒரு நிலையில் மத்தியதர வர்க்கத்துக்கு புரட்சிகரத் தலைமையை ஏற்றுக் கொள்கின்ற சாத்தியப்பாடு இருக்கிறதென்று அவர் எழுதினார். அப்போது அவர் விடுதலைப் புலிகளில் இணைந்திருக்கவில்லை. மார்க்சியத்தையும் தேசியவாதத்தையும் இணைக்கிற அவரது சிந்தனை பிற்பாடு "சோசலிஸ தமிழீழம் நோக்கி" என்ற நூலில் மேலும் விரிவாகப் பேசப்பட்டது.

மார்க்சியத்தையும் தேசியத்தையும் இணைக்கிற இந்தக் கருத்தியல் இடதுசாரி சிந்தனையும் நோக்கும் கொண்ட பலருக்கு நீண்ட கவர்ச்சியையும் கிளர்ச்சியையும் தருவதாக இருந்தது. இந்தக் காலகட்டப் பகுதியிலும் இதற்குச் சிறிது முன்பாகவும் இளையதம்பி ரத்தினசபாபதி, (ரத்தினா) மகாஉத்தமன் போன்று வேறு சிலரும் இத்தகைய கருத்தியலோடு இங்கிலாந்தில் செயல்பட்டார்கள்.

வெறுமனே தமிழரசுக் கட்சித் தேசியவாதமாகவும் "கிடுகுவேலி" அரசியலாகவும் பொறுப்பேற்றிருந்த தமிழரசியலுக்கும் கூட்டணி அரசியலுக்கும் மார்க்சிய - தேசிய இணைப்பு கருத்தியல் ரீதியான சவாலாக எழுந்தது. பின்னர் தீவிரமான இலங்கை அரசின் ஒடுக்கு முறைகளும் இனப்படுகொலைகளும் இந்தப் போக்கை மேலாட்சி பெற்ற ஒன்றாக மாற்றி விட்டது.

இந்தக் கோட்பாட்டு அரசியல் மாற்றத்தில் பாலசிங்கத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. மார்க்சிய- தேசிய இணைப்பின் பின்விளைவுகள் என்ன? மத்தியதர வர்க்கத் தேசியத்தின் அவலங்கள் என்ன? தேசியம் எப்போதுமே அல்லது எப்போதாவது முற்போக்கானதாக இருக்க முடியுமா? போன்ற கேள்விகளை அவர் தொடர்ந்து எழுப்பவில்லை. எண்பதுகளின் பிற்பாடு அவருடைய எழுத்துக்களாக நமக்குக் கிடைப்பதெல்லாம் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தை பற்றிய அவரது நூலும் ஆங்காங்கே உதிரியாக அவ்வப்போது வெளியான கட்டுரைகளும் நேர்காணல்களும் தான். ஒருசீரிய அரசியல், கோட்பாட்டுத் தளத்திலும் விமர்சனா பூர்வமாகவும் அவரிடம் இருந்து எந்த நேர்காணல்களும் பெறப்படவில்லை (கட்சி விசுவாசிகளிடமும் முதுகெலும்பற்ற தமிழ்ப் பத்திரிகையாளர்களிடமும் நீங்கள் இதனை எதிர்பார்க்க முடியுமா?). எனினும் "வெளிச்சம்" இதழுக்கு அவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளின் தொகுதியொன்று விடுதலை என்ற பெயரில் 2003ம் ஆண்டு வெளியாகிற்று. இது ஒரு முக்கியமான நூலாகும். அவருடைய அரசியல் சிந்தனையின் சில கூறுகளையும் அவரது பிற்கால அரசியல் கண்ணோட்டத்தையும் கோடிட்டுக் காட்டுகிற ஒரு நூலாக அதனைக் கருத முடியும்.

**பூக்கோ, சார்த்தர், மாவோ பற்றிய பாலசிங்கத்தின் கட்டுரைகள் இந்த ஆளுமைகள் பற்றி தமிழில் வெளியாகியிருக்கும் கட்டுரைகளுள் சிறப்பிடம் பெறுபவை. இந்தக் கட்டுரைகள் ஊடாகவும் "தனிமனித தத்துவம்", "அர்த்தமும் அபத்தமும்" போன்ற கட்டுரைகள் ஊடாகவும் அவரது பிற்காலத்து அரசியல் கோட்பாட்டை ஓரளவுக்குக் குறித்துணர முடிகிறது.**

அன்டன் பாலசிங்கத்திற்கு இருந்த நிறுவன பலமும் இயக்கப் பின்புலமும் தமிழ் மக்கள் வாழும் பல சர்வதேச நகரங்களிலும் இந்த நூல் மிகவும் சிறப்பாக வெளியிடப்படத் துணை செய்தன. எனினும் இந்த நூலின் முதலிரண்டு அத்தியாயங்களைப் பற்றி மட்டுமே பரவலாகப் பேசப்பட்டது. வெளியீட்டுக் கூட்டங்களில் துதிபாடிய பலர், அந்த அத்தியாயங்களையே சிலாகித்தனர். "இந்தியாவும் பிரபாவும்", "ராஜீவ் - பிரபா சந்திப்பு" எனும் தலைப்புகளில் இயக்க அனுபவங்கள் சிலவற்றின் நினைவு கூரலாகவும் - நினைவுகூறலாகவும் அமைந்தவை அந்த அத்தியாயங்கள். அவை சுவாரஸ்யம் மிக்கவை. விடுதலைப் புலிகளுக்கு இந்தியா செய்த உதவிகளை விவரிப்பவை. நூலின் ஏனைய ஒன்பது அத்தியாயங்களும் அரசியல், மெய்யியல், தத்துவவிசாரம், மனிதத்துவம், கருத்தியல் அமைவு, மானுடவியல், உளவியல், சமூகவியல் போன்ற துறைகள் தொடர்பாக ஆழமாகப் பேசுபவை.

நமது அரசியல் சூழலின் கோட்பாட்டு வறுமையைக் காட்டுவதுபோல, இந்த நூலும் கவனிப்புக்கும் கணிப்புக்கும் திறனாய்வுக்கும் உள்ளடக்கப்படவில்லை. இயக்கவிசுவாசத்துக்காகவும் பாலா அண்ணைக்காகவும் வெளியீட்டுக் கூட்டங்களில் நூற்றுக்கணக்காகப் புத்தகங்களை வாங்கிச் சென்றவர்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக கழுதை அறியுமா கற்பூர வாசனை என்பது போலவே இந்த நூலின் வரவும் செலவும் அமைந்து போயிற்று.

சிக்மண்ட் பிராய்ட், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, ஹெகல், மார்க்ஸ், மாவோ, லூயி, அல்தூஸர் முதல் சார்த்தர், மிஷேல் பூக்கோ வரையான பலவகைப்பட்ட மெய்யியல், அரசியல் ஆளுமைகளைப் பற்றிய சுருக்கமான தெளிவான அழகிய தமிழ் நடையில் அமைந்த நுட்பமான கட்டுரைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. கூடவே வரலாற்றின் முடிவைப் பற்றி அபத்தமாக எழுதப்பட்ட பிரான்ஸிஸ் புக்குயாமாவின் நூல் பற்றிய விமர்சனமும், நாகரிகங்களின் மோதல் (Clash of Civilization) என்ற தலைப்பிலான சாமுவேல் ஹன்டிங்டனின் நூல் பற்றிய விமர்சனமும் குறிப்பிடத்தகுந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் புஷ் தலைமையிலான இன்றைய அமெரிக்காவின் கருத்தியல் அடிப்படைகளை வரையறை செய்ததையில் ஹன்டிங்டனின் கோட்பாடுகளுக்கு கணிசமான பங்கு இருக்கிறது.

பூக்கோ, சார்த்தர், மாவோ பற்றிய பாலசிங்கத்தின் கட்டுரைகள் இந்த ஆளுமைகள் பற்றி தமிழில் வெளியாகியிருக்கும் கட்டுரைகளுள் சிறப்பிடம் பெறுபவை. இந்தக் கட்டுரைகள் ஊடாகவும் "தனிமனித தத்துவம்", "அர்த்தமும் அபத்தமும்" போன்ற கட்டுரைகள் ஊடாகவும் அவரது பிற்காலத்து அரசியல் கோட்பாட்டை ஓரளவுக்குக் குறித்துணர முடிகிறது.

இந்த நூலில் உள்ள கட்டுரைகளை அவரது இறுதிக் கட்டுரைகள் என்று கொள்வோமானால் அதன் அடிப்படையில் சில கருத்துகளை முன்வைக்கலாம்.

முதலாவது, கட்டுப்பெட்டித்தனமான வைதீக மார்க்சியவாதியாக அவர் இருக்கவில்லை. மார்க்ஸின் சமூகவரலாற்றுக் கோட்பாடு, "பொருண்மிய நியதியை" (Economic Determinism) என்பதற்கான பாலசிங்கத்தின் மொழிபெயர்ப்பு வலியுறுத்துகிறது என்ற குற்றச்சாட்டை அவர் ஏற்றுக் கொண்டுள்ள அதேநேரம் அல்தூஸரின் மார்க்ஸ் பற்றிய திரிப்பை (இளம் மார்க்ஸ் முதிய மார்க்ஸ்) நிராகரிக்கிறார்.

இரண்டாவதாக சோவியத் யூனியனில் சோசலிசத்தின் தோல்விக்கு தனிமனித உரிமைகள், விருப்பு வெறுப்புகளை அது கணக்கில் எடுக்காதது முக்கியமான காரணமென வலியுறுத்துகிறார். "சுதந்திரமான மனிதர்களாக வாழ்வதையே எல்லோரும் விரும்புவர்" என்று பாலசிங்கம் எழுதுகிறார்.

மூன்றாவதாக சீனாவின் கலாசார புரட்சிபற்றி யுங் சாங்கின் நூலான Wild Swans - Three Daughters of China எனும் நூலை முன்வைத்து எழுதுகிற போது கலாசார புரட்சிக்காலத்தில் நடந்த ஏராளமான அனர்த்தங்களும் அவற்றின் அனுபவங்களும் எமக்குப் பயன் தரக்கூடியவை என்று கூறுகிறார்.

நான்காவதாக மிஷேல் பூக்கோவைப் பற்றி எழுதுகையில் (மரண தண்டனை) சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றி சரியான பார்வையைத் தருகிறார்:

தண்டனை என்பது அதிகார வெளிப்பாட்டின் ஒரு வடிவம். மனிதர்கள் மீது ஆதிக்கம் பிரயோகிக்கும் உத்தி. சமூகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு நடைமுறை தண்டனை என்ற போர்வையில்

**"தேசியம் என்பது பல்வேறு சக்திகளை இப்போது உள்வாங்கி இருக்கிறது. மார்க்சியமும் உள்ளது. பாஸிஸமும் உள்ளது. விடுதலையும் உள்ளது. தறுதலையும் உள்ளது. எங்களது பணி நல்ல சக்திகளை முன்னுக்குக் கொண்டு வருவது தான். அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன்" - அன்ரன்**

அதிகார உலகமானது மிகவும் நுட்பமான முறையில் மனிதர்களை நெறிப்படுத்தி, கட்டுப்படுத்தி, சமூகப் பொம்மைகளாக மாற்றி வருகிறது.

ஐந்தாவதாக கூட்டு அரசியல், கூட்டு உரிமைகள், குழும உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்ற சூழலிலும் கூட தனிமனித சுதந்திர உரிமைகளை அவர் வலியுறுத்துகிறார்

கூட்டு வாழ்வு இசைவாக அமைந்து எனது மனிதத்துவத்தையும் சுதந்திரத்தையும் மேம்பாடு செய்யுமானால் எனது இருப்பு ஆக்கபூர்வமானதாக, அர்த்தபூர்வமானதாக (authentic existence) அமைகிறது. ஆனால் அதேவேளை சமூகக் கூட்டு வாழ்வு எனது தனித்துவத்தை நசுக்கிவிடும் எதிர்மறைத் தன்மைகளைக் கொண்டதாக, தனிமனிதனுக்கு விரோதமானதாக தனிமனித சுதந்திரங்களை ஏப்பம் விடும் அதிகார பூதமாக சமூகக் கட்டமைப்பு உருவாக்கம் பெறும் பொழுது எனது இருப்பு அர்த்தவீனமாக மாறி விடுகிறது என்று அவர் எழுதிச் செல்கிறார்.

கூட்டு மனோபாவத்தையும் குழும நிலைப்பாட்டையும் வலியுறுத்திச் செல்கின்ற தேசியவாத அரசியலுக்கு இந்தப் பார்வை முற்றுமுழுதாக ஒத்துவரக்கூடிய ஒன்றன்று. ஆனால் அன்டன் பாலசிங்கத்தின் முரண்பாடு என்னவென்றால், இத்தகைய தெளிவான விமர்சன நோக்கோடும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்கின்ற ஒரு பெரும் அரசியல் இயக்கம் நிறுவனத்துக்கு ஒத்தோடியாக இருந்திருக்கிறார் என்பதுதான். இது முரண்பாடே அல்ல இயங்கியல்தான் எனச் சிலர் வாதிடக்கூடும். எனினும் கசப்பான சில வரலாற்று உண்மைகள் இருக்கத்தான் செய்யும்.

பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் ஐ.எஸ்.டி.ஏ. என்னும் திட்டம் முன்வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை வரைந்ததில் அன்டன் பாலசிங்கத்தின் பங்கு என்ன என்பது எனக்குத் தெரியாது. உள்ளகத் தன்னாட்சி என்ற கருத்தாக்கம் அவருடைய பங்களிப்பு என்றால் அந்தக் கருத்துநிலை முக்கியமானது. சமகால அரசியல் கோட்பாட்டில் (political theory) இப்போது விவாதத்துக்குரியதாகவும் பேசு பொருளாகவும் அது இருக்கிறது. ஸ்பெயின், பெல்ஜியம், கனடாவின் கெபெக் மாநிலம், கனடாவின் ஆதிகுடிகளின் பிரச்சினை போன்றவை தொடர்பாக பன்முகக்குடியுரிமை, உள்ளக அரசுகள், உள்ளகத் தன்னாட்சி போன்றவை விவாதிக்கப்பட்டு வருகின்றன. தேசம், தேசியம், அரசு போன்ற கருத்தாக்கங்கள் பெரும்பான்மைத் தேசிய இனங்களின் நலன்களாகவே கட்டியமைக்கப்பட்டு வந்துள்ள ஒரு மரபில், சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகள், தன்னாட்சி பற்றிய புதிய கருத்தாக்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் சாத்தியங்கள் முற்று முழுதாகத் தெரியாவிட்டாலும் இத்தகைய ஆலோசனை ஒன்றை இலங்கை தேசிய இனப்பிரச்சினைச் சூழலில் முன்வைத்தமை அரசியல் கோட்பாட்டு அடிப்படையில் புதுமையானது.

புத்திசீவிகள் என்றாலே பெருத்த அவநம்பிக்கையுடைய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு (புத்திசீவிகளுடனான அவரது அரசியல் வாழ்க்கை அனுபவங்கள் இதற்குரிய காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்) இறுதிவரை இணக்கமாகவும் உறுதியாகவும் இணைந்திருந்தவர் பாலசிங்கம். அவருக்கு இருந்திருக்கக்கூடிய எல்லைப்பாடுகளைப் பற்றி அவர் ஒருபோதும் பேசியவர் அல்லர். சிக்கல்களையும் கேள்விகளையும் பிணக்குகளையும் இணைப்புக்குள்ளேயே வைத்துக்கொள்ள முடியுமென அவர் திடமாக நம்பியிருக்கலாம். எனினும் முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் திட்டமிடப்பட்ட முறையில் இடம்பெற்ற அப்பாவி மக்களின் படுகொலைகள் போன்ற பல அநியாயங்களை அவரது அரசியல் உணர்வு எப்படி மௌனமாக ஏற்றுக் கொண்டது என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகவே இருக்கும்.

1986ல் சென்னையில் அவரைச் சந்தித்து உரையாடி, விவாதம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது மேசையில் அப்போது Monthly Review சஞ்சிகை விரிந்து கிடந்தது. "தேசியம் என்பது பல்வேறு சக்திகளை இப்போது உள்வாங்கி இருக்கிறது. மார்க்சியமும் உள்ளது. பாஸிஸமும் உள்ளது. விடுதலையும் உள்ளது. தறுதலையும் உள்ளது. எங்களது பணி நல்ல சக்திகளை முன்னுக்குக் கொண்டு வருவது தான். அதைத்தான் நான் செய்ய விரும்புகிறேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு "பிரம்மஞானி"யாக இருந்து அந்தக் கருத்தை அவர் சொல்லியிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி.ச. வரதராசன்

**01.07.1924 – 21.12.2006**

# மறுமலர்ச்சி தந்த வரதர் காலத்தின் குரலாகத் திகழ்ந்தவர்

தெளிவத்தை ஜோசப்



முப்பதுகளில் அரசியல் சமூக வாழ்வின் போலித்தனங்களுக் கெதிரான ஒரு எதிர்ப்புக் குரல் அன்டை நாடான இந்தியாவிலும் தமிழகத்திலும் எழுந்தது. காந்தீயம், தேசீயம் என்கின்ற உணர்வலைகளால் எழுந்த உத்வேகம் இது.

சுதந்திரம் என்பது வெள்ளைக்காரர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவது மட்டுமல்ல, அறியாமையிலிருந்தும், சுரண்டல்களிலிருந்தும் சமூகம் பெறப் போகின்ற விடுதலையையும் அந்த உத்வேகம் குறித்து நின்றது.

கே.சீனிவாசன், டி.எஸ். சொக்கலிங்கம், என்.சிவராமன், வரா ஆகியோரை இவ்வெழுச்சியே ஒன்றிணைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய எழுச்சியின் ஒரு முக்கிய அம்சமாக கலை இலக்கிய கலாசார எழுச்சியையும் இவர்கள் கருத்தில் கொண்டிருந்ததால் இலக்கியத்தின் மேலும் இவர்களது கவனம் திரும்பியது. மணிக்கொடியின் உதயம் சம்பவித்தது. (செப்.1933)

பி.எஸ்.ராமையா, பி.கே.சுந்தரராஜன் (சிட்டி), கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் போன்ற வேறும் பலர் இவர்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் தான், டொனமூர் பிரபுவின் ஆணைக்குழு இலங்கையின் அரசியல் நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை வந்தது.

டொனமூர் அரசியற் திட்டத்தை தமிழ்த்தலைவர்கள் எதிர்த்தார்கள். இது சிங்கள மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றார் ஜி.ஜி.பொன்னம்பலம். இத்திட்டத்தின்படி சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறையும். சிங்கள மக்களுக்கான பிரதிநிதித்துவம் அதிகரிக்கும். அது சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு - ஆதிக்கத்துக்கு வழிசமைக்கும் என்று கூறினார், பொன்னம்பலம் இராமநாதன்.

காந்தீயவாதியான குரும்பசிட்டி நா.பொன்னையா இந்திய அரசியல்வாதிகளுடனும், இலக்கியவாதிகளுடனும் பழக்கமும், நட்பும், நெருக்கமும் கொண்டவராக இருந்தவர்.

டொனமூர் அரசியற் திட்டத்தின் தமிழ் மக்களுக்குப் பாதகமான நிலைமைகளை விமர்சிப்பதற்கும் அக்கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கும் ஒரு பத்திரிகையின் அவசியத்தை உணர்ந்த அவர் ஈழகேசரியை வெளியிடத் தொடங்கினார். (ஜூன் 1930)

முப்பதுகளின் பின் ஈழத்தில் சிறுகதைகள் உருவப் பிரக்ஞையுடன் எழுதப்படலாயின என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதொன்று.

ஈழத்துச் சிறுகதை மூலவர்களான வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன் ஆகியோர் தங்களது சிறுகதைப் படைப்புக்கள் மூலம் இந்த ஏற்றுக் கொள்ளலை உறுதிப்படுத்தியுமுள்ளனர்.

கலைமகளும், ஆனந்தவிகடனும் ஈழத்து வாசகர்களின் - குறிப்பாக யாழ்ப்பாணத்து வாசகர்களின் வேதமாக இருந்த காலம் அது.

இம்மூலவர்கள் மூவருமே கூடுதலாகக் கலைமகளில் தமது படைப்புக்களைச் செய்தவர்கள்.

வைத்தியலிங்கமும், இலங்கையர்கோனும் உறவினர்கள். ஆங்கிலப் புலமைமிக்கவர்கள். இலங்கையர்கோன் ஆங்கில இலக்கியத்தில் மோகம் கொண்டிருந்தவர். முதற் கதை கலைமகளில் வந்த பிறகுதான் முறையாகத் தமிழ் படிக்கத் தொடங்கியவர். சமஸ்கிருதம், லத்தீன் மொழிகளையும் கற்றவர்.

தமிழ் எனது தாய், சமஸ்கிருதம் எனது தந்தை என்று கூறியவர் வைத்தியலிங்கம்.

சம்பந்தன் தமிழாசிரியர். முறையாகத் தமிழ் கற்றவர். வடமொழி இலக்கியங்களை ஆழ்ந்து படித்தவர். இலக்கியத்தில் யதார்த்தம் என்பதெல்லாம் பைத்தியக்காரத்தனம் என்று கூறியவர். இவர்கள் கூடுதலாகத் தமிழக ஏடுகளிலேயே படைப்புகளைச் செய்தனர்.

"எமது முன்னோடிகள் சிறுகதையின் உருவத்திலும் உரைநடையிலுமே அதிக கவனம் செலுத்தினர். தென்னிந்திய சஞ்சிகைகளில் இவர்கள் ஈடுபாட்டுடன் எழுதியமையினால் ஈழம் என்ற இடவரையறைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கதைகளை எழுதினர். இவர்களைப் பொறுத்தவரைக்கும் இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் நேரடித் தொடர்பு இருக்கவில்லை" என்று குறிக்கின்றார் பேராசிரியர் கைலாசபதி.

காலத்தின் வேகத்தைப் பதித்துவரச் சக்தி கொண்டதாக பெருமைப்படுத்தப்பட்ட மணிக்கொடியின் இறுதி ஆண்டுகளில் (1938 - 1939) மணிக்கொடியில் ஏழு கதைகள் எழுதிய இலங்கையர்க்கோன் கூட கைலாசபதியின் மேற்படி கூற்றை ஆதரித்தே நிற்பவராகின்றார்.

ஆனாலும் அதே முப்பதுகளில் பத்திரிகை சஞ்சிகைகளுக்கு எழுதாமல் தான் வெளியிட்ட அகவெழுச்சி நூலில் "இராமசாமி சேர்வையின் சரிதம்" என்னும் சிறுகதையை எழுதியுள்ள கோ.நடேசய்யர், பேராசிரியர் கைலாசபதியின் கூற்றுடன் ஒத்துப் போகாதவராகவே நிற்கின்றார்.

முப்பதுகளில் ஈழகேசரி, வீரகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகள் தோற்றம் கொள்கின்றன.

**ஈழத்துக்கென ஒரு தனியான இலக்கிய மரபு இருக்கிறதென்பதனையும் அது இந்தியத் தமிழ் இலக்கியத்தின் ஒரு நீட்சியல்ல என்பதனையும் உரத்து ஒலிக்கச் செய்த பணிகள் இந்த மறுமலர்ச்சிச் சங்கத்துடனும், சங்கத்தினூடாகவுமே ஆரம்பம் கொள்கிறது. இது ஒரு காலகட்டத்தின் அத்தியாவசியமான குரல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் தமிழ் இதழியல் வரலாறு உதயதாரகையுடனேயே (1841) ஆரம்பமாகிறது என்றாலும், இலக்கியத்துக்கான இதழியல் என்னும் புதிய பண்பாட்டுக்கான வரலாற்றைத் தொடக்கி வைத்த பெருமை மறுமலர்ச்சிக்குரியது. (1946)**



ஈழகேசரி வெளியிட்ட கல்வி அனுபந்தம் மாணவர் மத்தியில் இருந்து எழுதும் ஆர்வம் உள்ளவர்களைக் கண்டு பிடிக்கத் தொடங்கியது. இந்தக் கல்வி அனுபந்தங்களின் மூலம் எழுத்தாளர்களாகப் பரிணமித்தவர் பலர். கனகசெந்திநாதன், அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தன், வரதர் என்று அந்தப் பட்டியல் நீளும்.

1939இல் ஈழகேசரியின் கல்வி அனுபந்தத்தில் ஒரு கட்டுரை எழுதியதன் மூலம் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்த தி.ச.வரதராசன் என்கின்ற வரதர் 1940இல் ஈழகேசரியின் ஆண்டு மலரில் கல்யாணியின் காதல் என்னும் சிறுகதையை எழுதியிருக்கின்றார். 01.07.1924இல் பிறந்த வரதர் அப்போது ஒரு பதினாறு வயது மாணவன் மட்டுமே.

கலைமகளும், ஆனந்த விகடனும், பிந்தி வந்த கல்கியுமே இவருடைய ஆதர்ஷமாக இருந்துள்ளன. பிந்திய முப்பதுகளில் வீரகேசரி, தினசரி ஒரு கதை வெளியிடும் திட்டத்தை ஆரம்பித்திருந்தது.

இளமைத் துடிப்புடன் எழுத ஆரம்பித்த வரதர், வீரகேசரி, ஈழகேசரி, என்று நிறையவே கதைகள் எழுதியுள்ளார்.

இவருடைய ஆரம்ப காலக் கதைகள் பற்றி இரசிகமணி கனகசெந்திநாதன் "வாலிப உறுத்தல்களுடன் காதலின் பலவகைக் கோலத்தையும், காமத்தையும் வைத்து சிறுகதைகள் படைத்துத் தமது எழுத்தினால் வாசகர்களை மயங்க வைத்தவர் வரதர்" என்றெழுதுகின்றார். (ஈழத்து இலக்கிய வளர்ச்சி)

ஈழத்துச் சிறுகதை மூலவர்கள் கலைமகள், ஆனந்த விகடன், கிராமஊழியன், மணிக்கொடி போன்ற சஞ்சிகைகள் மூலம் பிரபல்யம் பெற்று வருவதை ஒரு ஆதங்கத்துடன் கவனித்துக் கொண்டிருந்த வரதர், பஞ்சாட்சரசர்மா, அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தன் நாவற்குழியூர் நடராசன் போன்ற இளைஞர்கள் மாலை வேளைகளில் ஒன்று கூடி இலக்கியம் பற்றிப் பேசினர். பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் கதைகளை வாசித்துக் காட்டி அவை பற்றிக் கருத்துக்கள் கூறினர். கலந்துரையாடினர். விவாதம் செய்தனர்.

இந்தச் சந்திப்புக்களே இங்கும் ஒரு மணிக்கொடி யுகத்தைக் கற்பனையிற் காணவும், கனவாகக் கொள்ளவும் ஒரு ஒளிக்கீற்றை உண்டாக்கியது.

"ஒரு இலக்கிய சங்கத்தை நிறுவ வேண்டுமென்று சிந்தித்து, ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் மூலம் அறிமுகமான இலக்கிய நண்பர்களுக்கும் அவர்கள் மூலமாக வேறும் சில நண்பர்களுக்கும் கடிதம் எழுதி வரவழைத்துக் கொண்டேன். ஒரு 15 - 20 பேர்வரை கூடியிருந்தோம். அப்போது எனக்கு வயது 18" என்று குறிக்கின்றார் வரதர். (மறுமலர்ச்சிக் கதைகள் - அணிந்துரை)

ஒரு இருபது இளைஞர்கள் போல் கூடியிருந்த அந்தச் சபையில் சங்கத்துக்குப் பெயர் வைப்பதிலேயே சண்டை மூண்டு விட்டது.

ஒருவரும் எதிர்புக் கூற மாட்டார்கள் என்ற நம்பிக்கையில், புதுமை விரும்பிகளான அவ்விளைஞர்கள் அனைவரினதும் குரலாக வரதரே ஒலித்துள்ளார்.

"நமது சங்கம் புதுமைப்பித்தர்கள் சங்கம் என்று அழைக்கப்படும்." வரதரின் முன்மொழிவு இது.

கூட்டம் குசுகுசுத்தது. ஒருசிலரிடம் இருந்து எதிர்ப்பு வந்தது. ஏரம்பமூர்த்தி மாஸ்டர், ஒட்டுமடம் பொன்னுத்துரை போன்றோர் ஒத்துக் கொள்ளவில்லை. பித்தர்கள் என்றால் பைத்தியக்காரர்கள் என்பார்கள் கேலி செய்வார்கள் இந்தப் பெயர் வேண்டாம் என்றார்கள்.

ஒரு மாதிரியாகத் "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டது. இலங்கையின் முதல் எழுத்தாளர் சங்கம் என்கின்ற வரலாற்றுப் பெருமையும் இந்த மறுமலர்ச்சிச் சங்கத்திற்குக் கிடைத்து விட்டது.

இப்படித் தோற்றுவிக்கப்பட்ட இந்தச் சிறுபொறி பிறகு ஒரு காலத்தின் குரலாக ஒலிக்குமளவிற்கு சக்தி பெற்றுத் திகழும் என்பது அதைத் தோற்றுவித்தவர்களுக்கே தெரிந்திருக்கவில்லை.

ஈழத்துக்கென ஒரு தனியான இலக்கிய மரபு இருக்கிறதென்பதனையும் அது இந்தியத் தமிழ் இலக்கியத்தின் ஒரு நீட்சியல்ல என்பதனையும் உரத்து ஒலிக்கச் செய்த பணிகள் இந்த மறுமலர்ச்சிச் சங்கத்துடனும், சங்கத்தினூடாகவுமே ஆரம்பம் கொள்கிறது. இது ஒரு காலகட்டத்தின் அத்தியாவசியமான குரல்.

புதுமை விரும்பிகளான இளைஞர்கள் என்பதனை விடவும் தமிழ்நாட்டு இலக்கிய ஈடுபாடும் புதுமைப்பித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1939இல் ஈழகேசரியின் கல்வி அனுபந்தத்தில் ஒரு கட்டுரை எழுதியதன் மூலம் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்த தி.ச.வரதராசன் என்கின்ற வரதர் 1940இல் ஈழகேசரியின் ஆண்டு மலரில் கல்யாணியின் காதல் என்னும் சிறுகதையை எழுதியிருக்கின்றார். 01.07.1924இல் பிறந்த வரதர் அப்போது ஒரு பதினாறு வயது மாணவன் மட்டுமே.**

போன்றோரின் படைப்புகள் மீதான ஈர்ப்பும், ஆர்வமுமே புதுமைப்பித்தர்கள் சங்கம் என்று பெயர் சூடிக் கொள்ளும் அளவிற்கு இவர்களைத் தூண்டியிருக்கிறது.

வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் நேரடித் தொடர்பு இருக்கவில்லையென்று சிறுகதை முன்னோடிகள் மேல் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஒரு மறுப்பாகவும், திருப்புமுனையாகவும் இது அமைந்தது!

பெயர் வைப்பதில் சண்டை பிடித்த ஏரம்பமூர்த்தி தான் பின்னாளில் மறுமலர்ச்சி இதழின் உரிமைப் பிரச்சினை காரணமாக நீதிமன்றம் சென்று வழக்கு வைத்து இதழ் வெளியீட்டை நிறுத்தியவர். வழக்கு அவருக்குப் பாதகமாய்த் தீர்ப்பானதால் காலதாமதமாகியெனினும் மறுமலர்ச்சி வெளிவந்தது.

மறுமலர்ச்சிச் சங்கத்தின் தோற்றத்துக்கும் இயக்கத்துக்குமான உந்து சக்தியாக வரதருடன் பலர் இருந்திருக்கின்றனர். அதன் முக்கியஸ்தர்களுள் ஒருவரான ச.பஞ்சாட்சரசர்மா மறுமலர்ச்சிச் சங்கத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் இரண்டு என்கிறார்.

தமிழில் வெளியாகும் எல்லா நூல்களையும் சேர்த்து நூல் நிலையம் அமைத்து வாசிப்பைப் பரவலாக்குதல், மாதாந்தம் இலக்கியக் கூட்டம் நடத்துதல், தமிழ்ப் பெரியார்களுக்கு விழாவெடுத்தல் என்பது ஒன்று.

பண்டித வர்க்கத்தின் மரபுத் தளையிலிருந்து தமிழை மீட்டு ஆக்க இலக்கியத்துறையில் அதனைச் செலுத்திப் பலப்படுத்துதல் என்பது இரண்டாவது என்கிறார் பஞ்சாட்சரசர்மா.

பழையது என்பதனால் மட்டுமே ஒன்று சிறப்பிற்குரியது ஆகிவிடாது என்று மரபு மீறலுக்குச் சக்தி சேர்த்த மணிக்கொடியின் குரல்தான் இங்கும் கேட்கிறது.

வாசிப்பைப் பரவலாக்கி ஆக்க இலக்கியத்துறையைப் பலப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்த மறுமலர்ச்சிச் சங்கம் மறுமலர்ச்சியென்னும் கையெழுத்துச் சஞ்சிகையையும் வெளியிடத் தொடங்கியது. சஞ்சிகையின் ஆசிரியராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட வரதர் நண்பர்களிடம் இருந்து விஷயங்களைப் பெற்று சஞ்சிகைக்காக அவற்றை மீண்டும் எழுதி ஓவியங்கள் வரைந்து சஞ்சிகையாக்கி நண்பர்கள் கூடி மாறி மாறி வாசித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டோம் என்கின்றார்.

ஆனாலும் அவரது கனவு மறுமலர்ச்சியை அச்சு வாகனமேற்றிவிட வேண்டுமென்பதே. இந்தக் கனவு 1946 பங்குனியில் நிறைவேறுகிறது. முதல் இதழ் மறுமலர்ச்சி வெளிவந்தது.

தி.ச.வரதராசன் (வரதர்), அ.செ.முருகானந்தன் ஆசிரியர்கள். கே.எஸ்.நடராசன் வெளியீட்டாளர். பார்வதி பிரஸ். 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்பது முகவரி. பக்கம் 32. விலை 30 சதம்.

முகத்துவாரம் என்னும் தலைப்பிட்ட ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு குறிக்கிறது.

"தமிழ்ப் பூங்காவில் உள்ள மறுமலர்ச்சி இலக்கியச் செடியில் இன்று ஒரு புதிய மலர் பூத்திருக்கிறது....

எழுத்தாளர்களும் இரசிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி. இதனுடைய இதயத் துடிப்பு தமிழ் இலக்கியம் தான்.

அரசியல் சமூக விசயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை மறுமலர்ச்சி சிருஷ்டிக்கப் போவதில்லை. ஆனால் இலக்கியத்தின் வளர்ச்சியிலே சமூகத்தின் வளர்ச்சி பின்னி வரும் என்பதனை மறுமலர்ச்சி நிரூபிக்கும்."

பின் அட்டை உள் பக்கத்தில் இப்படி ஒரு அரைப்பக்க விளம்பரம் இருக்கிறது.

"இலங்கையின் முதலாவதும், முதன்மையானதுமான விநாயகமூர்த்தி ஆச்சாரி விக்கிரகத் தொழிற்சாலை. 145, செம்மாத் தெரு, யாழ்ப்பாணம். உரிமையாளர் சிற்பாசாரி ரேவதி வி.என்.குப்புஸ்வாமி.

இந்தச் செம்மா தெரு ரேவதி குப்புஸ்வாமி என்னும் சிற்பக் கலைஞரின் வீட்டு விறாந்தைதான் மறுமலர்ச்சிச் சங்கக்காரர்கள் கூடுவதற்கும், பேசுவதற்கும் இடமளித்தது என்பது கவனத்திற்குரியது.

அச்சு வாகனமேறிய முதல் ஆண்டிலேயே மறுமலர்ச்சி ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது (1946). அதிற் பங்கேற்று முதற் பரிசினைப் பெற்றதன் மூலம் ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளராக அங்கீகரிக்கப்பட்டவர் தான் சு.இராஜநாயகன். இரண்டாவது பரிசினைப் பெற்றவர் கு.பெரியதம்பி.

1960இல் வரதர் வெளியீடாக வரதரின் கயமை மயக்கம் சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டது.

மறுமலர்ச்சி காலகட்டத்தில் கூடுதலாக எழுதியவர்களில் முக்கியமானவர் வரதர். இருந்தும் தனது சிறுகதைத் தொகுதிக்காக மிகவும் சிரமப்பட்டே 12 சிறுகதைகளைத் தெரிவு செய்துள்ளார் இவர். வரதரின் ஆரம்ப கால வீரகேசரி - ஈழகேசரிக் கதைகள் எதுவும் இந்தத் தொகுதிக்குள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவை வரதருக்கே பிடிக்கவில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது. கனகசெந்திநாதனின் கூற்றும் நினைவுக்கு வருகின்றது.

டொக்டர் மு.வரதராசனாரின் சிறப்புரையுடன் வந்திருக்கும் இத் தொகுதியில் வரதரின் "என் எண்ணம்" சிறப்பானது.

"என்னுடைய சிறுகதைகளில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து ஒரு அழகிய நூலாகப் பதிக்க வேண்டும் என்கின்ற ஆசையைச் சில நண்பர்கள் தூண்டிவிட்டனர். நூலுருவம் பெற்று நிலைக்கக் கூடிய ஒரு தகுதி இவைகளுக்கு இருக்கிறதா என்று முதலில் சிந்தித்தேன். இக்கதைகளினூடே மறுபடியும் புகுந்து அலசி ஆராய்ந்தேன்... என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கும் வரதர் ஒரு படைப்பு எந்த உருவத்தில் வந்தாலும் அதை இலக்கியம் என்று சொல்வதற்கு இரண்டு தகுதிகள் இருக்க வேண்டும்.

முதலாவது அதில் ஒரு இலக்கு இருக்க வேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ புறத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும்.

இரண்டாவது சொல்லும் விதம், நடை, கட்டுக் கோப்பு ஆகியவைகளில் சுவை இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று இல்லாமற் போனாலும் அதை இலக்கியம் என்று சொல்ல முடியாது....

இலங்கையில் புத்தக வெளியீட்டுத்துறை இருள் மூடிக் கிடக்கிறது. ஒளியைக் காண முடியவில்லை. ஒரு பதிப்பகத்தின் உரிமையாளன் என்ற முறையில் இதற்கு விடிவு காண முடியுமாவென்று நான் நிறையச் சிந்திக்கின்றேன்..." இப்படிப் பல முக்கிய விடயங்கள் பற்றிப் பேசுகின்றார் வரதர் என்னுரை மூலம்.

1960ஆம் ஆண்டிற்கான முதல் சாகித்திய விருதுக்காக இந்த நூலும் அனுப்பப்பட்டது.

இலங்கையில் தமிழ் இதழியல் வரலாறு உதயதாரகையுடனேயே (1841) ஆரம்பமாகிறது என்றாலும், இலக்கியத்துக்கான இதழியல் என்னும் புதிய பண்பாட்டுக்கான வரலாற்றைத் தொடக்கி வைத்த பெருமை மறுமலர்ச்சிக்குரியது. (1946)

1946 பங்குனியிலிருந்து 1948 ஐப்பசி வரையிலான 31 மாதங்களில் மறுமலர்ச்சி 24 இதழ்களை வெளியிட்டுள்ளது.

முதற் 17 இதழ்களுக்கு வரதருடன் இணை ஆசிரியராக அ.செ.முருகானந்தனும், 18 ஆவது இதழிலிருந்து அ.செ.முவுக்குப் பதிலாக ச.பஞ்சாட்சரசர்மாவும் பணியாற்றியுள்ளனர்.

மறுமலர்ச்சி இதழுக்குப் பிறகு ஆனந்தன் (1952), தேன்மொழி (1955), மகாகவியுடன் இணைந்து வெளியிட்ட ஈழத்தின் முதற் கவிதை இதழ் - வெள்ளி (1957), புதினம் (1961) ஆகிய இதழ்களையும் வரதர் வெளியிட்டார்.

வெள்ளி தமிழ்வாணனின் கல்கண்டு போலவும், புதினம் சஞ்சிகையாக இல்லாமல் செய்திபோல், சுதந்திரன்போல் பத்திரிகையாகவும் வெளிவந்தன.

ஒரு இதழை வெளியிட நிறையப் பொருள் முதலீடு வேண்டும். பணமுடை ஏற்பட்டதும் இதழ் நின்று போகும். பிறகு கொஞ்சம் பணம் சேர்ந்ததும் புதிதாக ஒரு இதழை வெளியிடுவேன் என்று கூறுகிறார் வரதர்.

தன்னுடைய ஆனந்தா அச்சகப் பணிகள் மூலம் இருளடைந்து கிடந்த பதிப்புத்துறையை ஒளிபெறச் செய்ய அயராது பாடுபட்டவர் இவர். ஈழத்து எழுத்தாளர் பலரின் நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

1965 - 1966 ஆம் ஆண்டுகளுக்கான வரதரின் பல குறிப்பு பிரசித்தி பெற்ற பெர்குஷன் டைரக்டரிக்கு ஒப்பானது. ஒரு பாரிய முயற்சி! தன்னுடைய பல்துறைப் பணிகள் மூலம் ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்திய ஒரு இன்றியமையாத மனிதராகத் திகழ்ந்தவர் வரதர்.

21.12.2006இல் தனது 82 ஆவது வயதில் அமரராகியுள்ளார்.

ஒரு சகாப்தத்தின் குரலாக ஒலித்த வரதரின் நாமம் ஈழத்து இலக்கிய வரலாற்றில், இதழியல் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

# "வெருட்டி"களில் இருந்து... "விரும்பி"கள்...

**சி.ஜெயசங்கர்**

தோட்டங்களைப் பறவை பட்சிகளிடமிருந்து காப்பாற்றவும், வீடுகள், கட்டிடங்களை கண்ணூறுகளில் இருந்து காப்பாற்றவும் எனச் சொல்லி வெருளி அல்லது வெருட்டி வைக்கப்படுவது ஒன்றும் புதியதுமல்ல ஆச்சரியமானதுமல்ல.

வெருளிகள் அல்லது வெருட்டிகளது உருவாக்கங்களது நோக்கங்கள் வேறாக இருப்பினும், அவை சிறுவர்களை மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் நகைப்பு மூட்டுவதாகவும்: சில சமயங்களில் அச்சமூட்டுவதாக இருப்பதும் புதினமுமல்ல.

கோணங்கிகள் என்றும் இந்த வெருட்டிகள் அழைக்கப்படும்.

வெருளி அல்லது வெருட்டி அல்லது கோணங்கி உருவாக்கம் பற்றி, உருவாக்கத்தின் போதான உணர்வுகள் கருத்தோட்டங்கள் பற்றி அறிவுத்தளங்களில் உரையாடப்பட்டதாக இல்லை. ஆனாலும் தங்களுக்குள் இதுபற்றி எல்லோரும் நிச்சயமாக யோசித்திருப்பார்கள்.

ஆனால் இவை இவைதான் பேசப்பட வேண்டிய அறியப்பட வேண்டிய விடயங்கள் ஏனையவை அவ்வாறானவை இல்லை என்பதான கருத்துருவாக்கம் நல்ல பல கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை கவனிக்கத் தவற வைத்திருக்கின்றன. அந்த வரிசையில் வெருளியும் அடங்கிப் போயிருக்கின்றது.

விதிவிலக்காக நவாலியூர் சோமசுந்தரப்புலவர் சிறுவர் விளையாட்டுப் பாடலாக "கத்தரித்தோட்டத்து வெருளி..." என்று பாடி வெருளியைப் பொருட்டாக்கி இருக்கிறார்.

வெருட்டி என்பது அங்கத உருவாக்கம். அது எதிர்ப்புணர்வினதும் எள்ளி நகையாடலதும் வடிவமாக இருப்பது.

கண்ணூறு கழிய, பறவை பட்சியை விரட்ட என வெருட்டி உருவாக்கப்படினும் அதன் உருவாக்கச் செயன் முறையில், அதனை உருவாக்குபவரது அல்லது உருவாக்குபவர்களது நகைச்சுவை உணர்வுடனும் உள்ளுறைந்து கிடக்கின்ற எதிர்ப்புணர்வுகள் அதிருப்திகளும் கலந்தே உருவாகின்றமை அவதானத்திற்குரியது.

கவனத்தைக் கோருகின்ற அதே நேரம் கருத்திற் கொள்ளப்படாத வெருட்டிகளது உருவாக்க முறைமை சிறுவர்களது உள்ளுறைந்து கிடக்கும் ஆற்றல்களை கட்டுப்பாடுகளின்றி வெளிக் கொண்டு வருவதற்கான மிகப்பொருத்தமான சாதனமாக இருக்கிறது.

ஏனெனில் களிமண்ணிலோ அல்லது வேறு ஊடகங்களிலோ சிற்பம் செய்வது சிறுவர்களுக்குப் பிரியமானது எனினும் வெருளி செய்வதில் உள்ள சுதந்திரம் சிற்பம் செய்வதில் இருப்பதில்லை. சிற்பம் என்றதுமே கட்டுப்பாடுகள் மனதில் விழுந்து விடுகின்றன.

இத்தகைய கட்டுப்பாடுகளை மீறி படைப்பாக்கங்களை நிகழ்த்தச் சிற்பமும் ஊடகமாகப் பயன்படுத்தப்படினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருட்டியை உருவாக்குவதில் கிடைக்கும் சுதந்திரம் கட்டற்றது. அலாதியானது.

மேலும் வெருட்டி என்றால் அழகற்றது. அச்சுறுத்துவது என்ற வழமையான பார்வையிலிருந்து விடுபட்டு அழகானதாக, விரும்பப்படுவதாக உருவாக்கங்களைச் செய்வது சிறுவர்களுக்கு உரிய கலைவெளிப்பாட்டுச் சாதனமாகப்படுவதற்கு அவசியமாகவிருக்கிறது.

இந்த வகையில் வெருட்டிகள் அழகானவையாக, விரும்பப்படுவையாக, நகைப்பு மூட்டுபவையாக, உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தல்களாய் உருவாக்கி சிரிப்பு மூட்டுதலுக்கும் சிந்திக்க வைப்பதற்குமான வடிவங்களாகின்றன.

இவை காரணமாக தமது பழைய பெயர்களையும் இழந்து புதிய பெயர்களைத் தேடிக்கொள்கின்றன.

இந்த வகையில் "விரும்பு", "அழகர்", "வடிவு", "அழகு" என்ற பெயர்கள் சிறுவர்கள் மத்தியில் புழக்கத்திற்கு வரத் தொடங்கி இருக்கின்றன.

சிறுவர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்ற இக்கலையாக்கச் செயற்பாட்டுத் தொடர்ச்சியும் அதன் வெற்றியும் மிகவும் பொருத்தமான பெயரை அல்லது பெயர்களை நிலைபெறச் செய்யும்.

சூழலுக்கு நட்பானதும் சூழலில் மிகவும் இலகுவாகவும் செலவு ஏதுமின்றியும் கிடைக்கக் கூடிய பொருட்களை வைத்து, மிகவும் சுதந்திரமான செயற்பாடுகளின் ஊடாக சிறுவர்களது உள்ளுறைந்திருக்கும் ஆற்றல்களைக் குழு நிலையில் கலாபூர்வமாக வெளிக் கொண்டு வரும் இக்கலையாக்கச் செயற்பாடு மகிழ்வூட்டலினதும் அறிவூட்டலினதும் களமாகத் திகழும்.

"வெருட்டி"யை "விரும்பி"யாக்குகின்ற மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினது மேற்படி கலையாக்கச் செயற்பாடு ஓவியர் கசிமன் நிர்மலவாசனின் கலையாக்க வழிப்படுத்தலில் செயலாக்கம் பெற்று வருகின்றது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered As a News Paper in Sri Lanka. Regi. No:W67879




கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது

படம்: சஞ்சயன்

Publishers: Sarinihar, 237/22,Wijekumarathunga Road, Colombo 05
Printers: Navamaga, 66/4, Sri Dharmarama Road, Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org